# உதயன்

சுடர் 30 கதிர் 284 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 20, ஞாயிற்றுக்கிழமை 06.09.2015



வெளிநாட்டு நாணயமாற்று சேவை
யாழ் நகரில் நம்பமுடியாத அதிகூடிய நாணயமாற்று பெறுமதியை வழங்குகின்றோம்.



GTV Enterprises (Pvt)Ltd.
Tel : 021 221 7224
No. 225 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்


# தமிழருக்கான தீர்வே எனது முதல் இலக்கு

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் 'உதயனு'க்குச் செவ்வி



கொழும்பு, செப்ரெம்பர் 6
நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் எனது சேவை இரு கோணங்களில் தொடரும். பொதுக் கடமை என்ற கோணத்திலும், முக்கிய கடமை என்ற இன்னொரு கோணத்திலும் இந்தச் சேவை தொடரும். நாட்டுக்காகக் குரல் கொடுப்பது எனது பொதுக் கடமையாகும். தமிழ் மக்களுக்கு நியாயமான – நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பது எனது முக்கிய கடமை- முதல் இலக்கு ஆகும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். 'உதயனு'க்கு அவர் வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
இலங்கையின் எட்டாவது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவி எனக்குக் கிடைப்பதற்குக் காரணகர்த்தாக்களாக இருந்த எனது உயிரிலும் மேலான தமிழ் மக்களுக்கும், அரசியல் கட்சிகளுக்கும் முதலில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எனக்குக் கிடைத்த இந்தப் பதவி மூலம் முழுநாட்டுக்கும் நான் சேவையாற்ற வேண்டும். எனது குரல் முழு நாட்டுக்கும் ஒலிக்கவேண்டும்.

அதேவேளை, என்னை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்த தமிழ் மக்களையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எனது தலைமைப் பொறுப்பையும் நான் மறந்துவிடலாகாது. நிரந்தரத் தீர்வை எதிர்பார்த்திருக்கும் தமிழ் மக்களின் குரலாகவும் எனது குரல் நாடாளுமன்றில்

பக்கம் 21.....

## ஐ.தே.கவின் நிகழ்வில் மைத்திரி பிரதம அதிதி

கொழும்பு, செப்.6
ஐக்கிய தேசிய கட்சியின் 69 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு இன்று கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொள்வார்

பக்கம் 21.....

## பஸ் மோதி வயோதிபர் சாவு

யாழ்ப்பாணம், செப். 6
சந்தைக்குச் சென்று திரும்பியவரை பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் தனியார் பஸ் மோதியதில் அவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.
பலாலி வீதி, கோண்டாவில் சந்தியை அண்மித்து நேற்று முன்தினம் மதியம் இந்த விபத்து இடம்பெற்றது. இதில் உரும்பி

பக்கம் 21.....

## ஹெரோயினுடன் பெண் ஒருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், செப். 6
வடமராட்சி கிழக்கு நித்தியவெட்டைப் பகுதியில் பொலிஸார் நடத்திய திடீர் சுற்றி வளைப்பில் 3 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 24 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
நேற்று அதிகாலை பளைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மோப்ப நாய்களுடன் அங்கு சென்ற

பக்கம் 21.....

## இறுதிப் போரில் இந்திய அரசு இலங்கைக்கு உதவவில்லை

### கருணாவின் கூற்றை நிராகரிக்கிறது இராணுவம்

கொழும்பு, செப்.6
இறுதிப் போரின்போது இந்தியப் படையினர் ஒத்துழைப்பு வழங்கவில்லை என இலங்கை இராணுவம் அறிவித்துள்ளது.
இறுதிப் போரில் இந்தியப் படையினரின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டதாக முன்னாள் பிரதி அமைச்சர் கருணா தெரிவித்துள்ளார்.
எனினும், இந்தக் கருத்துக்களில் உண்மையில்லை என இராணுவ உயர் அதிகாரியொருவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித் துள்ளார்.
வவுனியாவில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையினர் செய்மதி

பக்கம் 21.....

## சென்னை அமெ. தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம்

### சர்வதேச விசாரணையை வலியுறுத்தி



சென்னை, செப்.6
போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான உள்ளக விசாரணைக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துச் சென்னையிலுள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.
இலங்கையில் நல்லிணக்

பக்கம் 21.....

## இராமேஸ்வரம் மீனவர்கள் வேலைநிறுத்தம்

இராமேஸ்வரம், செப்.6
இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டபோது, கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 16 பேரையும் விடுவிக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
இலங்கைக் கடற்படையினரால் கடந்த வியாழக்கிழமை இந்த 16 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.
இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட 32 படகுகளையும் மீட்பதற்கான நடவடிக்

பக்கம் 21.....

## 60 பவுண் நகையை பறிகொடுத்தார் லண்டனில் இருந்து வந்தவர்

யாழ்ப்பாணம், செப். 6
யாழ்.குடாநாட்டில் சில வாரங்களாக இல்லாதிருந்த திருட்டு தற்போது மீண்டும் ஆரம்பித்துள்ளது. லண்டனில் இருந்து வந்திருந்தவரின் வீடு ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு 60 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
வீட்டில் உள்ளவர்கள் வீட்டில்

பக்கம் 21.....

## தீர்வுக்கு தேசிய அரசு ஒத்துழைக்கவேண்டும்

### அதன் மூலமே சர்வதேச சவால்களை மாற்றலாம் என்கிறார் பிரதமர் ரணில்

கொழும்பு, செப்.6
நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் ஊடாகச் சர்வதேச சவால்களை வெற்றிகொண்டு நாட்டை முழுமையாக மாற்றிய மைக்கத் தேசிய அரசு ஒத்துழைக்க வேண்டும் என பிரதமர் ரணில் கோரிக்கை விடுத்துள்ளார்.
தற்போது முழு நாடாளுமன்றமும் அரசாக மாறி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-
நாட்டின் இரு பிரதான கட்சிகளும் ஆட்சியமைப்பது வரலாற்று முக்கி

பக்கம் 21.....

## சு.கவின் 4 அமைச்சர்கள் விரைவில் பதவியேற்பு

கொழும்பு, செப். 6
அமைச்சரவை பங்கீட்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கான மீதமுள்ள நான்கு அமைச்சுக்களும், பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுக்களுக்குமான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் விரைவில் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

பக்கம் 21.....


கொவிசெத இப்பொழுது வாரத்திற்கு 3 நாட்கள் திங்கள் வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில்

தேசிய லொத்தர் சபை



www.sdb.lk

நிலையான வைப்புகளுக்கு உயர்ந்த வட்டி

ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு 10.75%
உச்ச வருட வட்டி (முதிர்ச்சியில்)
வ.தே.வ. 8.98%

| | 3மாதம் | 6மாதம் | 1வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வட்.வீ.) | 7.25% | 7.50% | 8.25% |
| வ.தே.வ. | 7.45% | 7.64% | 8.25% |

ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள்

011 5 411 411
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தோந்தன் முன்னோடி


Digitized by Noolaham Foundation.




இலங்கை வந்துள்ள அமெரிக்கச் செனட் சபை உறுப்பினர்களான டேமியன் எவ்.மூர்பே மற்றும் சார்லோட் ஓட்காம் முரே ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருந்தவேளை உதயன் அலுவலகத்துக்கும் வருகை தந்தனர். அவர்கள் உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவனைச் சந்தித்து வடக்கு நிலைமைகள் மற்றும் அரசியல் விடயங்கள் குறித்துக் கேட்டறிந்தனர். (த)

# யாழில் 45 பேருக்கு கடந்த மாதம் டெங்கு

யாழ்ப்பாணம், செப். 6
யாழ்.மாவட்டத்தில் டெங்குத் தொற்றினால் கடந்த மாதம் 45 பேர் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

அதற்கு முன்னைய மாதங்களுடன் ஒப்பிடுகையில் டெங்குத் தொற்றுக் குறைவடைந்துள்ளபோதும் அது முழுமையாக இன்னும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படவில்லை. அதனால் டெங்கினால் மாதாந்தம் ஏராளமானோர் இன்னும் பாதிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றனர் என்று புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. டெங்கினாலான ஆபத்து இன்னும் இருக்கின்றது என்பதை இது உணர்த்துகிறது.

ஓகஸ்ட் மாதம் யாழில் 45 பேரும் அதற்கு முன்னைய மாதம் வரையில் 60 பேருக்கு மேற்பட்டோரும் பாதிக்கப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் இதுவரை ஆயிரத்து 236 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கில் ஏனைய மாவட்டங்களில் தொற்று எண்ணிக்கை மிகக் குறைவாகக் காணப்படுகிறது. வடக்கில் இந்த எண்ணிக்கை காணப்படுகின்றபோதும் மழைகாலம் ஆரம்பிக்கவுள்ள நிலையில் டெங்கு தொற்றுவதற்கான வாய்ப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

அது வழமையானதொன்றாகி விட்டதனால் அதிலிருந்து தவிர்த்துக் கொள்ளும் விதமாக, சுற்றுச் சூழலைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தத் தொடங்கியுள்ளனர். அதனை வலியுறுத்தியதாகச் சில நாள்களில் டெங்கு பரவும் பிரதேசங்களைக் கண்டறிந்து அவற்றை அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

இதுதவிர வடக்கில் இதுவரை ஆயிரத்து 569 பேர் இதுவரை டெங்கினால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## பொன்னாலை வரதராஜப் பெருமாள் நேற்றுத் தேரில் ஏறி அருள் பாலித்தார்



யாழ்ப்பாணம், செப் 6
ஈழத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் இரதோற்சவம் நேற்றுச் சனிக்கிழமை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. நேற்றுக் காலை இடம்பெற்ற பூசைகளைத் தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்றது. 12 மணிக்கு இரதோற்சவம் இடம்பெற்றது.

குடாநாட்டிலும் பிற மாவட்டங்களிலும் புலம்பெயர் தேசங்களிலும் இருந்து வருகைதந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நேற்றைய இரதோற்சவத்தில் கலந்துகொண்டனர். பக்தர்களின் போக்குவரத்து வசதி கருதி யாழ்ப்பாணத்துக்கும் காரைநகருக்கும் இடையே சேவையாற்றும் இ.போ.ச பஸ்களும் தனியார் சிற்றூர்திகளும் ஆலயத்தினூடாக சேவையில் ஈடுபட்டன.

ஆலயத்தில் உள்ள இரண்டு மடங்களிலும் பொன்னாலைச் சந்தியில் உள்ள மடத்திலும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

ஆலயத்தினுள்ளும் ஆலய வளாகத்திலும் வட்டுக்கோட்டை பொலிஸார் கடமையாற்றிய போதிலும் உள் வீதியில் வைத்து மூதாட்டி ஒருவரின் இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலி திருடர்களால் அறுத்துச் செல்லப்பட்டது. (த)

## பழைய கடவுச்சீட்டை பயன்படுத்த முடியும்

### குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, செப்.6
புதிய கடவுச்சீட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள போதிலும் பழைய கடவுச்சீட்டைத் தொடர்ந்தும் பயன்படுத்த முடியும் எனக் குடிவரவு குடியகல்வுத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

கை விரல் அடையாளத்துடன் புதிய தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்பட்டுள்ள கடவுச் சீட்டு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் எம்.என் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஒரே நாளில் கடவுச்சீட்டினைப் பெற்றுக் கொள்வதற்கு 3ஆயிரத்து 500 ரூபாவும் சாதாரண முறையில் பெற்றுக் கொள்வதற்கு ஆயிரத்து 500 ரூபாவும் பெற்றுக் கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடவுச் சீட்டுகளை விநியோகிப்பதற்கான கருமபீடங்கள் 16 இல் இருந்து தற்போது 32 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் ... எம்.என் ரணசிங்க தெரிவித்துள்ளார். (த-வ)

# எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் தெரிவானமை நம்பிக்கை அளிக்கின்றது

### கலைஞர் மு.கருணாநிதி அறிக்கை

சென்னை, செப்.6
இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்குத் தமிழக முன்னாள் முதல்வரும் தி.மு.க. தலைவருமான கலைஞர் மு.கருணாநிதி வாழ்த்து தெரிவித்துள்ளார். எதிர்க் கட்சித் தலைவராக சம்பந்தன் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது நமக்கெல்லாம் ஓர் நம்பிக்கையைத் தருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக கலைஞர் மு.கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில்-

இலங்கையில் கடந்த ஓகஸ்ட் 17ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில், இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 உறுப்பினர்களைப் பெற்று, நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக இடம் வகித்தது. இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் மூன்றாவது கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அந்த வாய்ப்புக் கிடைக்கப் பெற்று, இரா. சம்பந்தன், எதிர்க் கட்சித் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

38 ஆண்டுகளுக்கு முன்பு 1977 ஆம் ஆண்டு எனது அருமை நண்பர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக இருந்த நாவலர் அமிர்தலிங்கத்துக்குப் பின்னர், தமிழர் ஒருவர் இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவ ராக ஆகியுள்ளது மகிழ்ச்சிக்குரியது.

இலங்கைத் தமிழர்கள் அனைவரும், தங்கள் வாழ்வில் விடிவு காலம் ஏற்படாதா என்று நீண்ட நாள்களாக எதிர்நோக்கியிருக்கும் வேளையில், எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பது நமக்கெல்லாம் ஓர் நம்பிக்கையைத் தருகிறது.

சம்பந்தனும் இலங்கைத் தமிழர்களுக்கு உரிய நீதி கிடைக்கவும், அவர்களுக்கு அதிகாரம் கிடைக்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாடுபடும் என்று கூறியிருப்பதும் மகிழ்ச்சியைத் தருகிறது. சம்பந்தனுக்கு தி.மு.க.வின் சார்பில் இதயமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கருணாநிதி தெரிவித்துள்ளார். (த-வ)

## காணாமற்போனோரின் உறவுகள் நேற்றுச் சுடர் ஏற்றிப் போராட்டம்



மட்டக்களப்பு, செப்.6
கிழக்குப் பல்கலைக்கழக நலன்புரி முகாமில் இருந்தவர்கள் கைது செய்யப்பட்டு 25 ஆண்டுகள் கடந்துள்ளதை நினைவுகூர்ந்து வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாகத்துக்கு முன்பாக நேற்று சனிக்கிழமை உறவினர்கள் சுடர் ஏற்றி அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 1990ஆம் ஆண்டு இடம் பெற்ற சுற்றிவளைப்பின்போது செய்யப்பட்டுக் காணாமல்போன 158 பேரை நினைவுகூர்ந்ததோடு தமது உளத்தாக்கங்களையும் வெளிப்படுத்தினர். நாம் வேண்டுவதெல்லாம் புதை குழி அல்ல புன்னகை மனிதர்களையே' எனும்தலைப்பில் அச்சிடப் பட்ட பிரசுரங்கள் வீதியில் பயணித்தோரிடம் உறவினர்களால் வழங் கப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ஏறாவூர் பிள்ளையார் ஆலயத்தில் ஆத்ம சாந்தி வேண்டி பூசையில் கலந்து கொண்டனர். (த-10)

# மாடியிலிருந்து விழுந்து இளம் குடும்பஸ்தர் சாவு

### போதையால் வந்த வினை

யாழ்ப்பாணம், செப்.6
குருநகரில் 40 அடி உயரமுடைய தொடர்மாடியின் 4 ஆவது மாடியிலிருந்து மதுபோதையில் கீழே விழுந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு 6.45 அளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. அதே மாடியில் வசிக்கும் மரியதாஸ் பிறிங்சன் (வயது 33) என்பவரே உயிரிழந்தவராவார். அவர் 3 பிள்ளைகளின் தந்தை.

மதுபோதையில் 4 ஆம் மாடிக்குச் சென்ற அவர் தொடர்மாடியின் பின்புறமாக இருந்து விழுந்துள்ளார். அவர் விழுந்த சத்தம் கேட்டு அயல் வீட்டுக்காரப் பெண் ஒருவர் கண்டு ஏனையவர்களுடன் சென்று பார்த்தபோது அவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் உணர்வற்றுக் கிடந்துள்ளார். உடனடியாக அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார்.

அவரது மனைவியும் பிள்ளைகளும் மடு தேவாலயத்துக்குச் சென்றுள்ளனர். தான் இருந்தால் அளவாகவும், தான் இல்லாத வேளைகளில் அதிகமாகவும் அவர் மது அருந்துபவர் என்று மனைவி சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணை மேற்கொண்டு சடலத்தை நேற்று உறவினர்களிடம் ஒப்படைத்தார். (த-4-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உண்மைகளை மூடி மறைக்க வடக்கு முதல்வரும் முயற்சி

## மாவை சேனாதிராசா குற்றச்சாட்டு

வவுனியா, செப் .6

தமிழரசுக்கட்சி ஏதோ சர்வதேச விசாரணையைக் கோர வில்லை என்றும் உள்ளக விசாரணையைக் கோருவது போல வும் உண்மைகளை மூடி மறைத்துத் தற்போது புதிய இயக்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. அதில் எங்களுடைய முதல மைச்சரும் சம்பந்தப்பட்டிருக்கின்றார். ஒரு நீதியரசருக்கு அது புரியாமல் இருக்க முடியாது. அப்படி புரியாமல் இருந்தால் அது ஆச்சரியமான விடயம் எனத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரை வரவேற்கும் நிகழ்வு நேற்று வவுனியா தமிழரசுக் கட்சியின் தாயகம் அலுவலகத்தில் வட மாகாண சுகாதார அமைச்சர் ப. சத்திய லிங்கம் தலைமையில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

சென்ற ஆண்டு மனித உரிமைகள் சபைக் கூட்டம் ஒன்றில் பெண் களைப் பற்றி அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். போர் நடந்த காலத்திலும் போருக்குப் பின்னரான காலத்திலும் இராணு வத்தினர் குவிக்கப்பட்டுள்ளமையால் எமது பெண் களுக்கு நடத்தப்பட்ட கொடுமைகள் பாதுகாப்பு விடயங்கள் பற்றி சாட்சி யங்களுடன் ஐ.நாவில் அறிக்கை சமர்ப்பிக் கப்பட்டுள்ளது.

போர்க்குற்ற விசாரணை நடத்தப்படவேண்டும் என்பது போல் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் தொடர்பாகவும் விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற பிரேரணையை ஒரு வல்லாண்மை மிக்க நாட்டின் உதவியோடு அந்த சபையில் கொண்டு வர முடியும். நவநீதம்பிள்ளை இந்த பிரேரணையை நிறைவேற்றும் பொருட்டு இலங்கைக்கு வந்ததை நீங்கள் அறிவீர்கள். ராஜபக்ச காலடி எடுத்து வைக்க விடமாட்டேன் என்றார். ஆனால் அவர் வந்தார். அரை மணி நேரமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கப்பட்டது. ஆனால் ஒன்றரை மணி நேரம் பூட்டிய அறையில் பல விடயங்களை நாம் பேசியிருந்தோம். அவருடைய ஆவல் பெண்கள் எவ்வளவு தூரம் அவலப்பட்டுள்ளார்கள் என்ற விடயத்தை பதிவு செய்ய விரும்பவதாகவும் அப்படிப்பட்ட பெண்களை அழைத்து வருமாறும் கோரியிருந்தார். ஆனால் எமது பெண்கள் பயப்பட்டார்கள். இராணுவ அதிகாரி கத்துரு சிங்கவின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சுமந்திரன் சட்டத்தரணி யாக உள்ளமையால் பாதிக்கப்பட்ட பெண்களின் வாக்கு மூலத்தை பதிவு செய்து அவர்கள் வர பயந்த காரணத்தால் சத்தியக்கடதாசியாக முடித்து கொடுத்திருந்தார். அதனை இன்று போர்க்குற்ற விசாரணை இடம்பெறவுள்ளதை போன்று அதனையும் நாம் அமெரிக்கா போன்ற வல்லாண்மை நாடுகளின் மூலமாக ஐ.நாவில் பிரேரணையாக கொண்டு வரமுடியும்.

இதேவேளை இன்று அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற தமிழர் களினுடைய நிலங்கள் தொடர்பாகவும் பிரேரணையை நாம் சமர்ப்பிக்கலாம். இதேவேளை அழிக்கப்படுகின்ற இனம் என்ற ரீதியிலும் நாம் ஒரு பிரேரணையை ஐ.நாவில் கொண்டு வர லாம். இதற்கான வேலைகள் மிக அதிகமாகும். ஆளு மையும் ஆற்றலும் கொண்டவர்கள் இதில் பணியாற்ற வேண்டி யுள்ளது. இந்த போர்க்குற்ற விசாரணை சர்வதேச விசாரணையாக இருக்க வேண்டும் என்று 2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரைக்கும் அமெரிக்க இராஜாங்க அமைச்சால் அழைத்ததன் அடிப்படையில் அங்குள்ள 24 அங்கங்களுடன் பேசி இறுதியாக 27 ஆம் திகதி நண்பகலுக்கு பிறகு உதவி இராஜாங்கச் செயலாளரின் தலைமையில் கூடிய கூட்டத்தில் சம்பந்தன் உரையாற்றியிருந் தார். அதன் பின்னர் இப்படிப்பட்ட தலைவரை நீங்கள் பெற்றது பாக்கியம் என்று கூறினார் உதவி இராஜாங்க அமைச்சர். நாங்கள் சர்வதேச விசாரணையே தேவை என்று தீர்மா னத்திற்கு வந்துவிட்டோம் எனவும் தெரிவித்திருந்தார். அதன் பின்னர் 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டு இன்று தீர்க்கமான கட்டத்தை அடைந்துள்ளது.

சர்வதேச விசாரணைதான் அங்கு நடைபெற்றுள்ளது. அந்த தீர்மானத்தில் உண்மைகள் வெளிக்கொண்டு வரப்படுகின்றது. ஏன் இந்த போர் ஏற்பட்டது. அந்த போரில் ஏன் குற்றங்கள் இழைக்கப்பட்டன. மனித உரிமை மீறல்கள் எவ்வளவு தூரம் மீறப்பட்டுள்ளன. போர் விதிமுறைகளை ராஜபக்ச அரசு எவ்வளவு தூரம் மீறியுள்ளது என்று சாட்சியங்களில் அடிப்படை யில் ஆராயப்பட்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆனால் தற்போது சிலர் தெரிந்தும் தெரியாமலும் தெரிந்தும் படிக்காமலும் இனித்தான் விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும் என கூறுகின்றார்கள். ஆனால் அது உண்மை அல்ல. அந்த பிரேரணை நிறைவேற்றப்பட்டு விட்டது. இனி அந்த பிரேரணை செப்ரெம்பர் மாதம் அதற்கான நடவடிக்கைகள் என்னவாக இருக்க வேண்டும். என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்ற பதில்தான் நிறுவப்படவேண்டியதாகவுள்ளது.

உள்ளக விசாரணையைப்பற்றி பேசுகின்றார்கள். அது நாம் விரும்பி கேட்ட ஒன்று அல்ல. தற்போது அமைச்சராக இருக் கின்ற மகிந்த சமரசிங்க நவநீதம்பிள்ளை பிரேரணை சமர்ப் பித்தபோது அந்த சபையில் 40 நிமிடங்களுக்கு மேல் பேசி னார். முழுவதும் உண்மைக்கு மாறான விடயங்களை பேசி னார். உடனடியாக அங்கிருந்த இராஜதந்திரிகள் ஊடாகவும் அங்கிருந்த எமது வழங்கறிஞர்கள் ஊடாகவும் எங்களுக்கு ஒரு செய்தி தரப்பட்டது.

அதாவது இவ்வாறு மகிந்த சமரசிங்க பேசியுள்ளார். நீங்கள் 24 மணி நேரத்தில் பதில் தரவேண்டும் என. நாங்கள் 19 ஆவது மணி நேரத்தில் 14 பக்கத்தில் தெளிவான அறிக்கையை அனுப்பியிருந்தோம். அதற்குப் பாராட்டு தெரிவித்திருந்தார்கள். பகிரங்கமாக சொன்னார்கள். அதன் பின்னர் அவ் அறிக்கை மீது விவாதங்கள் ஏற்படுத்திய போது இந்தியா போன்ற நாடுகள் தங்கள் தங்கள் நாட்டுக்கெதிராகவும் இவ்வாறான தீர்மானங் கள் கொண்டு வரமுடியும். அதனூடாக சர்வதேச விசாரணை வந்துவிடும் என அவர்கள் மிக கவனமாக இருக்கின்றார்கள். இவ்வாறான தீர்மானத்திற்கு ஆதரவு தருவதற்கு அவர்கள் மறுத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் அமெரிக்கா போன்ற நாடுகள் மிகப்பெரிய பொருளாதாரத்தை செலவழித்திருந் தார்கள். தமது முழு சக்தியையும் இவ்வாறான தீர்மானம் நிறை வேற்றப் பயன்படுத்தினார்கள். அதனூடாக வென்றெடுத்தே இந்த பிரேரணையை தற்போது நிறைவேற்றியிருக்கின்றார்கள்.

சிலர் ஜெனிவாவில் அமெரிக்காவுக்கு எதிராக குரல் எழுப் பினார்கள். இந்த பிரேரணை சர்வதேச விசாரணை இல்லை என்று கூறினார்கள். அவர்களே தற்போது இங்கு சர்வதேச விசாரணை வேண்டும் என்று கனவில் இருந்து மீண்ட வர்கள்போல் அதனுடைய பின்னணி அதனுடைய வரலாறு, என்ன நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை நன்றாக தெரியாமல் இன்று தமிழரசுக்கட்சி மீது குற்றம் சுமத்திக் கொண்டிருக்கிறார்கள். அது முடியாத காரியம். இந்த தேர்தலிலும் எம்மை குற்றம் சுமத்தினார்கள் எம்மை தோற்கடிப் பதற்காக பல கோடி ரூபாக்களை செலவழித்தார்கள். தலை மையை மாற்றி அமைக்க முனைந்தார்கள். அதற்கு நாம் பதில் கொடுத்தோம். இன்று அவர்கள் 6 வாக்கு குறைந்திருந்தால் கட்டுப்பணமே இல்லாமல் போயிருப்பார்கள். அதேபோல் 6 வாக்கு எமக்கு கிடைத்திருந்தால் 6 ஆவது இடம் எமக்கு கிடைத் திருக்கும். ஆனால் அது யாருக்கு போயிருக்கின்றது. ஐக்கிய தேசியகட்சியை தேர்ந்தேடுப்பதற்கு செய்திருக்கின் றார்கள்.

இன்று போராளிகள் என்று ஒன்றை தொடக்கினார்கள். இன்று அவ்வளவு தூரம் அவமானமாக்கியிருக்கின்றார்கள். நாம் மதிப்பு வைத்துள்ள அந்தப் போராளிகளை தேர்தலில் ஈடு படுத்தி இன்று 1200 வாக்குள் மட்டில் பெற்றிருக்கின்றார்கள். அது எவ்வாளவு அவமானமாகும். வெறும் அற்ப ஆசைகளுக் காக 3 ஆசனத்தை பெறுவோம் என்று கூறினார்கள். கஜேந்திர குமார் அணியில் 3 பேர் வெல்வோம் என்று கூறினார்கள். இருப்பதோ 7 இடம்தான். வெளிநாட்டில் இருந்து மிகப்பெரும் தொகையானவர்கள் நிதியை வழங்கினார்கள். அப் பணம் மக்களிடம் போயிருந்தால் அந்த மக்களாவது வாக்களித்திருப் பார்கள்.

அப்படிப்பட்டவர்கள் மத்தியில் இருந்து தமிழரசுக்கட்சி ஏதோ சர்வதேச விசாரணையை கோரவில்லை உள்ளக விசார ணையை கோருவது போல்வும் அத்தனை உண்மைகளையும் மூடி மறைத்து தற்போது புதிய இயக்கம் ஒன்று தொடங் கப்பட்டுள்ளது. அதில் எங்களுடைய முதலமைச்சரும் சம்பந் தப்பட்டிருக்கின்றார். ஒரு நீதியரசருக்கு அது புரியாமல் இருக்க முடியாது. அப்படி புரியாமல் இருந்தால் அது ஆச்சரியமான விடயம். அதனை நாம் எப்படி அணுகப்போகின்றோம் என்று நாம் சில நியாயங்கள் வைத்துள்ளோம்.

2010 ஆம் ஆண்டில் இருந்து 2014 ஆம் அண்டு வரை இப் பிரேரணை நிறைவேற்றப்படும் வரை தமிழ் தேசியக்கூட்ட மைப்புக்கு சம்பந்தமுள்ளது. ஆனால் சம்பந்தப்படாத பலர் இருக்கின்றார்கள். தேர்தல் இறுதி காலகட்டத்தில் நான் கஜேந்திரகுமாரிடம் நான் கேட்ட கேள்வி உங்களுக்கு தெரியும். வெள்ளைக்கொடி பிடித்துக்கொண்டு பசில் ராஜபக்சவுடனும் மகிந்த ராஜபச்வுடனும் செய்து கொண்ட ஒப்பந்தம் என்ன என்றே கேட்டேன். எனக்கு தெரியும் அது என்ன என்று. சந்திரகாந்தனும் பசில் ராஜபக்சவுடன் பேசி ராஜபக்சவுடன் செய்தியை பெற்று வெள்ளைக்கொடியுடன் வருமாறு கேட்ட செய்தியையும் அவர்கள் ஏமாற்றி வந்தவர்களைக் கொன்று விட்டார்கள் என்ற செய்தியையும் ஐ.நாவில் சாட்சியமாக அளித்து பகிரங்கப்படுத்தியிருக்கின்றார். ஆனால் ஏன் கஜேந்திராகுமாரால் அவ்வாறு செய்ய முடியவில்லை.

நான் கூறியதை பொய் என்று கூறி அம்மாவை கொண்டு சத்தியம் செய்து தான் அப்படியொன்றும் செய்யவில்லை என்று கூறுவதும் பொய்தான். உண்மை எங்களிடம் உள்ளது. அவர் களும் அவருடைய ஆள்களும் என்ன செய்தார்கள். நாங்கள் ராஜபக்சவுடனும் ரணிலுடனும் நிற்கும் படத்தை எடுத்து போட்டார்கள். அவர்களால் அதைதான் செய்ய முடியும். அவர்களால் இதைவிட அரசியல் பேச முடியாது. நான் கேட்ட கேள்விகளுக்கு அவர் சீவிய காலத்திற்குப் பதில் கூற முடியாது.

இன்று சர்வதேச விசாரணை தேவை என மனித உரிமை சபைக்கு அனுப்ப கையெழுத்துவாங்குகின்றார்கள். சரி வாங்கட்டும் விழிப்புணர்ச்சி தேவையானது. நாங்கள் அதற்கு தடையாக இருக்கமாட்டோம். ஆனால் உண்மையை பேசுகின்ற அந்த தத்துவம் துடிப்பு எங்களுக்கு தெரியவேண்டும்.


சுரேஸ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் அமெரிக் காவில் பேசுகின்றபோது எங்களுடன் வந்திருந்தார்கள். பிரேரணை நிறைவேற்றும்போது எங்களுடன் இருந்தார்கள். தற்போது அவர்கள் மூன்றுபேரும் ஒரு இடத்தில் கூடி போர்க்குற்ற விசாரணையே தேவை என கூறுகின்றார்கள்.

ஒரு நாட்டைப்பற்றி ஒரு விசாரணை கொண்டு வரப்படுகின்ற போது உள்ளக விசாரணை இடம்பெறவேண்டும். அந்த நாட்டின் இணக்கத்துடன் கொண்டு வரப்படவேண்டும். அதுவே அதனுடைய சாராம்சம்.

எங்களுடைய தேர்தல் அறிக்கையில் சர்வதேச விசாரணை பற்றி தெரிவிக்கப்பட்டு நாங்கள் அதனை வலுவூட்டி சிறந்த போர்க்குற்ற விசாரணை இடம்பெறவேண்டும் என வலி யுறுத்தியுள்ளோம். அதற்கு மக்கள் அங்கீகாரத்தை பெரு வாரியாக வழங்கியுள்ளார்கள்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை மீது வட மாகாண முதலமைச்சர் எமக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று கூறுவதற்கு பதிலாக தேர்தல் அறிக்கைக்கு மாறான கருத்தையே தெரி வித்திருந்தார். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தோற்கடிக்கப்படவேண்டும் என்ற வகையில் அவரின் கருத்து அமைந்திருந்தது. ஆனால் இவற்றையெல்லாம் மீறி தமிழ் மக்கள் [illegible] எமக்கு [illegible] தந்துள்ளார் கள் —என்றார்.

(த-402)




19 ஆம் திருவிழா

**விடிவொன்று தருவாயோ முருகா!**

*அலங்காரக் கந்தாவுன் திருக்கோலங் காண*
*ஆயிரம் நயனங்கள் வேண்டும்*
*பலங்காட்டும் வேலும் பச்சைமா மயிலும்*
*பணிந்தாலே துன்பங்கள் அகலும்*
*நலங்காக்கும் நல்லை முருகாவுன் கோயில்*
*நாடினால் இன்பங்கள் ஓங்கும்*
*விலங்காகும் மனத்து வில்லங்கம் போக*
*விடிவொன்று தருவாயோ முருகா*

நயினை இராகுலன்

**இடர்களைந்து காத்திடும் நல்லைக்குமரா**

*கீதம் இசைப்போர் நாவில் நின்று நடமிடும்*
*முதல்வனே*
*இசை ஞாலம் முழுதும்*
*பரவுதையாநல்லைப் பதிதனிலே*
*கர்ப்பூர வாசனையும் சுகந்த*
*நல்வாசங்களும்*
*மனதின் இருள் அகற்றி அருள்கூட்ட*
*முனையுதையா*
*நாவுன்தன் நாமமதை தாமாக*
*சொல்லுதையா*
*உன் சொர்க்கலோக, பதிதனிலே*
*பாதம் பட்டவுடன்*
*மெய்சிலிர்க்க பக்தியுடன் பரவும்*
*அடியார்தம்*
*இடர்களைந்து காத்திடும் வேலவனே*
*நல்லைக்குமரா*

சங்கையூர் ப.பத்மநிருபன்

**வல்லோனே வரம்தருவாய்!**

நல்லூர் நாதா! முத்துக் குமரா!
தொல்லூழ் தொலைந்து தொல்லைகள் நீங்கி
எல்லா நலனும் பெற்று நாம்வாழ
வல்லோன் நீயே வரந்தர வேண்டும்!

ப.மகேந்திரதாசன்
நாயன்மார்கட்டு

நல்லைக்கந்தனுக்கு
இன்று (06.09.2015) ஞாயிற்றுக்கிழமை
19 ஆம் திருவிழா





திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
வீ.எம்.கே. ஜுவல்லறி
இல.83/3, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2515 / 021 720 1117


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களின் மீள்குடியேற்றம் ஆறிய கஞ்சியின் நிலை ஒத்ததே

இந்த நாட்டின் அரசினால் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்னர் அகதிகள் ஆக்கப்பட்ட வலிகாமம் வடக்குப் பிரதேச மக்களில் சுமார் 50,000 பேர், தமது இல்லிடங்கள் அழிக்கப்பட்டதால், இன்னமும் தாம் இடம்பெயர்ந்து சென்ற பகுதிகளில் உள்ள நலன்புரி நிலையங்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் வசிக்கும் துர்ப்பாக்கியசாலிகளாக மாற்றப்பட்டுள்ளனர்.

புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவிக்கு வந்த பின்னர், அவர்கள் மீது இரக்கம் கொண்டு, மிக மோசமான நிலையில் உள்ள நலன்புரி நிலையங்களை புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. அதற்கென மீள்குடியேற்ற அமைச்சினால் பதினைந்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலர் பிரிவு, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு, தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு ஆகியவற்றில் அமைந்துள்ள மொத்தம் 25 நலன்புரி நிலையங்களை புனரமைப்புச் செய்வதற்கு ஆயத்தங்கள் முகிழ்த்துள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 29 ஆண்டுகளாக நடைபெற்ற, நடத்தப்பட்ட ஆயுதப் போராட்டம், கடந்த 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வந்தது. அதாவது போர் முடிவுற்று ஆறு ஆண்டுகள் கடந்தோடி விட்டன.

எனினும் போரினால் தமிழ் மக்களுக்கு உண்டான, ஆறாத காயங்களை நீக்குவதற்கு முந்தைய மகிந்த அரசு தவறி, தனக்கே உரிய தான்தோன்றித்தனத்துடன் அக்கறை இன்றி இருந்தது.

இந்த ஆண்டு (2015) ஜனவரியில் இடம்பெற்ற அரசியல் புரட்சியால் உண்டான மாற்றத்தால், நிலைமை முற்றாக மாறியது. ஆயினும் தமிழ் மக்கள் நலன் நாடிய செயற்பாடுகள் மிகவும் அருகியே காணப்படுகின்றன!

தனித்துக் குறிப்பிடுவதானால், போரினால் வடக்கு, கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் இன்னமும்-- இப்போதும் -- கருகிய மொட்டாகவே, உதிர்ந்து கிடக்கிறது!

போரினால் இடம்பெர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் தமது இருபதாண்டுக் கனவான சொந்த இடத்தில் மீளக்குடியேறுவது என்பது எட்டாப் பழமாகவே மாய்மாலம் காட்டுகிறது.

அதனை வெளிப்படுத்தும் - நிரூபிக்கும் - சில தகவல்கள் இதோ:-

★ பலாலியைச் சொந்த இடமாகக் கொண்ட ஆயிரக்கணக்கான மக்கள் கடந்த இருபத்தி நான்கு ஆண்டுகளாக நலன்புரி நிலையங்களில் உழல்கின்றனர்.

★ வலி வடக்கு மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவது, புதிய அரசு பதவிக்கு வந்த பின்னும் எட்டாக் கனியாகவே தொங்குகிறது.

★ அந்த மக்களின் மீள் குடியமர்வுக்கு சிவில் அதிகாரிகளை விடவும் படைத் தரப்பினராலேயே ஆழமான குழிபறிப்புக்கள் மேலெழுகின்றன.

கடந்த மார்ச் மாதத்தில் வடக்கே விஜயம் செய்திருந்த ஜனாதிபதி, -

மக்களின் காணிகள் மக்களுக்கே.

இராணுவம் கையகப்படுத்தி இருந்தால் மீளப் பெற்று வழங்கப்படும், என்று உறுதி அளித்திருந்தார்.

ஆனால் நடைமுறையில் எல்லாமே தலைகீழ் தான், அம்போ தான்!

★ தட்டிக் கேட்க எவரும் இல்லையெனின், தம்பி சண்டப்பிரசண்டன்தான் என்றநிலையே, மீள்குடியேற்ற விவகாரத்தில், வான் நோக்கி வளர்கிறது.

★ யாரொடு நோவோம்; யார்க்கு எடுத்துரைப்போம் என்ற கையறு நிலை நழுவும் காலம் வாராது என்பதற்கான முன்னோட்டமே மேல் எழுகிறது.

★ மீள்குடியேற்றச் செயற்பாடுகள் பற்றிய பேச்சு மூச்சின்றி,

நலன்புரி நிலைய புனரமைப்புக்கென நிதி ஒதுக்கீடு செய்வது அதனையே சுட்டி நிற்கின்றதெனக் கருதுவது தப்பன்று.

மொத்தத்தில் தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் என்பது, ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்ற நிலையை ஒத்ததே...!

# கோத்தாவை காப்பாற்ற பொய்ச் சாட்சி சொன்ன ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல்

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவை காப்பாற்றுவதற்கே ஆணைக்குழு முன்பாக பொய்ச் சாட்சி வழங்கியதை ரக்னா லங்கா தனியார் பாதுகாப்பு நிறுவனத்தின் பொது முகாமையாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ள நிதிமோசடி விசாரணை ஆணைக்குழு முன்னிலையில் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முன்னிலையானார்.

ரக்னா லங்கா தனியார் ஆயுத நிறுவனத்தில் இடம்பெற்ற நிதிமோசடி மற்றும் அரச நிதியை முறையற்ற முறையில் விரயம் செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவர் நேற்றுமுன்தினம் வாக்குமூலம் அளித்தார்.

குறித்த ஆணைக்குழு முன்னிலையில் ஏற்கனவே ஆஜராகியபோது கோத்தபாய ராஜபக்சவைக் காப்பாற்றும் நோக்கில் பொய்யான விடயங்களை சாட்சியமாக தாம் வழங்கியதாக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் காமினி ஜயசுந்தர ஏற்றுக்கொண்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ச மீது தனக்கு தனி மரியாதை இருப்பதாகவும், அதன் காரணமாகவே தாம் பொய்ச் சாட்சி வழங்க நேரிட்டதாகவும் அவர் ஆணைக்குழு முன்னிலையில் நேற்று அவர் கூறினார்.

இந்த நிலையில் பொய்ச்சாட்சி வழங்கியமைக்கான காரணம் மற்றும் ஆணைக்குழுவை அவமதித்தமை போன்றவற்றுக்கான காரணங்களை எதிர்வரும் 17ஆம் திகதி முன்னிலையாகி விளக்கம் தருமாறு ஜனாதிபதி ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது. (த)

## தென்னாபிரிக்க ஜனாதிபதியுடன் பிரதமர் ரணில் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, செப்.6

சீனா சென்று நாடு திரும்பிய வழியில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கிய தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

சீனாவில் நடைபெற்ற போர் வெற்றிக் கொண்டாட்டங்களில் பங்கேற்ற பின்னர் தென்னாபிரிக்கா திரும்பிய ஜேக்கப் சூமா நேற்றுமுன்தினம் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரித்து நின்று சென்றார்.

பீஜிங்கிலிருந்து நாடு திரும்பும் வழியில், ஜேக்கப் சூமா பயணம் செய்த, அந்த நாட்டின் விமானப்படை விமானம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காகத் தரித்து நின்றது.

அப்போது. தென்னாபிரிக்க அதிபரை வரவேற்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவருடன் பேச்சுக்களை நடத்தியிருக்கிறார்.

தனிப்பட்ட முறையில் இந்தப் பேச்சுக்கள் இடம்பெற்றதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை சீனா செல்லும் வழியில் கட்டுநாயக்க சர்வதே விமான நிலையத்தில் தரையிறங்கிய தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமாவுடன், வெளிவிவகார அமைச்சர் பேச்சுக்களை நடத்தியிருந்தார் எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (த-வ)

## நல்லிணக்க யுகத்துக்குள் நுழையும் முன்னறிவிப்பே சம்பந்தன் தெரிவு

### மங்கள சமரவீர தெரிவிப்பு



கொழும்பு, செப்.6

கருத்து ஒற்றுமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான யுகத்தில் நுழையும் முன்னறிவித்தலே எதிர்க்கட்சித்தலைவர் தெரிவு என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் உண்மையான தேசிய அரசு அமைந்திருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசியல் வரலாற்றில் மகிழ்ச்சிதரக்கூடிய, நினைவில் நிலைத்திருக்கக்கூடிய உண்மையான தேசிய அரசு அமையப் பெற்றிருக்கிறது. இவ்வாறன நிலையில் நாடு எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ளவும் தீர்க்கவும் இயலுமை ஏற்பட்டிரு க்கின்றது.

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் உண்மையான தேசிய அரசு அமைந்திருப்பதாகவும் இந்த நிலையில் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சியாகியுள்ளது. இதன் ஊடாக இலங்கை ஒரு புதிய அத்தியாயத்துக்குள் நுழைய ஆரம்பித்துள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு புதிய அரசியல் கலாசாரத்தை எடுத்துரைக்கின்றது.

நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானத்தை உறுதிப்படுத்துவது அவசியம்.நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் கலாசாரத்தின் மூலம் சர்வதேச சவால்களை வென் றெடுக்க இயலும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-வ)

## யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா 15ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை

யாழ்ப்பாணம், செப், 6

யாழ் சர்வதேச திரைப்படவிழா எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை கொண்டாடப்படவுள்ளது. 'குடாநாட்டில் சுயாதீன திரைப்படங்களை கொண்டாடுதல்' எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ள முதலாவது யாழ்ப்பாண சர்வதேச விழாவை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை, சிலோன் தியேட்டர்ஸ் மற்றும் அஜன்டா 14 ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

விழா தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் உள்ள ப்ரோன்ஸ் திரையரங்கில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றிய விழாவின் இயக்குநர் அனோமா ராஜகருணா விழா தொடர்பில் கூறுகையில்,

'குடாநாட்டில் சுயாதீனமான திரைப்பட நோக்கம். நடைபெறவுள்ள நிகழ்வு போர் அழிவுகளிலில் இருந்து மீண்டெழுவதாக அமைவதோடு கலையைப் பயன்படுத்தலானது மக்களைச் சென்றடைதல் என நம்புகின்றோம். இந்த விழா சினிமாவின் ஊடாக சமூகங்கள் தமது எல்லைகளைக் கடந்து ஒருவர் மற்றவருடன் இடைவினை புரிவதற்கான ஓர் வெளியினை உருவாக்கும் என எண்ணுகின்றோம்' எனத் தெரிவித்தார்.

இந்தத் திரைப்படவிழாவில் வட மாகாணத்தில் தயாரிக்கப்பட்ட 15ற்கும் மேற்பட்ட குறும்படங்கள் வெளியிடப்படவுள்ளன.

விழாவில் 20 நாடுகள் பங்குபற்றுவதோடு விருதினை வென்ற, விமர்சனபூர்வமாகப் பாராட்டப்பட்ட 22 ஐரோப்பிய திரைப்படங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன. விழாவில் 45 கதைப்படங்கள் காட்சிப் படுத்தப்படவுள்ளன.

வித்தல் மற்றும் இளம் தலைமுறையினை ஊக்குவித்தல் என்கிற வகையில் யாழ் .சர்வதேச திரைப்பட விழாவானது மூன்று விருதுகளை அதனது முதலாவது வெளியீட்டில் வழங்க உள்ளது.

வாழ்நாள் சாதனை விருது யாழ்ப்பாணத்தின் மூத்த திரைப்பட விமர்சகரான அ.ஜேசுராசாவுக்கு வழங்கப்படுகின்றது. இலங்கை தவிர ஏனைய நாடுகளில் இருந்து காட்சிப்படுத்தப்படும் 12 அறிமுகத் திரைப்படங்கள் அறிமுகத் திறனாய்வு விருதுக்காகப் போட்டியிடுவதாகவும், யாழில் திரைப்பட விழாவுக்கு வந்து பார்வையிடும் பார்வையாளர்கள் சிறந்த குறும்படங்களை வாக்களித்துத் தேர்ந்தெடுக்கலாம் எனவும், அது மிகச் சிறந்த குறும்படத்துக்கான பார்வையாளர் விருதாக வழங்கப்படும் எனவும் விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### காணி விற்பனைக்கு
ஊரெழு கிழக்கில், பலாலி வீதிக்கு சமீபமாக அம்மன் கோயிலுக்கு வட - கிழக்கு மூலையிலிருக்கும் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொ.பே. 011 271 3398, 077 218 0036

### கார் விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள A/C உடன் கூடிய மிற்சுபி- டீசல்கார் (64-) விற்பனைக்கு உண்டு.
தொடர்பு : 077 500 6769

### காணி விற்பனைக்கு
அச்செழு போயிட்டி, மாணிக்கப் பிள்ளையார் கோயில் அருகில் 10¼ பரப்பு தோட்ட நிலம் உடன் விற்பனைக்குண்டு. (தரகர்கள் தேவையில்லை)
தொ.பே. 077 313 3057 (அரவிந்தன்) (82883)

### காணி விற்பனைக்கு
யாழ். கொக்குவில் கிழக்கு, இலக்கம் 60, உடையார் லேனில் வெற்றுக்காணி சுற்றுமதில்களுடன் விற்பனைக்குண்டு. துண்டுகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.
தொடர்பு : 077 318 1149
072 043 1452

### காணி விற்பனைக்கு
வவுனியா, வேப்பங்குளம், மன்னார் வீதியிலிருந்து 50 meeter தூரத்தில் 02 பரப்பு காணிU.C எல்லைக்குட்பட்டதாக நிரந்தர உறுதியுடன் விற்பனைக்குண்டு. சுற்றுமதில் கிணறு கட்டப்பட்டுள்ளது. (82969) (13.15.17)
தொ.பே. 077 484 8977, 024 567 0398

### காணி விற்பனைக்குண்டு
வண்ணார்பண்ணை மேற்கில் (மீனாட்சி அம்மன் வீதி, கொட்டடியில்) பரப்பு 2 குளி 5 15/32 காணி விற்பனைக்குண்டு.
தொ.பே. 076 547 1308 (82769) (13.15.17)

### வீடு விற்பனைக்கு
இல.08, லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணத்தில் 7½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. (82592) (13.15.17)
தொ.பே. 077 962 6831, 065 567 6203

### விற்பனைக்கு
எங்களிடம் தரமான கல்வனைஸ்ட் கம்பிகளால் செய்யப்பட்ட கோழிக் கூட்டு வலை, சதுர வலை, வேலி அடைக்கும் வலைகள் விற்பனைக்கு மற்றும் சரியான நிறையிலான முள்ளுக்கம்பிகள்
விலை 1Kg 176/= இல் இருந்து
தொ.பே. 076 689 1942 (சி.19048) (13.15.17)

### வான் விற்பனைக்கு
KD H200 Box Model
வான் விற்பனைக்கு உண்டு
தொடர்பு : 077 674 6895

### நாய்க்குட்டி விற்பனைக்கு
45 நாள்கள் நிரம்பிய டோமன் நாய்க்குட்டிகள் தடுப்பூசி போடப்பட்டவை.
சுந்தரலிங்கம் , ஞானவைரவர் கோயில் வீதி, உரும்பிராய் கிழக்கு. 077 755 4456

### விற்பனைக்கு
திருநெல்வேலி, பலாலி வீதி, 124 ஆம் இலக்கத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 3 மாடிக் கட்டடம் (1500 சதுர அடி) விற்பனைக்கு உண்டு. வாகனத் தரிப்பிட வசதிகள் உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.
தொ.பே. 077 217 4038 (சி.19047) (13.15.17)

### காணி விற்பனைக்குண்டு
மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வடக்கு வீதிக்கு எதிர்ப்புறமாக பிரதான வீதியில் ஆறு (6) குளி 15½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. வங்கிகள், ஹோட்டல்கள் என்பன கட்டுவதற்கு உகந்தது.
தொடர்பு : 078 325 5829

### கந்தரோடையில் காணி விற்பனை
அருளானந்தப்பிள்ளையார் கோயில், கந்தையா தமிழ் பாடசாலை, புதைபொருள் நிலையம் ஆகியவற்றிற்கு அருகில் 4½ பரப்புக் காணி ரூபா 18 இலட்சத்திற்கு விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 386 6076
021 222 7163

### காணி விற்பனைக்கு
யாழ். மாம்பழம் சந்தியிலுள்ள மலர்மகள் வீதியில் ஆரம்பப்பகுதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொ.பே. 077 993 7402 (சி.19047) (13.15.17)

### காணி விற்பனைக்குண்டு
நாவற்குழிச் சந்தியில் A9 வீதியில் Hero Honda வுக்கு முன்பாக 8½ பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு.
தொ.பே. 077 189 5427 (சி.19046) (13.15.17)

### காணிகள் விற்பனைக்கு உண்டு
❋சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதி-கற்குழி முதலாம் ஒழுங்கையில் 7 பரப்பும்,
❋சாவகச்சேரி நுணாவில் கல்வயல் வீதி, கற்குழி கந்சாமி கோயில் அருகில் 9 பரப்புக் காணியும் உடனடி விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 778 4092

## தேவை

### தேவை
வவுனியாவில் 2017 A/L பரீட்சை எழுதவுள்ள மாணவிக்கு Accounts மற்றும் General English ஆகிய பாடங்களை வீட்டிற்கு வந்து கற்பிப்பதற்கு ஆசிரியைகள் தேவை.
தொ.பே. 077 608 5118 (சி.19051)(13.15.17)

### மணமகள் தேவை
வெளிநாட்டு PR உள்ள Engineer கிறிஸ்தவர் வயது 35 கி.பா 40 தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர் R.C , இந்துக்கள் பரிசீலிக்கப்படும்.
தொடர்பு : 077 668 6739

### மணமகள் தேவை
யாழ், வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1971 இல் பிறந்த வெளிநாட்டு P.R உள்ள படித்த மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. மணமகன் விடுமுறையில் இலங்கை வந்துள்ளார்.
தொடர்பு : 077 632 9403
076 875 9628

### தேவை
உழவு இயந்திரம் (டிராக்ரர்), இரணைமடு நீர்ப்பாசனக் காணி என்பன தேவை.
(தரகர்கள் தேவையில்லை)
தொடர்பு : 076 857 3798
077 439 6524

### மணமகள் தேவை
கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த றோமன் கத்தோலிக்க பெற்றோர் தமது 28 வயதுடைய B.H.D Engineering முடிக்கவிருக்கும் மணமகனுக்கு 25 வயதுக்குட்பட்ட CIMA அல்லது Chartered முடித்த பட்டதாரி மணமகளைத் தேடுகின்றனர்.
தொடர்பு : 071 802 0007

### மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்பம் 1981, மிருகசீரிடம் 2 ஆம் பாதம், 18 கிரகபாவம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தற்பொழுது திருகோணமலையில் தனியார் துறையில் வேலைபார்க்கும் மெல்லிய தோற்றம் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொ.பே. 077 922 1174 (82877) (13.15.17)

### தேவை
யாழ்ப்பாணம், தெமட்டகொட, புத்தளம் கல்முனை ஆகிய இடங்களில் துண்டுப்பிரசுரம் விநியோகிப்பதற்கு ஆள்கள் தேவை.
தொ.பே. 021 225 6641
071 566 9641 (சி.62815) (13.15.17)

### வாடகைக்கு வீடு தேவை
கொக்குவில், கோண்டாவில் அண்டிய பகுதியில் 2 அல்லது 3 அறை கொண்ட வீடு வாடகைக்கு தேவை.
(சி.19048) (13.15.17) தொ.பே. 077 316 2803

### வீடு வாடகைக்குத் தேவை
யாழ். மாநகர சபை எல்லைக்குள் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு : 077 166 0458

### பணிப்பெண் தேவை
யாழ் நல்லூரில் நடமாடக்கூடிய வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் தங்கி இருந்து பராமரிக்கக் கூடியவர் தேவை.(மாதம்-15000/=)
தொடர்பு : 077 674 1213

### மணமகன் தேவை
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த புனர்பூசநட்சத்திரம் கிரகபாவம் குறைந்த M.B.B.S டாக்டர் 1988 இல் பிறந்த மணமகளுக்கு டாக்டர் எஞ்சினியர் மணமகன் தேவை.
தொடர்பு : 076 618 8058

### மணமகள் தேவை
31 வயதுள்ள (உயரம் 5'3") அரசசார்பற்ற நிறுவனத்தில் இணைப்பாளராகக் கடமையாற்றும், நல்ல கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு : 077 987 4553

### மணமகள் தேவை
யாழ் இந்து 1984 ஆம் ஆண்டு ரேவதி நட்சத்திரத்தில் பிறந்த தனியார் நிறுவனத்தில் முகாமையாளராக பணிபுரியும் எமது மகனுக்கு தகுந்த மணப்பெண்ணைத்தேடுகிறோம். தகுதியானவர்கள் தொடர்புகொள்ளவும். (82579) (13.15.17)
தொ.பே. 071 022 4820, 077 802 9725

### வேலையாள்கள் தேவை
சங்கானை பிரதான வீதியில் இயங்கிவரும் சாய்ராம் பிறின்டேர்ஸ் ஓப் செற் (Off Set) அச்சகத்திற்கு கணினி அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. சங்கானையை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு : 077 691 5339

### கடை வாடகைக்குத் தேவை
யாழ்ப்பாணம் பஸ் தரிப்பிடத்துக்கு அல்லது ஆஸ்பத்திரிக்கு முன்பாகவும் பஸ்ரியான் சந்திக்கு அண்மையிலும் கடைகள் வாடகைக்குத் தேவை.
தொடர்பு : 075 900 3300

### வேலையாள் தேவை
எமது நிறுவனத்திற்கு பின்வரும் இடங்களுக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.(சாரதி அனுமதிப்பத்திரம் இருப்பின் விரும்பத்தக்கது) சுன்னாகம், நெல்லியடி, கிளிநொச்சி,
தொடர்பு : 021 224 0514 (62996) (12.15.16)

### பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை
கொழும்பு தெஹிவளையில் அமைந்துள்ள மூன்று மாடிகளை கொண்ட வீட்டிற்கு ஆண் பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 077 775 8950
077 547 2016

## ஏனையவை

### வீடு வாடகைக்கு
ஓட்டுமடச் சந்தி சேச் லேனில் வீடு வாடகைக்கு உண்டு. (Annex) 2அறை, கோல், சமயலறை, தனி குளியலறை சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
தொ.பே. 077 616 9348

### பிரத்தியேக வகுப்பு
பொருளியல் - A/L
வணிகக்கல்வி - A/L
குடியியற்கல்வி - O/L
வணிகக்கல்வி - O/L
தனியாகவும் குழுவாகவும் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்
தொ.பே. 077 900 7597 (82769) (13.15.17)

### வேலைவாய்ப்பு
FR advertising கம்பனியில் வேலைக்கான வெற்றிடங்கள் உள்ளன. O/L, A/L தகைமையுடையவர்கள், இளைஞர், யுவதிகள் நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.
கிளிநொச்சி : 077 280 3773
யாழ்ப்பாணம் : 077 208 3140
மூதூர் : 077 526 7295
கொழும்பு : 077 354 8006

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

### வாடகைக்கு
பலாலி வீதி, முதலாம் ஒழுங்கையில் இருக்கும் புதிய கட்டடத் தொகுதியில் அறைகள் வாடகைக்கு கொடுக்கப்படும். (பெண்களுக்கு மட்டும்)
தொடர்பு : 077 973 8214, 077 219 8642

### வேலைவாய்ப்பு
வெல்டிங் வேலை செய்யக் கூடிய வெல்டர் தேவை.
தொடர்பு : 077 376 0594

### விற்பனைப் பிரதி நிதி
பிரபல பல்தேசிய தொலைத் தொடர்பாடல் கம்பனிக்கு விற்பனைப் பிரதிநிதி Sales Representative வெற்றிடம் காணப்படுகிறது விரும்பியவர்கள் சுயவிவரக் கோவையுடன் அலுவலகத்திற்கு உடனடியாக நேரில் வரவும். இதற்கு உத்துருளி அனுமதிப்பத்திரம் ,முன் அனுபவம் என்பன கருத்திற் கொள்ளப்படும்.
முகவரி: Hutch
62/33, Old Post Office Rd(Stany, Road)Jaffna (வெளிமாவட்ட தனியார் பஸ் தரிப்பிடத்திற்கு முன்னால்)

### நகரத்துக்குள் உங்களுக்கு காணி வீடு தேவையா?
உங்கள் தேவையை நிறைவு செய்யக் காத்திருக்கிறோம்.
வாங்கவோ - விற்கவோ
தொடர்புகளுக்கு
071 837 3354, 071 814 8150

### வாடகைக்கு
யாழ்ப்பாணத்தில் Town அருகில் சகல வசதிகளுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. வாகனத்தரிப்பிடம் உண்டு.
தொடர்பு : 075 891 5498

### 2015 Chemistry Personal Classes
Basic, inorganic, organic, Physical, கடந்த கால வினாக்கள் ஆசிரியரால் B.SC (cey) M.SC (cey) Chemistry கற்பிக்கப்படும்
தொடர்பு : 077 603 8913

### தையல்
இந்தியாவில் 8 வருட அனுபவம் வாய்ந்த பெண் ரெய்லரால் சாறி பிளவுஸ், சுடிதார் ஆகியவை நவீன முறையில் தைத்துக் கொடுக்கப்படும்
இடம் : குமாரசாமி வீதியிலிருந்து பிரம்படி வீதி, கொக்குவிலுக்கு மாற்றப்பட்டுள்ளது.
தொடர்பு : 076 639 9277




உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தம்பு செல்வராசா

தோற்றம் 02.02.1934 மறைவு 29.08.2013

திதி: 06.09.2015



ஆண்டுகளிரண்டு மறைந்துவிட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை விட்டுவிட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை எங்கள் உயிர் உள்ளவரை
உங்கள் நினைவுகள் தொடரும்
அன்னாரின் நினைவாக திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் கோயில் மண்டபத்தில் அன்னதானம் வழங்கப்படும்.

மீசாலை. குடும்பத்தினர். 004 475 503 98742


# எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுக்கு திருகோணமலையில் பாராட்டு விழா

மூதூர், செப் 6

இலங்கையின் எட்டாவது நாடாளு மன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவ ராகப் பதவியேற்றுள்ள தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனைக் கௌரவிக்கும் விழா இன்று ஞாயிறுக்கிழமை மாலை 4.00 மணியளவில் திருகோணமலை நகரசபைமண்டபத்தில்இடம்பெறவுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திரு கோணமலைத் தொகுதிக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்த நிகழ் வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலை வர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப் பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், செல்வம் அடைக் கலநாதன், சித்தார்த்தன், சிவசக்தி ஆனந்தன், க.துரைரெட்ணசிங்கம் மற் றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம் பாள் ஆலயத்தில் ஆரம்பமாகும் நிகழ்வு கள் மேள தாளங்களுடன் பவனியாக திருகோணமலை நகரசபை மண்டபத் துக்குச் சென்று அங்கு கௌரவிப்பு நிகழ்வுகள் இடம் பெறும். இந்நிகழ்வுக்கு திருகோணமலை மக்கள் அணைவரை யும் கலந்து கொள்ளுமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோண மலைத் தொகுதிக் கிளையினர் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (த-40)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28.10.1960 மறைவு 19.08.2014


திருமதி பவானி செல்வராசா

ஆண்டு ஒன்று ஆனதம்மா
ஆறவில்லை எமது துயர்
இன்பத்திலும் துன்பத்திலும்
இனிதாக அரவணைத்து
ஏற்றம் பெற ஏணியாக
நீங்கள் இருந்தீர்கள்
ஏற்றி விட்ட ஏணியதை கூற்றன்
காவு கொண்டான்
மகாராணி நீங்கள் இன்றி வாடுகின்றோம்.
பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

தோற்றம் 24 . 02 . 1933 மறைவு 07 . 08 . 2015



அமரர் அன்னலிங்கம் குமாரசாமி

அன்பின் திருவுருவே! அப்பாவே! பண்பூட்டி எமை பார்சிறக்க வைத்தீரே!
சிரிப்புக்குள் சிறை வைக்கும் செப்படி வித்தையை எப்படிக் கற்றீரோ
பார் சிறக்க வாழ்ந்தீரே அப்பா- இனி
நீர் பிறக்க மாட்டீரோ வார்த்தைகளுள் அடங்கவில்லை
உங்கள் பாசங்களும் நேசங்களும்
அன்பு வார்த்தைகளின் இருப்பிடமே- அதை
ஆண்டவன் அனுபவிக்க அழைத்தானோ?
உத்துங்கன் பாதமதைப் பற்றிடவே உளமார வேண்டுகின்றோம் உமது
ஆத்ம சாந்திக்காய் உளமார வேண்டுகின்றோம்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. குடும்பத்தினர்.



பன்னிரெண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பொன்னையா பாலசிங்கம்
(Retired Superintendent Of Audit)

தோற்றம் 19.09.1931 மறைவு 21.08.2003

அன்பிற்கும் பண்பிற்கும்
இலக்கணமாய் வாழ்ந்து- எமை
அவனியிலே வாழ்வாங்கு
வாழவைத்த தெய்வமே !
ஈராறாமாண்டு நினைவு
நாளில்- உமை
நினைந்து வணங்குகின்றோம்
அப்பா !

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
166/3, சேர்.பொன் இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.


## சம்பந்தனுக்கு ஆசி வேண்டி வவுனியாவில் பூசை வழிபாடு

வவுனியா, செப். 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலை வரும், திருகோணமலை மாவட்டத் தின் நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு வின் தலைவரும், தமிழரசுக்கட்சியின் அரசியல் குழுத் தலைவருமாகிய இரா. சம்பந்தன் இலங்கையின் 8ஆவது நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலை வராக தெரிவு செய்யப்பட்டதையடுத்து இரா சம்பந்தனுக்கு நீண்ட ஆயுளும், மன உறுதியும் வேண்டி வவு[illegible]யா குருமண்காடு காளியம்மன் தேவஸ்த் தானத்தில் சிறப்பு பூசை வழிபாடு நேற்று முன் தினம் காலை நடைபெற்றது.

வவுனியா மாவட்ட இலங்கைத் தமிழர சுக்கட்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த பூசை வழிபாட்டில் கட்சியின் முக் கியஸ்த்தர்கள் கலந்துகொண்டனர். (த)


மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 . 12 . 1939 மறைவு 06 . 09 . 2012



அமரர் சின்னத்தம்பி தர்மராஜன்
(ஓய்வு பெற்ற அஞ்சல் அத்தியட்சகர்)

நிமிர்ந்த நன்நடையும் நேர்கொண்ட பார்வையும்
அவனியில் எவருக்கும் அஞ்சாது அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் அரவணைத்த எம் அன்புத் தந்தையே!
கண்மூடித் திறக்கும் நேரத்தில் எங்களைத் தவிக்கவிட்டு
நிரந்தரமாகப் பிரிந்தீர்களே !!
உங்களுக்கு நிகர் இனி எங்களுக்கு யார்?
ஆண்டுகள் மூன்று ஆனாலும்
அணையாதே உங்கள் நினைவுகள்

பாடசாலை வீதி,
தாவடிதெற்கு,கொக்குவில். குடும்பத்தினர்.



2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 08 . 08 . 1933 விண்ணில் 29 . 08 . 2013



அமரர் சண்முகம் தணிகாசலம் (J.P)

திதி : அபரபக்க நவமி

" மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க" அப்பா ஆண்டுகள் தான் இரண்டு
சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் மனதோடு......

தந்தை ரகசியம் தந்தை அதிசயம்
மௌனமே உணரும் மௌனமே மகிழும்
மானுடத்தின் அற்புதம் எம்குலவிளக்கு அப்பா!

என்றும் நினைவில்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

151/1, பலாலி வீதி,
திருநெல்வேலி.


## பஸ் சேவை நடத்துமாறு ஆசிரியர்கள் கோரிக்கை

மாங்குளம் செப்.6

பருத்தித்துறையிலிருந்து மணற்காட் டுக் குச் சேவையில் ஈடுபட்ட பஸ்ஸை 2ஆம் தவணை விடுமுறைக்கு முன்ன ரைப் போன்று மீண்டும் சேவையில் ஈடுபடுத்துமாறு மணற்காட்டுப் பிரதேசத் துக்குக் கடமைக்குச் செல்லும் ஆசிரி யர்கள் வேண்டுகோள் விடுத்துள்ள னர்.

2ஆம் தவணையின் பாடசாலை நாள் களில் பருத்தித்துறையிலிருந்து புறப் பட்ட பஸ் சேவையானது மந்திகைச் சந்தியினூடாக வல்லிபுரக் கோவில் சந்தியையடைந்து மணற்காட்டுக்குச் சென்றுள்ளது. ஆனால் 2ஆம் தவணை விடுமுறைகாலத்தில் இச் சேவை யானது பருத்தித்துறையிலிருந்து நெல்லண்டை முத்துமாரி அம்மன் கோவிலடி வீதியி னூடாகத் தும்பளைச் சந்தியை அடைந்து வல்லிபுரக் கோவில் சந்தியினூடாக மணற்காட்டைச் சென்றடைகின்றது.

இப்பகுதியினூடாக வேறு பஸ் சேவை யும் நடைபெறுவதனாலும் மணற் காட்டுப் பகுதிக்குப் பெருந்தொகை யான அரச ஊழியர்கள் கடமைக்குச் செல்வதனாலும் இச்சேவையை முன் னர் போல் நடத்துமாறும் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

ஊர்க் கோழிக்குஞ்சுகள் (கிரிராஜ்) விற்பனைக்கு உண்டு. ஒரு நாள் குஞ்சு - 70/=,
ஒரு கிழமை குஞ்சு - 90/=.
தொடர்பு : 077 999 4655
நிருநெல்வேலி
(62956, 11, 18)

## வீடு விற்பனைக்குண்டு

யாழ். புங்கங்குளம் சந்தியில் A9 வீதியில் அமையப்பெற்ற மூன்று பரப்பும் 9 குழியுமுடைய காணியும் மூன்று அறை, 2கோல் கிச்சின், பாத்ரூம் மற்றும் கிணறு, தனி வழிப் பாதையுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
(சி.18287) (45.3.6) **076 547 2474**

## Majestic Cineplex Jaffna
### கார்கிள்ஸ் ஸ்குவெயர்

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில் — CEYLON THEATRES



மஜெஸ்டிக் ப்ளாட்டினம் 10.30 / 2.30 6.30
சில்வர் 10.15 / 2.15 / 6.15
ப்ரொன்ஸ்
பஹுபாலி 10.30 / 2.30
வித் ஓர் வித்தவுட் யு 6.30
விசாரணை ☏ 021-2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

## யாழில் இந்திய சீன உயர்தர உணவகத்தில் உடனடி வேலைவாய்ப்பு

* காசாளர் (Cashier)
* சமையல் உதவியாளர்(Kitchen Helper)
* உணவு பரிமாறுபவர்கள்(Waiter)
* உணவு தங்குமிடம் இலவசம். எதிர்வரும் திங்கட்கிழமை 07.09.2015 மு.ப 10 மணிக்கு தேர்முகத் தேர்வு இடம்பெறும்.

தொடர்பு : **077 4649 297**
(62971) (12.15.16)

## விஞ்ஞானக் கண்டுபிடிப்பு விற்பனைக்கு (APGS)

உலகின் நவீன கால விஞ்ஞான வளர்ச்சியில் மாபெரும் புதிய புரட்சியை ஏற்படுத்தும் வகையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள தன்னியக்க மின் பிறப்பாக்கி (AUTOMATIC POWER GENERATING SYSTEM) கேள்வி கோரல் அடிப்படையில் விற்பனைக்கு உள்ளது. APGS எனும் இச் சாதனத்தை கொள்வனவு செய்பவருக்கு அதற்கான முழு உரிமமும் கையளிக்கப்படும். (PATENT RIGHT)

1. எரிபொருள்கள், காற்று, சூரியஒளி, கடலலை மற்றும் அணு சக்தி போன்ற தூண்டற் காரணிகள் எதுவுமின்றி தானாகவே இயங்கக் கூடிய வகையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
2. மின்சாரம் பயன்படுத்தப்படும் இடங்களிலும் பயன்படுத்தக் கூடிய இடங்களிலும் எரிபொருள்களுக்கு பிரதியீடாகவும் பயன்படுத்த முடியும்.
(உ+ம்) வீடு, அலுவலகம் எல்லா விதமான வாகனங்களும், ஊர்திகள்.
3. வாழ்நாள் முழுவதும் மின்சாரத்தை இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு மேலதிக பராமரிப்பு அவசியம் இல்லை. மேலும் நகர்த்திச் சென்று தேவையான இடத்தில் வைத்து பயன்படுத்த முடியும்.

மேலதிக விவரங்களுக்கு:
**www. Jackshon.com** எனும் இணையத் தளத்தினை பார்வையிடவும்.

தொடர்புகளுக்கு: N.N.Jackshon (63871) (10.15.17)
071 7171810, 076 7676772 Email: navaraj@jackshon.com

## மகப்பேறு இனவிருத்தி நிலையம்

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடிவயிற்று நோ, கருச்சிதைவு, மாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சினைகளுக்கும் சிகிச்சையளித்தலும் மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சைகளும், IVF,ICSI யும் கொடை முட்டை (donaor egg) விந்து நன்கொடை (donor sperm) போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராஜ்சியத்தில் (UK) 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தன் அவர்கள் திருநெல்வேலி நோதேன் சென்றல் வைத்தியசாலையில் அளித்து வருகின்றார். சென்ற மாதம் இவரின் சிகிச்சை மூலம் இரு தாய்மாருக்கு சோதனைக் குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

தொடர்புகளுக்கு:
திருமதி கௌரி இல. 0773439988
021 221 9988, 021 221 9977, 021 222 63
(C16611) (10.15.17)

## பணிநிலை வேண்டுகை
### களஞ்சியக் காப்பாளர்

மேற்படி பணிநிலைக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.
கல்வித்தகைமை-G.C.E.A/L- சித்தி ஆண்,பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு : **077 8954 882**
(62963) (12.15)

## நாகபூஷணி திருமண சேவை

டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மற்றும் வங்கி உத்தியோகத்தர், அரச உத்தியோகத்தர் தனியார் துறையைச் சேர்ந்தவர். உள்நாட்டு/ வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் நிறைய உள்ளன. நீங்கள் விரும்பும் மண மக்களின் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு

T.P. NO: 077 138 7596, 021 222 9306
T.P. NO: 075 554 6000, 021 320 9793
Email: nakapoosanywedding@gmail.com
383/14B, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் கோவில் வடக்குப்பக்கம்)
(எமக்கு வேறு கிளைகள் எதுவுமில்லை)
வாரத்தின் ஏழு நாள்களும் திறந்திருக்கும்.

## VACANCY
### P/A SECRETARY FOR MANAGING DIRECTOR

British based property developing company operating from Jaffna.

**Requires P/A SECRETARY**

* Must be able to speak English and a Computer literate.
* knowledge in Accounts is an advantage.

**Salary from 30,000 plus, according to age and experience.**

Please forward your CV to :
**tilko.tilak@gmail.com**

## லெவல் சீற் வேலைகள்

உங்கள் வீடுகள் ,அலுவலகங்கள், வியாபார நிலையங்களிற்கு



* அழகிய வடிவங்களில்
* குறைந்த செலவில்
* துரிதமான ,தரமான வேலைகள்
* ஒரு சதுர அடிக்கான மொத்தசெலவு115/= ரூபாவிலிருந்து

யாழ்,கிளி,முல்லை,வவுனியா மற்றும் மன்னாரில்
தொடர்பு :கோபி
077 367 2796,076 702 0389

## வேலை வாய்ப்பு

நியூசன் செறமிக் (பிறைவேற் லிமிட்) கிளிநொச்சி பழைய வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள எமது நிறுவனத்தில் பணிபுரிய பெண் பணியாளர் தேவை.
தொடர்பு :
**021 228 3872**
(37197) (12.15.16.19)

## Vacancies

Applications are invited from suitable candidates for the following posts

I. **Post of Accounts Assistant**
Requirement :
* Qualified in AAT intermediate level (stage 2) or completed 2nd year in HNDA
* Ability to work in computerized Accounting packages. Knowledge in Quick Book is desirable.

II. **Post of Administrative Assistant**
Requirement :
* GCE A/L or Degree.
* Ability to prepare documents in English

III. **Post of Chemistry Teacher**
Requirement :
* BSc degree
* Ability to teach in Tamil and English medium

For all vacancies, good command in English with Experience and Proficency in MS Office packages will be considered as an added advantage. Please send your CV with two nonrelated referees to the principal St.John's College, Jaffna or email to stjohns@sltnet.lk on or before 11.09.2015

**Principal : St.John's College**

PEARSON | University of Wolverhampton | London South Bank University

## A/L இன் பின்னர் சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்




Business Management · Marketing · HRM — BTEC HND, Leading to BA (Hons) from the UK Universities
Quantity Surveying — BTEC HND, Leading to BSc (Hons) from the UK Universities
Bio-Medical Science — BTEC HND, Leading to BSc (Hons) from the UK Universities
Civil Engineering — BTEC HND, Leading to BEng/BSc (Hons) from the UK Universities
Telecom Engineering — BTEC HND, Leading to BEng (Hons) from the UK Universities
Computing — BTEC HND, Leading to BSc (Hons) from the UK Universities

BCAS CAMPUS
**BCAS JAFFNA CAMPUS**
16, Point pedro Road, Jaffna.
021 221 9910
Hotline: 077 710 2131
Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த வெளிநாட்டில் விமான ஓட்டுநராக வேலை செய்யும் (Pailot) மணமகனுக்கு படித்த, அழகிய, ஆங்கிலம் சரளமாக பேச, எழுத தெரிந்த மணமகள் தேவை.
சிற்றிசன் - டென்மார்க்
வேலை - பிளைற் டுவாய்
மணமகனைப் பற்றிய மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு :**
தற்காலிகம் : 076 566 0182, 077 204 1821
நிரந்தரம் : 0045 3013 0771, 0045 9818 7116
0045 2226 0771
(62676, 11, 15)

## ST.JOHN'S COLLEGE & THE JAFFNA ACADEMY & SCHOOL OF TECHNOLOGY

**1. English Language Development Programme.**
Three months foundation course in English covering the four skills of the language.
Classes :- Week days 3.30 pm to 5.30 pm.
Course starts :- September 16th 2015.

**2. Pre-school & Primary Teacher Training (with Games, IT, English & Sinhala)**
One year Diploma Course (250 Hrs)
Classes : 2nd & 4th Saturdays of each month.
9.00 am - 12.00 noon and 2.00 p.m to 5.00 p.m
Workshops during school vacations.
Course starts :- September 16th 2015.


**3. Sinhala Language**
i) Spoken Sinhala - Level 1 - 6 months course
ii) Second Language Sinhala for G.C.E (O/L) 2015 December Examination Covering G.C.E O/L syllabus & discussion of past question papers.
Classes :- Weekdays 4.30 p.m to 5:30 p.m.
Course starts :- September 16th 2015.

**4. G.C.E. A/L classes for 2nd & 3rd sittings (Science, Maths, Commerce, Arts and Technology streams)**
Applications close on **14th September 2015**

*For more information contact:*
The Director, The Jaffna Academy & School of Technology 021 321 6006
The Principal, St.John's College, Jaffna. 021 222 2432
(C/18617)(10.15.17)

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி நடராஜா (நடேசுமாமி)


தோற்றம் 20.01.1922 மறைவு 05.09.2015

புத்தூர் நவக்கிரியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தோப்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நடராஜா (நடேசுமாமி) நேற்று (05.09.2015) சனிக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற நடராஜாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சிவக்கொடி மற்றும் இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுகிர்தமலர் (வேவி - கனடா), கமலநாதன் (கனடா), தயாமலர் (கனடா), சோதிநாதன் (கந்தன் - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கீதாபரன், திலகவதி அழகேஸ்வரி (கலா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதர்சினி-கருணதாஸன், தீபதர்சினி - கிருபாகரன், சிந்துஜா, சாருஜா, மதுசன், சுயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அருணன், வாசவி, வைகன், தியானா, தூயன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.09.2015) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தோப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இராஜ வீதி,
தோப்பு,
அச்சுவேலி.

தகவல் : குடும்பத்தினர்.
075 869 0746

## Generators For Sale

Perkins/ Stamfort(England)
400- 230V
12KVA
22KVA
தொடர்பு :
077 775 6904, 077 974 3656
(62825)(12.15)

## ஆசிரியர் பயிற்றுவிப்பாளர் தேவை

யாழ்ப்பாணம், தெமட்டகொட, புத்தளம், கல்முனை ஆகிய எமது கிளை பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்களுக்கு ஆங்கில மொழியில் பயிற்றுவிப்பதற்கு பயிற்றுவிப்பாளர் தேவை.
தொடர்பு:
**Blooming Buds E Best Campus**
390/2/1, Baseline Road, Demaddagoda.
T.P: 032 222 666 41
0112 26 77 641, 021 225 66 41, 071 566 9641
(62814)(10.15.17)

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல்யமான CCTV CAMERA நிறுனத்துக்கு
**(HIKVISION/SUNSAKTHY TRADERS)**
கமரா பொருத்துனர், வயறிங் வேலை தெரிந்தவர், விற்பனை பிரதிநிதிகள், அலுவலக பணியாளர் உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு: 077 593 0 335
(62977)(10.15.17)

## பயிற்சி மூலம் ஆசிரியர்களை சேர்த்துக் கொள்ளல்.

**English Medium {Grade 01-11} All subjects.**
**10 மாதங்கள்**
**தமிழ் பேசும் மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.**
மேலதிகமாக சிங்களக்கல்வி மற்றும் கணனி கற்கை நெறியும் இணைக்கப்பட்டுள்ளது.
தொடர்புகள் :தெமட்டகொட,புத்தளம், ஹட்டன், யாழ்ப்பாணம் (சுதுமலை), கல்முனை

நேர்முகத்தேர்வும் ஒருநாள் ஆசிரியர் பயிற்சி வேலைத்திட்டமும் ஆரம்பமாகவுள்ளது பிரதான நிறுவனம் உட்பட புதிய கிளைகள் 45 இற்கு 300 ஆசிரியர்களை இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டம்

தகைமைகள்

- ✓ க.பொ.த சாதாரண தரம் 6 பாடங்களில் திறமைச்சித்தி மற்றும் க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல் வேண்டும்.
- ✓ ஆங்கில பாடத்தில் குறைவானவர்களுக்கு 60 நாட்களுக்கு ஆங்கிலப்பயிற்சி கொடுக்கபபடும்
- ✓ பயிற்சி கிழமையில் 5 நாட்கள் என்ற அடிப்படையில் 10 மாதங்களிற்கு கொடுக்கப்படும.
- ✓ பயிற்சி முடிவடைந்த பின்னர் எமது கிளை நிறுவனங்களில் வேலைக்கு அமர்தப்படுவீர்கள்.
- ✓ போயாதினம் உட்பட அரசாங்கவிடுமுறை தவிர ஏனைய நாட்கள் காலை 8.30- 5.00வரை வேலை நாட்களாகும்.

**கற்கைநெறிக்கான கட்டணங்களுக்கு வங்கிக்கடன் ஏற்பாடு செய்துதரப்படும்.**

**பயிற்சியின் பின்னர் மாதாந்தக்கொடுப்பனவு 34500/= வை சம்பளமாகக்கொடுத்து உங்களை எங்கள் நிறுவனத்தின் சிறந்த ஆசிரியர்களாகத்தேர்ந்தெடுக்க நாங்கள் தயார்.**

உங்கள் விண்ணப்பத்தினைப் பிறப்பு அத்தாட்சிபத்திரம் தராதரப்பத்திரக்குறிப்புப் பிரதி எடுத்து அத்துடன் (9x4) அளவுள்ள தபாலுறையில் 45 முத்திரை ஒட்டப்பட்டு தபால் உறையின் மேல் மூலையில் 01-11ஆம் வகுப்பு வரை என்று எழுதி பதிவுத்தபாலில் அனுப்பவும்.

**BLOOMING BUDS INTRENATIONAL TEACHER TRAINING SCHOOL,**
Blooming Buds Intrenational Teacher Training School
No.390/2/1 Baseline Road, Dematagoda,Colombo-09.
தொலைபேசி:0715669641/0771529731/ 0112677641
பதிவுத்தபாலில் அனுப்பவேண்டிய முகவரி:
**Officer**
**Blooming Buds International Teaching Training Institute**
**No.390/1/1,Base Line Road, Dematagoda, Colombo-09.**
The Wisdom of children
PV 94034

## வாகன விபத்தில் 23 பேர் படுகாயம்

கொழும்பு, செப். 6
சியம்பலாண்டுவ தொம்பகஹவெல பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் 23பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
லொறியும் பஸ்ஸும் மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் மேலும் கூறியுள்ளனர். (த)

## கஞ்சா புகைத்த 20 பேர் சிக்கினர்

வீட்டுக்குள் கஞ்சா புகைத்துக்கொண்டிருந்த இளைஞர்கள் 20 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
பாணந்துறை மாலமுல்லே பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து கஞ்சா புகைத்துக் கொண்டிருந்த போதே இவர்களைக் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.
கஞ்சா பைக்கற் ஒன்று 250 ரூபாவுக்கு விற்கப்பட்டுள்ளது என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

## குளத்தில் குளித்த சிறுவன் மாயம்

வெலிமடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிராவத்தைப் பகுதியிலுள்ள மாதன்ன குளத்தில் குளித்த 17 வயதான சிறுவன் ஒருவன் காணாமல் போயுள்ளார் என்றும், அவரைத் தேடிவருவதாகவும் வெலிமடை பொலிஸார் தெரிவித்தனர்.
பாணந்துறை அறபிக் கல்லூரியில் கல்வி கற்கும் தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த சிறுவன், வெலிமடையிலுள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றபோதே மாதன்ன குளத்தில் நேற்றுக் குளித்துள்ளார். இதன்போது சிறுவன் நீரில் மூழ்கி காணாமல்போயுள்ளார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)

## தேவை

கொக்குவில் பிரம்படி வீதியில் உள்ள நான்கு பேர் உள்ள குடும்பம் ஒன்றுக்கு பெண் உதவியாளர் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு : 077 315 5100

## வேலை ஆள்தேவை

கொழும்பில் வசிக்கும் குடும்பம் ஒன்றிற்கு வீட்டு வேலைகள் செய்யவும்,சமையல் செய்யவும் தெரிந்த பெண் தேவை.
தொடர்பு:071 190 3222
(62822)(2154617)

## பகுதி நேர வேலையாள் தேவை

நல்லூர் பகுதியில் வீடு ஒன்றை பகுதி நேரமாக துப்பரவு செய்யக்கூடிய வேலையாள் தேவை.
தொடர்பு : 071 462 0806

## காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பிரதான வீதியில் சுண்டுக்குழி மகளிர் கல்லூரியில் இருந்து 600 m தூரத்தில் 35 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு :
077 6102405 ,077 491 3399

## ஓட்டோ வாடகைக்கு தேவை

நல்லூர் பகுதியில் ரியுசனுக்கு ஏற்றி இறக்கக் கூடிய ஓட்டோ மாதாந்த கட்டண அடிப்படையில் தேவை.
தொடர்பு : 071 462 0806

## விற்பனைக்கு

K.K.S. வீதி, கோண்டாவிலில் வீடு குழாய் கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
விவரங்களுக்கு
077 791 8342, 077 653 2365
(62822)(2153617)

## வாடகைக்கு உண்டு

இல.115, இராசாவின் தோட்டம் வீதியில் வீடும்,ஆஸ்பத்திரிவீதி சத்திரச்சந்தியில் கடையும் வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 076 661 9531
(62822)(2158617)

## வேலையாள்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை
- வாகன சாரதி AD ( 40 வயதுக்குட்பட்டவர்)
- தச்சு வேலையாள்கள்
- கூலி வேலையாள்கள்

தொடர்பு : லிப்றாமரதளபாடநிலையம்
249 4/4 பிறவுண்வீதி
யாழ்ப்பாணம்
T.P:077 758 5412
(62825)(12.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகிய ஆலயங்களில் ஒன்றான அடைக்கல அன்னை ஆலயம்



**ஓ.எல்.ஆர் என அழைக்கப்படும் யாழ் அடைக்கல அன்னை ஆலய பெருவிழா செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை தலைமையில் கொண்டாடப்படுவதை யொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக விரிவுரையாளர்*
*- யாழ்.பல்கலைக்கழகம்*

யாழ்.நகரத்தின் மையப்பகுதியில் - ஆஸ்பத்திரி வீதியில் - யாழ் மறைமாவட்டத்தின் அழகிய ஆலயங்களில் ஒன்றான யாழ் அடைக்கல அன்னை ஆலயம் அழகிய உயர்ந்த தோற்றத்துடன் அழகுறக் காட்சி தருகிறது.

இக்கட்டுரைக்கான தகவல்களை யாழ் அடைக்கல அன்னை ஆலய அபிசேகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு மலரில் இருந்தும் - பங்குத்தந்தையும், இவ்வாண்டு குருத்துவ பொன்விழா நாயகருமான றெஜி இராஜேஸ்வரன் அடிகளாரிடம் இருந்தும் பெற்றுக் கொண்டோம்.

1622 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் எட்டாம் திகதி யாழ்ப்பாண இராச்சியம் திருச்சபையாலும் அரசாலும் நேர்ந்தளிக்கப்பட்டு போர்த்துக்கேயர் ஆட்சியில் செப்ரெம்பர் எட்டாம் திகதி ஆண்டு தோறும் பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. யாழ்ப்பாணப் பட்டினம் என்னும் பழைய இராச்சியத்தின் முக்கிய விழாவான செப்ரெம்பர் எட்டாம் திகதியை தனது ஆலய பெருவிழாவாக யாழ் அடைக்கல அன்னை ஆலயம் இன்னமும் கொண்டாடிவருகிறது.

1783 ஆம் ஆண்டுக்கும் 1802 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கல்லினாலான முதலாவது ஆலயம் (பழைய ஆலயம்) கட்டப்பட்டுள்ளது. 1828 ஆம் ஆண்டு லோபோ அடிகளாரால் (1783 - 1802) புதிய ஆலயம் கட்டப்படுவதற்கு (1928) சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த ஆலயம் பூர்த்திசெய்யப்பட்டதாக அறியவருகிறது. லோபோ அடிகளாரின் உடல் பழைய ஆலயத்தின் கிறாதிக்குள் அடக்கம் செய்யப்பட்டது.

1828 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி ஆயர் மேதகு ஜே.ஏ.கியோமர் அ.ம.தி ஆண்டகை மிகச் சிறந்த கட்டடத் தொழில்நுட்பத்தில் - கொதிக் அமைப்பு முறையில் - சிலுவை வடிவில் அமைக்கப்பட்ட யாழ் அடைக்கல அன்னையின் தற்போதை புதிய ஆலயத்தை அபிசேகம் செய்தார். 1848 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஆயர் மேதகு பெற்றக் கினி அ.ம.தி ஆண்டகையின் காலத்தில் யாழ் அடைக்கல அன்னை ஆலயம் பதில் பேராலயமாகப் பயன்படுத்தப்பட்டதாக எஸ்.ஞானப்பிரகாசர் அ.ம.தி அடிகளார் தெரிவிக்கிறார்.

1873 ஆம் ஆண்டு அடைக்கல அன்னை ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள தமிழ் மொழிப் பாடசாலை பதியப்பட்டுள்ளது. புனித பத்திரிசியார் கல்லூரி இந்த ஆலய வளவிலேயே ஆரம்பிக்கப்பட்டது என 1928 ஆம் ஆண்டு யாழ் அடைக்கல அன்னை ஆலய அபிசேகத்தின் போது எஸ்.ஞானப்பிரகாசர் அ.ம.தி அடிகளார் மறையுரையில் தெரிவித்துள்ளார். 1907 ஆம் ஆண்டு ஆயர் மேதகு கென்றி யூலன் அ.ம.தி ஆண்டகை (1893 - 1919) தற்போது காட்சியளிக்கும் புதிய ஆலயத்துக்கான அடிக்கல்லை நட்டுள்ளார். எச்.பெருசல் அ.ம.தி அடிகளார் (1923 - 1929) பல இடையூறுகள் மத்தியில் தற்போது நாம் காணும் ஆலயத்தை அமைத்துள்ளார்.

இப்போது காணப்படுகின்ற வியாகுல அன்னையின் திருச்சொரூபமானது 1932 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. 1932 ஆம் ஆண்டு மக்கோணாவில் இருந்து மரத்தினாலான பீடக் கிறாதி கொண்டுவரப்பட்டது. பீடத்திற்குப் பின்புறமாக அமைந்திருக்கின்ற சிம்மாசனம் - மாபிள் கற்களால் அமைக்கப்பட்ட நற்கருணைப் பேளை - நற்கருணைக்கு இருபுறம் அமைக்கப்பட்டுள்ள மின்விளக்குகள் பொருத்தப்பட்ட சம்மனசுகளின் சொரூபம் - பக்க பீடங்கள் - ஆலயத்தினுள் அமைந்துள்ள திருச்சிலுவைப்பாதைச் சொரூபம் - பிரசங்கக் கூடு என்பனவெல்லாம் மக்களினுடைய அன்பளிப்பினால் பெறப்பட்டவையாகும்.



எச்.பெருசல் அ.ம.தி அடிகளாரைத் தொடர்ந்து ஜே.எவ்.சேவியர் அ.ம.தி அடிகளார் (1928 - 1945) - எஸ்.வெந்தக்கோன் அ.ம.தி அடிகளார் (1948 - 1948) ஆகியோரும் இவ் ஆலயப் பணிகளோடு நினைவுகூரப்பட வேண்டியவர்கள். வி.வில்லியம் யேசுதாசன் அ.ம.தி அடிகளார் (1948 - 1955) தமிழ் மொழியில் ஆர்வம் கொண்டு திருப்பாடல்களை மொழிபெயர்த்தும், மோட்சப்பாதை என்ற நூலை தமிழிலே எழுதியும் திருப்பலி வேளைகளில் அதனைப் பாவிக்கச் செய்துள்ளார். இவரது காலப்பகுதியில் ஆலய சுற்றுமதில் அமைக்கப்பட்டதாகவும், ஆவே மரியா என ஒலி எழுப்பும் மணிக்கூடு பொருத்தப்பட்டதாகவும் அறியவருகிறது.

1953 ஆம் ஆண்டு ஆயர் மேதகு எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி ஆண்டகை காலத்தில் யாழ் அடைக்கல அன்னை ஆலய அபிசேக 25 ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டுள்ளது. வி.வில்லியம் யேசுதாசன் அ.ம.தி அடிகளாருக்குப் பின் வந்த எஸ்.ஏ.சுவாம்பிள்ளை அடிகளார் (1955 - 1960) - என்.யோசவ் அ.ம.தி அடிகளார் (1960 - 1970) - வி.சூசைப்பிள்ளை அடிகளார் (1970 - 1973) - கே.பி.சந்தியாப்பிள்ளை (1973 - 1977) ஆகிய அனைவரும் பங்குப் பணிகளில் சிறப்பாக உழைத்தனர்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் முடிவுக்கு ஏற்ப குருக்கள் மக்களை நோக்கிப் பார்த்து திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்காக கருங்கற்பீடம் திருத்தலத்தின் நடுவே ஸ்தாபிக்கப்பட்டு ஆயர் மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகையால் 1974 ஆம் ஆண்டு புரட்டாதி 7 ஆம் திகதி அபிசேகம் செய்யப்பட்டது. 1978 ஆம் ஆண்டு ஆலயத்தின் 50 ஆவது ஆண்டு அபிசேக விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவை எஸ்.இ.என்.குணசீலன் அடிகளார் (1977 - 1978) ஒழுங்கு செய்த போதும், அவர் மாற்றலாகிச் சென்ற பின்னர் 1978 ஆம் ஆண்டு ஏ.சேவியர் குறூஸ் அடிகளார் (1978 - 1981) காலத்தில் கொண்டாடப்பட்டது. அடைக்கல அன்னை ஆலய பீடத்தை புனரமைக்கும் பணியில் ஏ.சேவியர் குறூஸ் அடிகளாரின் பங்கு அளப்பரியது.

இ.ஜே.அருமைநாயகம் அடிகளார் (1981 - 1986) யாழ் நகரின் மிக அழகிய ஆலயங்களுள் ஒன்றான யாழ் அடைக்கல அன்னை ஆலய வளா[illegible]த்தை ஒரு பூங்கா போன்று தோற்றம் பெற வழிசமைத்தார். மின்சாரத்தில் இயங்கும் நவீன ஓகன் ஆலயத்தில் நிறுவப்பட்டது. அத்துடன் மக்கள் வசதியாக திருப்பலியில் பங்குகொள்ள ஏற்ற விதமாக இருக்கைகள் புதிதாக அமைக்கப்பட்டன. இராணுவத் தாக்குதலை முதல் முதலாக எதிர்கொண்ட ஆலயம் யாழ் அடைக்கல அன்னை ஆலயம் என்பது இங்கு குறிப்பிட வேண்டியதாகும். யாழ் கோட்டையில் இருந்து ஏவப்பட்ட றொக்கற் தாக்குதலால் சேதமடைந்த ஆலயத்தின் திருத்த வேலைகள் 1984 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டன.

பிலிப் பொன்னையா அடிகளார் (1986 - 1991) காலத்தில் நற்செய்தி அறிவிப்பின் அடிப்படையில் பங்கின் செயல்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டன. 1987 ஆம் ஆண்டு பங்குப் பணிகளை மேற்கொள்ள ஜெறோ ஞாபகார்த்த மண்டபம் கட்டப்பட்டது. கொட்டடியில் அமைக்கப்பட்ட ஆலயமானது இலங்கையின் அப்போஸ்தலர் புனிதர் யோசவ்வாஸ் அடிகளாருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ள புற்தரையில் பெரிய அளவிலான திருச்செபமாலை பொருத்தப்பட்டது.

எஸ்.பி.வி.மங்களராஜா அடிகளார் (1991 - 1993) காலத்தில் தீவகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த அகதிகள் ஆலய வளாகத்தில் தங்கியிருந்தமையால் பல சிரமங்கள் ஏற்பட்டு பங்கு வாழ்வு பாதிக்கப்பட்டது. இக்காலத்தில் இராசாவின் தோட்டத்தில் ஆர்.யோசவ் அடிகளாரால் (தற்போதைய மன்னார் ஆயர்) ஆரம்பிக்கப்பட்ட செபக்கூடம் யுவானியார் ஆலயப் பங்கில் இருந்து அடைக்கல அன்னை பங்குக்கு மாற்றப்பட்டது.

ஜே.நீக்கிலஸ் அடிகளாரின் (1993 - 1995) காலம் பொற்காலம் என அழைக்கப்படுகிறது. இடம்பெயர்ந்தோர் வேறு இடங்களில் குடியமர்த்தப்பட்டதால் ஆலயச் சூழல் அமைதி அடைந்தது. பங்கு 7 வலயங்களாகப் பிரிக்கப்பட்டது. நூல் நிலையம் - மறைக்கல்வி - திருவழிபாட்டுக் கண்காட்சி - வேதாகம வாரம் - வீடுகளி[illegible]
வேதாகமத் தியானம் - நத்தார் விற்பனை நிகழ்[illegible]
கள் போன்றவற்றால் சமய வாழ்வு புதுப்பொலி[illegible]
பெற்றது. இடப்பெயர்வின் பின்னர் 1996 ஆ[illegible]
ஆண்டில் மக்கள் திரும்பி வந்தபோது நிரந்த[illegible]
மான பங்குத்தந்தை ஒருவர் இல்லாத நிலை[illegible]
யில் குறிப்பாக 1995 - 1996 ஆண்டு காலப்
பகுதியில் ஜெறோ செல்வநாயகம் அடிகளாரு[illegible]
சாள்ஸ் கொலின்ஸ் அடிகளாரும் பங்குப் பண[illegible]
களை பொறுப்பேற்று வழிபாடுகளை தொடங்[illegible]
ஆலயத்தையும், பங்குப் பணிமனையையு[illegible]
சீராக்கினர்.

ஜி.வி.பிலேந்திரன் அடிகளார் (1996 - 199[illegible]
சேதமடைந்த ஆலயத்தை திருத்தி அமைத்[illegible]
பணி மனையிலும் பல திருத்த வேலைகளை
செய்தார். ஆலய வாசல் கதவுடன் மேலதிகமாக
ஓர் இரும்புக்கதவு அமைக்கப்பட்டது. ம.இ.பயஸ்
அடிகளார் (1999 - 2003) காலத்தில் ஆல
யத்தை அண்டியுள்ள பகுதிகளில் படையின
நிறைந்திருந்தமையால் ஆலய திருவிழா
சுற்றுப்பிரகாரங்கள் அனைத்தும் ஆலயத்தி[illegible]
உட்பகுதியிலேயே மேற்கொள்ளப்பட்டன
நீண்ட காலமாக இயங்காதிருந்த மரியே
வாழ்க என ஓசை எழுப்பும் மணி திரும்பவு[illegible]
இயக்கப்பட்டு ஒலிக்கத் தொடங்கியது. சிலுவை
பாதையின் 13 ஆம் நிலை வியாகுல மாதா
கெபியாக இங்கு அமைந்திருந்தமையா[illegible]
இயேசு பிறப்பின் 2000 ஆம் ஆண்டு நிறை
வுச் சின்னமாக சிலுவைப்பாதையின் ஏனை[illegible]
12 நிலைகளும் ஆலய சுவருடன் இணைத்[illegible]
அமைக்கப்பட்டன. முதல் நிலையை ஆய
மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டை[illegible]
1999 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31 ஆ[illegible]
திகதியும், மிகுதியானவற்றை ஜே.பி.செல்[illegible]
ராஜா அடிகளார் 2000 ஆம் ஆண்டு ஜனவ[illegible]
மாதம் 31 ஆம் திகதியும் திறந்து வைத்தனர்.
ஏற்கனவே பிரசித்தி பெற்று அமைந்திருந்[illegible]
வியாகுல அன்னை கெபியுடன் இணைத்[illegible]
சிலுவைப்பாதை நிலைகளை ஆலயத்தி[illegible]
வெளிப்புறத்தில் அமைக்கப்பட்ட முதல் ஆலய[illegible]
என்கின்ற வகையில் இது ஈழத்துக் கல்வா[illegible]
என அழைக்கப்பட்டது.

2003 ஆம் ஆண்டு ஆலயத்தின் 75 ஆவது
ஆண்டு நிறைவானது (1928 - 2003) ஆய
மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டை[illegible]
யால் திருப்பலி ஒப்புக்கொடுத்து கொண்டாடப்ப[illegible]
75 ஆவது ஆண்டு நிறைவு மலரும் வெளியிட
பட்டது. ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்
டகை நற்கருணைப் பணியாளர்களின்
தேவையை விளக்குகின்ற ஒரு சுற்றுமடலை
(இலக்கம் 16 - 73) 1973 ஆம் ஆண்டு புரட்
டாதி மாதம் 21 ஆம் திகதி வெளியிட்டார். ஆய
மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டை[illegible]
2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம்
திகதி நற்கருணைப் பணியாளர் பயிற்சிக்[illegible]
பங்குகளில் இருந்து பொருத்தமானவர்களை[illegible]
தெரிவுசெய்யும்படி வேண்டினார். இதன்ப[illegible]
ஏ.எஸ்.அகஸ்ரின், ஜே.இ.இராசநாயகம்,
எஸ்.பெனடிக்ற் ஆகியோர் அடைக்கல அன்னை
ஆலய பங்கில் இருந்து தெரிவுசெய்யப்பட்[illegible]
2004 ஆம் ஆண்டு தை மாதம் 25 ஆம் திகதி ந[illegible]
கருணைப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டனா[illegible]
தற்போதைய பங்குத்தந்தை றெஜி இராஜேஸ்
வரன் அடிகளார் காலத்தில் (2003 முதல்
இன்றுவரை) ஆலய வழிபாடுகளில் விசேட கவ[illegible]
னம் செலுத்தப்பட்டு இளைய சமுதாயத்தி[illegible]
ருக்கு முன்னுரிமை கொடுக்கும் வகையில்
பணிகள் மேற்கொள்ளப்பட்டன. சதாசகா[illegible]
அன்னை பக்தி புத்துயிர் அளிக்கப்பட்டு புத[illegible]
கிழமைகளில் வழிபாடுகள் திரும்பவும் தொ[illegible]
ரப்பட்டன. மரியாயின்சேனைப் பக்தி புதுமெ[illegible]
கூட்டப்பட்டதுடன் கைவிடப்பட்ட நிலையில்
இருந்த ஆண்கள் மரியாயின்சேனை திரும்[illegible]
வும் ஆரம்பிக்கப்பட்டது. புலம்பெயர்ந்த மண்
ணின் மைந்தர் டாக்டர் ஏ.ஈ.யோசவ் குடும்ப[illegible]
தின் அன்பளிப்பில் ஆலயத்தின் நிலத்தளத்துக்[illegible]
றெறாசோ பதிக்கப்பட்டது. குழாய்க்கிணறு ஆல[illegible]
வளாகத்தில் அமைக்கப்பட்டு பக்தர்களி[illegible]
குடிதண்ணீர்த் தேவை நிறைவுசெய்யப்பட்டது
ஆலயத்தைச் சுற்றிலும் அழகுற வீதி அமை[illegible]
கப்பட்டு சிலுவைப்பாதை நிலைகளுக்கு கூடை
அமைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது.

யாழ் அடைக்கல அன்னை மத பேதமின்[illegible]
தம்மை நோக்கி குரல் எழுப்பும் அனைத்து தமி[illegible]
மக்களுக்கும் அருள்பாலித்துப் பாதுகாப்பாராக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 233

# தொழுநோய்

தொழுநோய் என்பது மெதுவாக பரவக்கூடிய ஒரு தொற்றுநோயாகும். இது தோலையும் நரம்புகளையும் பாதிக்கக்கூடிய ஒரு வியாதி ஆகும். இது Mycobacterium Leprae (மைக்கோபக்ரீரியம் லெப்றே) எனும் ஒரு பக்ரீரியாவினால் தோற்றுவிக்கப்படுகிறது.

இது தொற்று உள்ளவர்களின் சுவாசத் தொகுதியில் இருந்து தும்மல், இருமல் மூலம் மற்றவர்களுக்கு பரவுகிறது. இது எல்லா வயதுடையவர்களையும் தாக்கக்கூடியதானாலும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் 10 வயதுக்குக் குறைந்த சிறுவர்களில் இது ஏறக்குறைய 20வீதமாகக் காணப்படுகிறது.

இந்த நோய் தொற்றக்கூடிய அபாயமுடையோர்

1. நோயாளியுடன் நீண்ட காலமாக ஒன்றாக வாழ்பவர்கள்.
(குடும்ப அங்கத்தவர்கள், நெருங்கிய உறவினர்கள்)

இந்த நோயின் அறிகுறிகள்

1. வலி அற்ற, உணர்ச்சி குறைந்த வெளிறிய தோல் பகுதிகள், தேமல் போன்ற தன்மை காணப்படும். இது முகம் முழங்கைகளின் பின்புறம், பிட்டம் போன்ற இடங்களில் காணப்படும்.
2. உள்ளங்கைகளின் தசைகள் வலுவிழந்து காணப்படும். அல்லது குன்றிப் போய் இருக்கும்.
3. பாதம் வலுவிழந்து போதல், நடக்க முடியாத தன்மை ஏற்படும்.
4. கை விரல்கள், பொதுவாக நான்காவது, ஐந்தாவது விரல் குறண்டிப் போதல்
5. கீழ்ப்பாதம், உள்ளங்கைகள், விரல் நுனிகளில். நோவற்ற நீண்ட நாள் புண்கள் காணப்படுதல்.
6. முகத்தின் தோற்றத்தில் மாற்றங்கள் ஏற்படுதல்(சிங்க முகம்)
7. காதுச்சோனையில் முடிச்சுகள் தோன்றுதல்.

இவை தவிர இந்த நோய் உள்ளவர்களில் இரண்டு வகையான தாக்கங்கள் ஏற்படலாம்.(Reachons)

1. வகை I ஏற்கனவே நோய்த்தாக்கம் ஏற்பட்ட இடங்கள் திடீர் என சிவத்தல் அல்லது புதிய அடையாளங்கள் தோன்றுதல்.
2. வகை II தோலில் தழும்புகள், காய்ச்சல், தசை மூட்டு நோவு என்பவை ஏற்படுதல்.









மேற்கூறிய அறிகுறிகள் தென்படின் உடனடியாக தோல் சிகிச்சை நிலையத்தை நாடவேண்டும். தாமதித்தால் நிரந்தரமான அங்கவீனம் ஏற்படவும் வாய்ப்புகள் உள்ளன.

இதற்குரிய சிகிச்சை, அரச வைத்தியசாலைகளிலுள்ள விசேட தோல் சிகிச்சை நிலையங்களில் இலவசமாக வழங்கப்படுகிறது. ஆரம்பக் கட்டமாயின் ஆறு மாதங்களுக்கும், நாள்பட்ட நோயானால் ஒரு வருடத்துக்குமான மாத்திரைகள் உள்ளன. இவற்றை கிரமமாக உள்ளெடுத்து சிகிச்சையை பூரணப்படுத்துவதன் மூலம், இது மேலும் பரவாதிருப்பதையும், சூழவுள்ளவர்களுக்கு தொற்றாமல் இருப்பதையும் உறுதிப்படுத்தலாம். ஏனெனில் இது சிகிச்சை மூலம் முற்றாகக் குணப்படுத்தக்கூடிய ஒரு நோயாகும்.

தற்போது யாழ். மாவட்டத்திலும், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்தும் இந்த நோய்த் தாக்கமுடையவர்கள் யாழ்.வைத்தியசாலையின் தோல் சிகிச்சை நிலையத்துக்கு வந்து சிகிச்சை பெறு கிறார்கள். இவர்களுக்கு இலவச சிகிச்சையும் தொழிற்பாட்டுக் குறைபாடு களை நிவர்த்தி செய்யக்கூடிய ஆலோ சனைகளும் இங்கு வழங்கப்படுகின்றன.

மருத்துவர் நொறிஸ்மரிய செல்வம்
Skin Clinic
Teaching Hospital, Jaffna

# ஆரம்ப கர்ப்ப காலமும் சில அறிவுரைகளும்

கர்ப்பம் தரித்தல் எல்லோராலும் மிகவும் எதிர்பார்க்கப்படுவதாகும். இது அந்தத் தாயின் முதலாவது பிள்ளையாக இருக்கலாம். இல்லை நான்காவது பிள்ளையாக இருக்கலாம். எத்தனையாவது கர்ப்பம் என்றாலும் சில சந்தேகங்கள் எல்லோரிடமும் இருக்கும். இதே மாதிரி திருமணமானவுடன் புதுமணத் தம்பதிகள் விரும்பியோ விரும்பாமலோ எதிர்நோக்கும் ஒரு கேள்வி இன்னும் வயிற்றில் ஒன்றும் உருவாக இல்லையா என்பதாகும்.

கர்ப்பமாகிய முதல் மூன்று மாதங்களும் மிகவும் முக்கியமானவை. இந்த ஆரம்ப கர்ப்ப காலத்தில் ஏற்படும் சில பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் பார்ப்போம்.

பெரும்பாலானவர்களுக்கு அவர்களின் ஆரம்ப கர்ப்ப காலத்தில் பெரியளவில் எந்தப் பிரச்சினைகளும் வருவதில்லை. ஏனெனில் கர்ப்பம் தரித்தல் ஒரு சாதாரண நிகழ்வாகவே கருதப்படுகிறது. (Normal physio logy). ஒரு சுகதேகியான பெண் இலகுவில் கர்ப்பம் தரிக்கும் சாத்தியங்கள் அதிகம். ஏதாவது வருத்தங்கள் (வலிப்பு நோய், இதய வருத்தம்) இருப்பின், தாயாக முதல் உரிய மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுதல் சிறந்தது. (Pre Pregnancy counseling)

**பெரும்பாலானவர்களுக்கு அவர்களின் ஆரம்ப கர்ப்ப காலத்தில் பெரியளவில் எந்தப் பிரச்சினைகளும் வருவதில்லை. ஏனெனில் கர்ப்பம் தரித்தல் ஒரு சாதாரண நிகழ்வாகவே கருதப்படுகிறது. ஒரு சுகதேகியான பெண் இலகுவில் கர்ப்பம் தரிக்கும் சாத்தியங்கள் அதிகம்.**

தாயாகுதலை எதிர்பார்த்து இருக்கும் பெண்களுக்கு அவர்களுடைய மாத சுகவீனம் தள்ளிப் போகும் போது கர்ப்பம் தரித்துள்ளதா என்பதை மிக இலகுவில் ஒரு சிறுநீர்ப் பரிசோதனை (Urine pregnancy test) மூலம் சோதித்து அறிந்து கொள்ளலாம். பின்னர் அவர் தனது பகுதியிலுள்ள வைத்திய நிலைய கிளினிக்கில் பதிந்து மேலதிக கவனிப்புக்களைப் பெறலாம். இவ்வாறு செய்யும் போது சில அடிப்படைப் பரிசோதனைகளையும், மேலதிக பரிசோ தனை களை யும் செய்ய வேண்டி வரும்.

**என்னென்ன மாற்றங்கள் இந்த நாள்களில் ஏற்படும்?**

பெரும்பாலானவர்களுக்கு அவர்களின் ஆரம்ப கர்ப்ப காலத்தில்

1. உடலில் காய்ச்சல் வருவது போல் இருக்கும்.
2. உடலில் உள்ள மூட்டுக்கள் நோகும்.
3. இலகுவில் களைப்படைய லாம்.
4. உணவு சமிபாடடைவது குறையலாம்.
5. சிலருக்கு புளிப்பாக வாயில் ஊறுவது போலவும் இருக்கும்
6. சிறுநீர் அடிக்கடி கழிக்க வேண்டும் போல் இருக்கலாம்.

இப்படியான உடல் அறிகுறிகள் பிள்ளை கருவில் வளரும்போது ஏற்படும். ஆயினும் சிலருக்கு மட்டும் வைத்திய உதவியை நாடவேண்டிய தேவைகள் வரலாம். அவ்வாறான விடயங்களை நாம் பார்ப்போம்.

1. ஆரம்ப நாள்களில் உதிரப் போக்கு (Bleeding) சிறிதளவில் இருக்கலாம்.
2. சிலருக்கு உதிரப் போக்குடன் அடி வயிற்று நோவும் (Bleeding with lover abdominal pain) இருக்கலாம்.
3. சிலருக்கு எந்த உணவிலும் நாட்டமின்றி கூடியளவில் வாந்தியும் வயிற்றுப் புரட்டும் இருக்கலாம். (Nausea and vomiting)

இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் வைத்திய ஆலோசனையை நாடுதல் நல்லது.

இரத்தப்போக்கு (Bleeding) நோவுடன் கூடியதா அல்லது நோ இல்லாத இரத்தப்போக்கா என்பதே நாம் முதலில் கவனிக்க வேண்டியது. அத்துடன் இரத்தப் போக்கு (Bleeding) எத்தனையாவது கிழமையில் நிகழ்ந்தது என்பதும் முக்கியமானது.

எவ்வகையான இரத்தப் போக்கென்றாலும் உடனடியாக ஒரு வைத்தியரின் ஆலோசனையைப் பெறவும்.

ஒரு ஸ்கேன் பரிசோதனை இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவசியம்.

இதற்கான காரணங்களை முக்கியமாக இரண்டு வகைப் படுத்த லாம்.

1. ஆரம்பகாலக் கருச்சிதைவு (Early miscarriage)
2. கர்ப்பப்பைக்கு வெளியே தங்கிய கர்ப்பம் (Ectopic Pregnancy)

நோ கூடியளவில் இருந்தால் எந்தவித தாமதமும் இன்றி மருத்துவ சேவையை நாட வேண்டும். இதனால் தேவை இல்லாத ஆபத்தான பின் விளைவுகளைத் தவிர்க்கலாம்.

இந்த இரத்தப்போக்கு சில வேளைகளில் தானாக நின்றுபோய் விடும். சிலரில் நீண்டகாலம்(23 கிழமைகள்) தொடரலாம். இன்னும் சிலருக்கு மேலதிக சிகிச்சைகள் தேவைப்படலாம். எதுவெனிலும் உரிய மருத்துவ சோதனைகளின் (இரத்த சோதனை, ஸ்கேன் பரிசோதனை) பின்பே சரியான காரணத்தைக் கண்டு பிடிக்கலாம்.

**வயிற்றுப் புரட்டும் வாந்தியும் (Nausea&Vomiting)**

அடுத்த முக்கியமான ஒரு விடயம் வாந்தியும் வயிற்றுப் புரட்டும் ஆகும். சாதாரணமாக ஆறு கிழமையளவில் ஆரம்பித்து பன்னிரு கிழமையளவில் முடிவுக்கு வரும் ஓர் அசௌகரியம் இதுவாகும்.

பொதுவாக மருந்துகள் எவையுமின்றி தானாகவே வாந்தி நிற்கும்.

சிலரில் மட்டும் உணவோ அல்லது நீராகாரமோ எடுக்க முடியாமல் உடலில் நீரிழப்பையும் இயலாமையையும் ஏற்படுத்தும். இவர்கள் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறவேண்டியது அவசியம். வைத்தியசாலையில் நின்று தேவையான சிகிச்சையைப் பெறவேண்டி வரும். சிலருக்கு இரத்தப் பரிசோதனைகள் செய்ய வேண்டியும் வரும்.

வாந்தியை நிறுத்தும் மருந்துகளும் சிலவேளைகளில் செலைன் திரவமும், வைத்தியர்கள் பரிந்துரை செய்வார்கள். நோயின் தீவிரத்துக்கு ஏற்றமாதிரி மருத்துவம் செய்யவேண்டி வரும்.

இலகுவில் சமிபாடடையக்கூடிய உண வுகளையே இந்த நாள்களில் உட்கொள்ள வேண்டும்.

**மருத்துவர் கந்தையா குருபரன்**
*பெண் நோயியல் மகப்பேற்றியல் நிபுணர்/ சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம்/ யாழ்.போதனா வைத்தியசாலை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் வடமாகாண அலுவலக கட்டடம் யாழ்ப்பாணம்



புதிய நீதிமன்ற கட்டடத்தொகுதி சாவகச்சேரி



இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் யாழ் பல்கலைக்கழகத்திற்கான விவசாயபீடம் - கிளிநொச்சி



இந்திய அரசாங்கத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் யாழ் பல்கலைக்கழகத்திற்கான பொறியியல்பீடம் - கிளிநொச்சி



வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கான வடமாகாண அலுவலக கட்டடம் யாழ்ப்பாணம்



கல்வித்திணைக்கள அலுவலகம் யாழ்ப்பாணம்

யாழ் மண்ணில் சாதனை பதிக்கும்
இலங்கை கட்டட நிர்மாணத்துறையின்
ஜாம்பவானும் முன்னோடியுமான

**LINK** **Link Engineering**
LINK TO CONSTRUCTION EXCELLENCE



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK) CPA (AUS), FMAAT (SL), ACS

உயர்தொழில்நுட்பம், துல்லியமான சேவை, தரமான கட்டுமானம் போன்றவற்றால் இலங்கையின் கட்டட பொறியியல் துறையை கடந்து 35 வருடகாலமாக ஆண்டுகொண்டிருக்கும் Link Engineering, தன் உயரிய சேவையை இப்போது வடக்கிலும் விஸ்தரித்திருக்கிறது. எதிர்வரும் காலங்களில் மென்மேலும் தனது முயற்சியாண்மைகளை வடக்கில் விரிவாக்குவதில் பெருமுனைப்பினைக் காட்டிவரும் Link Engineering, புது நிர்மாணங்களுக்கான வாய்ப்புகளையும் சவாலுடன் ஏற்று நடத்த ஆவலுடன் எதிர்பார்த்துள்ளது.

A Subsidiary Of
**Blue Ocean** GROUP OF COMPANIES

**Head Office:** No.32, 1st & 2nd Floor, Galle Road, Dehiwala
**Jaffna Branch:** No.281, K.K.S. Road, Jaffna
**Workshop:** No.105, St. Peter's Road, Koralawella, Moratuwa
**Tel:** +94 (11) 2722217 **Fax:** +94 (11) 2722204
www.blueocean.lk / www.link.lk

☎ 0777 546 546 | 0777 729 555 | 0777 755 323





S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

ஒரு கட்டடம் கட்டப்படும்போது அதன் அத்திபாரம் எந்தளவு உறுதியாக இருக்கவேண்டுமோ அந்தளவு உறுதியான நம்பிக்கை அதனை நிர்மாணித்துக் கொடுப்பவர்கள் மீதும் இருக்கவேண்டும். இலங்கை கட்டட நிர்மாணத்துறையில் கடந்த 35வருடங்களாக கோலோச்சிக்கொண்டிருக்கும் **Link Engineering** அந்த நம்பிக்கையை ஆண்டாண்டு காலமாக தமது உயரிய சேவையின் மூலம் காப்பாற்றிவந்துகொண்டிருப்பதுடன் தற்போது அடுத்தகட்டமாக வடக்கிலும் தனது சேவையை விஸ்தரிக்கின்றது.

உங்கள் வியாபார ஸ்தங்களையும்
பிரத்தியேக வீடுகளையும்
நிர்மாணித்துக்கொள்ள தற்போது
யாழ் மண்ணில்

**LINK** **Link Engineering**
LINK TO CONSTRUCTION EXCELLENCE

**PIONEERS IN BUILDING YOUR DREAM HOME OR BUSINESS PREMISES**

## உங்களுக்கான எமது சேவைகள் :

- அதியுயர் தரமான கட்டட வடிவமைப்புக்களைக் கொண்ட தனிப்பட்ட மற்றும் வர்த்தக மயப்படுத்தப்பட்ட கட்டுமானங்கள்
- கட்டடக்கலை மற்றும் கட்டமைப்பு வடிவமைப்புக்கள்
- கட்டடச் செலவு மதிப்பீடுகள் தயாரித்தல்
- கட்டடப் பொருட்கள் விநியோகம்
- புனரமைப்பு மற்றும் மீள்கட்டுமானம்



நாம் உங்கள் யாழ் மண்ணில் - No. 281, K.K.S Road, Jaffna

**Blue Ocean Group of Companies**
LEADING THE WAY TO THE FUTURE...
Office: #32, 2nd Floor, Galle Road, Dehiwala, Sri Lanka | Tel: 0112 722 217
Factory : No.105, St. Peter's Road, Koralawella, Moratuwa | Web: www.blueocean.lk / www.link.lk

A Subsidiary Of
**Blue Ocean** GROUP OF COMPANIES

தொடர்புகளுக்கு 0777 546 546 | 0777 729 555 | 0777 755 323 | 0777 755 657


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அனுமதியின்றி பாலைமரக்குற்றிகளை ஏற்றியவருக்கு நீதிமன்றால் தண்டம்

கிளிநொச்சி,செப்.06

அனுமதிப்பத்திரம் இன்றி பாலைமரக் குற்றிகளை ஏற்றிச்சென்ற குற்றவாளி ஒருவருக்கு ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா தண்டம் வழங்கி கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் 18 ஆம் திகதி கிளிநொச்சி சாந்தபுரம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரம் இன்றி பாலைமரக் குற்றிகளை ஏற்றிச்சென்ற குற்றத்துக்காக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டார். குறித்த சந்தேகநபர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது வழக்கு விசாரணையில் சந்தேக நபர் தானே குற்றத்தை ஒப்புக்கொண்டதன் காரணமாக அவருக்கு ஒரு லட்சத்து 15 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் செலுத்தத் தவறின் 6 மாதங்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்குமாறும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.வஹாப்தீன் உத்தரவிட் டார்.

(ஐ–ரி3)

# ஹஸனலியைப் புறந்தள்ளாதீர்

## அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு கோரிக்கை

அம்பாறை,செப்.6

அனுபவம், சிரேஷ்டம் என்பவற்றை மதித்தும், சமூகநலனை நோக்காகக் கொண்டும் முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி. ஹஸனலிக்கு, தேசியப் பட்டியலில் இடமளித்து நாடாளுமன்றப் பிரவேசத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைமை வழிவகுக்க வேண்டும். இவ்வாறு அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஹஸனலியைப் புறந்தள்ளாதீர் எனும் தலைப்பில் அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கான மேற்படி கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி. ஹஸனலி, முஸ்லிம் காங்கிரஸின் பரிந்துரையில் தேசியப் பட்டியல் வேட்பாளராக நிறுத்தப்பட்டிருந்த போதிலும் தேசியப் பட்டியல் நியமனத்துக்காக ஹஸனலியைப் புறந்தள்ளி மற்றிருவர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளனர். முஸ்லிம் காங்கிரஸின் இந்தச் செயற்பாடு ஹஸனலியை நேசிக்கும் அவரது கட்சிப் பணி, சமூகப் பணி, கொள்கை சார்ந்த தியாகத்தை மதிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் மத்தியில் அதிர்ச்சியையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

### அன்றுமுதல்

மறைந்த தலைவர் மர்ஹூம் அஷ்ரப் முஸ்லிம் காங்கிரஸை ஸ்தாபித்து வளர்த்தெடுத்தகாலம் முதல் தலைவருக்கும் கட்சிக்கும் மிக விசுவாசமான ஒருவராகத் திகழ்ந்து சமூகத்தின் விடிவுக்காகப் பாடுபட்டுவரும் மூத்த போராளியாக அவர் திகழ்கின்றார். பல்வேறு காலகட்டங்களில் திடமான முடிவுகளை கட்சி மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களிலெல்லாம் கட்சியை உரிய பாதையில் துரதிருஷ்டியுடன் நெறிப்படுத்தி முன்னெடுப்பதில் ஹஸனலியின் பங்கு எளிதில் மறந்துவிடமுடியாது.

இந்த முறை பொதுத்தேர்தல் காலகட்டத்தில் குறிப்பாக திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட முஸ்லிம் காங்கிரஸின் மூன்று வேட்பாளர்களதும் வெற்றிக்காக பரப்புரை நடவடிக்கைகளில் அர்ப்பணிப்புடன் அவர் செயற்பட்டார். இங்கிருந்த கள நிலவரங்களுக்கு மத்தியில் அவரது பங்களிப்பு முஸ்லிம் காங்கிரஸின் வெற்றிக்குக் காத்திரமாக அமைந்தது.

அமையப்போகும் புதிய அரசின் காலத்தில் பல முக்கிய பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்படவுள்ளன. இனப்பிரச்சினை தொடர்பிலான பேச்சு புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம், எல்லை நிர்ணயம் போன்ற முக்கிய விடயங்கள் அரசியல் களத்துக்கு வரும் போது இத்தகைய விடயங்களில் முஸ்லிம் சமூகம் சார்ந்த கோரிக்கைகளை முன்வைக்கவும் வாதிடவும் சான்றுகளைப் பகிரவும், அனுபவமும், சிரேஷ்டத்துவமும் மிக்கவர்கள் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்திருப்பது அவசியமாகும்.

### *வடக்கு, கிழக்கில்*

வடக்கு, கிழக்கில் குறிப்பாகக் கிழக்கில் முஸ்லிம்களின் பிரச்சினைகள் கிடப்பில் போடப்பட்ட நிலையில் உள்ளன. சம்பூரில் தமிழ் மக்களுக்கு ஓரளவேனும் காணி தொடர்பில் நிவாரணம் வழங்கப்பட்டுள்ள போதும் அஷ்ரப் நகர், பொன்னம்வெளி போன்ற பகுதி முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள் பற்றி இப்போது பேசப்படுவதே இல்லை.

கரையோர மாவட்ட கோரிக்கை போன்ற பல பிரச்சினைகள் முஸ்லிம்களுக்கு உள்ளன.

### அழுத்தம்

எனவே அமையப்போகும் அரசில் இத்தகைய விடயங்களுக்கு எல்லாம் அழுத்தம் கொடுத்து நீதி, நியாயத்தைப் பெற்றுத் தரவல்ல குரல்கள் நாடாளுமன்றத்தில் ஒலிக்க வேண்டும்.

இந்த வகையிலே செயலாளர் நாயகம் ஹஸனலியின் நாடாளுமன்ற பிரவேசம் முக்கியமாக மக்களால் எதிர்பார்க்கப்படுகின்றது. மூத்த போராளிகள், சிரேஷ்டமான அனுபவமிக்கவர்களின் பங்களிப்புகள் வரப்போகும் காலகட்டத்திலும் அரசியல் களத்திலும் முக்கியத்துவம் மிக்கதாகும்.

### தலைமை

எனவே இந்த நிலமைகளை முக்கிய கவனத்தில் கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் தலைமை, செயலாளர் நாயகம் ஹஸனலியை தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குள் உள்வாங்குவதற்குத் திடமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொந்தராத்து அரசியல் செய்ய நினைப்பவர்களது வலையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை சிக்கி விடாது விழிப்புடன் செயற்பட வேண்டும் – இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ–30)






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு விசாரணைத் தீர்மானம் குறித்து ஆராய்ந்த பின்னரே முடிவு

## கனடா அறிவிப்பு

ஒட்டாவா, செப்.6

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பாக, உள்நாட்டு விசாரணைக்கு ஆதரவளித்து ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டு வர உத்தேசித்துள்ள தீர்மானத்தை ஆதரிப்பதா? இல்லையா? என்று, அந்தத் தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரே முடிவெடுக்கப்படும் என்று கனடா அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஒட்டாவாவில் உள்ள கனேடிய அரச பேச்சாளர் ஒருவர்,

இலங்கை அரசு தனது மனித உரிமைகள் கடப்பாடுகள் விடயத்தில், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்துடன் ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வெளியிடவுள்ள இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கையை கனடா கவனமாக ஆராயும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பாக, சபை அமர்வுகளில் முன்வைக்கப்படும் தீர்மான வரைவை ஆராய்ந்த பின்னர் முடிவெடுப்பது கனடாவின் வழக்கம்.

நாம் இலங்கை அரசின் வெளிப்படையான, பொறுப்பான, பன்முக முயற்சிகளை வரவேற்கிறோம். ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் இணைந்து செயற்படவும், பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் இலங்கைக்கு ஊக்கமளிக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை– ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வாக்களிக்கும் உரிமை கொண்ட 47 உறுப்பு நாடுகளில் கனடா இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(த–வ)

## மத்தள விமான நிலையத்தில் நெல் களஞ்சியப்படுத்த எதிர்ப்பு

கொழும்பு, செப்.6

மத்தள மகிந்த ராஜபக்ச சர்வதேச விமான நிலையத்தின் களஞ்சியசாலையை நெல்லைக் களஞ்சியப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் போராட்டம் நடத்தப்பட்டது.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்லை, மத்தள விமான நிலைய களஞ்சியத்தில் சேமிக்க கடந்த அமைச்சரவை அனுமதி அளித்தது.

இதன் பிரகாரம் மத்தள விமான நிலையத்தின் களஞ்சியசாலைகள் பயன்படுத்தப்படாமல் இருப்பதால், அவற்றை நெல்லைச் சேமித்து வைக்கப் பயன்படுத்த, விமான சேவைகள் நிறுவனத்தினால் நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபைக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

இதையடுத்து நேற்று முன்தினம் முதல் தொகுதி நெல்லை ஏற்றிய பாரவூர்திகள் மத்தள விமான நிலையத்துக்குச் சென்றன.

ஒரு பாரஊர்தி விமான நிலைய களஞ்சியத்தை அடைந்த போதும், ஏனைய பாரவூர்திகளை வழிமறித்து, சிலர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதனால் மத்தள விமான நிலையத்துக்குச் செல்லும் பாதையில் பதட்ட நிலை ஏற்பட்டது. இதையடுத்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை சீராக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த–வ)


பிரவுண்ஸ் மூலம்
இப்போகத்திற்கு
பெரும்
வாசி



TAFE 45DI டிரக்டருடன்
ரொட்டவேட்டர்
வாங்கும்போது

ரூபா 66,900/- பெறுமதியான
சிறந்த FIELDKING
களப்பை
இலவசம்



*நிபந்தனைகளுக்கு உட்பறும்

0773 457 988 - துஷான் (வட / வட மத்திய)
0773 457 987 - லக்ஷித (கிழக்கு)
0773 457 985 - காமினி (தென் / ஊவா)
0773 457 981 - மஹேஷ் (வடமேல் / மத்திய)
0773 457 982 - சந்துன்

டிரக்டர் - விலை ரூபா 1,479,490/- +VAT ற்கு மேல்
ரோட்டரேட்டர் - விலை ரூபா 289,000/- ற்கு மேல்

பிறவுன் அன்ட் கம்பனி பி.எல்.சி.
34, சேர் மொஹமட் மேக்கன்
மாக்கார் மாவத்தை, கொழும்பு 3.
தொ.பே. 011 2663000

TAFE முன்னேற்றத்திற்கான நம்பிக்கை
FIELDKING
HOWARD ரொட்டவேட்டர்
Browns Agriculture


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திருமண எண்ணிக்கை படிப்படியாகக் குறைவு

கொழும்பு, செப்.6

நாட்டில் கடந்த ஆண்டுகளில் திருமணங்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதாக சனத்தொகை மற்றும் புள்ளிவிவரத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான 4 ஆண்டு காலப்பகுதியில் திருமணங்களின் எண்ணிக்கையில் படிப்படியான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு 2 லட்சத்து 314 பதிவுத் திருமணங்கள் இடம்பெற்றுள்ளன. 2012 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 98 ஆயிரத்து 710 பேர் பதிவுத் திருமணம் செய்துள்ளனர். 2013 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 80 ஆயிரத்து 760 திருமணங்கள் இடம்பெற்றுள்ளன. 2014 ஆம் ஆண்டு ஒரு லட்சத்து 75 ஆயிரத்து 728 திருமணங்கள் நடந்துள்ளதாக இலங்கை சனத் தொகை மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் அறிக்கை தெரிவித்துள்ளது. (த)

ashok STEEL

நீடித்த வலிமை

அசோக் TMT

அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கு அறிமுகஞ்செய்கின்றோம் அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகள். தலைமுறைகள் தாண்டி நீடித்து நிலைத்து நிற்க உங்கள் வீடுகளுக்கும் அசோக் TMT இரும்புக் கம்பிகளை உபயோகித்து, முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.112,500 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397, மேல் மாகாணம் - 077 3263518, மத்திய மாகாணம் - 077 3825832, வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு – 011 7388940-3

SLS 375





"எனது வியாபாரம் இவ்வளவு முன்னேறியதற்கு காரணம் HNB கிராமின் ஆகும்"

இருளை அகற்றிடும் உன்னதமான சேவை இப்பொழுது மேலும் வலு பெறுகிறது

தைரியமாக உழைத்திடும் இவர்களைப் போன்ற மனிதர்களுக்கு பக்கபலமாக நின்று அவர்களின் முன்னேற்றத்திற்கு வழியமைத்து, தேவையான நிதித் தீர்வுகளை வழங்கி அவர்களின் வாழ்வை வளமாக்கிடும் உன்னதமான சேவைகளை வழங்குவதை எண்ணி **HNB கிராமின்** ஆகிய நாம் பெருமிதம் கொள்கிறோம்.

இப்போது ஹற்றன் நஷனல் வங்கியின் அளப்பரிய ஆதரவு எமக்கு இருப்பதால் எமது சேவைகள் யாவும் மேலும் வலுவடைந்துள்ளது என்பதனை நம்பிக்கையோடு தெரிவிக்கின்றோம்.

HNB கிராமின் பினான்ஸ் லிமிடெட் இன் சேவைகள்:

• நுண்நிதி கடன்கள் • வணிக கடன்கள் • நிலையான வைப்புகள் • சேமிப்புக் கணக்குகள் • சிறுவர் சேமிப்பு

உள்ளிட்ட மேலும் பல சேவைகள்

**HNB கிராமின் கட்டிடம்**

இல. 168, நவல வீதி, நுகேகொடை. பெக்ஸ்: 0112 176 263

அழையுங்கள்: 0112 17 62 62

HNB GRAMEEN

இருளை அகற்றிடும் உன்னதமான சேவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்லும் இடமெல்லாம் சிறப்பு

Cargills food city | SINGER Plus + | SISIL WORLD + | KFC | CEYLON THEATRES MC - Jaffna
Signature The Achiever's Choice | TRENDY | Jaffna Tex | Colombo Fashion | ABI Fashion World
* TILKO hotels | HOTEL LUX ETOILES

*தள்ளுபடி உணவகங்க

+ஒரு கடன் அட்டை மூலம் ரூ. 100,000/- பெறுமதியான அ
இந்தச் சலுகைகள் சம்பத் MasterCard மற்றும் VISA க

SampathCards
பொறுப்பு வாய்ந்த தெரிவு

Like us on: facebook.co

Sampath Bank Fitch Ratings A + (lka)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் 25% கழிவு

**2015 செப்டம்பர் 12ம் - 13ம் திகதிகளில்**

சம்பத் கடன் அட்டை உரிமையாளர்களாகிய நீங்கள் சிறப்பு தள்ளுபடியை அனுபவியுங்கள்

சம்பத் வங்கியின் மாபெரும் "Town On Sale" ஊக்குவிப்பு 2015 செப்டம்பர் 12ம்-13ம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது. கீழுள்ள சகல பங்காளி நிலையங்களிலும் சம்பத் கடன் அட்டைகளுக்கு 25% சிறப்பு தள்ளுபடியை பெற்று அனுபவியுங்கள்.

Sampath Bank PLC-PQ144

## தள்ளுபடியை அனுபவியுங்கள்

softlogic BEST IN THE BUSINESS

softlogic MAX maximum experience

DAMRO Internationally Trusted Furniture

DSI Sri Lanka's No.1 Footwear

VISION CARE OPTICAL SERVICES

Venukka Tex

Lux Francisco Varano

FITS MARGOSA
தங்குமிட வசதிகளின் 25% தள்ளுபடியை
உனவகங்களின் 25% தள்ளுபடியை

...RAS HOTEL

CITY ELECTRONICS

Lingan Cream House

...ளுக்கு மட்டுமே பொருந்தும்
...அதிகபட்ச கொள்வனவிற்கு மாத்திரம் இச்சலுகை பொருந்தும்.
...கடன் அட்டைகளை வைத்திருப்பவர்களுக்கு பொருந்தும்.

...com/Sampathbankplc

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

நிபந்தனைகள் உண்டு | மேலதிக விபரங்களுக்கு பிரவேசியுங்கள் www.sampathcards.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பிக்களுக்கான நிதியை அதிகரிப்பதற்கு தீர்மானம்

## சபையில் தெரிவித்தார் பிரதமர்

கொழும்பு, செப்.6

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியை மேலும் அதிகரிக்கவுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

இருப்பினும், இந்தப் பன்முகப்படுத்தப்பட்ட நிதி எவ்வளவு தொகையால் அதிகரிக்கப்படவுள்ளது என்பதைக் குறிப்பிடவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வருடாந்தம் 50 லட்சம் ரூபா பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கப்பட்டது.

கடந்த ஜனவரி 8ஆம் திகதி ஆட்சிக்கு வந்த அரசு சமர்ப்பித்த இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒதுக்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒரு கோடி ரூபாவாக அதிகரிக்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், அந்த நிதியை மேலும் அதிகரிக்கவுள்ளதாகப் பிரதமர் ரணில் குறிப்பிட்டார். (த–சி)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு மாதத்தை கொண்டாடும் லபார்ஜ் சிமெந்து நிறுவனம்



லபார்ஜ் மகாவலி சிமெந்து நிறுவனத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத் திட்டத்துக்கு அமைய 2015ஆம் ஆண்டு ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு மாதம் தொடர்பான நிகழ்வு இலங்கை துறைமுக அதிகார சபையில் அமைந்துள்ள லபார்ஜ் சிமெந்து பொதியிடல் தொழிற்சாலை வளாகத்தில் நடைபெற்றது.

இந்த வேலைத் திட்டத்தை ஆரம்பித்த காலகட்டத்தில் பாதுகாப்புடன் தொடர்புடைய அதிகாரிகளைப் பயன்படுத்தி ஊழியர்களைத் திடப்படுத்தியதாகவும் மற்றும் அவர்களது புதிய நோக்கு நிலைகளுக்கு அமைய தமது பாதுகாப்புத் தொடர்பாக தாங்களே நிர்வகிக்கக் கூடிய விதத்தில் வேலைத் திட்ட மொன்று முன்னெடுக்கப்படுவதாக லபார்ஜ் நிறுவனத்தின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரதானி அத்துல கருணாநாயக்க தெரிவித்தார்.

இம்முறை லபார்ஜ் நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கும், அதில் கடமையாற்றும் ஊழியர்கள் மட்டுமன்றி அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கும் "ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு செயற்திட்டத்தின் கீழ் சிறந்த பயிற்சி" என்ற தொனிப் பொருளின் கீழ் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பம் வழங்க வேண்டுமென்ற சிறந்த கருத்தை முன்வைத்த ஜனக சமரசிங்க, சானக, லக்ஷ்மன் மற்றும் இந்திக்க முனசிங்க ஆகியோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

3 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்டோருக்காக ஏற்பாடு செய்யப்பட்ட சித்திரம் வரைதல் போட்டியில் 'வீட்டில் பாதுகாப்பு' என்ற தொனிப் பொருளில் பங்குபற்றிய சிறுவர், சிறுமிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

அந்த நிறுவனத்தின் உயர் அதிகாரிகளின் பங்களிப்புடன் இடம்பெறும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த லபார்ஜ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அநுராக் காக், தூசிகள் இல்லாத சூழல் ஒன்றை அமைப்பதற்கான எண்ணத்தை அனைத்துப் பிரிவினர் மத்தியிலும் ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தர்.

ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான பிரதானி அத்துல கருணாநாயக்க மேலும் கருத்துத் தெரிவிக்கையில், நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் ஆகியோரது ஐக்கியமே, இந்த வெற்றிக்கு முக்கிய காரணமாகும். அதனால் அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த வழிநடத்தல்களை இனிவரும் காலங்களில் முறையாகப் பின்பற்றி சர்வதேச ரீதியில் ஒரு நல்ல அடையாளத்தை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் கூறினார். (த)

## மக்கள் வங்கி அறிமுகமாக்கும் பசுமையான வங்கி முறைமை



சர்வதேச வங்கித் துறையின் புதிய பரிமாணங்களை எப்போதும் இலங்கையர்களுக்குக் கொண்டு வந்து சேர்க்கும் மக்கள் வங்கி, நவீனத்துவத்தின் மற்றுமொரு படிமுறையை முன்னெடுத்து வைக்கும் முகமாக, இந்நாட்டு இளம் சந்ததியினருக்குப் பசுமையான வங்கித்துறையின் கதவுகளைத் திறக்கிறது. இதற்கமைய, மக்கள் வங்கியின் யெஸ் கணக்கு ஊடாக, பசுமையானவங்கித்துறையின் விசேடத்துவத்தை நீங்கள் இப்போது உணர்ந்து கொள் ளலாம்.

புதிய தொழில்நுட்பம் மற்றும் தொழிற்துறையின் வளர்ச்சி மூலம், வங்கி அலுவல்களில் ஈடுபடும் போது, சூழலுக்கு ஏற்படக் கூடிய தீங்குகளைக் குறைத்து, சூழலின் சமநிலையைப் பாதுகாக்கும் நோக்குடன், பசுமையான வங்கிச் சேவை என்ற எண்ணக்கரு உருவானது. இதன் விசேட வேலைத்திட்டம் ஒன்றின் கீழ், சமூக, சூழல் மற்றும் புவியியல் விடயங்களை, சூழலுக்கு ஏற்ற வகையில் மேற்கொள்வது இங்கு இடம்பெறுகிறது. அதன் ஊடாக, வங்கிச் சேவை வழங்குநர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் கருத்துக்களும், செயற்பாடுகளும், சூழலுக்குச் சாதகமான முறையில் கட்டியெழுப்பப்படு கிறது.

மக்கள் வங்கியின் யெஸ் கணக்கு ஊடாக, இந்த பசுமையான வங்கிச் சேவை என்ற எண்ணக்கரு இலங்கை வங்கித்துறையில் இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்துவது, இதுவே முதல் தடவையாகும். இதன் ஊடாக, கணக்குப் புத்தகம் மற்றும் அச்சிடப்பட்ட வங்கிக் கூற்றுக்கள் இன்றி மின் னஞ்சல் வாயிலாக வங்கிக் கூற்றுக்கள் அனுப்பி வைக்கப்படும்.

அத்துடன், மக்கள் வங்கியின் யெஸ் கணக்கு உரிமையாளர்களுக்கு, இலவசமாக பீப்பிள்ஸ் மொபைல் பாங்கிங் மற்றும் பீப்பிள்ஸ் நெற் இணையத்தள வங்கிச் சேவைகள் வழங்கப்படுவதன் காரணமாக, நாளின் எந்தவொரு வேளையிலும், எந்தவொரு இடத்திலிருந்தும், கையடக்கத் தொலைபேசி அல்லது கணினி மூலம் வங்கி அலுவல்களை மேற்கொள்ள முடியும். இந்த பீப்பிள்ஸ் மொபைல் பாங்கிங் மற்றும் பீப்பிள்ஸ் நெற் இணையத்தள வங்கிச் சேவை ஊடாக வங்கி நிலுவையைப் பரீட்சித்தல், ஏனைய விடயங்களை அறிந்து கொள்ளல், பணப் பரிமாற்றம், பில் கட்டணங்களைச் செலுத்துதல், வங்கிக் கூற்றுக்களைக் கோருதல் போன்ற பல சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் வங்கியின் யெஸ் கணக்கு உரிமையாளர்களுக்கு ஜூலை மாதம் 01ஆம் திகதி முதல் செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை பீப்பிள்ஸ் வீசா இன்டர்நஷனல் டெபிட் காட் மற்றும் கிரடிட் காட் என்பனவற்றை சேர்வுக் கட்டணம் இன்றிப் பெற்றுக்கொள்ளும் வசதியும் வழங்கப்படுகிறது. பீப்பிள்ஸ் கிரடிட் காட் மூலம், இரவு பகலாகச் செயற்படும் மக்கள் வங்கியின் 450 க்கும் அதிகமான ஏ.ரி.எம் இயந்திர வலையமைப்பு மற்றும் லங்கா பே வலையமைப்புக்கு உரித்தான 2300 க்கும் அதிகமான ஏ.ரி.எம் இயந்திரங்கள் மூலம் பணம் பெற்றுக் கொள்ளும் வசதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, கணக்கிலுள்ள மீதிக்கு ஏற்ப, வர்த்தக நிலையங்கள் ஊடாகவும், கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள முடியும். அத்துடன், மிகக்குறைந்த வருடாந்தக் கட்டணம் மற்றும் வட்டி வீதத்தைக் கொண்ட பீப்பிள்ஸ் கிரடிட் காட்டைப் பயன்படுத்தியும் பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்ய முடியும். (த)

## வெளிநாடுகளில் இருந்து பணம் பெறுகின்றவர்களுக்கு பணத்தை இரட்டிப்பாக்குகின்றது கொமர்ஷல் வங்கி

கடல்கடந்த நாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணத்தை இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி ஊடாக பெற்றுக் கொள்ளும் இலங்கையர்கள் அடுத்த இரண்டு மாத காலப் பகுதியில் தமது பணத்தை இரட்டிப்பாக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர் என வங்கி அறிவித்துள்ளது.

'நீங்கள் பெற்றுக் கொள்ளும் பணத்தின் பெறுமதியை இரட்டிப்பாக்குங்கள்' என்ற தொனிப்பொருளின் கீழான இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் லட்சக்கணக்கான ரூபாய்களைப் பரிசாக வழங்க வங்கி முன் வந்துள்ளது. கொமர்ஷல் வங்கியின் ஈ-சேஞ்ச் முறையின் கீழ் பணம் பெறுகின்றவர்களுக்கே இந்த வாய்ப்பு கிட்டவுள்ளது. இது வங்கியின் அதி நவீன இணைய வழி பணப்பரிமாற்ற சேவையாகும். இதேபோல் மணிகிராம், றியா, அல்லது எக்ஸ்பிரஸ் மணி சேவை ஊடாக பணம் பெறுபவர்களுக்கும் இந்த அதிர்ஷ்டம் காத்திருக்கின்றது.

2015 ஓகஸ்ட் 31 வரை இவற்றின் ஊடாக பணம் பெறுகின்றவர்கள் கணனி மயப்படுத்தப்பட்ட அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர் என வங்கி அறிவித்துள்ளது. தனி நபர் ஒருவருக்கு ஆகக் கூடுதலாக 50,000 ரூபா பரிசு காத்திருக்கின்றது. 50,000 அல்லது அதற்குக் குறைவான தொகையைப் பெற்றுக் கொள்கின்றவர்களுக்கு அந்தத் தொகை இரட்டிப்பாகும் வாய்ப்பு உள்ளது.

வெளிநாட்டு பணப்பரிமாற்ற சேவையில் கொமர்ஷல் வங்கி இலங்கையில் மிகவும் செயற்றிறன் மிக்க பங்களிப்பைச் செலுத்தி வருகின்றது. இந்த விடயத்தில் வாடிக்கையாளர்களுக்கு வங்கி பல்வேறு தெரிவுகளை வழங்குகின்றது. இந்த வங்கியில் கணக்கு இல்லாத ஒருவருக்கு கூட வெளிநாட்டில் இருந்து பணத்தை அனுப்பலாம். கணிசமான அளவு இலங்கையர்கள் தொழில் புரியும் உலகம் முழுவதும் உள்ள முக்கிய சந்தைகளில் கொமர்ஷல் வங்கி தனக்கே உரித்தான வர்த்தக ஊக்குவிப்பு அதிகாரிகளைக் கொண்டுள்ளது.

வங்கிக்கே உரித்தான பிரத்தியேகமான பணப்பரிமாற்ற மேடை முற்றிலும் பாதுகாப்பானதாகும். செலவு குறைந்த பணப்பரிமாற்ற வசதியுடன் கூடிய இந்தத் தளம் உலகம் முழுவதும் 50க்கும் மேற்பட்ட நாடுகளில் முகவராண்மைகளைக் கொண்டு செயற்படுகின்றது. இந்த முறை மூலம் பணத்தைப் பெறும் எந்த ஒரு நபரும் நாடு முழுவதும் உள்ள வங்கியின் 243 கிளைகள் ஊடாகவும் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இவற்றுள் 60க்கும் மேற்பட்டவை வங்கி விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும். நாடு முழவதும் உள்ள 613 ஏ.ரி.எம் இயந்திர வலையமைப்பின் ஊடாகவும் வாடிக்கையாளர்கள் தமக்கு அனுப்பப்படும் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இலங்கையில் தனியொரு வங்கி கொண்டுள்ள மிகப் பெரிய பண விநியோக வலையமைப்பு இதுவேயாகும். ஈ-எக்ஸ்சேஞ்ச் நிலவரங்கள் பற்றி இணையத்தளம் வழியாக அறிந்து கொள்ளும் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த முறை ஊடாக பணம் கிடைத்ததும் குறுந்தகவல் அனுப்பும் வழி முறையும் நடைமுறையில் உள்ளது.




மணிகிராம் உலகளாவிய பணப் பரிமாற்ற சேவையாகும். 256,000 முகவர் நிலையங்களுடன் சர்வதேச வலையமைப்புடன் செயற்படுகின்றது. 192 நாடுகளில் உள்ளவர்களுக்கு இதனூடாக நம்பிக்கையாகவும் வசதியாகவும் பணத்தை அனுப்பி வைக்க முடிகின்றது. இலங்கையில் கொமர்ஷல் வங்கியே மணிகிராம் சேவை வலையமைப்பின் மிகச் சிறந்த பிரிவாகச் செயற்படுகின்றது.

றியா நிதிச் சேவைகள் உலகில் மூன்றாவது பெரிய பணப்பரிமாற்ற கம்பனியாகும். அதன் உலகளாவிய வலையமைப்பின் ஊடாக ஆறு கண்டங்களில் 136 நாடுகளில் 140,000 முகவராண்மை நிலையங்களை கொண்டுள்ளது.

எக்ஸ்பிரஸ் மணி சேவையும் உலகின் மிகப் பெரிய பணப்பரிமாற்ற சேவை வலையமைப்புக்களில் ஒன்றாகும். 150 நாடுகளில் 170,000 முகவராண்மைகளைக் கொண்டுள்ளது.

'இந்த சர்வதேச பணப் பரிமாற்ற கம்பனிகளுடனான எமது பங்குடைமைகள் மூலம் உலகின் எந்தவொரு மூலையில் இருந்தேனும் ஒருவர் இலங்கைக்கு பணம் அனுப்ப விரும்பினால் அதைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய நிலையில் நாம் உள்ளோம்' என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் வங்கிச் சேவை பிரதான முகாமையாளர் பிரதீப் பந்துவன்ஸ. 'இந்த விரிவான உலக வலையமைப்பு தேசிய ரீதியான எமது ஸ்திரப்பாட்டுடன் இணைந்து கீர்த்தி மிக்க கொமர்ஷல் வங்கியை வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணத்தை பெற்றுக் கொள்வதற்கான பிரதான வங்கியாக ஆக்கியுள்ளது' என்று அவர் மேலும் கூறினார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங்கானை மாவடி ஞான வைரவர் ஆலய அலங்கார உற்சவத்தின் 9 ஆம், 10 ஆம் திருவிழாவின் போது வைரவப் பெருமான் வீதியுலா வந்து பக்தர்களுக்கு காட்சி யளித்தார். (ஐ)





கொக்குவில் மேற்கு ஸ்ரீ சித்திவிநாயகர் ஆல யத்தில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த பெருந் திருவிழாவில் கொக்குவில் இந்து இளைஞர் மன் றத்தின் ஏற்பாட்டில் சைவசமய அறிவுப் பரீட்சையில் முதலாம் இடம் பெற்ற மாணவிக்கு வை. நித்தி யானந்த சர்மா சைக்கிள் ஒன்றைப் பரிசாக வழங்கு வதையும் இசைச் சொற்பொழிவு ஆற்றிய அவ ரைப் பாராட்டி மன்றம் சார்பில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட போது. (ஐ)



நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ்.இளங் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் கலாபூசணம் கே.எஸ். ஆர். திருஞானசம்பந்த ஓதுவார் மூர்த்தி, செல்வி.க.சித்திரா ஆகியோரின் திருமுறை இன்னிசைக் கச்சேரி நிகழ்வின் காட்சி. (ஐ)



இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த ஆரியகுளம் முற்போக்குவாலிபர் சனசமூக நிலையம் அத்தியடி ஜே/78 கிராம சேவையாளர் எஸ். சுந்தரராசா தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. (ஐ)



சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் மந்துவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் மருத்துவ முகாம் நடைபெற்றது. சுமார் 100 பேர் வரை மூக்குக் கண்ணாடிகள் பெற்று பயனடைந்தார்கள். அத்துடன் நீரிழிவு சம்பந்தமான இரத்தப் பரிசோதனைகள் செய்யப்பட்டன. (ஐ)



யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி எஸ். சத்தியேந்திரத்தினால் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான அனர்த்த முகாமைத்துவ பயிற்சிப் பாசறை நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியிலும் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பாடசாலையின் உதைபந்தாட்ட அணிக்கு இரண்டு உதைபந்துகளை தனது அன்பளிப்பாக வழங்கி வைத்தார். (ஐ)





சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 37 ஆவது பதவியேற்பு வைபவம் அண்மையில் சாவகச்சேரி நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வலயத் தலைவர் கே. உலகநாதன் கலந்து கொண்டார். அத்துடன் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. பயன் தரும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டதுடன் பெற்றோரை இழந்த இரு சகோதரர்களுக்கு மாதாந்த கொடுப்பனவுகளுக்கான வங்கிப் புத்தகமும் வழங்கப்பட்டன. (ஐ)



வாழ்வின் எழுச்சி கெக்குலு சிறுவர் கழகங்களுக்கு இடையிலான தேசிய மட்ட கலாசார இலக்கியப் போட்டியில் கிராமிய நடன நிகழ்வில் 1 ஆம் இடத்தைப் பெற்ற யாழ்ற்ரன் கல்லூரி மாணவர்களுடன் கல்லூரி அதிபர் [illegible] பொறுப்பாசிரியர் திருமதி சகிலா சுதாகரன் ஆகியோரைக் கா[illegible] (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஈழத்து குறும்பட இயக்குநர் த.பிரதாபனின் ஊருக்கு உபதேசம் குறும்பட வெளியீடு வவுனியா திருநாவற்குளத்தில் நடைபெற்றது. குறும்பட தயாரிப்பாளர் பாலேந்திரன் மற்றும் குறும்பட இயக்குநர் த.பிரதாபன் ஆகியோருடன் இணைந்து கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவரது பாரியார் பூரணேஸ்வரி ஆகியோர் குறும்படத்தை வெளியிட்டு வைத்தனர். (ஐ)




யாழ் நகரில் உள்ள கருவி (மாற்றுத் திறனாளிகளுக்கான அமைப்பு) நிறுவனத்துக்கு வட மாகாண சபையின் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம்.சித்தார்த்தன் நிழல் பிரதி இயந்திரம் ஒன்றை வழங்கி வைத்தார். (ஐ)



பருத்தித்துறை நகராட்சி மன்றத்தின் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு தும்பளை யோகசாந்தி. நிலையத்தினர் நடத்திய யோகாசனக் கண்காட்சி நிகழ்வில் (ஐ)



மூளாய் வேரம் பகுதியில் அமைந்துள்ள சுவாமி ஞாலப்பிரகாசர் பாலர் பாடசாலையின் நூல் நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. வலி மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் நிலையத்தை திறந்து வைத்தார். (ஐ)



போரினால் விழிப்புலன் பாதிப்புற்றவர்களை உள்ளடக்கிய அமைப்பாக யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு தமிழ் மன்றம் பிறிபேர்க் அமைப்பு (ஜேர்மனி) 2 ஆவது தடவையாக நிதி உதவியை வழங்கியுள்ளது. இந்த உதவியை வலி. வடக்கு மீள்குடியேற்ற குழுத்தலைவர் ச.சஜீவன் மூலம் உரிய நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. (ஐ)



யாழ். இந்துக் கல்லூரியில் தரம் 8 இல் கல்வி பயிலும் நடேசமூர்த்தி சிவமைந்தன் சீனாவின் சங்கூ நகரில் கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற கணித விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் கணிதப் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தை பெற்று சர்வதேச சாதனை படைத்துள்ளார். (ஐ)



வலி. மேற்கு உள்ளூராட்சி வார இறுதி பெருவிழாவுக்கு பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் எஸ்.டி.மூர்த்தி மற்றும் அவரது பாரியார் சகிதம் சுழிபுரம் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து அழைத்து வரப்படுவதைக் காணலாம். (ஐ-50)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் அண்மையில் நடத்திய திருமுறைப் பெருவிழாவில் பிரதம விருந்தினராக சரஸ்வதி இராஜ கோபாலனுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், சைவபரிபாலன சபை நடத்திய பண்ணிசைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவிக்கு விருது வழங்கப்படுவதையும் காணலாம். (ஐ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அரியாலை நாயன்மார்கட்டு பேச்சி அம்பாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்ற போது அம்பாள் வீதி வலம் வரும் காட்சியைக் காணலாம். (ஐ-135)



அரியாலை பிரப்பங்குளம் ஸ்ரீ மகமாரி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழா அண்மையில் நடைபெற்ற போது அம்பாள் தேரில் வலம் வரும் காட்சியைக் காணலாம். (ஐ-135)



செலிங்கோ காப்புறுதி நிறுவனத்தின் செலிங்கோ கிளை 4 இல் காப்புறுதி பெற்றிருந்த திருமதி குகேந்திரன் கௌசலாதேவி என்பவரின் சாவு இழப்பீட்டுத் தொகை காசோலையை அவரது மகள் செல்வி குகேந்திரன் மங்களதர்சினியிடம் முகாமையாளர் குமாரசாமி பகீரதன் கையளிப்பதையும் அருகில் விற்பனை நிறைவேற்று அதிகாரியான குமாரசாமி அஜித்குமார் அருகில் நிற்பதையும் காணலாம்.



மண்ணித்தலை புனித செபஸ்ரியார் ஆலயத் திரு விழாவில் திருப்பலியைத் தொடர்ந்து புனிதருடைய தேர் பவனி இடம்பெற்று. திருச்சொரூப ஆசி இடம் பெற்றது. (ஐ-23)



யாழ். புனித மரியாள் பேரால யத்தில் புனித மரியாளின் விண்ணேற்பு பெருவிழா அண் மையில் வெகு சிறப்பாக கொண் டாடப்பட்டது. கொஞ்சேஞ்சி மாதாவின் திருச்சொரூபம் அலங் கரிக்கப்பட்ட ரதத்தில் வீதி வல மாக எடுத்து வரப்பட்ட காட் சியைக் காணலாம். (ஐ-135)



மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழாக்காட்சிகள் (ஐ)



அனலைதீவு புளியந்தீவு நாகேஸ்வரன் ஆலய பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழாக் காட்சிகள்.. (ஐ)



வடக்கு மாகாணசபையின் 2015 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடையினூடாக தனக்கொதுக்கப்பட்ட நிதியிலிருந்து கலாநிதி கந்தையா சர்வேஸ்வரனால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் மூவருக்கு கோழிக்கூடுகளும் குஞ்சுகளும் வழங்கப்பட்டன. (ஐ)



சாவகச்சேரி நகர் செருக்கற் பிள்ளையார் கோயில் பெருந் திருவிழாவின் தேர்த் திருவிழாக் காட்சிகள். = (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

### பாலசுப்பிரமணியம் நித்தியானந்தாக் குருக்கள்




பா. நித்தியானந்தாக் குருக்கள் 02.09.2015 புதன் கிழமை இறைவனடி சேர்ந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைந்தோம் அன்னாரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஸ்ரீ மகா முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்**
(62997) (14.15.16.17) **கீரிமலை.**

## மரண அறிவித்தல்

### மாசிலாமணி டேவிற்ராஜா

(முன்னாள் மின்சாரசபை ஊழியர் CRO- சுன்னாகம்)



உரும்பிராய் கிழக்கு உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாசிலாமணிடேவிற் ராஜா 05.09.2015 சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் அன்னேஸ்வரியின் பாசமிகு கணவரும் டென்சி, டக்ளஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் , காலஞ்சென்றவர்களான மாசிலாமணி - மேரியம்மா தம்பதியரின் அன்பு மகனும் புவனேஸ்வரன், சந்திரலீலா, வதனா, கமலா, ஜெலாம் (மின்சார சபை ஊழியர்) ஆகியாரின் சகோதரனும் ராஜேஸ்வரன்(யாழ்போதனா வைத்தியசாலை), மகிபாலா - மேரிபரஞ்சோதி(தெல்லிப்பழை வைத்தியசாலை), மேரிதிரேசா, ஞானேஸ்வரன்(யாழ். கொழும்புத்துறை சென் யோசவ் வித்தியாலயம்), பாலச்சந்திரன்(தீவக கல்வி வலயம்), பிறிசில்லா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின்பூதவுடல் (07.09.2015) திங்கட்கிழமை பி.ப 3மணியளவில் புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி நிறைவேற்றப்பட்டு நல்லடக்கத்திற்காக உரும்பிராய் புனித மிக்கேல் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

தகவல் :-
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### கனகசபை புவனேந்திரன் (வவா)



கந்தரோடை, தம்மளையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கனகசபை புவனேந்திரன் (04.09.2015) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லையா - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பேரானந்த தேவியின் பாசமிகு கணவரும், கிரிஜா(நோர்வே), கிரிசாந்தி(வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்- யாழ்.கிளை), கலைவாணி (ஆசிரியை - வ/அரவித் தோட்டம் சிவானந்த வித்தியாலயம் - செட்டிக்குளம்), பிரதீபன்(கண்ணன்), கஸ்தூரி (யாழ்.பல்கலைக் கழகம் கலைப்பீட நான்காம் வருட மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குமார் (நோர்வே) அவர்களின் பாசமிகு மாமனும், விஜயரத்தினம் காலஞ்சென்ற உமாபதி மற்றும் மகாதேவன், இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுசிலாதேவி விஜயரத்தினம், ஜெகநாதன்(கனடா), பரமேஸ்வரன்(கனடா), விஜயகுமாரன்(சிங்கம் ரெக்ஸ்ரைல்ஸ் - யாழ்), ரஞ்சினிதேவி - யோகலிங்கம், விஜயலட்சுமி - சிறிஸ்கந்தராசா, மகாதேவன் - கணேஸ்வரி, இரத்தினசிங்கம் - விஜயதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :-

**தம்மளை,**
**கந்தரோடை, சுன்னாகம்.**

**மனைவி, பிள்ளைகள், மருமகன்**
**சகோதரர்கள், பேரமக்கள்.**

## கும்பாபிஷேகம்

வடமராட்சி, செப். 6

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் வடக்கே அமைந்துள்ள முருகையா கோவிலின் கும்பாபிஷேகம் எதிர்வரும் 9ஆம் திகதி காலை 6மணி முதல் 7மணி வரை நடைபெறவுள்ளது.இதன் கிரியைகள் நேற்று ஆரம்பமாகி 8ஆம் திகதி எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் நடைபெறும்.அதனைத் தொடர்ந்து 45 தினங்கள் மண்டலாபிஷேக பூசையும் இடம்பெறும்.

(த-422)

## தெய்வீக இசைப்பேருரை

யாழ்ப்பாணம், செப். 06

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நடைபெறும் கந்தபுராண தெய்வீகத் தொடரிசைப் பேருரையில் பத்தொன்பதாம் நாளான இன்று 'வீரவாகு தேவர் தூது' இடம்பெறவுள்ளது. நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் பி.ப 6.45 மணிக்கு இடம்பெறும் நிகழ்வில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை.நித்தியானந்தசர்மா பக்க வாத்தியசகிதம் இசைப்பேருரை ஆற்றுவார் எனவும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(த-10)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமக்கு இரட்டிப்பு உயர்வு கிடைத்தது!

"க.பொ.த. சா/த முடிந்ததும் நாம் தொழில் சார் கல்வி ஒன்றினை கற்றிட எண்ணினோம்.
உலகெங்கும் பிரபலமான CIMA வில் இணைந்து கொண்டோம்.
இன்று எமது நண்பர்கள் இன்னும் கல்வி கற்கிறார்கள், ஆனால் நாம் சன்மானம் பெறக்கூடிய தொழில் வாய்ப்புகளை நோக்கி மெதுவாக அடி வைத்து நகர்கிறோம்.
க.பொ.த. சா/த முடிந்ததும் CIMA கற்பது இரட்டிப்பு உயர்வு கிடைத்தது போல.
நீங்கள் நேரத்தையும் மீதப்படுத்திக்கொண்டு துரிதமாக முன்னேறிச் செல்வீர்கள்."

எனது ஆசை ▶ CIMA ▶ எனது தொழில்

CIMA - புதிய தலைமுறை தொழில்சார் வியாபார கல்வித் தகைமை.

CIMA கொழும்பு T 2503880 E colombo@cimaglobal.com
CIMA கண்டி T 0817393910, 2227883 E kandy@cimaglobal.com
www.facebook.com/CIMASriLanka Follow@CIMASriLanka
CGMA

# அருள்நெறி விழாவின் பத்தொன்பதாம் நாள்

யாழ்ப்பாணம், செப்.6

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் அருள்நெறி விழாவின் பத்தொன்பதாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் பி.ப 3.00 மணிமுதல் பி.ப 6.00 மணி வரை நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமை வகிக்கவுள்ளதோடு பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார, சுதேச மருத்துவ, சமூக சேவைகளும் புனர்வாழ்வும் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் மற்றும் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் சி.திருவாரகன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த நிகழ்வில் உடுப்பிட்டி அம்பாள் சமேத கல்யாணசுந்தரர் அறநெறிப் பாடசாலையினரின் பண்ணிசை, மாணவி வி.சர்மினியின் பேச்சு, அமிர்தசுரபி அறநெறிப் பாடசாலை மாணவி அ.அபிநயாவின் பேச்சு, தெல்லிப் பழை துர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களான தி.அட்சயா, மா.தர்சினி, அ.அபிநயா ஆகியோரின் பேச்சு, மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் குழுநடனம், கோ.நிசாந்[illegible]னி, அ.அனுஜா ஆகியோரின் தனிநடனம், இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை, நாடகம் போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.(த-10)

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் பத்மநாதன்

தோற்றம் 24.11.1932 | மறைவு 04.09.2015

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பத்மநாதன் 04.09.2015 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு - பொன்னுது தம்பதியரின் பாச மிகு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும், அன்பழகன், வித்தியாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவராணி, புனிதவதி ஆகியோரின் மாமனும், கேதீஸ்வரன் - ஜீவிதா, கனிஸ்ரலா - உஷாகாந், சாரங்கன், அபிஷாத், ஜாங்கரன், சஸ்மிதா, கயானுகரன், கரிகரன் ஆகியோரின் பாசமிகு பேரனும், அக்ஷாத்தின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37,காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்.

லோகநாதன் குடும்பத்தினர் (கடை),
சண்முகம் சிவா (சிவா நகர் கடை)



## புதுக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

கர்மாரம்பம் : 04.09.2015 ஆவணி மாதம் 18ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி
யாகாரம்பம் : 07.09.2015 ஆவணி மாதம் 21ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 5 மணி
எண்ணெய்க்காப்பு : 08.09.2015 ஆவணி மாதம் 22 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
(காலை 7.00 மணிமுதல் - மாலை 6.00 மணிவரை )
மஹா கும்பாபிஷேகம் : 09.09.2015 ஆவணி 23ஆம் நாள் புதன்கிழமை
7.15 மணிமுதல் 8.45 மணிவரையும் உள்ள சுபமுகூர்த்த சுபவேளையில் எம் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும்.

கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குரு
**முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்**
(கதிரமலை சிவன் தேவஸ்தானம் - சுன்னாகம்)

அனைத்து முருகப் பெருமான் அடியார்களும் கும்பாபிஷேகம் சிறக்க அனைத்து உதவிகளையும் வழங்கி முருகப்பெருமானின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

அனைவரும் வருக!
ஆறுமுகனின் அருளைப் பெறுக!

ஆலய பரிபாலன சபையினர்,
அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
மு/புதுக்குடியிருப்பு.

(C/16598)(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி விளாங்குளத்தில் சட்டவிரோத மண் அகழ்வு

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

மல்லாவிப் பிரதேசசபைக்குட்பட்ட மாங்குளம் வன்னி விளாங்குளத்தில் சட்ட விரோதமாக நடைபெறும் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதியில் சட்டவிரோதமாகக் கிரவல் மணல் அகழப்பட்டு வருகின்றமையைக் கண்டித்து நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை இப்பகுதிமக்களால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அரச அதிகரிகளுக்கும் பொலிஸாருக்கும் பல முறை முறைப்பாடுகள் செய்தும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை எனவும் அப்பகுதிமக்கள் தெரிவித்தனர்.

இதனைவிட கிரவல் மணல் அகழ்வில் ஈடுபடும் டிப்பர் உரிமையாளர்களைத் தடுக்க முற்படும் போது பொதுமக்களுக்கும் அவர்களுக்குமிடையே முரண்பாடுகள் ஏற்படுவதாகவும், இதனால் வேறு பிரச்சினைகளுக்குதாம் முகம் கொடுக்க நேரிடும் எனவும் தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட வர்கள் கவனத்திற் கொண்டு இந்தச் சட்டவிரோத மணல் அக்ழ்வைக் கட்டுப்படுத்திச் சூழலைப் பாதுகாக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-422)

## 335 உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் அடுத்த வருட ஆரம்பத்தில்

கொழும்பு, செப். 6

335 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்கு முன்னர் நடத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

335 உள்ளூராட்சி சபைகளில் ஏற்கனவே 301உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் நிறைவடைந்த நிலையில் கலைக்கப்பட்டு விசேட ஆணையாளர்களின் கீழ் அந்நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்நிலையில், மீதமுள்ள 34 உள்ளூராட்சி சபைகளினதும் ஆயுட்காலம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15 மற்றும் 31ஆம் திகதிகளுடன் நிறைவடையவுள்ளது.

ஆகவே, இவற்றுக்கான தேர்தல்களை ஜனவரி மாதத் தில் நடத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டிருந்த போதிலும், புதிய தேர்தல் முறையினை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய பின்னர் 2016ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அல்லது அதற்கு முன்னர் நடத்துவதற்குத் திட்ட மிடப்பட்டுள்ளது.

அரசு தொகுதிவாரி மற்றும் விகிதாசார முறையில் தேர்தலை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளமையால் அதற்கான எல்லை நிர்ணய வர்த்தமானி வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

எல்லை நிர்ணய வர்த்தமானி வெளியான ஆறு மாதங்களின் பின்னரே உள்ளூராட்சி சபைளுக்கான தேர்தல் நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் மத்திய மாகாண சபை உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியபோது உள்ளூராட்சி தேர்தல் எப்போது நடத்தப்படும் என ஜனாதிபதியிடம் உறுப்பினர் ஒருவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, அடுத்த வரும் மார்ச் மாதத்தில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன எனவும், நவம்பர் மாதத்தில் வரவு -செலவுத் திட்டம் முன்வைக்கப்படவுள்ளமையினால் இவ்வருடத்தில் உள்ளூராட்சிச் தேர்தல்கள் நடத்துவது கடினமான ஒன்றாகும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (த-சி)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை செந்தமிழ்ச்செல்வன்



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வவுனியா, கல்வியங்காடு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செந்தமிழ்ச்செல்வன் நேற்று (05.09.2015) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் புவனேஸ்வரி தம்பதி யரின் அன்பு மகனும் புஸ்பராணியின் அன்புக் கணவரும் ஜனகனின் (மாணவன் யா/ கல்வியங்காடு இ.த.க. பாடசாலை) அன்புத் தந்தையும் தியாகராசா (வவுனியா), செல்வமலர் (வவுனியா), யோகேஸ் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் தெய்வராணி, தங்கராணி, விசயராணி (கொலண்ட்), பகீர்தரன் (ஜேர்மனி), கோமளராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு, கோப்பாய்.

தகவல் : மனைவி.
0766165188

## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து இராசதுரை



மலை வேம்படி ஒழுங்கை, சுதுமலை கிழக்கு மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட தம்பிமுத்து இராசதுரை நேற்று (05.09.2015) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் திரு. திருமதி தம்பிமுத்து தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் விசயலட்சுமியின் அன்புக் கணவரும் வாகீசன், துஸ்யந்தி, பிரதீபன், பிரசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப 11.00 மணியளவில் இல 25, மலை வேம்படி ஒழுங்கை, சுதுமலை கிழக்கு மானிப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மலை வேம்படி ஒழுங்கை,
சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்.

தகவல் :
இ.பிரசாந்தன் (மகன்)
0778949517


# DSI
## பாதணிகள்

அனுமதி பெற்ற சில்லறை விற்பனை முகவர்கள் தேவை!

காலணி விற்பனைத் துறையில் முன்னோடி நாமமான DSI நிறுவனத்துடன் வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்க உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

இலங்கை மக்களுக்கு சுமார் 50 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக முதல்தர பாதணிகளை தயாரித்து விற்பனை செய்து வரும் எமது நிறுவனம், நாடு முழுவதும் 200 க்கும் மேற்பட்ட DSI காட்சியறைகளையும், மொத்த விற்பனை முகவர் வலையமைப்பையும் கொண்டுள்ளது.

மேலும், எமது வர்த்தக நிலையங்களை விஸ்தரிக்கும் நோக்கில், பின்வரும் நகரங்களில் அனுமதி பெற்ற சில்லறை விற்பனை முகவர்களை நியமிப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* காத்தான்குடி
* புதுக்குடியிருப்பு
* சுண்ணாகம்
* நெல்லியடி
* சாவகச்சேரி
* மன்னார்

மேலே குறிப்பிடப்பட்ட நகரங்களுக்கு மேலதிகமாக, ஏனைய நகரங்களும் கவனத்திற் கொள்ளப்படும்.

உங்களது வியாபார முகாமைத்துவம் சம்பந்தமான அனுபவங்கள் மற்றும் பொருத்தமான பொருளாதாரப் பின்னணியுடன், 500 - 800 சதுர அடி அளவிலான வர்த்தக நிலப்பிரதேசம் ஒன்றையும் கொண்ட, அடிப்படை வசதிகளுடன் கூடிய நிலையமும் இருக்குமாயின், 7 நாட்களுக்குள் முழுமையான விபரங்களை உள்ளடக்கிய வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் ஒன்றை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சிரேஷ்ட முகாமையாளர் (சில்லறை விற்பனை)
டீ.பி.ம செம்சன் அண்ட் சன்ஸ் (தனியார்) லிமிடெட்
இல. 257, ஹைலெவல் வீதி, நாவின்ன, மஹரகம

தொலைபேசி 0770 213 358 பிரியந்த ஆரியதுங்க


## மரண அறிவித்தல்

### வி.பொன்ராசா



பிறப்பு - 14.06.1934 இறப்பு - 05.09.2015

இந்தியா தூத்துக்குடி (திருநெல்வேலி) யைப் பிறப்பிடமாகவும் செல்வா நகர் (ஷாலோம் நகர்) முறிப்பை வதிவிடமாகவும் கொண்ட வி.பொன்ராசா கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் தென்னிந்தியத் திருச்சபையின் மூத்த உறுப்பினராவார்.

நல்லடக்க ஆராதனை இன்று (06.09.2015) ஞாயிறு பி.ப 2.00 மணியளவில் தென்னிந்திய திருச்சபை ஷாலோம் நகர் ஆலயத்தில் நடைபெற்று புதுமுறிப்பு பொது மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

அனைவரும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - தென் இந்திய திருச்சபை, யாழ் ஆதீனம்.

## 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அமரர் கமலாசனதேவி பாலசுப்பிரமணியம்



மலர்வு
24.11.1938

மறைவு
23.08.2015

கடந்த 23.08.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது தாயாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தொலை பேசியிலும் அஞ்சலிப்பிரசுரத்தின் மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று (06.09.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

செட்டி குறிச்சி,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### முத்தையா இராசையா

(பிரதம எழுதுவினைஞர், கொழும்பு திறைசேரி திணைக்களம், பிரபல சோதிடர்)



அல்வாய் வடமத்தி, அணியாவோடையை வதிவிடமாகக் கொண்ட முத்தையா இராசையா (பிரதம எழுதுவினைஞர், கொழும்பு திறைசேரி திணைக்களம், பிரபல சோதிடர்) நேற்று (05.09.2015) சனிக்கிழமை காலமானார்.

அன்னரர் காலஞ்சென்ற பரமவதி அவர்களின் அன்புக் கணவரும் மு.தம்பிப்பிள்ளையின் (ஓய்வு நிலை உதவி அரசாங்க அதிபர்) அன்புச் சகோதரரும் பிரேமாவதி (ஆசிரியை யா/ஹாட்லிக் கல்லூரி), நிர்மலா (சுவிஸ்), பிரியதர்சினி (டென்மார்க்), குலதீபன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செ.செல்வராஜா (மதியழகன் - ஓய்வு நிலை ஆசிரியர்), செ.சிவராசசிங்கம் (சுவிஸ்), விமலசுந்தரம் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும் லாவண்யா (மாணவி, விஞ்ஞான பீடம், யாழ்.பல்கலைக்கழகம்), சாருண்யா (மாணவி, பல் மருத்துவபீடம் பேராதனை பல்கலைக்கழகம்), நிரோஷன் (சுவிஸ்), சுவிஸ்சனா (சுவிஸ்), தர்சிகா (டென்மார்க்), அனோஜன் (டென்மார்க்), தனிக்கா (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.09.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பரமபதி, அணியாவோடை,
அல்வாய் வடமத்தி,
அல்வாய்.

தகவல் :
குடும்பத்தினர்.


A/L பரீட்சை எழுதிய / 16 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான ஆங்கிலப் பாடநெறிகள்

# DIPLOMA IN ENGLISH
## (SPOKEN ENGLISH)

வடமாகாணத்தில் தலைசிறந்த ஆங்கிலக் கல்லூரி

ஆரம்பம்: 12.09.2015 காலை 8.30 மணி

பிரிவு I : சனி/ஞாயிறு தினங்களில் காலை 7.30 - 10.00 வரை

பிரிவு II : சனி/ஞாயிறு தினங்களில் மாலை 3.00 - 5.30 வரை

06 மாதங்கள் நடைபெறும் இந்த பாடநெறியைப் பயின்ற அனைவரும் ஆங்கில மொழியினை சரளமாகக் கதைப்பதுடன் ஆங்கிலத்தில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களையும் பெறுகின்றனர்.

இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்

E-CITY
COLLEGE OF ENGLISH

இல.372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (வீரமாகாளி அம்மன் ஆலய அருகில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



UK, Australia, Canada, USA, New Zealand, Denmark, France, Germany, Italy, Japan, Netherlands, Norway, Switzerland, Sweden etc...

# வங்கியில் பணவைப்பு

**Saving book, Fixed Deposit, Statement**

3, 6, 12 மாதங்களுக்கான (முன், பின்) பணவைப்பு (அரசவங்கிகளில் மட்டும்)

**Migration / Skill Migration / Visit Visas / Student Visas / Dependent / Business / Investment / New Applications etc...**

**(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்).**

SKYWALK Visa Solutions

**ஸ்கைவோர்க் வீசா சொலூஷன் பிறைவட் லிமிட்டட்**

No.65, 1/1, Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)

**077-7711905**





# மூலிகை மருத்துவத்தில் சாதனை

## தெய்வீக மூலிகை மருந்துகளால்

ஆண்மைக்குறைவு, குழந்தையில்லாமை, சர்க்கரை நோய், சொரியாசிஸ், ஆஸ்மா, மூலநோய், எடைகூட /குறைய, மஞ்சள் காமாலை(B)(HBSAG), பாலியல் நோய் முழுமையாக குணமாகும் அதிசயம்

### 23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்

100% உறுதி

### உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை

**ஆண்மைக்குறைவு** - ஆண்மைக்குறைவு ஏற்பட முக்கிய காரணங்கள் இரண்டு. தானாக வருவது முதல் காரணம். நாமாக வரவழைத்துக் கொள்வது இரண்டாவது காரணம். விஷக்காய்ச்சல், உடல் பலவீனம் போன்றவைகளின் காரணமாக ஆண்மைக்குறைவு இயல்பாக ஏற்படுகின்றது. அதையும் தவிர்த்து இளமைப்பருவத்தில் ஏற்படுகின்ற தீய பழக்கங்கள், போதைப்பொருட்கள் பயன்படுத்துதல், தனது சக்திக்கும் அதிகமான உடல் உழைப்பு, டென்ஷன், சர்க்கரை நோய், சரியாக சாப்பிடாமை, உடல்சூடு போன்றவைகளால் ஆண்மைக்குறைவு தானாக வரவழைத்துக்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக நரம்புத்தளர்ச்சி, உடல் படபடப்பு, மயக்கம், சோர்வு, கை, கால் கடுக்கம், அசதி, கண் எரிச்சல், கன்னத்தில் குழி விழுந்து காணப்படுதல், ஞாபக சக்தியின்மை, தூக்கமின்மை, தனியாக சிந்தித்தல், திருமண பயம், இல்லறத்தில் முழுமையாக கூட முடியாமை, விரைவாக விந்து வெளியேறுதல், குழந்தையின்மை போன்றவைகள் ஏற்படுகின்றன. இதிலிருந்து விடுபட்டு இல்லற வாழ்வை இனிமையாக ஆரம்பிக்க பக்க விளைவுகளற்ற முறையில் சிகிச்சையளிக்கிறார்.

**குழந்தையின்மை** - ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் உற்பத்தியின்மை, உயிரணுக்கள் குறைவு மற்றும் பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய்ப்பிரச்சினை, கர்ப்பப்பை வளர்ச்சியின்மை, கர்ப்பப்பைக் கட்டிகள், கருமுட்டை உற்பத்தியின்மை, கருமுட்டை வளர்ச்சியின்மை மற்றும் வெள்ளைபடுதல் போன்ற பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு குழந்தைப்பாக்கியம் பெறலாம்.

**சர்க்கரை நோய்** - இந்த நோய்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்கள் மனித உடம்பில் சுரக்கின்ற இன்சுலின்கள் சரியாகசுரக்காமையே காரணம். இதன் காரணமாகவே இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு தானாகவே கூடிவிடுகின்றது. இவ்வாறு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு எங்களது தெய்வீக மூலிகை மருத்துவத்தின் மூலம் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்துவது மட்டுமின்றி செயலிழந்த கணையத்தை மீண்டும் செயல்பட செய்து அதிலிருந்து சுரக்கின்ற இன்சுலினை முழுமையாகச் சுரக்கச்செய்கின்றோம். இதன் காரணமாக மீண்டும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு கூடுவதில்லை. இங்கு சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்ட ஆண்மைக்குறைவு, நரம்புத்தளர்ச்சிக்கு நல்ல முறையில் குணமடைய சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

**சிறுநீரகப்பிரச்சனை** - சிறுநீரகப்பிரச்சனையால் பாதிக்கப்பட்ட மற்ற டாக்டர்களால் கைவிடப்பட்ட ஒரு பக்க மற்றும் இருபக்க கிட்னியும் தோல்வி அடைந்தவர்கள் கூட எங்களது சிகிச்சையால் பலன் பெற்று வருகிறார்கள்.

**மூலநோய்** - மூல நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை செய்தும் பலம் அடையாதவர்கள் இரத்தம் வடிதல், வலி, எரிச்சல், மலம் கழிக்க முடியாமை போன்ற பிரச்சனைகளில் இருந்து விரைவில் குணமடைந்து மூல நோயை முற்றிலும் அகற்ற முடியும்

**சொரியாசிஸ்** - தலையில் பொடுகு போன்று ஆரம்பித்து உடல் முழுவதும் பரவி மீன்செதில் போன்று தோன்றும். நாட்கள் ஆக ஆக உடலின் தோல்கள் இறுகி வெடித்து இரத்தம் வடியும். நகங்கள் சொத்தையாகும். இந்த நோய் ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு எளிதில் பரவக்கூடியது. இந்த நோயை எமது சிகிச்சை மூலம் முழுமையாக குணமாக்கலாம்.

மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரச பதிவு பெற்ற சித்த மருத்துவர் **Dr.G.ஜெகதீஸ்குமார்** அவர்களை தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை**

இராமாபுரம், சென்னை-89,

Email: sridevisiddha@gmail.com Skype: sridevisiddha

**செல்: 0091 9842457673**

**செல்: 0091 9600336009**



# Vacancy for

## Web Application Developer and Data Processing Analyst

A USA-based company with offices in Colombo and Jaffna is looking for a Web Application Developer and a Data Processing Analyst to work in the Jaffna office. Both candidates should have a degree or diploma in the field of Computer Science/IT and should possess strong technical and analytical skills. Candidates for Web Application Developer should have good programming knowledge; familiarity with PHP, HTML/CSS and Javascript is a plus. Excellent opportunity for motivated candidates to work with a strong team on challenging projects and establish long-term careers. Fluency in English is a must. **Send your CV to:**

**siva@monthlywarranty.com or siva.monthlywarranty@gmail.com**

(62318)(10.15.17)


# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCY

## POST OF CHIEF SECURITY OFFICER, GRADE II (ON CONTRACT BASIS)

Applications are invited by me up to 05.10.2015 from suitably qualified persons for the post of Chief Security Officer, Grade II (on contract basis)

**QUALIFICATIONS:**

1. An Officer not below the rank of Assistant Superintendent of Police, Captain of the Army or an officer of equivalent rank in the other Armed Services.

OR

2. A Person who possesses a degree from a recognized University/ Higher Educational Institutions with not less than five (05) years experience in Security work.

OR

3. A holder of the post of Security Inspector, Grade I or above in the University Security Services and confirmed in the present post with not less than eight (08) years satisfactory service in those grades.

(Note: Retired Officers from the Police or other Armed Services may also apply)

**Salary Scale** : Rs. 39,024.00 (fixed per month

**Selection** : By Structured Interview.

**Period of Service** : One year

Applications should be on prescribed forms issued by the University. Application forms and particulars for the above post should by obtained from the officer of the Senior Assistant Registrar/Establishments (Non-Academic) of this University on a payment of Rs. 100/= for each application form at the people's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs.100/= drawn in favour of the Bursar of this University together with self addressed Rs. 10/= Stamped envelope of 23x10 c.m in size.

The envelope containing duly filled application form must bear **"Post of Chief Security Officer" Grade II (on contract basis)** on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 05.10.2015.

Application from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department if not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

REGISTRAR,
University of Jaffna.
04.09.2015

(C/186200)(10.15.17)


# Are You After A/L's !

## Jaffna Branch

### Trainee Marketing Executives (Male/Female)

We offer exciting income potential and career opportunities. We are represented throughtout 21 countries in Asia.

- ★ Age between 18 to 25.
- ★ Earn oner 30,000/= per month
- ★ We provide Training, Basic salary, Travelling & Commission.
- ★ Overseas trip for achievers.

**Call us to schedule an interview within 07 days.**

Jaffna Branch: 021 567 1130, 0773566835

jaffnapioneerhouse@gmail.com



# இயந்திரமோ ஒன்று! வேலையோ பல!!

**3D ஹீட் பிறஸ் மெசின்**

**கிடைக்கும் இலாபமோ மிக அதிகம் !!!**

விசேட விலைக்கழிவுடன்

Studio ,Colour Lab, Book Shop,Gift Centers, Communication..

போன்ற வியாபார ஸ்தலங்களிற்கு உகந்தது




பிரிண்ட் செய்யக்கூடிய சகல பொருட்களும் எம்மிடம் உண்டு மக், பிளேற், ரிங் போத்தல், ஸ்ரோன்ஸ், ரீ சேர்ட், டைல் போன்றவற்றில் பிறின்ட் செய்யக்கூடியது




**077 201 5330**
**077 385 0089**

**WINRICH INTERNATIONAL (PVT) LTD**

No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitiya,Colombo - 03

max adz


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா வைத்தியசாலையின் தொற்றுள்ள கழிவகற்ற மாதம் 1 லட்சம்

யாழ்ப்பாணம், செப் .6

யாழ்.போதனா வைத்தியசாலையில் தொற்று ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான கழிவுகளை மாத்திரம் அகற்றுவதற்கு மாதாந்தம் ஒரு லட்சம் ரூபா வரை செலவிடப்படுகிறுது என்று வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

தொற்று ஏற்படுத்தக்கூடியவை என்ற வகையில் சத்திர சிகிச்சையின்போது அகற்றப்பட்ட உடற்பாகங்கள், பிறந்து இறந்த குழந்தைகள் மற்றும் சிகிச்சைக் கழிவுகள் உட்படப் பல உள்ளடங்குகின்றன. அந்தத் தொற்று ஏற்படுத்தும் கழிவுகளை உயர் வெப்பநிலையில் வைத்து எரித்து அழிக்க வேண்டும். அதற்குரிய இடம் யாழ்ப்பாணத்தில் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். யாழில் கழிவகற்றல் பிரச்சினை இழுபறியில் – இன்னும் உரிய இடம் சீர்செய்யப்படாது தொடர்ந்துகொண்டிருக்கிறது. இந்நிலையில் வைத்தியசாலைக் கழிவுகளை அகற்றுவதிலும் சிக்கல் ஏற்பட்டு பின்னர் அகற்றப்பட்டு வருகிறது. அது தொடர்பில் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

அதனால் அந்தக் கழிவுகளைத் தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அந்த நிறுவனம் மூலமாக மத்திய மாகாணத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்குள்ள உயர்வெப்ப நிலையில் இவை போன்ற கழிவுகளை எரியூட்டக்கூடிய ஆலையில் வைத்து எரியூட்டப்பட்டு அழிக்கப்படுகின்றன. அவை மனிதர் உள்ளிட்ட உயிரினங்களுக்கு கடும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாதலால் ஏனைய இடங்களிலுள்ள நடைமுறை போன்று அங்கு கொண்டு செல்லப்பட்டு அழிக்கப்படுகின்றன. மாதத்தில் 3 தடவைகள் அந்தக் கழிவுகளைக் குறித்த தனியார் நிறுவனத்தினர் வந்து எடுத்துச் செல்கின்றனர். அதற்காகவே கழிவுகளை ஏற்றுவது மற்றும் அவற்றைக் கொண்டு செல்வதற்கான போக்குவரத்துச் செலவு என ஒரு மாதத்துக்கு ஒரு லட்சம் ரூபா வரையில் செலவிடப்படுகிறது. உயர் வெப்பநிலையில் எரியூட்டக் கூடிய ஆலை அதனை அமைப்பதற்கான இடம் யாழ்ப்பாணத்தில் ஏற்றதாக இல்லை. அதனால் சுகாதார அமைச்சு இந்த வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது. ஏனைய வகைக் குப்பைகள் யாழ்.மாநகர சபை மூலமாக அகற்றப்படுகின்றன –என்றார். (த–4)

# அடைக்கலநாதனுக்கு மன்னாரில் வரவேற்பு

மன்னார், செப் 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுவின் உப தவிசாளருமான செல்வம் அடைக்கலநாதனுக்கு நேற்றுச் சனிக்கிழமை மன்னாரில் அமோக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதான பாலத்தில் இருந்து பல நூற்றுக்கணக்கான மோட்டார் சைக்கிள் தொடரணியுடன் பவனியாக நாடாளுமன்ற உறுப்பினர் அழைத்து வரப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து மன்னார் பஸார் பகுதியில் உள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை மற்றும் அருட்தந்தையர்களிடம் ஆசிபெற்றார்.

அதன் பின்னர் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினரை மன்னார் மக்கள் மற்றும் பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பவனியாக அலுவலகம் நோக்கி அழைத்து வந்தனர்.

இதன் போது வடமாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், மன்னார் நகர சபையின் முன்னாள் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு மகத்தான வரவேற்பளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(த)

---

## தீர்வுக்கு

யத்துவம் வாய்ந்தது. இதுவரை காலமும் தீர்க்க முடியாதிருந்த அடிப்படைப் பிரச்சினைகளை நாம் தீர்க்க வேண்டிய காலம் வந்து விட்டது. அதற்காகவே தேசிய அரசு நிறுவப்பட்டுள்ளது.

30 வருடப் போர், நாட்டில் மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தவில்லை. சர்வதேச ரீதியாக இலங்கைக்கு எதிராகப் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. எனினும் தற்போது ஜனாதிபதிக்குச் சர்வதேச ஆதரவு அதிகரித்து வருகிறது–என்றார். (த–வ)

## இறுதிப் போரில்

மற்றும் பீரங்கிப் படையணிகளை வழிநடத்திய தாகக் கருணா, இந்திய ஊடகமொன்றுக்குத் தெரிவித்திருந்தார்.

எனினும் எந்தவொரு இந்தியப் படையினரும் இலங்கைக்கு உதவிகளை வழங்கவில்லை எனவும் இது முழுக்க முழுக்கப் பொய்யான கூற்று எனவும் உயர் இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

58ஆவது படையணிக்குப் பொறுப்பாகப் போர்க் காலத்தில் கடமையாற்றிய ஜெனரல் சவேந்திர சில்வாவும் கருணாவின் கூற்றை நிராகரித்துள்ளார். (த–வ–5)

## ஹெரோயினுடன்

பொலிஸார் சந்தேகத்திற்கிடமான வீடு ஒன்றை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது வீட்டின் பின்புறத்தில் ரகசியமாக மண்ணுக்குள் புதைக்கப்பட்ட ஹெரோயின் பொதிகளை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவற்றை வீட்டு எல்லைக்குள் வைத்திருந்த குற்றச்சாட்டில் நித்தியவெட்டைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவை விநியோகத்துக்கு தயார் செய்யப்பட்டுப் புதைத்து வைக்கப்பட்டதாகப் பளைப் பொலிஸார் இதன்போது தெரிவித்தனர்.

குறித்த பெண் விசாரணையின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–109)

## சென்னை

கம், நல்லாட்சி, ஜனநாயகம் என்பவற்றை ஏற்படுத்துவ தற்கும், இலங்கை மக்களின் பாதுகாப்புக்காகவும், அமெரிக்க அரசு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதுடன், பலமான உதவிகளை வழங்கும் என இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த மத்திய மற்றும் தெற்காசிய நாடுகளுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா பிஷ்வால் தெரிவித்திருந்தார்.

அத்துடன், இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படவுள்ள உள்ளக விசாரணைக்கு ஆதரவு வழங்கவுள்ளதாகவும் அவர் இதன்போது தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுச் சென்னையிலுள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தை முன்றுகையிட்டுப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் மாணவர்கள், அரசியல் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன் காரணமாகச் சென்னையிலுள்ள அமெரிக்க துணைத்தூதரகத்துக்கு முன்பாக பதற்றமான சூழ்நிலையொன்று ஏற்பட்டது. (த–வ)

## 60 பவுண்

திருட்டு இடம்பெறுவது தெரியாத அளவுக்கு–ஆழ்ந்த உறக்கமா அல்லது மயக்க மருந்து வீசப்பட்டதா என்று சந்தேகிக்கும் அளவுக்கு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராச வீதி, திருநெல்வேலியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வெளிநாட்டிலிருந்து வந்திருந்த குறித்த நபர் வரும்போது 60 பவுண் நகைகளைக் கொண்டு வந்துள்ளார். இந்நிலையில் அவரது வீட்டுக்குச் சென்ற திருடர் அவற்றைத் திருடிச் சென்றுள்ளனர். மறுநாள் காலையே சம்பவம் தெரியவந்தது. அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர, சில நாள்களுக்கு முன்னரும் இணுவிலில் வீடு புகுந்த திருடர் அங்குள்ள ஒருவரை வெட்டிவிட்டு நகைகள் மற்றும் பணத்தைத் திருடிச்சென்றுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர். அதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அந்தச் சம்பவத்தில் சுமார் 45 பவுண் நிறையுடைய நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். எனினும் இந்தச் சம்பவங்கள் வெவ்வேறு நாள்களில் இடம்பெற்றுள்ளன.

முன்னர் திருட்டு, கொள்ளைகள் அதிகரித்துக் காணப்பட்டன. அதன் பின்னர் சில வாரங்களாக அவற்றைக் காணமுடியவில்லை. தற்போது மீண்டும் அவை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–4)

## சு.கவின்

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை குறித்த நியமனங்கள் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட் டுள்ளன எனக் கூறப்படுகின்றது. எனினும், அமைச்சுப் பங்கீடு தொடர்பில் நிலவும் இழுபறி நிலைமையினால் அத்தினத்தில் உறுதியாக வழங்கப்படும் எனக் கூறுமுடியாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எது எவ்வாறாயினும் இவ்வார இறுதிக்குள் சில அமைச்சுக் களாவது வழங்கப்படும் என அரச உயர் அதிகாரி ஒருவர் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு வழங்கப்பட்டுள்ள 15 அமைச்சுக்களில் 11 அமைச்சர்கள் நியமனக் கடிதங்களைப் பெற்றுள்ளனர். எனினும், நான்கு அமைச்சுக்கான வெற்றிடம் இன்னும் காணப் படுகின் றன. குறித்த நான்கு அமைச்சுக் களுக்கும் யாரை நியமிப்பது என்பதில் இழுபறி நிலை இருந்தமையினாலேயே அந்நியமனங்கள் வழங்கப்படவில்லை என்றும், அதுவரை அந்நான்கு அமைச்சுக்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் இயங்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அதற்கான நியமனங்கள் நாளைமறுதினம் வழங்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் எனவும், சில வேளைகளில் நியமனங்கள் பிற்போடக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன எனவும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த நான்கு வெற்றிடத் துக்கும் யாரை நியமிப்பது என்பது தொடர்பில் ஜனாதிபதி மாத்திரமே அறிவார் என்றும், அநேகமாக சிறுபான்மை உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படலாம் என்றும் சு.கவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இதேவேளை, முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச, ஏ.எச்.எம். பௌசி, ஜனக பண்டார தென்னகோன் ஆகியோரது பெயர்கள் விசேடமாக ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, பிரதி மற்றும் இராஜாங்க அமைச்சுக்கள் 45 பேருக்கு வழங்கப்படவுள்ளன எனவும், அதில் 18 அமைச்சுக்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், 27 அமைச்சுக்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் பங்கீடு செய்யப்பட்டுள்ளன.

இப்பங்கீடு தொடர்பில் இழுபறி நிலை காணப்படுகின்றமையினால் கடந்த வெள்ளிக்கிழமை அவற்றுக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை. என்றாலும் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை அவற்றுக்கான நியமனங் களை வழங்க ஜனாதிபதி தீர்மா னித்துள்ளார்.

இழுபறி நிலை தொடருமா யின் ஒரு சில அமைச்சுக்களை மாத்திரம் குறித்த தினத்தில் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

48 அமைச்சர்கள் கொண்ட புதிய அமைச்சரவையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு 15 அமைச்சுக்க ளும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 33 அமைச்சுக்களும் பகிர்ந்தளிக்கப் பட் டிருந்தன.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வினால் 42 அமைச்சுக்களுக்கான நியமனக் கடிதங்களே வழங்கப்பட்டிருந்தன. அதில் 31 அமைச்சுக்கள் ஐ.தே.கவுக்கும், 11 அமைச்சுக்கள் சு.கவுக்கும் வழங்கப்பட்டிருந்தன.

ஐ.தே.க. சார்பில் ஏற்கனவே மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சை ஏற்றிருந்ததுடன், சர்வதேச வர்த்தக அமைச்சு மலிக் சமரவிக்கிரமவுக்கு வழங்கப்படவிருந்த போதிலும் அவர் நிகழ்வில் கலந்து கொண் டிருக்கவில்லை. (த–சி)

## இராமேஸ்வரம்

கைகளில் மத்திய மாநில அரசுகள் ஈடுபடவில்லை என்றும் தமிழக மீன வர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். மேலும், இந்திய–இலங்கை மீனவர்களுக்கிடையிலான பேச்சு சுமுகமாக நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தமிழக மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (த–வ)

## ஐ.தே.கவின்

என ஐக்கிய தேசியக் கட்சி அறி வித்துள்ளது.

இதேவேளை, சிறிலங்கா சுதந் திர கட்சியின் 64 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு அண்மையில் பொலனறுவையில் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. (த–வ)

## பஸ் மோதி

ராய் கிழக்கைச் சேர்ந்த மாசிலாமணி டேவிட்ராஜா (வயது 62) என்பவரே உயிரிழந்தார்.

வீதியைக் கடப்பதற்காக வீதி யின் மத்தியில் பயணித்துக் கொண்டிருந்போது பின்புறமா கச் சென்று குறித்த வாகனம் அவரை மோதியுள்ளது. உடனடியாக அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தார். (த–4)

## தமிழருக்கான

ஓயாமல் ஒலிக்கவேண்டும்.

இந்நிலையில், நாடாளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கான எனது சேவையை இரு கோணங்களில் தொடரவுள்ளேன். பொதுக் கடமை என்ற கோணத்திலும், முக்கிய கடமை என்ற இன்னொரு கோணத்திலும் இந்தச் சேவையைத் தொடரவுள்ளேன்.

நாட்டுக்காகக் குரல் கொடுப்பது எனது பொதுக் கடமையாகும். அதாவது அரசை எதிர்க்கவேண்டிய வேளையில் ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் இணைந்து எதிர்ப்பேன். அதேவேளை, அரசு எடுக்கும் தீர்மானங்கள் நாட்டின் மூவின மக்களுக்கும் நன்மை பயக்கும் வகையில் அமைந்தால் அதனை ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் சேர்த்து ஆதரிப்பேன். இது எனது பொதுக் கடமையாகும்.

தமிழ் மக்களுக்கு நியாயமான – நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக் கொடுப்பது எனது முக்கிய கடமையாகும். இந்தக் கடமையிலிருந்து நான் ஒருபோதும் பின்வாங்கமாட்டேன்.

வடக்கு–கிழக்கைப் பூர்வீக வாழ்விடமாகக்கொண்ட எமது தமிழ் மக்கள் கொடூரப் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள். தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும் நாம் வெறுமனவே பார்த்துக்கொண்டிருக்க முடியாது. சர்வதேச கண்காணிப்பில் உண்மைகள் கண்டறியப்பட்டு நீதி வழங்கப்படவேண்டும். இதற்காக நான் தொடர்ந்து குரல் கொடுப்பேன்.

அதேவேளை, நீண்டகாலமாகத் தொடரும் நாட்டின் இனப்பிரச்சினைக்கு – தமிழரின் பிரச்சினைக்கு கௌரவமான – நியாயமான – உண்மையான – நிரந்தரமான அரசியல் தீர்வு விரைவில் கிடைக்கவேண்டும். இதனைப் பெற்றுக்கொடுக்க என்னால் இயன்ற அத்தனை முயற்சிகளையும் – நடவடிக்கைகளையும் எடுப்பேன்.

இனப்பிரச்சினைக்கு – தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் கிடைப்பது எமக்கு மட்டுமல்ல முழுநாட்டுக்கும் நல்லது. அப்போது தான் நாட்டில் நல்லாட்சி தொடரும்; சமாதானம் நீடிக்கும் – என்றார். (த–சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் வென்றது சென்.அன்ரனிஸ்

## விக்னேஸ்வராவின் தொடரில் இளம் பறவைகளை வீழ்த்தி

### அரோகன் 4 கோல்கள்





யாழ்ப்பாணம், செப்.6
புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டத் தொடரில் சிலாவத்தை இளம் பறவைகள் அணியினை வீழ்த்தி கிண்ணம் வென்றது இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்.

முல்லைமாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புதுக்குடியிருப்பு விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகம் முல்லைமாவட்ட அணிகளுக்கிடையே நடத்திய உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் கடந்த வியாழக்கிழமை குறித்த கழக மைதானத்தில் நடைபெற்றது. இரணைப்பாலை சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து சிலாவத்தை இளம்பற வைகள் அணி மோதிய இந்த ஆட்டத்தில் ஆட்டம் ஆரம்பித்தது முதல் சென். அன்ரனிஸின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. குறிப்பாக சென். அன்ரனிஸின் பந்துப்பரிமாற்றம் இளம்பறவைகளால் கணிக்க முடியாத வகையில் அமைந்திருந்தது. பதினம் நிமிடங் களை எட்டுவதுக்கு முன்னரே சென்.அன்ரனிஸ் மூன்று கோல்களை விளாசி தள்ளி விட்டது. 4ஆவது, 6ஆவது 10ஆவது நிமிடங்களில் பதியப்பட்ட அக்கோல்கள் அனைத்தும் அரோசனால் பதியப்பட்டவை. ஆனபோதிலும் போராட்டத்தைக் கைவிடவில்லை இளம் பறவைகள். 18 நிமிட போராட்டத்தின் பின்னர் இளம்பறவைகள் அணியின் முதலாவது கோல் பிறேம்குமாரினால் பதியப்பட்டது. மேற்கொண்டு இரு அணிகளாலும் எந்தவித கோல்களும் பதியப்படாத நிலையில் 3–1 என்ற அன்ரனிஸின் ஆதிக்கத்துடன் முதல்பாதி முடி வடைந்தது.

இரண்டாம் பாதியில் அதிகமான வாய்ப்புக்களுடன் களமிறங்கியது அன்ரனிஸ். அதிரடி காட்ட வேண்டிய கட்டாயத்தில் இளம்பறவைகள். இதனால் இளம்பறவைகள் அணியின் முன்னேற்றங்களை சென். அன்ரனிஸின் பின்களவீரர்கள் தவிடுபொடியாக்கிக் கொண்டிருந்தனர். ஆட்டம் படிப்படியாக இளம்பறவையின் கட்டுப்பாட்டை விட்டு நீங்கிய பின்னர் வீறுகொண்டு எழுந்தார் அரோசன். மீண்டும் ஒரு கோலைப் போட இறுதியில் இரணைப்பாலை சென்.அன்ரனிஸ் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

ஆட்டநாயகனாகவும், தொடராட்ட நாயகனாகவும் சென்.அன்ரனிஸ் அணியின் அரோசன் தெரிவானார் அதேநேரம் சிறந்தகோல் காப்பாளராக அதேஅணியைச் சேர்ந்த அனோஜிதன் தெரிவானார். இறுதியாட்டத்துக்கு விருந்தினர்களாக வடமாகாண பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன், புதுக்குடியிருப்பு வைத்திய அதிகாரி சத்தியரூபன், புதுக்குடியிருப்பு பங்குத் தந்தை சுமன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம–23–422–108)

## விவேகானந்தா வி.கழகத்தின் இறுதியாட்டங்கள்

கரணவாய் செப். 6
அமரர்களான வைத்தியர் க.பரிமேலழகர், ஆசிரியர் வே.நிமலன் மற்றும் மாணவனான செ.பரணீதரன் ஆகியோரின் ஞாபகார்த்தமாக தும்பளை விவேகானந்தா விளையாட்டுக் கழகம் நடத்திய துடுப்பாட்டத்தொடரின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மாதனை கண்ணகை அம்மன் ஆலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

5 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட இறுதியாட்டத்தில் வதிரி சிறீ முருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஞானம் விளை யாட்டுக்கழகமும் 15 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

கழகத்தலைவர் பி.விவேகானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமராட்சிக் கல்விவலய ஆசிரிய ஆலோசகர் இ.ராஜசீலனும் சிறப்பு விருந்தினர்களாக மெதடிஸ்த பெண்கள் பாடசாலையின் முன்னாள் முகாமைத்துவ உதவியாளர் செல்வி அ.சேதுபதியும் பளை கிராமசேவையாளர் செல்வி ம.சுஜிதாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம–108–422)

# ஆதிக்கம் செலுத்தியது ஆதிசக்தி



கரணவாய் செப். 6
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடரில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தைத் தோற்கடித்து சுப்பர் 8 அணிகளில் ஒன்றாக இடம்பிடித்தது வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம்.

கழுகுகள் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தியது. முதல் 20 நிமிடங்கள்வரை எந்த அணியாலும் கோல் பதியப்பட வில்லை. 22ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி வீரர் யோகச்சந்திரன் கோல்கணக்கை ஆரம்பித்து வைக்க 1–0 என்ற ஆதிசக்தியின் ஆதிக்கத்துடன் முதல் பாதி முடி வுக்கு வந்தது.

ஆதிசக்தி முன்னிலை பெற்றிருந்தாலும் யங்கம்பன்ஸை குறைவாக எடைபோட்டுவிட முடியாது. இந்த எண்ணம் ஆதிசக்தியின் கனமான ஆட்டத்திலும் பிரதிபலித்தது. இரண்டாம் பாதியின் 8 ஆவது நிமிடத்தில் யங்கம்பன்ஸ் அணியின் பார்த்திபன் பதில் கோலை விளாசி ஆட்டத்தை 1–1 என்று சமநிலைப் படுத்தினார். சில நிமிடங்களிலேயே யோகச்சந்திரனின் கால்களால் யங்கம்பன்ஸிற்கு எதிராக மற்றுமொரு கோல் சீறிப்பாய்ந்தது. மேற்கொண்டு இரு அணிகளாலும் கோலெதனையும் பெறமுடியாமல் போக முடிவில் ஆதிசக்தி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக யோகச் சந்திரன் தெரிவானார். (ம–108)

## நெடியகாடு வி.கழகத்தை பந்தாடியது நாவர் வி.கழகம்

யாழ்ப்பாணம், செப். 6
மாதனை விளையாட்டுக்கழகம் நடத்தும் 10 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழகத்தை 88 ஓட்டங்களால் தோற்கடித்து அடுத்த சுற்றுக்கு முன்னேறியது தும்பளை நாவலர் விளையாட்டுக் கழகம்.

மாதனை விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பாடக் களமிறங்கிய நாவலர் விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக டினோதரன் 92 ஓட்டங்களையும் சமான் 20 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நெடியகாடு விளையாட்டுக்கழகம் சார்பாக தீபன் 2 இலக்குகளையும் சீலன், சயந்தன், ஹரி ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

60 பந்துகளில் 158 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை நோக்கி களமிறங்கிய வல்வை நெடியகாட்டு அணி 10 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்று 88 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில் நாவலர் விளையாட்டுக்கழகம் சார்பாக டினோதரன் மற்றும் சுதன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். (ம–108)

## வடதாரகை எதிர் மருதநிலா ஆட்டம் சமநிலையில்

மாங்குளம் செப். 6
வவுனியா உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வவுனியா மாவட்ட அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையே நடத்தப்படுவரும் உதைபந்தாட்டத் தொடரில் வடதாரகை அணியை எதிர்த்து மருதநிலா அணி மோதிய ஆட்டம் சம நிலையில் நிறைவடைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆட்டம் ஆரம்பித்த 13ஆவது நிமிடத்தில் மருதநிலா அணி சார்பாக வெளியான முறையற்ற ஆட்டத்துக்காக வடதாரகை அணிக்குத் தண்டனை உதை கிடைத்தது. இதனைச் சரியாகப் பயன்படுத்திய ரூபன் கோலைப் பதிவுசெய்ய வடதாரகை 1–0 என்று முன்னிலை பெற்றது. ஆனால் அடுத்த நிமிடமே மருதநிலாவின் சாருகாசன் பதில் கோலை விளாசி சமப்படுத்தினார். இதனால் முதல்பாதி 1–1 என்று முடிவடைந்தது.

இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் வடதாரகையின் ஆட்டத்தில் சற்று ஆதிக்க குணம் தெரிந்தது. முயற்சியின் பயனாக 8ஆவது 13ஆவது நிமிடங்களில் வடதாரகை அணியின் குரூஸ், துசி ஆகியோர் அடுத்தடுத்துக் கோல்களைப் போட்டு அசத்தினர். போராட்டத்தை கைவிடவில்லை மருதநிலா. 5 நிமிடங்கள் இருக்கும் போது சாமுவேல் அடுத்தடுத்து இரு கோல்களைப் அடிக்க முடிவில் 3:3 என்று சமநிலையில் ஆட்டம் நிறைவுக்கு வந்தது. (ம–422)

# உடற்கல்வி ஆசிரியர் சங்கத் தொடரின் இன்றைய காலிறுதியாட்டங்கள்

யாழ்ப்பாணம், செப். 6
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டங்களில் சில இன்று ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 4 மணிக்கு இடம்பெறும் முதலாவது காலிறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து ஈவினை கலைமகள் அணி மோதவுள்ளது. தொடர்ந்து பிற்பகல் 5மணிக்கு இடம்பெறும் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் ... அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. (ம–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளுக்கு ஆதரவளிக்க தயார்
# பெயர்ன்மியூனிச் அணி அறிவிப்பு













ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆக்கிமிப்பிலுள்ள சிரியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளை நோக்கி படையெடுக்க ஆரம்பித் துள்ளனர் சிரிய மக்கள். ஆனால் அந்த மக்களை ஐரோப்பிய நாடுகள் ஏற்றுக்கொள்வதாய் இல்லை. எனவே கடல் மார்க்கமாக மேற்கொள்ளும் திருட்டுப் பயணமே தற்பொழுது அவர்களின் தெரிவாக உள்ளது. இவ்வாறு சிரியாவில் இருந்து கிரீஸ் நோக்கி பயணித்துக் கொண்டிருந்தபொழுது நடுக்கடலில் மூழ்கி இறந்து போய் கரையொதுங்கிய சிறுவனின் படம் வெளியாகி உலகின் கள்ள மௌனத்தை அசைத்து பார்க்க துவங்கியுள்ளது. இதன் ஒரு பகுதியாக ஜேர்மனியில் கால்பந்து ரசிகர்கள், அகதிகளை நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றனர். கால்பந்து தொடர்கள் நடைபெறும் மைதானங்களில், அகதிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் பதாகைகளுடன், ரசிகர்கள் ஆட்டங்களைக் காண வருகின்றனர்.

கரையொதுங்கிய சிறுவனின் புகைப்படம் வெளியான அடுத்த நாளே, ஜேர்மனியின் புகழ்பெற்ற கால்பந்து அணியான பெயர்ன்மியூனிச், ஜேர்மனிக்கு வரும் அகதிகளுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் அளவிற்கு உதவி செய்யும் அறிவிப்பை வெளியிட்டது. அத்துடன் அகதிகளை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கை அரசுக்கும் மக்களுக்கும் ஏற்படுத்த அந்த அணி வேறு சில நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளது.

ஜேர்மனின் பந்தஸ்லீகா தொடரில், எதிர்வரும் 12ஆம் திகதி பெயர்ன்மியூனிச் அணி, எப்.சி. ஒக்ஸ்போர்க் அணியுடன் மோதுகிறது. மியூனிச் நகரின் ஏலியன்ஸ் அரானவில் நடைபெறும் இந்த தொடரின் போது, அயலானின் (இறந்த நிலையில் கரையொதுங்கியசிரியச்சிறுவன்)இறப்பை நினைவு கூரும் வகையில், ஜெர்மனி நாட்டு குழந்தைக ளுடன், அகதிகளின் குழந்தைக ளையும் வீரர்கள் மைதானத்திற்குள் அழைத்து வர உள்ளனர். அகதிகளையும், அவர்களின் குழந்தைகளையும் அரவணைப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 6
பிறிமா நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நடத்தும் பிறிமா வெற்றிக் கிண்ணத்திற்கான மாவட்ட மட்ட 15 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத்தொடரில் இன்றைய தினம் நடைபெறவுள்ள ஆட்டங்களின் விபரங்கள் வருமாறு.

தர்மபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதவுள்ளது. சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதவுள்ளது. யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட அணியை எதிர்த்து திருகோணமலை மாவட்ட அணி மோதவுள்ளது. (ம-23)



## காந்திஜி விளையாட்டுக்கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், செப்.6
தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையத்தின் 66ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலையம், தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழகம் என்பன இணைந்து அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு – தம்பாட்டி காந்திஜி சி அணிக்கும் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. புங்குடுதீவு நண்பர்கள் அணிக்கும் புங்குடுதீவு ஐங்கரன் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு நண்பர்கள் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மெரிஞ்சிமுனை இருதயராஜா அணிக்கும் அம்பிகைநகர் மகேஸ்வரி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அம்பிகைநகர் மகேஸ்வரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. புங்குடுதீவு நண்பர்கள் பி அணிக்கும் புங்குடுதீவு சென்.சேவியர் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புங்குடுதீவு சென்.சேவியர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. நயினை அண்ணா அணிக்கும் கரைநகர் கலாநிதி அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் நயினை அண்ணா அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தம்பாட்டி காந்திஜி ஏ அணிக்கும் புங்குடுதீவு நசேரத் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தம்பாட்டிகாந்திஜி ஏ அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## தொடக்க விழா

யாழ்ப்பாணம், செப்.6
பிறிமா நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நடத்தும் மாவட்ட மட்ட பாடசாலைகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான 50 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. (ம-23)



## காலிறுதிக்கு மிக அருகில் செரீனா



நடப்பு வருடத்தின் இறுதி சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடரான அமெரிக்கன் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் உலகின் முதல் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றான 3ஆம் சுற்று ஆட்டத்தில் சக நாட்டு வீராங்கனையான பெத்தானி மாட்டெக் சாண்ட்சை எதிர் கொண்டார். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் சற்று தடுமாறிய செரீனா, முதல் செற்றை 3–6 என்று இழந்தார். அதன்பின்னர் எழுச்சிபெற்ற அவர் அடுத்தடுத்து இரண்டு செட்களை 7–5, 6–0 என்ற கணக்கில் கைப்பற்றி வெற்றியை பதிவு செய்தார். (ம)

## சச்சினின் பெயரில் மைதானம்



கேரளாவில் அமைக்கப்பட்டுவரும் பசுமையான உயர்தர கிரிக்கெட் மைதானத்திற்கு இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் ரெண்டுல்கரின் பெயர் சூட்டப்படவுள்ளது.

மைதானத்துக்கு சச்சின் என்று பெயரிடுவதுக்கு சச்சினிடம் இன்னமும் அனுமதி பெறப்படவில்லை. இந்நிலையில் இது தொடர்பாக சச்சினுடன் பேசி முடிவெடுக்கப்படும் என்று கேரளக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது. கொச்சியில் உள்ள நேரு மைதானத்தின் பவிலிய[illegible] சச்சின் பெயர் சூட்டப்பட்[illegible] தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

முன்னணி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் பரீட்சைப் பகுதிக்கு பணியாளர்கள் வேண்டப்படு கின்றனர்.

1. எழுதுவினைஞர் (கணினி அறிவுள்ள ஆண்கள்)
2. சிற்றூழியர்கள் (ஆண்கள்)

நேர்முகத் தேர்வு : 09.09.2015 முற்பகல் 11.00 மணி

**NEW SCIENCE WORLD**
**Brown Road-Navalar Road Junction, Jaffna.**
**Hotline:- 077 336 4055**

(C/18684) (19.17)

## தேவை

தொலைத்தொடர்பகம், அரைக்கும் ஆலை உதவி, மிக்சர் தொழில், பொதியிடல், பில்கிளார்க், பயிலுனர், உதவியாளர் என்பவற்றிற்கு (பெண்கள் தேவை) **தொடர்பு : 077 174 6101**

## பணிப் பெண் தேவை

படுக்கையில் இருக்கும் வயோதிப பெண்ணை வீட்டில் தங்கியிருந்து பரா மரிப்பதற்கு பெண் பணியாளர் தேவை.

**தொடர்பு : 077 851 1847**




## இலவச கணினிப்பயிற்சி

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிக சம்பளத்துடன் அதிகமுள்ள கற்கை நெறிகள்.

- Net working Engineering -USA
- Software Engineering -USA
- WEB Engineering -USA

மேற்படி கற்கை நெறிகளின் Technician Level கற்கை நெறிக்கட்டணம் 50000 RS. Totally Free {http://www.globalknowledge.co.uk/course/microsoft/network_management/m40366.html} நுழைவுத்தகைமை தேவையில்லை முதற் கட்ட பயிற்சியை அடுத்து Entrance Exam இல் தேர்வு செய்யப்படுவோர் மாத்திரமே இரண்டாம் கட்ட பயிற்சிக்கு அனுமதிக்கப்படுவர். விண்ணப்பிக்க விரும்புவோர்

Type Free <Name><School><DOB>& Send To 0772395895

MCS near University of Jaffna

## IDM

Nurturing Achievers SINCE 1974

தற்பொழுது மானிப்பாயில் மட்டும்

**IDM JAFFNA CAMPUS**
(Accredited by IDM COMPUTER STUDIES (PVT) LIMITED)
Managed by Xpllora International (PVT) Limited

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் (14,15,19 Sep)

PEARSON edexcel **HND**
- in Computing & System Development
- in Business Management

(Equivalent to the First 2 Year of B.Sc.(Hons) Degree(UK))

**IDM Diploma in Computing**
**IDM Diploma in Business Mgt.**
**IDM Diploma in Hardware & Net.**
**IDM Diploma in Accounting pac.**

**021 225 6200 | 077 616 8584**
இல 248, யாழ் வீதி, மானிப்பாய்

**IDM One Day IT Workshop On 16th Septembr (Wednesday)**
9.00 am - 2.00 pm
பங்கு பற்றுவோரிற்கு IDM சான்றிதழ்கள் வழங்கப்படும் அனுமதிகளை முற்கூட்டியே உறுதி செய்யவும்

## யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவில்

**SPOKEN English** With Grammar

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் மாணவர்களின் ஆங்கில அறிவுக்கேற்ப Basic, Intermediate, Advance என தனித்தனியாக நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி மற்றும் ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது

Full time 3 Months    Part time : 6 Months

**Hot Line : 0777-596148**

**BRITISH COLLEGE OF EDUCATION**

23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113, 077-8927639
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041, 077-0538523
39, Convent Rd, Mannar. Tel: 023-4924124, 077-1113205

10, Vaverset Place, Colombo-06.    585, Peradeniya Rd, Kandy.

முல்லைத்தீவிலும் எதிர்வரும் 20/9 இல் புதிய கிளை திறக்கப்படவுள்ளது

## வடமாகாணப் பாடசாலை மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பப் புத்தாக்கப் போட்டி

IT HUB

தகவல் தொழில்நுட்பத்துறையில் ஆர்வம் உள்ளவரா?
அதனூடாக புதிதாக ஏதாவது படைக்க விரும்புகிறீர்களா?
எனில் தவறாது உங்கள் விண்ணப்பங்களை
25 செப்டம்பர் 2015 இற்கு முன்னர் அனுப்பி வையுங்கள்.
விண்ணப்பங்களுக்கு - www.yarlithub.org/yarl/junior

கடந்த 3 வருடங்களாக இப்போட்டியினை நடாத்திவரும் *Yarl IT Hub* அமைப்பு, இம்முறை வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து வடமாகாணப் பாடசாலை மாணவர்களுக்காக இதனை நடாத்தவிருக்கிறது. போட்டியின் ஆரம்பக்கட்ட மதிப்பீடுகள் வலய மட்டங்களில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அவற்றில் தெரிவாகும் அணிகளுக்கான இறுதிப் போட்டி யாழ்ப்பாணத்தில் இடம்பெறும். குறிப்பிடத்தக்க பங்களிப்பு செய்யும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும். இறுதிப் போட்டிக்குத் தெரிவாகும் அணிகள் துறைசார் வல்லுநர்களின் உதவியுடன் அவர்களது செயற்றிட்டங்களை மேலும் வலுவூட்டியதன் பின்னர் இறுதிப் போட்டியில் பங்குபெறலாம்.

மேலதிக விபரங்களுக்கும் உதவிகளுக்கும்
www.yarlithub.org/yarl/junior
www.facebook.com/yarlithub

## வேலையாள்கள் தேவை

புதிதாக ஆரம்பித்து இயங்கி கொண்டிருக்கும் உணவகம் ஒன்றுக்கு வேலைக்கு ஆள்கள் தேவை.

- சுத்திகரிப்பாளர்
- உணவு பரிமாறுபவர்

இருபாலாரும் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 077 740 6300** (62929) (14,15,16,17)

## வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகர மத்தியில் புகையிரத நிலையம், வைத்தியசாலை, யாழ்.பஸ்நிலையம் அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு: 077 242 5509** (62929) (14,15,16,17)

## NEW SCIENCE WORLD


NEW SCIENCE WORLD
Navalar Road-Brown Road Junction, Jaffna
Web : www.physicsocean.com    E-mail : info@physicsocean.com
Hotline : 077 336 4055
VICTORY MUST
G.C.E (A/L) 2016

# Day Classes
திங்கள் - வெள்ளி

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. R. குமரன்<br>திரு. R. குகன் |
| இரசாயனவியல் | திரு. T. சிவகுமார்<br>திரு. டயஸ் |
| உயிரியல் | திரு. V. உமாசங்கர்<br>திரு. S. பொன்திவாகரன் |
| இணை.கணிதம் | திரு. S. செந்தில்ராஜ் |

ஆரம்பம் :- 09.09.2015 புதன் காலை 9.00மணி

## வீட்டுக்கிருத்திய நிகழ்வு



**அமரர் சு.பொ.நடராசா**
(அதிபர் - அண்ணா தொழிலகம்)

கடந்த 5.7.2015 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்த எமது தந்தையாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் மதியபோசன வைபவமும் இன்று (06.09.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடை பெறவுள்ளதால் தங்களை தங்கள் குடும்ப சமேதரராகக் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பையே மீளவும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்)

அண்ணா தொழிலகம்,
துரைவீதி, இணுவில்.

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி


உதயன்

ஞாயிறு சிறப்பிதழ் 06.09.2015




# எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒரு பகிரங்க மடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒரு பகிரங்க மடல்!

**சம்பந்தன் ஐயாவுக்கு,**
**வணக்கம்!**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் என்பவற்றுக்கு மேலதிகமாக, புதிதாக எதிர்க்கட்சி தலைவர் என்கிற மேலதிக மரியாதையும் உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது; கிடைத்திருக்கிறது; கோரிப்பெற்றிருக்கிறீர்கள்!

எவ்வித சலனமுமின்றி ஆளும் தரப்பு பக்கம் அமரக்கூடிய அமரவேண்டிய புறச்சூழல் இருந்தும், தேசிய அரசின் தோன்றலும், உங்களுக்குள்ள கணிசமான அளவிலான உறுப்பினர் எண்ணிக்கையும் உங்களை தேசிய அரசின் எதிர்க்கட்சித் தலைவர் என்ற இடத்தில் சில சர்ச்சைகளுடன் அமர்த்தியிருக்கிறது.

உண்மையில் இந்தமுறை நாடாளுமன்றத் தேர்தல் முடிந்து கிடைத்த முடிவுகளுக்கு அமைய தேசிய அரசு என்ற ஒன்று அமைந்திராது போயிருந்தால், தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்கான அதன் பதினாறு உறுப்பினர்களுக்கான கேள்வியே தனி! ஐக்கிய தேசிய முன்னணியான ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிப்பீட மேறத் தேவையான – 113 ஆசனங்களை உறுதிப்படுத்த – போதுமான ஆசனங்களை வழங்கத்தக்க தகுதியுடன் பேரம்பேசலுக்குமான அரிய சந்தர்ப்பம் இருந்தது. எனினும் ரணிலுக்கும் மைத்திரிக்கும் இடையே காணப்பட்ட இணக்கப்பாடு தேசிய அரசை ஏற்படுத்த வழிகோலியிருந்தது.

ஐ.ம.சு.முவின் அனைத்து உறுப்பினர்களும் கூட்டணி அரசுக்குப் பச்சைக்கொடி காட்டாத போதும் எதிர்க்கட்சிக்கான தலைமைத்துவத்தைக் கோருவதில் அவர்களிடம் சிக்கல் இருந்தது. ஐம்பத்தாறோ ஐம்பத்தேழோ ஐ.ம.சு.மு. உறுப்பினர்கள் இணைந்து குமாரவெல்கமவை எதிர்க்கட்சித் தலைவராக அறிவிக்கும் முன்னெடுப்புகளை மேற்கொண்டிருந்தமை தாங்கள் அறியாததல்ல.

எனினும், தங்களின் கோரிக்கையைத் தொடர்ந்து புதிய சபாநாயகர் கருஜெயசூரிய இந்தப் பதவியை உங்களுக்கு அளித்திருக்கிறார். இதனைவிட எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடா பதவியைப் பயன்படுத்தும் சந்தரப்பம் த.தே.கூட்டமைப்புக்கு இருந்தும் அது ஜே.வி.பி.யின் அனுரகுமார திசாநாயக்கவிற்கு தங்கள் நாடாளுமன்றக் குழுவால் மனமுவந்து அளிக்கப்பட்டிருக்கிறது.

முன்னதாக, த.தே.கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் அடைக்கலநாதனுக்கும் குழுக்களின் பிரதித் தலைவர் பதவி கிடைத்திருக்கிறது.

இலங்கை நாடாளுமன்றின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமிழர் ஒருவர் அலங்கரிப்பது இது ஒன்றும் முதற்தடவையல்ல. ஏற்கனவே 1977இலும் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தினால் இந்தப் பதவிநிலை அலங்கரிக்கப்பட்டிருந்தது.

உண்மையில், நீங்கள் அமைச்சரவையில் இணைந்து அமைச்சராகியிருந்தால் அதுதான் விசேட செய்தி. ஆனால், காலம் காலமாக எதிர்க்கட்சி வரிசையிலேயே அமர்ந்து வரும் த.தே.கூட்டமைப்பினர், எதிர்க்கட்சித் தலைமையினை வகிப்பது என்பது என்னைப் பொறுத்தவரையில் ஆச்சரியத்திற்குரியதல்ல. ஆனால், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த, அவரது ஆதரவுப் பரிவாரங்கள் மற்றும் ஜே.வி.பி. உள்ளிட்ட கூட்டிற்கான தலைமையாக இதனைக் கருதும்போது ஆச்சரியப்படாமல் இருக்கவும் முடியவில்லை.

மறுபுறத்தில், கூட்டு அரசின் சிநேகக் கட்சியினரான உங்களை எதிர்த் தரப்பாகவும், உண்மையான எதிரித் தரப்பினரை சிநேகத் தரப்பாகவும் காண்பிக்கும் தோற்றப்பாட்டினையும் உங்கள் நியமனம் கொண்டிருக்கிறது. இதற்கப்பால், பிரதேசவாரிப் பிரபல்யத்தை கொண்டிருக்கும் தங்கள் கட்சியின் தேசிய ரீதியிலான நுழைவுக்கான ஒருபடியாகவும் இதனைக் கொள்ளமுடியும்.

கட்சியைப் பதிவுசெய்தல் பற்றிய சலசலப்புக்களிலிருந்து விடுதலை பெறாத கட்சியின் தலைமைக்குரிய நீங்கள், தங்களுக்கு புதிதாக கிடைத்திருக்கும் அங்கீகாரமான எதிர்க்கட்சி தலைவர் பதவி நிலையை எவ்வாறு பயன்படுத்தப் போகிறீர்கள் அல்லது நீங்கள் பயன்படுத்த தீர்மானித்திருக்கும் வகையில் காய் நகர்த்தத் தகுந்த புறச்சூழல் நிலவுமா என்கிற கேள்வி தொக்கி நிற்கிறது.

எதிர்க்கட்சித் தலைமைக்கான பொறுப்புக்கூறல் என்பது வடக்குக் கிழக்கிற்கு அப்பாலும் சிறகு விரிக்கவேண்டிய தேவையை உங்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

இன்னொருபுறத்தில், இலங்கைக்கு வரும் வெளிநாட்டு இராஜதந்திரிகளின் மரியாதை நிமித்தமான சந்திப்புக்களுக்கான மற்றும் கருத்தறிவுச் சந்திப்புகளுக்கான சந்தர்ப்பங்களைச் சாதகமாக்கி தீர்விற்கான வலியுறுத்தலை விடுப்பதற்கான காலக் கனிதலாகவும் நடைமுறை நிலைவரத்தினை கையாளும் சந்தர்ப்பம் எட்டியிருக்கிறது.

தீர்வு பற்றிய தீராத சிந்தனைகளில் ஊன்றியிருக்கையில் பிரதேச அபிவிருத்தி பற்றிய தேவைகளுக்கு பின்னிடம் தருவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. அத்தகைய தேவைகளுக்கு தத்தமது கண்கழுவும் வித்தைகளை காண்பித்தே வடக்கிலும் கிழக்கிலும் த.தே.கூ. அல்லாதோர் கடந்த காலங்களில் ஆசனங்களைக் கைப்பற்றி வருகின்றனர்.

இந்த எட்டாவது நாடாளுமன்றம் தொடங்கி சிலநாள்களே கழிந்துள்ள நிலையில், த.தே.கூ. கோரிப்பெற்றிருக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் கிடைத்திருக்கும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி தவிசாளர் பதவியும் வரமா வலையா என்னும் வினாவுடனே நோக்கிக்கொண்டிருக்கிறோம். ஒரு கட்டத்தில், குருவி தலையில் பனம்பழம் என்ற நிலையை ஒத்த நில வரம் வருமிடத்து, சீச்சீ! இந்தப்பழம் புளிக்கும் என்று விலகவும் கூட்டமைப்பு தயங்கமாட்டாது என்று நம்புகிறோம்!

எதிர்பார்ப்புக்களுடன், நன்றி.

*–ஸூடோ ஸ்வாமி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகின் மனச்சாட்சியை உலுக்கிய துயரம்!

எஸ்.ராஜாராம்

துருக்கியின் கடற்கரையில் சிரியாவைச் சேர்ந்த மூன்று வயதுச் சிறுவன் அய்லானின் உயிரற்ற உடல் கரையொதுங்கிக் கிடந்த ஒளிப்படம் உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கி யுள்ளது.

ஊடகங்களிலும், சமூக வலைத் தளங்களிலும் இந்த ஒளிப்படம் பரவி ஒவ்வொருவரின் மனசாட்சியையும் இழுத்துப் பிடித்துக் கேள்வி கேட்கிறது – இந்தப் பரந்த உலகத்தில் உயிர் பிழைத்து வாழ ஒரு பச்சிளம் குழந்தைக்கு இடம் இல்லையா? மனிதாபிமானம் அலைகளில் அடித்துச் செல்லப்பட்டுவிட்டதா? என்று. உள்நாட்டுப் போர் நடக்கும் சிரியாவில் இருந்து தப்பி, ஐரோப்பாவை நோக்கிச் செல்லும் அகதிகளின் நிலையை நெற்றிப்பொட்டில் அடித்தாற்போன்று சொல்கிறது, சிறுவன் அய்லானின் உடலை அலைகள் தழுவிச் செல்லும் அந்த ஒளிப்படம்.

சிரியாவைச் சேர்ந்த அப்துல்லா குர்தி, தன் மனைவி, மகன்கள் காலிப், அய்லான் ஆகியோருடன் துருக்கியில் இருந்து ஐரோப்பாவை நோக்கி மத்திய தரைக்கடல் வழியாக ரப்பர் படகில் சென்றபோது, படகு கவிழ்ந்ததில் அவரது குடும்பத்தில் அவரைத்தவிர மற்ற மூவரும் கடலில் மூழ்கி இறந்தனர்.

இதில் கரையொதுங்கிய அய்லானின் உடல்தான் இப்போது மத்திய கிழக்கு நாடுகளின் அகதிகள் பிரச்சினையின் தீவிரத்தை உலகுக்கு உரக்கச் சொல்கிறது.

அப்துல்லா குர்தியின் உறவினர்கள் கனடாவில் இருந்தும், அவர்கள் அப்துல்லாவின் குடும்பத்தைப் பொறுப்பேற்பதாகச் சொல்லியும், அவர்களது சட்டப்பூர்வகுடியேற்ற அனுமதி கோரிய விண்ணப்பத்தை நிராகரித்த கனடா, இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக, அப்துல்லாவின் விண்ணப்பம் சரியாகப் பூர்த்தி செய்யப்படவில்லை என்று காரணம் சொல்கிறது. ஆனால், இது சிறுவன் அய்லானின் குடும்பத்தோடு முடிந்து போகக் கூடிய விடயமல்ல. மத்திய கிழக்கிலும், ஐரோப்பாவிலும் பூதாகரமாக உருவெடுத்துள்ள அகதிகள் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டியதன் அவசியத்தையே சிறுவன் அய்லானின் சாவு உணர்த்துகிறது.

**ஒரு தீவை விலைக்குத் தந்தால் அதை வாங்கி, சிரியா உள்ளிட்ட போரால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் இருந்து வெளியேறும் அகதிகளைக் குடியமர்த்தி, அதை அகதிகள் நாடாக ஆக்கலாம் என்ற யோசனையையும் அவர் தெரிவித்துள்ளார்.**

சிரியா, லிபியா உள்ளிட்ட நாடுகளில் நடந்துவரும் உள்நாட்டுப் போர் காரணமாக நாட்டைவிட்டு வெளியேறி புகலிடம் தேடி ஐரோப்பிய நாடுகளைத் தேடிச் செல்லும் முயற்சியில் மத்திய தரைக்கடலில் இதுவரை 2,500 பேர் மூழ்கி இறந்துள்ளனர். குறிப்பாக, சிரியாவில் உள்நாட்டுப் போர் தொடங்கிய 2011ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 40 லட்சம் பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

அதாவது, அந்த நாட்டில் ஆறில் ஒருபங்கினர் அகதிகளாக பிற நாடுகளைத் தேடிச் சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் துருக்கியில் தஞ்சமடைந்திருக்கிறார்கள். சுமார் 1.60 லட்சம் பேர் ஐரோப்பிய நாடுகளான இத்தாலி, கிரீஸ், ஹங்கேரியில் இப்போதைக்கு அடைக்கலம் புகுந்துள்ளனர்.

அவர்களை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் பகிர்ந்து கொள்வதுதான் முதல்கட்ட நடவடிக்கை என்றால், அடுத்தடுத்து வரும் அகதிகளை ஏற்றுக் கொள்வதில் ஓர் உடன்பாடு காணவேண்டியது அடுத்தகட்ட நடவடிக்கை.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வெளியேறி வரும் அகதிகள் விடயத்தில் அத்தனை ஈடுபாடு காட்டாத பிரிட்டனும், சிறுவன் அய்லானின் சாவைத் தொடர்ந்து சற்று இறங்கி வந்துள்ளது.

அய்லானின் உயிரற்ற உடலைப் பார்த்துக் கொண்டே, நாம் வேறு வழியில் வெறுமனே சென்றுவிட முடியாது என்ற கோஷத்துடன் பிரிட்டன் முழுவதும் எழுந்த அழுத்தம், பிரதமர் டேவிட் கமரூனை ஒரு முடிவு எடுக்க வைத்துள்ளது.

சிரியாவின் எல்லையில் உள்ள அகதிகள் முகாம்களில் இருந்து நேரடியாக வரும் மக்களை பிரிட்டன் ஏற்றுக் கொள்ளும்; எத்தனை பேரை அனுமதிப்பது, எவ்வாறு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவது என்பது குறித்து ஆலோசித்து அறிவிக்கப்படும் என அவர் தெரிவித்திருப்பது ஒரு நல்ல முன்னேற்றம்.

இவற்றுக்கும் மேலாக, எகிப்தைச் சேர்ந்த கோடீஸ்வரர் நாகுய்ப் சாவிரிஸ் அகதிகளுக்காக ஒரு தீவையே விலைக்கு வாங்கப் போகிறார் என்று அறிவித்திருக்கிறார்.

ஒரு தீவை விலைக்குத் தந்தால் அதை வாங்கி, சிரியா உள்ளிட்ட போரால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் இருந்து வெளியேறும் அகதிகளை குடியமர்த்தி, அதை அகதிகள் நாடாக ஆக்கலாம் என்ற யோசனையையும் அவர் தெரிவித்துள்ளார். இதுவும் சிறுவன் அய்லானின் சாவுத் துயரம் ஏற்படுத்திய விளைவுதான்.

அகதிகள் பிரச்சினையில் ஐரோப்பிய நாடுகளைக் குற்றம்சாட்டியுள்ள துருக்கி அதிபர் எர்டோகன், ஒட்டுமொத்த சர்வதேச சமூகமும் இதற்கு உதவ வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். அவருடன் பிரான்ஸ் அதிபர் ஹொலாந்து தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசி அவரது கருத்துக்கு ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

அகதிகள் பிரச்சினையை ஒருசில ஐரோப்பிய நாடுகளால் மட்டும் தீர்த்துவிட முடியாது என ஜேர்மனியின் பிரதமர் ஏஞ்சலா மெர்கெல் நீண்ட காலமாகவே கூறி வருகிறார். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அனைத்துமே அகதிகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பது அவரது எண்ணம்.

அதன்படி, இந்த அகதிகளைச் சில நாடுகள் ஏற்றுக் கொள்ள மறுத்தாலும், ஓர் ஒதுக்கீடு முறையை ஏற்படுத்தி, அந்த நாடுகளைச் சம்மதிக்க வைப்பது குறித்த செயல் திட்டத்தை ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் ஜீன்–கிளாட் ஜங்கர் தயாரித்து வருகிறார்.

ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் இந்தத் திட்டத்தை ஆதரிக்கின்றன. ஆனால், பல்கேரியா, ருமேனியா, ஸ்பெயின் ஆகிய நாடுகள் இந்தத் திட்டத்தை ஏற்பது குறித்து யோசிக்கின்றன.

இந்தப் பிரச்சினை தொடர்பான ஐரோப்பிய யூனியன் நாடுகளின் உள்துறை அமைச்சர்களின் அவசரக் கூட்டம் செப்டம்பர் 14இல் நடைபெறவுள்ளது. அதில் ஒரு சுமுகமான முடிவு ஏற்பட்டால்தான் அகதிகள் வாழ்வில் வெளிச்சத்தைக் காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவர்களுடன் சேர்த்து என்னையும் புதையுங்கள்!

## அய்லானின் சாவைத் தொடர்ந்து உலகை உலுக்கும் அவன் தந்தையின் குரல்

தட்சா:ஜோ

"குடும்பத்தில் அனைவரையும் இழந்து விட்டேன். இனி உலகையே எனக்கு தந்தால்கூட எனக்கு வேண்டாம். என் குடும்பத்தினரோடு சேர்த்து என்னையும் புதைத்துவிடுங்கள். இல்லை என்றால் அவர்களின் கல்லறை அருகே என் உயிரை விடுவேன்" எனக் கதறுகிறார் துருக்கியின் கோஸ் தீவில் சடலமாகக் கரையொதுங்கிய சிறுவன் அய்லானின் தந்தை அப்துல்லா குர்தி. உயிரை உறைய வைக்கிறது அவரது கதறல்.

கனடாவுக்குச் செல்ல முயன்ற அவரும் அவரது குடும்பத்தினரும் கடல்மார்க்கத்தைத் தேர்ந்தெடுத்தபோது வேறு சில குடும்பத்தினரும் சேர்ந்து கொண்டனர். அந்தப் படகு எதிர்பாராத விதமாக துருக்கியின் கோஸ் தீவில் கவிழ்ந்தது. இதில் ரேஹன், காலிப், ஆய்லான் உட்பட 12 பேர் உயிரிழந்தனர்.

உயிர் பிழைத்த அப்துல்லா குர்தி தனது குடும்பத்தினரின் உடல்களை பெற்றுக்கொள்ள துருக்கியின் மூக்லா நகர மருத்துவமனைக்கு வந்திருந்தார். அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வரவில்லை. தன்னை ஆசுவாசப்படுத்தி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தார்.

"கோஸ் தீவில் இருந்து 4 கி.மீ. தொலைவில் எங்கள் படகு வந்தபோது ராட்சத அலையால் படகு தூக்கி வீசப்பட்டது. நாங்கள் அணிந்திருந்த லைப் ஜாக்கெட் போலியானது. அதனால் அனைவரும் தண்ணீரில் மூழ்கினோம். படகின் ஒரு பகுதியை பிடித்தபடி நானும் எனது மனைவியும் குழந்தைகளை காப்பாற்றப் போராடினோம். முதல் ஒரு மணி நேரத்தில் எனது மூத்த மகன் காலிப் உயிரிழந்தான். இரண்டாவது மகன் ஆய்லனையாவது காப்பாற்றிவிடலாம் என்று அவனைத் தண்ணீருக்கு மேலே தூக்கிப் பிடித்திருந்தேன். ஆனால் அவனும் எனது கையிலேயே இறந்துவிட்டான். கடைசியில் எனது மனைவியையாவது காப்பாற்றலாம் என்று நினைத்தேன். அவளும் என்னைவிட்டுப் போய் விட்டாள். எல்லோரையும் இழந்துவிட்டேன். இனிமேல் உலகத்தையே எனக்கு தந்தால்கூட எனக்கு எதுவுமே வேண்டாம். அவர்களோடு சேர்த்து என்னையும் புதைத்துவிடுங்கள். இல்லையேல் அவர்களின் கல்லறை அருகே அமர்ந்திருந்து உயிரை விட்டுவிடுவேன்" என்றார்.

உயிரற்ற சடலமாக அய்லானின் உடல் கோஸ் தீவின் போட்ரம் பகுதியில் கரை ஒதுங்கிய காட்சி, ஐரோப்பிய உறைபனியில் உறைந்து கிடந்த உள்ளங்கள் எல்லாவற்றையும் உலுக்கிவிட்டுள்ளது. கடற்கரையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போன்ற அந்தக் குழந்தையின் ஒளிப்படம் மற்றும் குறித்த உடலை போலிஸ் கையில் ஏந்திச் சென்ற ஒளிப்படங்கள் போன்றவை உலக மக்களை கண்ணீர் சிந்த வைத்துள்ளதுடன் சிந்திக்கவும் வைத்துள்ளன.

சிரியாவின் கொபேனி நகர் தற்போது ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. குர்து இனத்தைச் சேர்ந்த அப்துல்லா அங்கு முடிதிருத்தும் தொழிலாளியாகப் பணியாற்றி வருகிறார். ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து தப்பிக்க அவர் சிரியாவின் ஒவ்வொரு பகுதியாக குடும்பத்துடன் தப்பி ஓடிக் கொண்டிருந்தார். அப்துல்லாவின் சகோதரி திமா குர்தி தற்போது கனடாவின் வான்கோவர் நகரில் வசித்து வருகிறார். அவரது ஏற்பாட்டின் பேரிலேயே அப்துல்லா கனடாவுக்குச் செல்லப் புறப்பட்டார். முதலில் துருக்கி சென்று அங்கிருந்து கனடாவுக்கு செல்ல அவர் திட்டமிட்டிருந்தார். ஆனால் அபாயகரமான கடல் பயணத்தில் அவரது குடும்பத்தினர் உயிரிழந்துள்ளனர்.



ஆய்லான் அண்ணன் காலிப்புடன்......

முறைப்படி விண்ணப்பித்தபோது அப்துல்லா குர்திக்கு அடைக்கலம் கொடுக்க மறுத்த கனடா அரசு, தற்போது அய்லானின் சாவுக் காட்சியைப் பார்த்ததும், எதிர்க்கட்சிகளின் வற்புறுத்தலுக்கும் பதறிப்போய் அவருக்கு அடைக்கலம் கொடுக்க முன்வந்துள்ளது. ஆனால், அப்துல்லா குர்தி கனடாவின் அழைப்பை ஏற்க மறுத்துவிட்டார்.

"எனது மனைவிதான் இந்த உலகம். அவள் இல்லாமல் எதுவுமே கிடையாது. மனைவியும், குழந்தைகளும் என் கைகளில் இருந்தபோதே உயிரிழந்துவிட்டனர். தற்போது, எனது இளைய மகன் இறந்த ஒளிப்படக் காட்சியைப் பார்த்து எனக்கு அடைக்கலம் தருவதாக கனடா அரசு கூறுகிறது. இதை நான் ஏற்கப் போவ தில்லை. எனது குடும்பத்தையே இழந்து விட்டேன். இனி நான் கனடா சென்று வாழ்வதால் எதுவும்ஆகிவிடாது.என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய ஐ.எஸ். தீவிரவாதிகளை சும்மாவிடமாட்டேன். நாடு திரும்பி அவர்களுக்கு எதிராக சண்டையில் குதிப்பேன்" எனத் தெரி வித்துள்ளார்.



சிறுவனின் உயிரற்ற காட்சியைப் பதிவு செய்த ஒளிப்பட ஊடகவியலாளர் நிலுபர் டெமிர்.

கரையொதுங்கிய சிறுவனது உடலை ஒளிப்படம் எடுத்து அதனை உலகத்திற்குத் தந்த ஒளிப்பட ஊடகவியலாளர் நிலுபர் டெமிர், சிறுவனின் சாவு தன்னை அடியோடு உலுக்கிப் போட்டுவிட்டதாகக் கூறுகிறார்.

"அதிர்ச்சியில் கல்லாகிவிட்டேன் நான். கடந்த புதன்கிழமை அதிகாலை போட்ரம் கடற்கரையில் இரண்டு படகுகள் கவிழ்ந்த தகவல் அறிந்து அங்கு சென்றேன். அங்கு கடற்கரையில் தலைகுப்புறக் கிடந்த குழந்தையின் உடலைப் பார்த்து அப்படியே கல்லாகச் சமைந்துவிட்டேன். அந்தக் குழந்தையின் துயரத்தை உலகறியச் செய்ய வேண்டும், அவனின் கடைசி அழுகுரலை உலகம் கேட்க வேண்டும் என்பதற்காக அந்த குழந்தையை ஒளிப்படம் எடுத்தேன். அங்கு நான் சிந்திய கண்ணீர் இன்று உலகமெல்லாம் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடுகிறது" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பை உணர்ந்து செயற்படவேண்டும் தமிழ்க் கூட்டமைப்பு

■ அதிரன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தன் இலங்கையின் 8 ஆவது நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். நாடாளுமன்றம் கூடியபோது சபாநாயகர் கருஜயசூரிய இது தொடர்பான அறிவிப்பை விடுத்து, சமீப நாட்களாக நீடித்த எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற சர்ச்சைக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளார். அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்குப் பின்னர் இப்பதவியை வகிக்கும் இரண்டாவது தமிழ் அரசியல்வாதி இரா.சம்பந்தன் என்பது குறிப்பிடத்தக்கது.

225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் இரா. சம்பந்தனைத் தலைவராகக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த பொதுத்தேர்தலில் 16 ஆசனங்களைப் பெற்று மூன்றாவது பெரிய கட்சியாகத் தெரிவாகியிருந்தது. பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் முதலாவது இரண்டாவது கூடுதல் ஆசனங்களைப் பெற்றிருந்தன. இந்த இரண்டு கட்சிகளும் இணைந்து தேசிய அரசு அமைக்க இணங்கியதால் மூன்றாவது பெரிய கட்சியாக 16 ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைய அப்பதவிக்கு உரிமை கோரியிருந்தார். அவரது கோரிக்கை ஏற்கப்பட்டுள்ளது. 32 வருடங்களின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவி மீண்டும் தமிழ் அரசியல்வாதி ஒருவருக்குக் கிடைத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. எனினும் இந்த நியமனத்தை நாம் தமிழ் மக்களுக்கு கிடைத்த பெரிய வெற்றியாகவோ அல்லது சலுகையாகவோ கருதவில்லை, நிரந்தரமானது என்றும் எண்ணவில்லை. நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமையவே இரண்டாவது கூடுதல் ஆசனங்க ளைப் பெற்ற கட்சி என்ற ரீதியில் இது வழங்கப்பட்டுள்ளது. தேசிய அரசு உள்ள வரைதான் இப்பதவியும்.

எனினும் முக்கியமான ஒரு காலகட்டத்தில் இப்பதவியை சம்பந்தன் ஏற்றுள்ளார் என்பதை நாம் குறிப்பிடாமல் விட முடியாது. எதிர்க்கட்சித் தலைவர் பதவி என்பது தேசிய ரீதியில் ஒரு பொதுவான பதவி. நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்காகவும் குரல்கொடுக்க வேண்டிய தேவைப்பாடுகள் உள்ளன. ஆகவே நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவான எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தன் செயற்படுவது எவ்வளவு முக்கியமோ அதே அளவுக்கு தமிழ் மக்களின் அதிகாரத்துக்கான போராட்டம் முடங்கிவிடாது அதனை முன்னெடுப்பதும் முக்கியமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அதிபராக ஜே.ஆர். ஜெயவர்த்தன பதவிவகித்த காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம்' அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் 1977 ஒகஸ்ட் முதல் 1983 ஒக்ரோபர் வரை எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தார். இலங்கை அரசமைப்பின் ஆறாவது திருத்தச்சட்டத்தின் படி தனிநாடு கோருவதற்கு ஆதரவளிக்க முடியாது என நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்தமைக்காகவும் ஜூலைப் படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்ற அமர்வுகளைத் தொடர்ந்து மூன்று மாதங்கள் பகிஷ்கரித்தமைக்காகவும் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் மற்றும் சம்பந்தன் உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவிகளை இழந்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் தனது பதவியை துஷ்பிரயோகம் செய்கிறார் என எதிர்ப்புக் கிளம்பிய போது தந்திரமாக ஆறாவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தார் ஜெயவர்த்தன. அமிர்தலிங்கத்தை மட்டுமல்ல அனைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களையும் கழற்றிவிட்டதுடன் தமிழர் ஒருவர் மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு வருவதைத் தடுக்கும் விதத்தில் 1978 அரசமைப்பும் உருவாக்கப்பட்டது. எனினும் தேசிய அரசு அமைந்ததினால்தான் தமிழர் ஒருவர் 32 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியுள்ளார்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரங்களைக் கோரும் தமிழ் மக்களின் நீள் போராட்டத்தின் போக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த ஒரு தசாப்த காலத்துக்கும் மேலாக அங்கீகரிக்கப்பட்டு வந்துள்ளது. அதனை தொடர்ந்து முன்னெடுப்பதில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனும் அவர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்போடு உணர்ந்து செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

> "32 வருடங்களின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவி மீண்டும் தமிழ் அரசியல்வாதி ஒருவருக்குக் கிடைத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. எனினும் இந்த நியமனத்தை நாம் தமிழ் மக்களுக்கு கிடைத்த பெரிய வெற்றியா கவோ அல்லது சலுகையாகவோ கருத வில்லை, நிரந்தரமானது என்றும் எண்ணவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்ப வெளியேற்றம் முக்கிய மாநாட்டுக்கு பான் கீ மூன் ஏற்பாடு

## 40 நாட்டுத் தலைவர்களுக்கு அழைப்பு மூடிய கதவு அறையில் பேச்சுக்கள் நடக்கும்



உலக சுற்றுச்சூழல் காலநிலை தொடர்பான பேச்சுக்கள் மிக மந்தமாக நகர்ந்து கொண்டிருப்பதால் விரக்தியுற்றுள்ள ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் 40 நாடுகளின் உயர் தலைவர்களை அழைத்து இரகசிய கலந்துரையாடல்களை நடத்தத் திட்டமிட்டு வருகிறார். அனேகமாக அடுத்த மாதம் நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படும் இந்த் மூடிய கதவுச் சந்திப்பில் கலந்துகொள்ளும்படி அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, ஜேர்மன் அதிபர் அஞ்சலோ மேர்கல் ஆகியவர்களுக்கும் அழைப்புக்கள் விடுக்கப்படவிருக்கின்றன.

செப்ரெம்பர் 27ஆம் திகதி ஐ.நா.பொதுச்சபை கூடுவதற்கு ஒருநாள் முன்னராக இந்த உச்சிமாநாடு நடைபெறக்கூடும் என்று ஐ.நா. செயற்பாடுகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பிரெஞ்சு அதிபர் பிராங்கொய்ஸ் ஹொலான்டே, இந்திய பிரதமர் நரேந்திரமோடி, பிரேசில் அதிபர் டில்மா ரவுசெப் மற்றும் சீனத் தலைவர்களையும் அழைக்க பான் கீ மூன் திட்டமிட்டிருக்கிறார் எனக் கூறப்படுகின்றது. ஐ.நாவுடன் தொடர்புடைய முக்கிய மூவர் இந்தத் தகவலை வெளியிட்டிருந்தாலும் தம்மை அடையாளப்படுத்திக் கொள்ள அவர்கள் விரும்பவில்லை என்று வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை தெரிவித்துள்ளது.

பசுமை வாயு வெளியேற்றம் மற்றும் புவி வெப்ப முறுவதால் ஏற்படும் மோசமான விளைவுகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பாக ஓர் உடன்பாட்டுக்கு வருவதற்கான முயற்சிகளில் தற்போது 190 நாடுகள் ஈடுபட்டுள்ளன. இது குறித்த தீர்மானம் ஒன்று வரும் டிசெம்பரில் பாரிசில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் எடுக்கப்படவிருக்கிறது. இந்த நோக்கத்தை அடைவதற்கான முயற்சிகளுக்கு அமெரிக்க அதிபர் ஒபாமாவும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் ஆதரவு தெரிவித்திருந்தாலும் பேச்சுக்கள் மிக மந்தகதியிலேயே நடைபெற்று வருகின்றன என்பதை ஐ.நா. செயலாளர் நாயகம் அடிக்கடி நினைவுபடுத்தி வந்துள்ளார்.

ஏழ்மையான நாடுகளுக்கு எவ்வாறு நிதி உதவிகள் செய்வது மற்றும் இது போன்ற பிரச்சினைகள் தொடர்பான சட்ட கட்டமைப்புக்கள் விடயத்தில் உடன்பாடு காண்பதில் ஆழ்ந்த கருத்து மாறுபாடுகள் இருந்து வருகின்றன.

ஐ.நாவிலுள்ள பிரெஞ்சு பிரதிநிதிகள் குழுவின் பிரதி நிரந்தரப் பிரதிநிதி அலெக்சிஸ் லாமெக் கூறுகையில், செப்ரெம்பர் இறுதியில் காலநிலை மாற்றம் தொடர்பான உலகத் தலைவர்களின் மாநாடு பாரிசில் நடத்தப்படவிருப்பதன் நோக்கம் பேச்சுக்களுக்கு ஓர் அரசியல் உந்துதலைக் கொடுத்து அதனை வெற்றி பெறச் செய்வதாகும். தலைவர்கள் தங்கள் நோக்கத்தின் உயர்மட்ட அளவு மற்றும் அதனை அடையும் வழிமுறைகள் தொடர்பில் கருத்துப் பரிமாறல்களை செய்து கொள்வார்கள் என்றார்.

மூடிய கதவு கூட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு பிரான்ஸ் உதவி புரிந்து வருகின்றது. இதேவேளை இறுதிக் கட்டப் பேச்சுக்களுக்கு முந்திய கலந்துரையாடல்களில் ராஜதந்திரிகள் கடந்த திங்கட்கிழமை பொன் நகரில் கூடி ஆராய்ந்துள்ளார்கள்.

பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தை எவ்வாறு தாங்கள் கட்டுப்படுத்த விரும்புகிறார்கள் என்பது குறித்த தங்கள் திட்டங்களை வெப்பம் வெளியேற்றப்படுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு பொறுப்புள்ள நாடுகள் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளன. 1990ஆம் ஆண்டின் வெப்ப வெளியேற்ற மட்டத்தினை சமதள ஆண்டளவில் குறைந்த பட்சம் 40 வீதம் குறைத்துவிட ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 28 நாடுகள் வாக்குறுதியளித்துள்ளன. அமெரிக்க அரசு 2005ஆம் ஆண்டின் வெப்ப வெளியேற்ற மட்டத்தில் 26இல் இருந்து 28 வீதம் 2025 ஆண்டளவில் குறைத்துக்கொள்ளவிருப்பதாக அறிவித்துள்ளது. சீனா 2030ஆம் ஆண்டளவில் தனது வெப்ப வெளியேற்றத்தை பெருமளவில் குறைத்துக் கொள்ள வாக்களித்துள்ளது. ஆனால் பிரதான நாடுகளான இந்தியா, இந்தோனேஷியா, பிரேசில் போன்றவை இன்னமும் தங்கள் திட்டங்களைச் சமர்ப்பிக்கவில்லை. இதனால் பாரிசில் நிறைவேற்றப்படவிருக்கும் ஒப்பந்த நகலின் வடிவம் பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றது.

பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு இன்னும் நூறு நாள்களுக்குக் குறைவாகவே கால அவகாசம் காணப்படுகின்றது. ராஜதந்திரிகள் வேகமாக பணியில் இறங்கியுள்ளார்கள். காலத்தை நாம் வீணாக்க முடியாது என்று கூறியுள்ளார் பான் கீ மூன்.

# புகலிடக் கோரிக்கையாளர் பிரச்சினை ஐரோப்பிய நாடுகள் ஆலோசனை

ஐரோப்பிய நாடுகளுக்குள் அடைக்கலம் தேடிவரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாலும் எல்லைகளில் உள்ள உயர்ந்த மதில்களையும்கூட ஏறித் தாண்டி உள்ளே நுழைவதற்கு அவர்கள் முண்டியடிப்பதாலும் எழுந்துள்ள பிரச்சினை குறித்தும் அவைகளை ஒருமுகப்படுத்தி சீரமைக்கும் திட்டங்கள் குறித்தும் அவசரக் கூட்டமொன்றை நடத்த ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள் ஆலோசனைகள் நடத்தியுள்ளார்கள். கடந்த சில நாள்களில் ஆஸ்திரேலியாவில் அகதிகளை ஏற்றி இறக்கும் டிரக் வண்டி ஒன்றில் 71 குடியேற்றவாசிகள் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதும் ஐரோப்பாவுக்குள் நுழைவதற்காகப் புறப்பட்டு லிபியாவின் எல்லையில் படகொன்று கவிழ்ந்ததில் 100பேருக்கு மேல் இறந்ததும் இந்தக் கூட்டத்துக்கான அவசியத்தையும் அவசரத்தையும் ஏற்படுத்தியுள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தின் சுழற்சிமுறை அதிபர் பதவியை இப்போது வகிக்கின்ற லக்ஸம்பேர்க் இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

மத்திய கிழக்கிலும் வடஆபிரிக்காவிலும் ஏற்பட்டுள்ள மோதல்களில் சிக்குறாமல் இருப்பதற்காக நூற்றுக்கணக்கில் மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு தப்பிச் செல்ல முயன்று வருகிறார்கள். இன்னும் பலர் அந்த தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்வதற்காக அகதிகளாகப் புறப்பட்டுள்ளார்கள்.

ஜேர்மனி மற்றும் சுவீடன் போன்ற நாடுகள் அதிக புகலிடக் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ளபோதிலும் இந்தப் பெருந்தன்மைக்கு ஒரு கட்டுப்பாடு விதித்ததாக வேண்டும் என்று அவை தெரிவித்துள்ளன. மோதல்களுக்குள்ளாகி கொந்தளிக்கும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் பாதுகாப்பாக உள்ள நாடுகள் விடயத்தில் வேறுபாடுகளை சீரமைப்பதற்கான அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஜேர்மன் அதிபர் அஞ்சலோ மேர்கல் கூறியுள்ளார். அவ்வாறு செய்வதன் மூலம் பொருளாதார முன்னேற்றம் கருதி வருபவர்களை விரைவாக அவர்களின் நாடுகளுக்குத் திருப்பி அனுப்புவதுடன் கசப்பான போர்களினால் பாதிக்கப்படும் சிரியா, ஈராக் போன்ற நாடுகளின் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு அதிக வளங்களையும் வசதிகளையும் வழங்கக் கூடியதாக இருக்கும் என்று மேர்கல் கூறியுள்ளார்.

"மனிதர்களை கடத்துபவர்கள் தொடர்ந்து மிருகத்தனமாக நடந்து வருவதைப் பார்க்கின்றோம். இந்த மோசடியாளர்கள் தொடர்பில் கடும் நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும்" என்றார் அவர்.

ஹங்கேரிக்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையிலுள்ள எல்லையில் கடுமையான பொலிஸ் கட்டுப்பாடு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஆஸ்திரிய உள்துறை அமைச்சர் மிக்கில் லீட்னர் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்காவுக்கு பாப்பரசர் பயணம்



இம்மாதம் 23ஆம் திகதி பாப்பரசர் பிரான்சிஸ் கியூபாவிலிருந்து வொஷிங்டனில் வந்திறங்க இருக்கிறார். லத்தீன் அமெரிக்க மக்களில் சுமார் 50 ஆயிரம் கிறிஸ்தவர்கள் கால்நடையாகவும் பஸ்கள் மற்றும் வாகனங்கள் மூலமாகவும் வெள்ளை மாளிகைக்கு வந்து சேர்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வெள்ளை மாளிகையில் அதிபர் பராக் ஒபாமாவைச் சந்தித்த பின்னர் வெளியில் கூடிஇருக்கும் மக்களுக்கு பாப்பரசர் தரிசனம் வழங்குவார். அமெரிக்காவில் அவர் செல்லவிருக்கும் வொஷிங்டன், நியூயோர்க் மற்றும் பிலடெல்பியா ஆகிய நகரங்களில் பாப்பரசர் லத்தினோ மற்றும் குடியேற்ற வாசிகளின் தலைவர்களைச் சந்திக்கவிருக்கிறார்.

அமெரிக்காவில் ஆவணப்படுத்தப்படாமல் வாழ்ந்துவரும் 11 மில்லியன் மக்களின் எதிர்காலத்துக்காக ஒரு முறையை உருவாக்கும்படி அதிகாரிகளை வற்புறுத்துமாறு கத்தோலிக்கத் தலைவர்கள் பாப்பரசரைக் கேட்டுக்கொள்ள இருக்கிறார்கள். குடியேற்றவாசிகள் சமத்துவமற்ற உலகின் பாதிக்கப்பட்ட மக்கள் என்று [illegible] தெரிவித்துள்ளார். அவசரமான மனித உரிமை என்ற முறையில் அவர்களுக்கு உதவிகள் அளிக்கப்படவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

# பாக். - இந்திய எல்லை மோதல் ஐ.நா. கண்காணிப்பு அதிகரித்தது



இந்திய பாகிஸ்தான் எல்லையில் இரு தரப்பு மோதல்கள் கடும் கருத்து மோதல்களுக்கும் உள்ளாகியுள்ளன. அண்மையில் எல்லைப் பகுதிக்கு சென்று திரும்பியிருந்த பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் இந்தியாவைக் கடுமையாக விமர்சித்திருந்தார். பாகிஸ்தான் மீது போர் ஒன்றை இந்தியா கட்டவிழ்த்து விடுமானால் அதற்கு பெரும் எடுப்பில் நட்டங்கள் ஏற்படுத்தப்படும் என்று அவர் தெரிவித்திருந்தார். அதேநேரம் பாகிஸ்தான் படைகள்தான் எல்லையில் போர் நிறுத்த மீறல்களை மேற்கொண்டு வருகிறது என்று இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.




அண்மையில் காஷ்மீர் எல்லைப் பகுதியில் நடந்துள்ள மோதல்களில் இருதரப்பிலும் [illegible] மட்டுமன்றி பொதுமக்களிலும் [illegible]கொல்லப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இந்தியா – பாகிஸ்தான் எல்லையில் நடைபெற்றுவரும் நிகழ்வுகளை ஐ.நா. கண்காணித்து வருவதாக செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் ஸ்டீபன் கூறியிருக்கிறார். "இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான எல்லைக்கோடு பகுதியில் மோதல்கள் அதிகரித்திருப்பது குறித்த செய்திகளையடுத்து அங்குள்ள நிலைமைகளை உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம். இரண்டு தரப்பினரையும் பேச்சுக்களில் ஈடுபட்டு உணர்ச்சி வேகத்தைத் தணித்துக் கொள்வதில் ஈடுபடும்படி செயலாளர் நாயகம் வற்புறுத்தி வருகின்றார்" என்றார்.

இருதரப்பு பேச்சுக்கள் பாதுகாப்பு ஆலோசகர் மட்டத்தில் கடந்த மாதம் இரு தினங்கள் நடைபெறவிருந்த நிலையில் காஷ்மீர் விவகாரத்தை விவாதிக்க பாகிஸ்தான் விரும்புவதாகக் கூறி இந்தியா அதனை ரத்துச் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியம்தான் உங்கள் வாழ்க்கையை மாற்றி அமைக்கப்போகும் திருப்புமுனை

சி.நற்குணலிங்கம்
நெல்லியடி

பறந்த இந்த உலகிலே வாழ்வதற்கான பல சந்தர்ப்பங்கள் எமக்குக் கிடைக்கின்றன. இதனை நாம் உபயோகிக்கும் முறையிலேயே எமது வாழ்வும் சிறப்பாக அமைகிறது. எமது செயற்பாடுகளில், எந்த வகையாக நோக்கினும் அங்கு இலட்சியம் ஒன்று இருக்கவேண்டும். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் இலட்சியம் என்பது அவசியம். நீங்கள் கொண்டிருக்கும் இலட்சியம்தான் பிற்காலத்தில் உங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்கப் போகும் திருப்புமுனை.

இலட்சியம் இல்லாத வாழ்க்கை கடிவாளம் இல்லாத குதிரைக்குச் சமமானது. இலட்சியம் இல்லாத கப்பல்கள் கரைசேர்வதில்லை. இலட்சியம் இல்லாத மனிதன் வாழ்வில் வெற்றி பெற்றதாக இல்லை. இலட்சியம் இல்லாத வாழ்க்கை வெறும் பதற்றமே. இலட்சியம் இல்லாத மனிதன் இலக்கு இல்லாத கப்பலைப்போல அலைவான். எனவே இத்தகையவர்கள் வாழ்க்கையில் சுகத்தை அடைவது என்பது சிரமமே. இலட்சியம் இல்லாத வாழ்வு உயிரில்லாத உடலுக்கு ஒப்பானது. எனவே, இளமையும் சக்தியும் நம்பிக்கையும் இருக்கும் காலத்தில் உங்கள் எதிர்கால இலட்சியத்தை நீங்கள் முடிவு செய்ய வேண்டும். இலட்சியத்தை அடையும் வழிதான் முக்கியம் என்பதைப் புரிந்து இடைவிடாது பயணிக்க வேண்டும்.

இளமையிலேயே இலட்சியத்தை வகுத்துக் கொள்ள வேண்டும். அந்த இலட்சியம் குறிப்பிடத்தகுந்ததாக இருக்க வேண்டும். அளவிடக்கூடியதாக இருக்கவேண்டும். அடையக் கூடியதாகவும், குறிப்பிட்ட காலத்துக்குள் அடையக் கூடியதாகவும் இருக்கவேண்டும். இலட்சியத்தை அடைய வகுக்கும் திட்டங்களைச் சிறியதாகவும் எளிதில் அடையக் கூடியதாகவும் வகுத்துக் கொள்ளவேண்டும். மிகவும் முக்கியமாக இலட்சியத்தைத் தேர்வு செய்வதிலும், தேர்வு செய்த இலட்சியத்தை அடைவதிலும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

நீங்கள் சென்றடைய வேண்டிய இலட்சியத்தை சரியாகத் தெரிவு செய்து அதை நோக்கித் திட்டமிட, தன்னிலை அறியும் திறன் (நீ உன்னை அறிதல்) அவசியம் தேவை. வாழ்க்கைச் சூழலோ, வேலைச்சூழலோ ஏதுவாக இருப்பினும் நீங்கள் உங்களுடைய நிலையை அறிந்து சரியாகத் திட்டமிட்டால் எதிர்கொள்ளும் சவால்களை எல்லாம் முறியடித்து இலகுவில் இலட்சியத்தை எட்டலாம்.

எந்த மனிதனும் பிறக்கும்போதே வரங்களை வாங்கிக் கொண்டும் வல்லமைகளைச் சுமந்துகொண்டும் பிறந்ததில்லை. அவனுடைய இலட்சியத்தின் மூலம்தான் வாழ்க்கையில் வெற்றி காண்கின்றான். இலட்சியம் என்பது வாழ்க்கையின் சுவாசக் காற்றைப் போன்றது. என்றைக்கு ஒரு மனிதன் தன்னுடைய இலட்சியத்தைத் தளரவிடுகின்றானோ அன்றைக்கு அவனுடைய வாழ்க்கை அர்த்தமற்றுப்போகின்றது. மனித மனத்தால் ஒன்றை நினைக்க முடிந்தால் அதைச் சாதிக்க முடியும் என்பதுதான் மனிதகுல வரலாறு. எனவே நல்ல எண்ணங்களை இலட்சியமாக்குங்கள், வாழ்வியல் சிறக்கும். பூமியில் இருப்பதும் வானத்தில் பறப்பதும் அவரவர் எண்ணங்களே.

நல்ல அறிவார்ந்த பண்போடுகூடிய வாழ்க்கையை வாழ்வதுதான் முக்கியமானது. இதுவே வாழ்வின் இலட்சியமும் ஆகும். ஒரு மனிதன் வாழ்வில் தவறு இழைக்கக் காரணம், அவனது அறியாமையே. இந்த அறியாமையை நீக்கி நல்ல அறிவை வளர்ப்பதே கல்வியின் இலட்சியமாகும். விஞ்ஞானி ஐன்ஸ்டீன் அறிவைவிட கற்பனையே முக்கியமானது, அது அனைத்தையும் சாதிக்கும் என்றார். நல்ல சிந்தனையுடன் நல்ல கற்பனைகளும் இருந்து முயற்சி செய்து தனது இலட்சியத்தை அடைய அயராது உழைப்பவனுக்கே வெற்றி நிச்சயம்.

வாழ்க்கையில் சாதிக்கவேண்டும் எனில் பல துன்பங்களையும் வேதனைகளையும் சந்தித்துத்தான் ஆகவேண்டும். வாழ்க்கையில் வெற்றிபெற தோல்வி ஒரு தடையல்ல. மனம் செல்லும் வாழ்க்கையைத் தேடாது, இப்படித்தான் வாழ வேண்டும் என்ற வரம்பிடையில் வாழ்ந்தால் இலட்சியத்துக்கும் நமக்குமான தூரம் குறைந்துவிடும். நாம் எடுத்த இலட்சியத்தை இலகுவாக அடைந்துவிடலாம். இதுவே வெற்றிப் பாதையின் இரகசியமுமாகும்.

வெற்றி என்பது சுலபமாக வந்துவிடுவதில்லை. தங்கள் பார்வைகளையும், ஈடுபாடுகளையும் வேறு இடத்துக்கு திருப்பிக்கொள்ளாது இலட்சியத்தை நோக்கிய பார்வையில் செல்வதன் மூலம் வாழ்க்கையில் வெற்றியை அடையலாம். வாழ்க்கையில் பலதுறைகளில் பல திறமையாளர்கள்கூட தெளிவான இலட்சியங்கள் இல்லாததால் வாழ்க்கையில் தோல்விகளைச் சந்தித்துள்ளார்கள். வாழ்க்கையில் சாதிக்கவேண்டும் எனில் இளமையிலேயே இலட்சியத்தை வகுத்துக் கொள்ளுங்கள்.

தனிமனித சிந்தனையே தனிமனித வளர்ச்சிக்குக் காரணம். நம்பிக்கையான சிந்தனைகளே மனதை உறுதிப்படுத்தும். மனித மனம் நல்ல சிந்தனைகளை நிரப்பத் தவறினால், அந்த இடத்தை தீய சிந்தனைகள் ஆக்கிரமிக்கும். இதன் மூலம் நமது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த விழுமியப் பண்புகள் எம்மிடம் அற்றுப்போகும். சமூகத்தில் நல்லதொரு மனிதர் என்ற பெயர் எமக்கு எட்டாது. எனவே நல்ல சிந்தனைகளையே மனதில் வளர்த்துக்கொள்ளவேண்டும். சரியான இலட்சியங்களை, சிந்தனைகளே ஏற்படுத்திக் கொடுக்கின்றன என்பதை மறுப்பதற்கு இல்லை.

மகிழ்ச்சியான வாழ்க்கையை விரும்பாதவர்கள் எவருமே இந்த உலகில் இல்லை. ஆனால் அனைவருக்கும் மகிழ்ச்சியான வாழ்வு கிடைத்துவிடுவதும் இல்லை. மகிழ்வான வாழ்வுக்கு, தரமான வாழ்வுக்கு, ஆரோக்கியமான வாழ்வுக்கு சிறந்த விழுமியப் பண்பு கொண்ட வாழ்வுக்கு, வாழ்க்கையை உயர்த்திக்கொள்ள மிகவும் அவசியமானது இலட்சிய வாழ்க்கையே ஆகும். எனவே இளமையிலேயே வாழ்க்கையின் இலட்சியத்தை வகுத்து, அதை நோக்கிப் பயணியுங்கள். வாழ்வு சிறக்கும்.

**இலட்சியம் இல்லாத வாழ்க்கை கடிவாளம் இல்லாத குதிரைக்குச் சமமானது. இலட்சியம் இல்லாத கப்பல்கள் கரைசேர்வதில்லை. இலட்சியம் இல்லாத மனிதன் வாழ்வில் வெற்றி பெற்றதாக இல்லை. இலட்சியம் இல்லாத வாழ்க்கை வெறும் பதற்றமே. இலட்சியம் இல்லாத மனிதன் இலக்கு இல்லாத கப்பலைப்போல அலைவான். எனவே இத்தகையவர்கள் வாழ்க்கையில் சுகத்தை அடைவது என்பது சிரமமே. இலட்சியம் இல்லாத வாழ்வு உயிரில்லாத உடலுக்கு ஒப்பானது.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரை போடப்படும் போர்க்குற்றங்கள்

சந்திரசேகர ஆசாத்

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் விசாரணை அறிக்கை இந்த மாதம் வெளிவரவுள்ள நிலையில், அண்மையில் இலங்கைக்குப் பயணம் செய்த அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசியாவுக்கான துணைச் செயலர் நிஷா பிஸ்வால் வெளியிட்ட கருத்துக்கள் பல்வேறு விதமான பிரதிபலிப்புக்களை உருவாக்கியுள்ளன.



போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமைகளின் மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசுஉள்ளகவிசாரணையைமேற்கொள்ள அமெரிக்கா ஆதரவு வழங்கும் எனவும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவாகத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவரும் எனவும் அவர் தெரிவித்தார்.

அவரது அறிவிப்பை அடுத்து, நீண்ட காலமாகவே தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்த சர்வதேச விசாரணை தொடர்பான நம்பிக்கையீனம் ஏற்பட்டுள்ளது. எனினும் பல்வேறு தரப்பினராலும் இது தொடர்பாக ஆதரவானதும் எதிரானதுமான கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் சட்ட விரோத ஆயுதக் கொள்வனவு, போதைப் பொருள் கடத்தல் போன்ற பல குற்றங்களுக்காக இண்டர்போல் என்ற சர்வதேசப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர். அவர் தாய்லாந்தில் கைது செய்யப்பட்டு இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டவர். ஆனால் சட்டமா அமிதிபர் அவர் குற்றங்கள் இழைத்தது தொடர்பாக ஆதாரங்கள் இல்லையெனவும் அதனால் அவரைக் கைது செய்ய முடியாது எனவும் நீதிமன்றில் தெரிவித்துவிட்டார்.

பொதுவாகவே உள்ளக விசாரணைகள் மூலம் குற்றவாளிகள் தப்ப வைக்கப்பட்டு விடுவார்கள் என்றநம்பிக்கைதமிழ் மக்கள் மத்தியில் வலுப்பெற்றுள்ளதால், அதைத்தமிழ் மக்கள் எதிர்த்து வருகின்றனர். எனவே தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வடமாகாணசபைபோர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக உள்ளக விசாரணை நடத்தப்படுவதை எதிர்த்தும் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் எனக்கோரியும் பிரேரணை ஒன்றை நிறை வேற்றியுள்ளது.

அதேவேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகளும் உள்ளக விசாரணை தொடர்பாகத் தமது நம்பிக்கையீனத்தை வெளிப்படுத்தியுள்ளதுடன் ஒரு சர்வதேச விசாரணையின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளன. இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட சுரேஷ் பிரேமச்சந்திரன், இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரிக்கவோ தண்டனை வழங்கவோ சட்டங்கள் இல்லையென்றும், அதனால் உள்ளக விசாரணை என்பது பயனற்றதாகவே அமையும் எனவும் தெரிவித்துள்ளார். அதேவேளை உள்ளக விசாரணை என்பது பொலிஸ் விசாரணை என்ற மட்டத்திலேயே வந்து நிற்கும் எனப் புளொட் தலைவர் சித்தார்த்தன் கண்டனம் செய்துள்ளார்.

அதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இலங்கை அரசு சர்வதேசப் போர்க் குற்றங்களுக்கான நீதிமன்றம் தொடர்பான ரோம் ஒப்பந்தத்தில் கையெழுத்து வைக்காதபடியால் நேரடியான சர்வதேச போர்க்குற்ற விசாரணை சாத்தியமில்லையெனத் தெரிவித்துள்ளார். அப்படியான நிலையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் மட்டுமே இந்தப் பிரச்சினையை சர்வதேசப் போர்க்குற்ற நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முடியும் எனவும் அதையும் ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் தடுத்து விடும் எனவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இலங்கையின் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச விசாரணை நடந்து முடிந்து விட்டதாகவும் அதன் அறிக்கை இந்த மாதம் மனித உரிமைகள் ஆணையாளரால் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட பின்பே அபிப்பிராயம் கூறமுடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

எப்படியிருந்தபோதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து சர்வதேச விசாரணை தொடர்பாக மாறுபட்ட கருத்துக்கள் வெளிவந்தமை தமிழ் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. வடமாகாண சபை, ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எவ். என்பன சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் அதேவேளையில் சம்பந்தன், சுமந்திரன் ஆகியோர் சர்வதேசமயப்பட்ட உள்ளக விசாரணைகளை ஆதரிப்பதான கருத்துக்களையே வெளியிட்டனர்.

தமிழ் மக்கள் ஒரேமனதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமது தலைமையாக ஏற்றுள்ளபோதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையில்கூட ஒரே கருத்தை வெளியிட முடியாத நிலையே நிலவுகிறது.

அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்புபோர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்போவதாகவே பரப்புரை செய்தது. மக்களும் அதற்கு ஆணையை வழங்கினர். ரோம் ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்து இடாததாலும், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சில நாடுகள் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தும் என்பதாலும் சர்வதேச விசாரணை சாத்தியமில்லையென்றால் தேர்தல் பரப்புரைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் சர்வதேச விசாரணைக்கு அழுத்தம் கொடுக்கப்படும் எனக் கூறப்பட்டது என்ற கேள்வி எழுகிறது.

எப்படியிருந்த போதிலும் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு ஏகமனதான குரலை ஒலிக்க முடியாத நிலையில் சர்வதேச அரங்கில் தமிழ் மக்களின் கோரிக்கைகள் பலவீனமடையும் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது. ஆனால் வடமாகாண சபை ஏகமனதான தீர்மானம் மூலம் ஒரு சர்வதேச விசாரணையைக் கோரியுள்ளதுடன் சர்வதேச விசாரணையின் சாத்தியம் பற்றியும் தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் அனுசரணையுடன் ஒரு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு நடத்தப்படும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் முடிவுகளை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்துக்கு ஒப்படைக்க முடியும் என்ற மூன்றாவது வழிமுறையை அது முன்வைத்துள்ளது. மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பாலானவர்கள், தமிழரசுக் கட்சியின் ஒரு பகுதியினர் உட்பட அனைவரும் சர்வதேச விசாரணையையே கோரி நிற்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பிலுள்ள ஒருசிலரைத்தவிர ஏனைய பெரும்பான்மையினர் உள்ளக விசாரணையை நிராகரிப்பதற்கும் சர்வதேச விசாரணையைக் கோருவதற்கும் நியாயமான காரணங்கள் உண்டு.

இதுவரை இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்ட உள்ளூர் விசாரணைகள் அனைத்துமே காலத்தைக் கடத்துவனவாகவும், சர்வதேசத்தை ஏமாற்றும் வகையிலுமே அமைந்துள்ளன என்பதை எவரும் மறுத்து விடமுடியாது. குறிப்பாக நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் கிடப்பில் போடப்பட்டமையும் அவற்றை நிறைவேற்றும்படி ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கொடுத்த அழுத்தங்கள்கூடப் பயனற்றுப்போன நிலையிலேயே சர்வதேச விசாரணைக்கான தீர்மானம் 2014இல் அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டது. காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. புதிய அரசு அதே தடத்தில் தான் பயணிக்கும் என்பதற்கான அறிகுறிகளாக அண்மைய இரு சம்பவங்கள் தென்படுகின்றன. அவன்கார்ட் என்ற தனியார் நிறுவனத்தால் ரட்ண லங்கா கப்பலில் ஒரு மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையும், பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் இன்னொன்றுமாக வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. நாடாளுமன்றத்துக்குத் தெரியாமல் பாதுகாப்புச் செயலரின் அனுமதியுடனேயே இரகசியமான முறையில் இது நடத்தப்பட்டு வந்தது. ஆட்சி மாற்றத்தின் பின்பு கண்டுபிடிக்கப்பட்டு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன் நீதிமன்றத்தால் அவர் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப்பட்டது. ஆனால் தற்சமயம் குற்ற விசாரணைப் பிரிவினர் அவர் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழோ அல்லது சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்பது தொடர்பாகவோ அவர் மீது குற்றம் சுமத்தமுடியாது எனத் தெரிவித்ததை அடுத்து அவர் வெளிநாடு செல்ல விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது.

இங்குதான் சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்ட விடயம் கவனிக்கப்பட வேண்டியுள்ளது. போர்க்குற்றங்கள் தொடர்பாக உள்ளக விசாரணை நடத்தப்படுமானால் இலங்கையில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் குற்றம் சுமத்த முடியாது எனத் தெரிவிக்கப்பட்டு சில முக்கிய குற்றவாளிகள் தப்ப வைக்கப்படும் வாய்ப்புகள் உண்டு.

கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் சட்ட விரோத ஆயுதக் கொள்வனவு, போதைப் பொருள் கடத்தல் போன்ற பல குற்றங்களுக்காக இண்டர்போல் என்ற சர்வதேசப் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தவர். அவர் தாய்லாந்தில் கைது செய்யப்பட்டு இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டவர். ஆனால் சட்டமா அதிபர் அவர் குற்றங்கள் இழைத்தது தொடர்பாக ஆதாரங்கள் இல்லையெனவும் அதனால் அவரைக் கைது செய்ய முடியாது எனவும் நீதிமன்றில் தெரிவித்துவிட்டார்.

இலங்கையில் இப்படியான உள்ளக விசாரணைகளை மேற்கொண்டு போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நீதியை நிலை நாட்ட முடியுமா? எனவே, உள்ளக விசாரணை என்பது இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்குத் திரைபோடும் ஒரு முயற்சியாகவே அமையும். இந்த நிலையில் சர்வதேச விசாரணையை வலியுறுத்துவது ஒவ்வொரு தமிழரின் கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வலைப் பக்கம்

## அப்போது எல்லாம்

அப்போதெல்லாம் நான் மிகத் துணிச்சலாக இருந்தேன்..
அப்போதெல்லாம் எதற்குமே பயந்ததில்லை..
அப்போதெல்லாம் எல்லா முடிவுகளையும் நானே எடுத்தேன்..
அப்போதெல்லாம் நிறைய பேசினேன்..
அப்போதெல்லாம் பிடிவாதமாக இருந்தேன்..
அப்போதெல்லாம் என் பேச்சுக்குத் தான் மதிப்பு..
அப்போதெல்லாம் எனக்கு திருமணம் நடந்திருக்கவில்லை.
அவ்வ்வ்வ்
வ்வ்வ்வ்வ்வ்.








## உலக மகா "அறிவாளி"

எழுத்தாளன்

கிரீன் சிக்னல் விழுந்தவுடன் ஹார்ன் அடிக்கத் தெரிந்த பலருக்கும் ரெட் சிக்னல் விழுந்தவுடன் பிரேக் அடிக்க தெரியவில்லை

Dr.எட்டு

பலவந்தத்தில் காதல் வருவதில்லை. காதலில் பலவந்தம் இருப்பதில்லை.

மாற்றுத் திறனாளிகளுக்கு நாம் செய்யும் ஆகப் பெரும் உபகாரம் அவர்களை வேடிக்கை பார்க்காமல் இருத்தலே.

vinoth.k @vinovish Dec 13

என்னடா உலகம் இது...
கணவன் அடிச்சா நாளிதழில் செய்தியா போடறாங்க...
மனைவி அடிச்சா வார இதழில் ஜோக்கா போடறாங்க...

தலைவர் இரத்த தானம் செய்யற நேரத்துல, மகளிர் அணியினர் வந்துட்டாங்க...
அப்புறம்..?
அப்புறம் என்ன... தலைவர் அவங்களுக்கு முத்த தானம் செய்ய ஆரம்பிச்சிட்டாரு!



டாக்டர் எதை பார்த்தாலும் ரெண்டு, ரெண்டா தெரியுது!
சரி, அந்த பெட்டுல போய் படுங்க...
அங்க ரெண்டு பெட் இருக்கே... எதுல டாக்டர் படுக்கிறது?



அதோ வராறே... அவர் வாழ்க்கையில் எதிர்பாராத பல் திருப்பங்களை பார்த்தவர்!
அப்படியா! [illegible]
லாரி [illegible]

**பெண்:** தோசை மாவு வாங்கப் போன என் கணவரை ஒரு வாரமா காணலை மேடம்
**பொலிஸ்:** ஒரு வாரமா என்னம்மா செஞ்சே?
**பெண்:** உப்புமா, பூரின்னு சாப்பிட்டு சமாளிக்கிறேன் மேடம்!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசாலிப் பெண்ணை விரும்பும் ஆண்கள்



**இனியவள்**

இப்போதெல்லாம் ஆண்கள் மிகவும் தைரியமானவர்கள். அழகான பெண்களைக் கண்டால் அவர்களுக்குப் பிடிப்பதில்லையாம்... ஆளுக்கு அறிவு இருக்கா.. என்று தான் ரொம்ப முக்கியமாக பார்க்கிறார்களாம்.

புத்திசாலித்தனம், நல்ல நடத்தை இருக்கிறதா என்பதைத்தான் பெண்களிடம் முதலில் பார்க்கிறார்களாம் ஆண்கள். அதன் பிறகுதான் அழகுப் பக்கம் திரும்பிப் பார்க்கிறார்களாம். நமக்குப் பிடித்த பெண்ணுக்கு சமைக்கத் தெரிகிறதா என்று கூட இப்போதெல்லாம் ஆண்கள் பார்ப்பதில்லையாம். ஆண்களின் பார்வையில் நிறைய மாற்றங்கள் தெரிவதாக இந்த ஆய்வு சொல்கிறது. ஆனால் பெண்கள் இதற்கு நேர் மாறானவர்களாக இருக்கிறார்களாம். அதாவது பார்க்க ஸ்மார்ட்டாக, அழகாக இருக்கும் ஆண்கள்தான் பெண்களை முதலில் கவருகிறார்களாம்.

அதேபோல தங்களுக்குக் கணவர்களாக வருகிறவர் நல்ல வசதியுடன் கூடியவராக இருக்க வேண்டும் என்பது இந்தக் காலத்துப் பெண்களின் பொதுவான எதிர்பார்ப்பாக இருக்கிறதாம். ஆண்கள் பெண்களின் குணாதிசயத்தைப் பார்க்கும் அதே நேரத்தில் இப்போதைய நவநாகரீக பெண்கள் பணத்தின் மதிப்பைப் பார்க்கிறார்களாம்.

# கணவன்- மனைவி உறவுகள் விரிசல் ஏற்படக்காரணம்

திருமணம் என்பது ஆண் பெண் இருவரும் சேர்ந்து தங்களது வாழ்வை சந்தோசமாகவும், வளமாகவும் அமைத்து கொள்ளவதாகும். ஆனால் இன்றைய காலகட்டத்தில் திருமண வாழ்க்கை என்பது கடமைக்கு வாழும் ஒரு வாழ்க்கையாக பல தம்பதிகளிடையே ஆயிற்று. ஏனெனில் இருவருக்கும் சரியான புரிதல் இல்லாததும் தாம்பத்திய வாழ்வில் ஏற்படும் ஏமாற்றமும் ஆண்கள் பலர் தனது மனைவி இருக்கும் போதே பிற பெண்களை நாடுகிறார்கள்.

ஆண்கள் ஏன் மனைவியரை விட்டு விலகிப் போக ஆரம்பிக்கிறார்கள். திருமணமான தொடக்கத்தில் இருவருக்கும் அதிகமான நெருக்கம் காணப்படுவதால் அவர்களுக்கிடையில் எந்தவித சண்டைகளும் வருவதில்லை ஆனால் நாளாக நாளாக அவர்களுக்குள் இருக்கும் இடைவெளி அதிகமாகிக் கொண்டே செல்கிறது. சரியான தாம்பத்திய உறவு இல்லாது போகும் போது அவர்களுக்கு வெறுப்பு ஏற்படுகிறது. இந்த வெறுப்பே அவர்களுகிடையிலான சண்டையாக ஏற்பட்டு பிரிவினையை ஏற்படுத்துகிறது. இருவரும் இதை பற்றி பேசுவதற்கு வெட்கபட வேண்டிய அவசியம் இல்லை. மனைவிகளே! உங்களது விருப்பு வெறுப்பு பற்றி கணவருடன் மனம் திறந்து பேசுங்கள். இவ்வாறு உங்களின் வெளிப் படையான கருத்து உங்கள் கணவருக்கு உங்கள் மீதான அன்பை அதிகரிக்கும். அப்பொழுது தான் முழுமையான தாம்பத்திய வாழ்க்கையை வாழ்வது மட்டுமல்லாது இவ்வாறு இருபதனால் ஆண்கள் வேறு பெண்களிடம் செல்வதை தடுக்கலாம். குழந்தை பெற்ற பின்னர் பெரும்பாலான பெண்கள் குண்டாகிவிடுகிறார்கள். இதுவும் ஆண்கள், மனைவியை விட்டு விலக ஒரு முக்கியக் காரணமாம். பல பேர் அப்படி இல்லை என்றாலும் பல ஆண்களுக்கு மனைவி எப்போதும் மெலிதாக இருக்க வேண்டும் என்ற ஆசை இருக்கிறதாம். இப்படி குண்டாக இருக்கும் பெண்களிடம் செக்ஸ் குறைவதால் தான் அவர்கள் கணவர்கள் பார்வையில் சற்று சலிப்பை ஏற்படுத்துகிறது. ஆண்கள் எப்பொழுதும் தங்களது துணை தங்களுக்கு பிடித்த மாதிரி இருக்கணும், உடுத்தும் உடையிலோ அல்லது செய்யும் செயலிலோ தங்களை கவர வேண்டும் என்று நினைப் பார்கள். மாறாக அவ்வாறு இல்லாது போனால் அவர்களுக்கு தங்களது துணை மீது சற்று சலிப்பு ஏற்படுகிறது. அதுவே இன்னொரு பெண்ணிடம் தங்களுக்கு பிடித்த குணங்களை கண்டாலோ அல்லது அழகாய் இருந்தாலோ, அவர்களது மனம் சற்று தடுமாற செய்கிறது. இது காலப் போக்கில் துணை இருக்க மற்றொரு பெண் மீது காதலாக மாறிவிடுகிறது. குழந்தைகள் பிறந்ததும் பெண்களுக்கு குழந்தைகளை கவனிப்பதிலும் வேலைகளை பார்ப்பதிலும் அவர்களுக்கு நேரம் சரியாக போய்விடுகிறது. இதனால் கணவர் மோகத்துடன் நெருங்கி வரும் போது பெண்கள் விலகிப் போக ஆரம்பிக்கிறார்கள் இது அவர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை ஏற்படுத்துவதுடன் வெறுப்பையும் உண்டாக்குமாம். இதுவும் கூட பெண்ணிடமிருந்து ஆண்கள் நழுவிச் செல்ல ஒரு காரணமாம்.

இதற்காக எல்லா ஆண்களுமே தப்பு செய்பவர்கள் என்று சொல்லவில்லை. சந்தர்ப்பமும், சூழ்நிலையும் அவர்களை மாற்றுகிறது. இவை சில காரணங்கள்தான், இதையும் தாண்டி பல கார ணங்கள் இருக்கலாம். இப்படிப்பட்ட காரணங்களால் தான் ஆண்கள், பெரும்பாலும் மனைவியரை விட்டு விலகிச் செல்ல ஆரம்பிக்கிறார்களாம்.

ஆகவே, பெண்களே அவதானமாக இருங்கள். உங்கள் கணவர் எப்படியானவர் என்பதனை உணர்ந்து கொள்ளுங்கள். தவறுகளை உடனே சரி செய்யப் பாருங்கள்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொருளாதார சுணக்கத்தை உணராத ஆட்சியாளர்களும் அதிகாரிகளும்!

கருப்பு வெள்ளிக்கிழமையில் பங்குச் சந்தை ஒரேயடியாகச் சரியக் காரணம் என்ன? எதிர்காலம் எப் படி இருக்கும்? யாருக்கும் தெரியாது, விவரங்களும் இல்லை. பங்குச் சந்தையில் தின சரி இடம் பெறும் ஏற்ற இறக்கங் களுக்கெல்லாம் விளக்கம் அளிப் பது முட்டாள்தனமாகவே இருக் கும். 1987இல் பங்குச்சந்தையில் ஏற்பட்ட சரிவு தொடர்பாக ஆய்வு நடத்தியபோது பொருளாதார அறிஞர்களும் பத்திரிகையாளர்களும் அளித்த விளக்கங்களுக்கும் உண்மை நிலவரத்துக்கும் தொடர்பே இல்லை என்பது புரிந்தது. அப்படியானால் முதலீட்டாளர்கள் பங்குகளை ஏன் விற்றார்கள் என்றால், விலை குறைந்து கொண்டே வந்தது, அதனால் விற்றார்கள்!

நம்முடைய பொருளாதார எதிர்காலத்தை முடிவு செய்ய பங்குச் சந்தையை வழிகாட்டியாக வைத்துக்கொண்டால் வேறு வினையே வேண்டாம்: பால் சாமுவேல்சன் வேடிக்கையாகச் சொல்வார், கடைசியாக நாம் சந்தித்த 5 பொருளாதாரச் சரிவுகளை, 9 முறை முன்கூட்டியே ஊகித்தது பங்குச்சந்தைதான் என்று! எனினும், முதலீட்டாளர்கள் இன்னமும் நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குத் தகுந்த காரணங்கள் உண்டு.

அமெரிக்கப் பொருளாதார நிலைமை, பிரமாதம் என்று சொல்ல முடியாவிட்டாலும் நன்றாகவே இருக்கிறது. ஆனால் உலகப் பொருளாதார நிலைமையோ ஏதாவது ஒரு விபத்தில் சிக்கிக்கொள்ளும் விதத்திலேயே தொடர்கிறது.

கடந்த 7 ஆண்டுகளாகவே நாம் ஒரு நெருக்கடியிலிருந்து இன்னொரு நெருக்கடிக்கு மாறிக் கொண்டேயிருக்கிறோம். உலகின் ஏதாவது ஒரு நாடு சுதாரித்து காலை ஊன்றி நின்றால், இன்னொரு பகுதியில் இன்னொரு நாடு காலை இழுத்துக்கொண்டு விழுந்துவிடுகிறது. இந்தப் பிரச்சினைகள் அனைத்தும் தன்னைப் பாதிக்காத வகையில் அமெரிக்காவால் கவசம் போர்த்திக் கொண்டுவிட முடியாது.

### உலகப் பொருளாதாரம் தடுமாறுவது ஏன்?

மேலோட்டமாகப் பார்க்கும் போது அமெரிக்காவுக்கு தொடர்ந்து துரதிஷ்டங்களே வாய்க்கும் காலகட்டத்தில் இருக்கிறோம். முதலில் வீட்டுக்கடன் வழங்கிய நிறுவனங்கள் நொடித்தன. பிறகு வங்கிகள் நெருக்கடியில் சிக்கத் தொடங்கின. அப்பாடா எல்லாம் ஓய்ந்தது என்று நினைக்கும் நேரத் தில் ஐரோப்பிய நாடுகள் கடனில் சிக்கின. போதாத குறைக்கு பொருளாதார வீழ்ச்சியும் பிடித்துக் கொண்டது. ஐரோப்பா எப்படியோ மீண்டும் தட்டுத்தடுமாறி எழுந்து நிற்கப் பார்க்கிறது. இது வரை உலகப் பொருளாதார வளர்ச்சிக்கே உதாரணமாக இருந்த சீனாவும் சில வளரும் நாடுகளும் இப்போது சரியத் தொடங்கியிருக்கின்றன.

இவையெல்லாமே ஒன்றுக் கொன்று தொடர்பில்லாமல் நடப்பவை அல்ல. பணமோ ஏராளம், முதலீட்டு வாய்ப்பு களோ மிகச் சில என்ற உலக நிலைமையால்தான் இப்படி நேர்கின்றன.

### அன்றே சொன்னார் பெர்னான்கி

பத்தாண்டுகளுக்கு முன்னால் பென் பெர்னான்கி என்ற நிதி நிபுணர் கூறினார், அமெரிக்காவின் வர்த்தகப் பற்றுவரவில் பற்றாக் குறை அதிகம் இருக்கிறது என்றால் (ஏற்றுமதியைவிட இறக்குமதி அதிகம்) அதற்குக் காரணம் உள்நாட்டுப் பொருளாதாரம் அல்ல உலக அளவில் சேமிப்புகளால் ஏற்பட்ட தேக்கநிலை தான் என்றார். சீனாவிலும் பல வளரும் நாடுகளிலும் முதலீடுகளைவிட சேமிப்புகள் அதிகரித்துவிட்டதால் அப்படி நேர்ந்தது. 1990களில் ஆசிய நெருக்கடியின்போது ஆசியாவிலிருந்து கோடிக்கணக்கான முதலீடுகள், நல்ல இலாபம் கிடைக்கும் என்று அமெரிக்காவை நோக்கிப் பாய்ந்தன.

அந்தப் பணம் தொழில் துறைக்குச் செல்லாமல் வீடு கட்ட கடன்தரும் நிறுவனங் களில் போய் அடைக்கலம் புகுந்தது. அமெரிக்காவில் வீட மைப்புத் துறையில் ஏற்பட்ட எழுச்சியும் பிறகு வீழ்ச்சியும் வெளி நாடுகளின் பொருளாதார பலவீனங்களால்தான் என்று அப்போது பெர்னான்கி சொன்னது, பொருத்தமான விளக்கம் போலத்தான் இப்போது தெரிகிறது. பேரலையாக உருவாகும் என்று எதிர்பார்த் தது வெறும் நீர்க்கொப்புளமாக மாறியது. அதுவும் உடைந்த போது பெரும் பொருளாதாரச் சேதத்தை ஏற்படுத்திவிட்டது. அத்தோடு கதை முடியவில்லை. ஜெர்மனியிலிருந்தும் இதர வட ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் ஸ்பெயின், போர்த்துக்கல், கிரீஸ் போன்ற நாடுகளை நோக்கி முதலீடுகள் பாய்ந்தன. இவையும் அதேபோன்ற கொப்புளங்களாகிவிட்டன. 2009 ஒக்டோபரில் அவை உடைந்த போது தான் ஐரோப்பிய நெருக்கடி பெரிதானது.

இப்போதும் அந்தக் கதை முடியவில்லை. அமெரிக்காவையும் ஐரோப்பாவையும் நோக்கி புதிய முதலீடுகள் செல்ல முடியாததால், உலகின் வேறு எந்தப் பகுதியில் முதலீட்டுக்கு வாய்ப்பு இருக்கிறது என்ற தேடல் தொடர்கிறது. வளர்ந்துவரும் சந்தைகளில் வாய்ப்பு இருப்பதாகக் கருதப்பட்டது. எனவே பிரேசிலின் செலாவணி தொடர்ந்து நிலைத் திருக்க முடியாத உச்சத்துக்கு சென்றது. அங்கேயே தொடர முடியாமல் அது சரிந்துவிட் டது.

இப்போது நாம் சந்தைகளில் புதிய நெருக்கடியைப் பார்க்கிறோம். 1990களில் ஆசியாவில் ஏற்பட்ட நெருக்கடியை நேரில் பார்த்தவர்கள், அது எங்கே ஆரம்பமாயிற்று என்பதை இப்போதும் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

### தேக்கம் ஏன்?

அப்படியானால் தேக்க நிலையைச் சுட்டும் விரல்கள் எந்தப் பக்கம் திரும்பப் போகின்றன? அந்நியச் செலாவணிகள் புதிதாக படையெடுப்பதால் அமெரிக்க டொலரின் மதிப்பு அதிகமாகிக்கொண்டே இருக்கிறது இது நம்முடைய தொழில் துறையை மிகவும் பாதிக்கும், பிற நாடுகளுடன் போட்டியிட முடியாமல் தடுத்துவிடும். எதனால் இந்த உலகளாவிய தேக்க நிலை? பல காரணங்களின் கூட்டுக் கலவையால்தான் இந்த நிலை. உலகம் முழுக்க மக்கள் தொகைப் பெருக்கம் மந்த கதியை அடைந்துவிட்டது. (நுகர்வோர் எண்ணிக்கை குறைகிறது). புதியதொழில் நுட்பங்கள் குறித்து எவ்வளவு பீற்றிக்கொண்டாலும் அவற்றால் உற்பத்தித் திறனும் உயரவில்லை, பொருள்களுக்கான தேவையும் அதிகமாக வில்லை. எனவே தொழில் துறைக்கு முதலீடுகள் பெருகவில்லை. அரசு செலவுகளைக் குறைத்துக்கொள்ளவேண்டும், சிக்கனமாக இருக்க வேண்டும் என்ற தவறான ஆலோசனையால் அரசுகள் அனைத்துமே பலவீனமாகிவிட்டன. செலவு செய்ய அஞ்சுகின்றன.

அரசு செலவு செய்யாமல் பண சுழற்சி ஏற்படாது. கேட்பு அல்லது கோரல் (demand) இல்லாததால் பணவீக்க விகிதம் குறைவாக இருக்கிறது. பணவீக்க விகிதம் குறைவாக இருப்பதால் வங்கிகளின் வட்டி வீதமும் குறைவாகவே இருக்கிறது. வட்டி வீதம் குறைவாக இருப் பதால் பொருளாதாரம் சீறிப் பாய்ந்தால்கூட வட்டியைக் அதிகரிப்பது சாத்தியமில்லை. எனவே ஊக்குவிப்பாக எதையும் செய்ய முடியவில்லை. முதலீடு செய்யாமல் வீணாக, பணத்தைச் சேமித்துக்கொண்டிருக்கிறார்கள் மக்கள். உலக அளவில் பொருளாதாரம் முடுக்கிவிடப்படாமல் சுணங்கிக் கிடக்கிறது என்பதை ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் இப்போதுகூட உணராமல் மெத்தனமாகச் செயல்படுகின்றனர். இதெல்லாம் வழக்கம்தான் என்றே நினைக் கிறார்கள். அதிகாரிகள் இதை ஒப்புக்கொள்ளக் கூடத் தயங்குகின்றனர். இதற்குக் காரணம் ஒவ்வொரு வர்க்கமும் தன்னுடைய சுய நலத்தில் மட்டுமே அக்கறை காட்டுகிறது.

பொருளாதார நிலை உறுதியற்று இருக்கும்போது நிதிக் கட்டுப்பாடுகள் அவசியம் என்பதை வோல் ஸ்ட்ரீட் (அமெரிக்க பங்குச் சந்தை) கேட்கவே விரும்பவில்லை. மக்கள் நல அரசு என்ற கொள்கையையே குழிதோண்டிப் புதைத்துவிடவேண்டும் என்று நினைக்கும் அரசியல் தலைவர்கள், அரசு அதிகம் செலவு செய்ய வேண் டும், அதிலும் கல்வி, சுகாதாரம், சமூக நலம் ஆகியவற்றுக்கு அதிகம் செலவிட வேண்டும் என்ற கோரிக்கைகளைக் கேட்கவே மறுக்கின்றனர். அரசு செலவு செய்யாமல் இருப்பதும், கடன் சுமையும் அவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல.

உலக அளவிலான பொருளாதாரத் தேக்க நிலை தொடர்பாக அரசியல்வாதிகளுக்கும் பொருளாதார நிபுணர் களுக்கும்கூட ஒருதலைப்பட்சமான கருத்துகள் இருக்கின்றன. இப்போதைய பிரச்சினைகளுக்குத் தாங்கள் நடை முறைப்படுத்த நினைக்கும் நடவடிக்கைகள்தான் சரியா னவை என்பதே அது. அவர்களுடைய நடவடிக்கைகள் எல்லாம் அரசின் செலவுகளை வெட்டுவது, கடன்கள் மீதான வட்டி வீதத்தை அதிகப்படுத்துவது போன்றவைதான். இப்படியெல்லாம் கடுமையாக நடந்துகொண்டால்தான் பொருளாதாரம் மீட்சி அடையும் என்று அவர் கள் உறுதியாக நம்புகிறார்கள். அதைவிட முக்கியம், பொருளாதாரத்தை மீட்க தங்களைத் தவிர வேறு யாருக்கும் அக்கறையும் இல்லை, வேறு யாரிடமும் சிறந்த திட் டங்களும் இல்லை என்ற அவர்களுடைய மமதையும் தான்!


> **பிற நாடுகளுடன் போட்டியிட முடியாமல் தடுத்துவிடும். எதனால் இந்த உலகளாவிய தேக்க நிலை? பல காரணங்களின் கூட்டுக் கலவையால்தான் இந்த நிலை. உலகம் முழுக்க மக்கள் தொகைப் பெருக்கம் மந்த கதியை அடைந்து விட்டது. நுகர்வோர் எண்ணிக்கை குறைகிறது.**

*தமிழில்: சாரி,*
*மூலம்: நியூயார்க் டைம்ஸ்,*
*நன்றி: தி இந்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையின் பிள்ளைகள்

உடுவிலூர் கலா



வைகறையை மனுக்குலத்துக்கு பரிசளிக்க தன் செம்பொற் கரங்களை விரித்து கீழ்த்திசைவானில் எழிற் கோலம் கொண்டான் கதிரவன். விடியலைத் தரிசித்து ஐந்தறிவு ஜீவன்களும் ஆறறிவு மனிதர்களும் தத்தமது பணிகளுக்குத் தயாராகினர்.

தினசரி ஏழ்மைப் போராட்டத்துக்காக சந்திராவும் காலைக் கடன்களை முடித்து அடுக்களைக்குள் புகுந்தாள். உணவுப் பண்டங்கள் எல்லாமே தீர்ந்து போயிருந்தன. ஒரு கைப்பிடியளவு சிவப்பரிசி மட்டுமே எஞ்சியிருந்தது. பிள்ளைகளின் காலையுணவுக்கு இது போதும் எனக் கடவுளுக்கு நன்றி கூறியவளாக, சிறிது முருங்கையிலையையும் போட்டு உப்புக்கஞ்சி காய்ச்சினாள்.

சித்தி பசிக்குது என சுமன், சுமி இருவரும் சிணுங்கவே, "கொஞ்சநேரம் பொறுங்கோ கஞ்சி சுடுது" என்றவாறு சிறிய கிண்ணங்களில் கஞ்சியை ஊற்றி, ஊதி ஊதி ஆற்றிக்கொண்டே வெளியே வந்தாள் சந்திரா. ஆவலோடு கஞ்சியைக் குடித்த பிள்ளைகளைப் பார்த்துப் பெருமூச்சு விட்டபடி, தாயின் அரவணைப்பில் வாழக் கொடுத்துவைக்காத குழந்தைகள். தகப்பன் உயிரோடு இருந்தும் ஒருவேளை சாப்பாட்டுக்கே கஷ்டப்படுகுதுகள் எனத் தனக்குள் தானே சொல்லிக்கொண்டாள்.

"ஏன் பிள்ளைகள் பள்ளிக்கூடம் போகேல்லையோ?" எனக் கேட்டபடி சந்திராவின் அருகே வந்தமர்ந்தாள் துளசி. வேதனையோடு இருந்தவளுக்குத் துளசியின் வருகை பெரும் ஆறுதலாக இருந்தது. "அன்ரி இன்று கல்வி அதிகாரி வாறார். சப்பாத்தோடு வரா விட்டால் அடிவிழும் என ரீச்சர் சொன்னவா. எங்களிட்ட சப்பாத்து இல்லை. அதுதான் போகேல்லை" என்ற அந்தப் பிஞ்சுகளின் ஏழ்மைக்குரல் துளசியின் இதயத்தில் பெரும் நெருடலை ஏற்படுத்தியது.

"எங்கட கஷ்டம் தெரியும்தானே துளசி. தகப்பனுக்குப் பிள்ளைகள் மேல் எந்த அக்கறையுமில்லை. ஒருவேளை சாப்பாடு கொடுக்கவே பெரும்பாடுபடுறன். சப்பாத்து எடுக்க எங்கைபோறது? கஷ்டப்பட்டாவது படிப்பிச்சால் எதிர்காலம் நல்லா இருக்கும் என்று பார்த்தால் எதுவும் செய்ய முடியேல்லை" என மனமுடைந்து கூறினாள் சந்திரா.

"ஒன்றுக்கும் கவலைப்படாதே. பிள்ளைகள் படிக்கிறதுக்கு நான் ஒழுங்கு செய்திருக்கிறன். நாளை இங்கு ஒரு பெரியவர் வருவார். அவர் பிள்ளைகளுக்கான படிப்புக்கு உதவி செய்வார்" என பிள்ளைகளை அணைத்தபடி கூறினாள் துளசி. "என்ன சொல்கிறாய்? யார் இங்கு வருவார்?" என துளசியின் கரங்களைப் பற்றியவாறு சந்திரா ஆவலுடன் கேட்டாள்.

"தாயில்லாதப் பிள்ளைகளுக்காக உன்ரை வாழ்க்கையை தியாகம் செய்து, கஷ்டத்தில் நீ படும் வேதனையைப் பார்க்கிறன். நீ என் உயிர்த்தோழி. நீ செய்த தியாகத்துக்கும் படும் வேதனைக்கும் பிள்ளைகள் படிக்க யார் மூலமாவது உதவி பெற்றுத்தர வேண்டும் என நினைத்து இதைச் செய்தேன்" எனக்கூறி விடை பெற்றாள் துளசி.

ஐந்து வருடங்களின் முன் வாகன விபத்தொன்றில் இறந்த இந்து, சந்திராவின் மூத்த சகோதரி. சுமன், சுமி இந்துவின் பிள்ளைகள். தாயை இழந்த பிள்ளைகள் இந்துவின் தாயோடு வளர்ந்தார்கள். சந்திரா திருமணமாகாது இருந்து இந்துவின் பிள்ளைகளை கண்ணை இமை காப்பதுபோல் காத்து வந்தாள். இந்துவின் கணவன் வேறுதிருமணம் செய்தால், பிள்ளைகள் பிரிவினையை சந்திக்க நேரிடும் என நினைத்த பெற்றோர் சந்திராவை கண்ணனுக்குத் திருமணம் செய்துவைக்க விரும்பி, சந்திராவிடம் விருப்பத்தைக் கேட்கவே, திருமணம் செய்யாமலே கடைசிவரை பிள்ளைகளை வளர்ப்பதாகக் கூறி கண்ணனை திருமணம் செய்ய மறுத்தாள். சந்திராவின் முடிவை ஏற்கமுடியாது எனக்கூறி கட்டாயத் திருமணம் செய்து வைத்தனர் பெற்றோர்.

மதுவிலேயே தினசரி நீராடும் கண்ணன் மறுமணம் செய்தும் குடியை விடுவதாக இல்லை. வாழ்வின் பெரும்சுமை சந்திராவின் தலைமேல் சுமத்தப்பட்டது. சகோதரியின் பிள்ளைகளுக்காக தனது ஆசைகளை மூடை கட்டி, ஆடம்பரங்களை வெறுத்து வாழ்ந்தாள். காலங்கள் ஓடின, சந்திராவுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. உழைக்கும் சிந்தையின்றி குடிபோதையில் வாழ்வைக் கழிக்கும் கண்ணனை மத்திய கிழக்கு நாட்டுக்கு அனுப்பி வைக்க விரும்பி வங்கியில் கடன் பெற்றாள். கண்ணன் வெளிநாடு சென்றான். ஆனால், பிள்ளைகளை உழைத்துப் பார்ப்பான் என நம்பிய சந்திராவுக்கு ஏமாற்றமே. ஒருமுறை மட்டும் கதைத்த கண்ணன் அதன்பின் எந்தத் தொடர்புமில்லை. நனைத்துச்சுமக்கிற வாழ்க்கையாக மூன்று பிள்ளைகளுடன் நாளாந்தத் தேவைகளை சந்திக்க முடியாது வறுமையோடு போராடிக் கொண்டிருக்கிறாள் சந்திரா.

> "தாயில்லாதப் பிள்ளைகளுக்காக உன்ரை வாழ்க்கையை தியாகம் செய்து, கஷ்டத்தில் நீ படும் வேதனையைப் பார்க்கிறன். நீ என் உயிர்த்தோழி.

மறுநாள் விடிந்து நேரம் ஒன்பது மணியாகியது. வரப்போகும் பெரியவரை எதிர்பார்த்து சந்திராவும் பிள்ளைகளும் காத்திருந்தனர். "சந்திரா வீடு இதுதானே" என்னும் குரல் கேட்டு திரும்பினாள் சந்திரா. வெண்ணிற உடையில் பெரியவர் ஒருவர் வாசலோரம் நின்றிருந்தார். "நான்தான் சந்திரா உள்ளே வாங்கோ" என்றழைத்து அமரச் செய்தாள்.

நம்பிக்கையின் பிள்ளைகள் அமைப்பிலிருந்து வருகிறேன் எனக்கூறி சந்திராவையும் பிள்ளைகளையும் பார்த்து சுகநலம் விசாரித்த அந்தப் பெரியவர், பிள்ளைகளின் கல்விச் செலவாக மாதாந்தம் பத்தாயிரம் ரூபா தருவார் எனவும் பிள்ளைகள் நன்றாகப் படிக்க வேண்டும் எனவும் அறிவுரை கூறினார். அத்தோடு பிள்ளைகளுக்கு என்ன தேவைகள் இருந்தாலும் தங்களோடு தொடர்பு கொள்ள வேண்டும் எனக் கூறி, அமைப்பின் விவரம், தொலைபேசி எண் என்பவற்றையும் பத்தாயிரம் ரூபா பணத்தையும் சந்திராவின் கைகளில் ஒப்படைத்தார். நடப்பது நிஜமா என நம்பமுடியாமல் உணர்ச்சி வசப்பட்டவளாய், பிள்ளைகளை அணைத்துக்கொண்டு கண்ணீர் மல்க அந்தப் பெரியவருக்கு நன்றி கூறினாள்.

பிள்ளைகளின் எதிர்காலத்துக்கும் கல்விக்கும் ஆசிகூறி விடைபெற்றார் பெரியவர். சந்திராவின் கண்களில் மூன்று பிள்ளைகளினதும் எதிர்காலத்துக்கான நம்பிக்கை ஒளி பிரகாசித்தது.

---

# மூளை அற்ற கழுதை

சந்திரன்



ஒரு காட்டில் சிங்கம் மகாராஜாவாகவும் நரி பிரதம மந்திரியாகவும் இருந்தன. ஒவ்வொரு நாளும் சிங்கம் காட்டு மிருகங்களைப் பிடித்து உண்ணும். ஒரு நாள் சிங்கத்துக்கு காய்ச்சல் வந்துவிட்டது. அதனால் வேட்டையாடப் போக முடியவில்லை. நரியை அழைத்த சிங்கம், உணவு தேடி வா எனக் கட்டளையிட்டது.

நரி குகையை விட்டு வெளியே வந்து, யோசித்தது. வேட்டை தனக்குப் பழக்கப்படாத ஒன்று. சிங்கம் வேட்டையாடி மிச்சம் விட்டதைத் தின்றே பழக்கம். இப்போது திடீரென சிங்கம் உணவு கொண்டுவா என்றால் என்ன செய்வது? எங்கிருந்து யாரை வேட்டையாடி இழுத்து வருவது? நரி கடுமையாக யோசித்தது.

தனக்குரிய வழி வகைகளைப் பற்றி அது சிந்தித்தது. தனக்கிருப்பது உடல் பலமல்ல, மூளைப் பலம்தான் என்பதை மீண்டும் நினைத்துக் கொண்டது. சிறிது நேரம் கழித்து காட்டின் புல்வெளிக்கு வந்தது. கழுதை அங்கு மேய்ந்து கொண்டிருந்தது.

கழுதையின் அருகில் சென்ற நரி சொன்னது, "கழுதை மாமாவே உங்களுக்கு ஒன்று தெரியுமா? சிங்கராஜா என்னைத் தனது பிரதம மந்திரியாகவும் உங்களைக் காவலாளியாகவும் நியமித்திருக்கிறார்."

கழுதைக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. துள்ளிக் குதித்தது. பதவியை ஏற்க, நரி கழுதையைச் சிங்கராஜாவின் குகைக்கு அழைத்துச் சென்றது. கடும் பசியில் இருந்த சிங்கம் கழுதையைக் கடித்துக் கொன்று விட்டது. ஏமாந்த கழுதை உயிர் நீத்தது.

கழுதையின் உடலில் சிறு பகுதியைத் தின்ற சிங்கம், தண்ணீர் குடிக்கக் குளத்துக்குச் சென்றது. பசியோடிருந்த நரியோ, அந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு கழுதையின் மூளையைத் தின்றுவிட்டது. தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பி வந்த சிங்கம், கழுதையின் மூளையைக் காணவில்லை என்று கண்டு விட்டது. "மூளை எங்கே?" என்று நரியைக் கேட்டது. அதற்கு நரி சொன்னது, "கழுதைக்கு மூளை இல்லாதபடியாலதானே என்னோடு இங்கு வந்தது."

அதை ஏற்றுக்கொண்ட சிங்கம், கழுதையின் மீதி இறைச்சியையும் உண்ணத் தொடங்கியது. ***(இது ஓர் அரசியல் கதை அல்ல)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**பாலியல் தொழிலாளியின் மகனான விக்ராந்த், தன் தாயின் அவலமான வாழ்வைக் கண்முன் கண்டே வளர்கிறார். ஒரு கட்டத்தில், விக்ராந்தின் தாய் அவர் கண்முன்னே கொல்லப் படுகிறார். அங்கிருந்து தப்பித்து சென்னைக்கு வந்து வளரும் அவருக்கு அரவிந்த் சிங்கின் நட்பு கிடைக்கிறது.**

கடத்தல் கும்பலிடம் சிக்கிக் கொள்ளும் பெண்களைக் காப்பாற்றி, வில்லன்களை அழிக்கும் வழக்கமான அதிரடிக் கதாநாயகன் படம்தான் தாக்க தாக்க. 2 ஆண்டுகளுக்குப் பிறகு, விக்ராந்த் நடிப்பில் வெளிவந்துள்ள இந்தப் படத்தை அவரது அண்ணன் சஞ்ஜீவ் இயக்கியிருக்கிறார்.

பாலியல் தொழிலாளியின் மகனான விக்ராந்த், தன் தாயின் அவலமான வாழ்வைக் கண்முன் கண்டே வளர்கிறார். ஒரு கட்டத்தில், விக்ராந்த்தின் தாய் அவர் கண்முன்னே கொல்லப் படுகிறார். அங்கிருந்து தப்பித்து சென்னைக்கு வந்து வளரும் அவருக்கு அரவிந்த் சிங்கின் நட்பு கிடைக்கிறது. நர்ஸ் அபிநயாவைக் காதலிக்கிறார் அரவிந்த் சிங். எதிர்பாராதவிதமாக வில்லன் ராகுல் வெங்கட் கும்பலிடம் அபிநயா மாட்டிக்கொள்கிறார். அபிநயாவை மீட்கும் போராட்டத்தில் நண்பனை இழக்கும் விக்ராந்த், வில்லன் கூட்டத்தை எப்படி அழிக்கிறார் என்பதுதான் தாக்க தாக்க.

விக்ராந்த்தின் பின்னணியை விளக்கும் தொடக்கக் காட்சிகள் எதிர்பார்ப்பை உருவாக்குகின்றன. ஆனால், வில்லன் ராகுல் வெங்கட்டின் அறிமுகத்துக்குப் பிறகு வரும் காட்சிகள் எளிதில் ஊகித்துவிடும்படி இருக்கின்றன. அதிரடிப் படத்தின் திரைக்கதையில் வேகம் குறைவாக இருக்கிறது.

அரவிந்த் சிங் - அபிநயா காதல், விக்ராந்த் - பார்வதி நிர்பன் காதல் எனப் படத்தில் எந்த காதல் கதையின் பின்னணியும் அழுத்தமாக இல்லை. வில்லனின் ஆள்களால் கடத்தப்பட்ட பத்துக்கும் அதிகமான இளம்பெண்கள் ஒரு பழைய தொழிற்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களைப் பற்றி பொலீஸோ, ஊடகமோ கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. இப்படி பல காட்சிகளில் தர்க்க நியாயங்களே இல்லை.

விக்ராந்த் நடிப்பு ஓகே. சண்டைக் காட்சிகளில் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம். அரவிந்த் சிங், அவரது காதலி அபிநயா, அவரது தோழி பார்வதி நிர்பன் ஆகியோர் பொருத்தமான தேர்வுகள். ஆனால் வில்லன் கதாபாத்திரத்தில் வரும் ராகுல் வெங்கட் பலவீனமான தேர்வு. பார்வையாளர்களைப் பதற்றமடையச் செய்யும் நடிப்போ, தோற்றமோ அவரிடம் இல்லை. அதிரடிப் படத்தின் முக்கியமான அம்சம் விறுவிறுப்பான திரைக்கதை. அது இந்தப் படத்தில் இல்லை.

# வலசை போகும் வண்ணத்துப் பூச்சிகள்!



பருவநிலை மாற்றங்களின் போது இலங்கையிலிருந்து வண்ணத்துப் பூச்சிகள் தமிழகத்துக்கு வலசை வருகின்றன என்ற அரிய தகவலை தமிழகத்தைச் சேர்ந்த சூழலியல் ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கின்றனர்.

விலங்கியல் மற்றும் தாவரவியல் பேராசிரியர்கள், பறவையி யலாளர்கள், சூழலியல் செயல்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் இணைந்து மதுரையில் சூழலியல் பேரவை என்ற அமைப்பை அண்மையில் உருவாக்கி உள்ளனர். மதுரையைச் சுற்றியுள்ள மலைகள், காடுகள், ஏரிகளில் உள்ள பறவைகள் மற்றும் இங்கு வலசை வந்து போகும் பறவைகள், பூச்சிகள் குறித்து கடந்த 11 மாதங்களாக இவர்கள் ஆய்வு நடத்தி வருகின்றனர். இதற்காக ஞாயிறு தோறும் 20 பேர் கொண்ட குழு மதுரையைச் சுற்றியுள்ள காடுகளில் அதிகாலை முதல் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

இதன்போதே இலங்கையைச் சேர்ந்த வண்ணத்துப்பூச்சிகள் மதுரைக்கு வலசை வருவதை அவர்கள் கண்டறிந்திருக்கின்றனர். அது தொடர்பான விளக்கமான, தெளிவான அறிக்கையை அவர்கள் இன்னமும் வெளியிடவில்லை என்றாலும் வண்ணத்துப் பூச்சிகள் வலசை வருவதை அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தமது ஆய்வு குறித்துப் பேசும் சூழலியல் பேரவையின் ஒருங்கிணைப்பாளரும் பறவையியலாளருமான என்.ரவீந்திரன் தெரிவித்ததாவது:

கீழை நாடுகளில் தகைவிலான் என்றொரு பறவை இனம் உண்டு. நமக்கு பருவ மழை தொடங்குவதற்கு முன்பாக அந்தப் பறவைகள் இங்கே வலசை வருகின்றன. அவற்றின் வரத்து அதிகமாக இருந்தால் அந்த ஆண்டும் மழைப்பொழிவு அதிகமாக இருக்கும். இதுபோன்ற கல்வியைத்தான் நாம் நமது பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். தமிழகத்தில் அரிதாகிவிட்ட லகுடு பறவை, கருடவாத்து, நீலகண்ட பறவை உள்ளிட்டவையும் மதுரை வனங்களில் இருப்பதை உறுதிப்படுத்தி இருக்கிறோம்.

பறவைகள் மட்டுமின்றி பருபலா வெள்ளையன், வெண்புள்ளி கருப்பன், மயில் அழகி, நீல வசீகரன் என 70 வகையான வண்ணத்துப் பூச்சிகளும் இங்கு உள்ளன. ஜூனிலிருந்து ஓகஸ்ட் வரை இலங்கையிலிருந்து 7 விதமான வண்ணத்துப் பூச்சிகள் தமிழகத்துக்கு வலசை வருகின்றன. மதுரை வனப்பகுதிக்கும் அவை வருவது ஆய்வில் கிடைத்திருக்கும் அரிய தகவல்" என்றார்.

தங்களுக்கான உணவுச் சூழல் வளமாக இல்லாவிட்டால் பறவைகள் அடுத்த இடம் தேடிப் போய்விடும். எனவே ஓரிடத்தின் இயற்கை வளத்தை ஆய்வு செய்ய வேண்டுமெனில் அங்கு வசிக்கும் பறவைகளை ஆய்வு செய்தால் போதுமானது என்று கூறுகிறார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பருக்கள் நீங்க எளிய வழிகள்

ஒரு கரண்டி தோடம்பழ பழச்சாறை, ஒரு கரண்டி குளிர்ந்த நீரில் கலந்து முகத்தில் தடவி அரைமணி நேரம் ஊறிய பின்னர் துடைத்து விடவும். சருமத்தில் உள்ள எண்ணெய் நீங்கி பருக்கள் வராமல் பாதுகாக்கும். அழகு நிலையங்களில் இதே சிகிச்சையை தோடம்பழ பீல் மாஸ்க் என்ற பெயரில் செய்கின்றனர்.

வேப்பிலைப் பொடி, துளசிப் பொடி, புதினாப் பொடி ஆகியவை தலா ஒரு கரண்டியும் முல்தானி மட்டி இரண்டு கரண்டிகளும் எடுத்துக் கொள்ளவும். மிதமான சுடுநீரில் அவற்றைக் கலந்து முகப்பருக்களில் தடவவும். இந்தக் கலவையைக் கண்களுக்கு அடியில் தடவக் கூடாது. பதினைந்து நிமிடங்கள் கழித்து முகத்தைக் கழுவிக் கொள்ளலாம்.

இரண்டு கரண்டி ஓமவல்லி இலைச்சாறுடன், ஒரு கரண்டி சிவப்பு சந்தனத்தைக் கலந்து பருக்கள் உள்ள இடத்தில் தடவி வந்தால் விரைவில் பருக்கள் தொல்லை நீங்கும்.

சோற்றுக் கற்றாழை சருமத்தை மிருதுவாக்கும் தன்மையுடையது. அவற்றின் நடுவில் இருக்கும் பசையை எடுத்து, அதில் சம அளவு நீரைக் கலந்து முகத்தில் தடவினால் நல்ல பலன் கிடைக்கும்.

ஒரு கரண்டி அறுகம்புல் பொடியும், குப்பமேனி இலைப் பொடியும் குளிர்ந்த நீரில் கலந்து பருக்களில் போடலாம்.

பன்னீர் ரோஜா மொட்டுக்களை எடுத்து, அது



நனையும் அளவு சூடான தண்ணீர் விட்டு, ஒரு மணி நேரம் ஊற வைக்கவும். பின்னர் அந்த நீரை வடிகட்டி முகத்தில் பூசி அரைமணி நேரம் ஊறிய பின் துடைத்து எடுக்கவும். சந்தனக் கட்டையை பன்னீர் விட்டுக் குழைத்து முகத்தில் தடவினால், பருக்களினால் ஏற்பட்ட வடுக்கள் மறையும்.

தினமும் உடற்பயிற்சி செய்ய வேண் டும். அவ்வாறு செய்யும் போது வெளியேறும் வியர் வையி னால்,துவாரங்களில்உள்ள அழுக்கு நீக்கி பருக்கள் வராமல் தடுக்கலாம். மேற் கூறிய எளியசிகிச்சை முறை களை அடிக்கடி செய்து வந் தால், பருக்களும் அதனால் ஏற்பட்ட வடுக்களும் மறைந்து முகம் பொலிவு பெறும்.

# கால் பாதத்தின் கருமையைப் போக்க


வெயிலில் முகம், கைக்கு அடுத்தப்படியாக பாதிக்கப்படுவது கால்கள் தான். கால்களில் உள்ள கருமையை நீக்கி, பாதங்களை மென்மையாக வைத்துக் கொள்ள என்ன செய்யலாம் என்பதை பார்க்கலாம்.

எலுமிச்சையை துண்டுகளாக்கி, அதில் உப்பு தூவி, அந்த எலுமிச்சை துண்டை கால்கள் மற்றும் பாதங்களில் 15 நிமிடம் தேய்த்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இதனைத் தினமும் தொடர்ந்து செய்து வந்தால் விரைவில் நல்ல பலன் கிடைப்பதைக் காண லாம்.

3 மேசைக்கரண்டி ஓட்ஸ் உடன், 2 மேசைக் கரண்டி சர்க்கரை மற்றும் 2 மேசைக்கரண்டி பால் சேர்த்து கலந்து, அதனைக் கொண்டு கால்கள் மற்றும் பாதங்களில் 15 நிமிடம் மென்மையாக ஸ்கரப் செய்து பின் வெது வெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இப்படி வாரம் 2–3 முறை செய்து வந்தால், கால்களில் உள்ள இறந்த செல்கள் நீங்கி, கால்கள் வெள்ளையாகவும், மென்மையாகவும் இருக்கும்.

தோடம்பழ தோல் பொடி மற்றும் ரோஸ் நீரை சேர்த்து கலந்து பேஸ்ட் செய்து, பாதங்களில் தடவி 15 நிமிடம் ஊற வைத்து, பின் வெது வெதுப்பான நீரில் மென்மையாக மசாஜ் செய்து கழுவ வேண்டும். இதனை தினமும் செய்து வந்தால் 1 மாதத்தில் நல்ல பலன் கிடைப்பதைக் காணலாம்.

# வட்டிலப்பம்



## தேவையான பொருள்கள்

பழைய புழுங்கல் அரிசி – 3 கப்
தேங்காய் துருவல் – அரை கப்
சீனி – 3/4 கப்
உப்பு – ஒரு சிட்டிகை
நெய் – கால் கப்
ரவா – கால் கப்
திராட்சை – 2 மேசைக்கரண்டி
முந்திரி – 12

புழுங்கல் அரிசியை 8 மணி நேரம் ஊற வைத்து எடுத்துக் கொள்ளவும். அரிசியைக் கழுவி அதனுடன் தேங்காய் துருவல் சேர்த்து நைசாக அரைத்து எடுக்கவும். அரைத்த மாவுடன் உப்பு, ரவா மற்றும் சீனி சேர்த்துக் கரைத்து வைத்துக் கொள்ளவும். முதல் நாளே அரைத்து வைத்து மறுநாள் செய்யவும். தாச்சியில்ஒரு மேசைக்கரண்டி நெய் ஊற்றி முந்திரி, திராட்சையைத் தனித்தனி யாக வறுத்து எடுத்துக் கொள்ளளவும். ஒரு தட்டில் நெய் தடவி குழிக்கரண் டியால் 3 கரண்டி மாவை ஊற்றி மேலே வறுத்த முந்திரி, திராட் சையை போடவும்.

இட்லி பானையில் தண்ணீர் ஊற்றி கொதிக்க விடவும். இட்லி பானையின் உள் ஏதேனும் ஒரு உயரமான பாத்திரத்தை வைத்து அதன் மேல் வட்டிலப்பத் தட்டை வைத்து மூடி 10 நிமிடம் வேக விட வும். வெந் ததும் வெளி யில் எடுத்து ஆறி ய தும் கத்தியை வைத்து முதலில் ஓ ர ங் க ளை ச் சுற்றிலும் எடுத்து விடவும். பின்னர் துண்டுகளாக் கவும். சுவையான வட்டலப்பம் ரெடி.





# ஸ்ரோபெரி பேஷியல்

நான்கு அல்லது ஐந்து ஸ்ரோபெரிப் பழங்களை ஒரு துணியால் கட்டி, அப்படியே பிழிந்து சாராக்கவும். இந்தச் சாற்றை முகமெங்கும் பூசவும். 20 நிமிடங்கள் கழித்து, குளிர்ந்த நீரில் கழுவவும். வாரத்துக்கு மூன்று முறை இதுபோல் செய்துகொள்வதால், முகத்தில் கருமை மறைந்து, நல்ல நிறத் தைக் கொடுக்கும். சூரிய ஒளியின் புற ஊதாக் கதிரால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கும்.

2–3 மேசைக்கரண்டி; அரைத்த ஸ்ரோபெரி பழத்துடன், 1 மேசைக் கரண்டி தேனை விட்டு கலந்து, முகத்துக்கத் தடவி, 20 நிமிடம் ஊற வைத்து, பின் கழுவ வேண்டும். இதனை வாரத்துக்கு ஒன்று அல்லது இரண்டு நாள்கள் செய்ய வேண்டும். இதனால் சருமமும் நன்கு அழகாகக் காணப்படும்.

ஒரு கிண்ணத்தில் அரை கப் வரும் அளவுக்கு ஸ்ரோபெரிகளைத் துண்டுகளாக நறுக்கிப் போட்டு, அதில் ஒரு கரண்டி புளித்த தயிரைச் சேர்த்து நன்றாக மசிக்கவும்.

இந்தக் கலவையை முகத்தில் பூசி, 10 நிமிடங்கள் அப்படியே விடவும். இந்த பேக், சருமத்தில் உள்ள அழுக்குகளை நீக்கும். பருக்கள் மறைந்து பளிச்சென முகம் மாறும்.

இளமையான முக பொலிவிற்கு இதில் உள்ள சாலிசிலிக் அமிலம் சருமத்தில் உள்ள இறந்த செல்களை அகற்றும். சருமத்தில் உள்ள பெரிய துளைகளைச் சிறியதாக்கி, தொங்கிய சருமத்தை இறுக்கும். சருமம் நன்கு இறுக்கத்தோடு, இளமைப் போன்று காணப் படுவதற்கு, 3–4 மேசைக் கரண்டி அரைத்த ஸ்ரோபெரியுடன், 1–2 மேசைக்கரண்டி தயிரைச் சேர்த்து கலந்து, சருமத்துக்குத் தடவி, 15 நிமிடம் ஊற வைத்து, பின் கழுவிட வேண்டும்.

சருமத்துளையில் உள்ள அழுக்குகள் முற்றிலும் நீங்க, அரை கப் அரைத்த ஸ்ரோபெரியுடன் 1 மேசைக் கரண்டி கார்ன் ப்ளாரை கலந்து, முகத்தைத் தடவி, 10 நிமிடம் ஊற வைத்து, பிறகு குளிர்ந்த நீரில் கழுவும் போது, மசாஜ் செய்து கொண்டே கழுவ வேண்டும். இதனால் முகத்தில் இருக்கும் கருமை நீங்கி, சருமம் நன்கு தெளிவாகப், பளிச்சென்று காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வாரம்

**06.09.2015 முதல் 12.09.2015 வரை**

## உங்களுக்கு எப்படி?



### மேடம்

சுக்கிரன், குரு, ராகு, புதன் ஆகியோர் நற்பலன் தருவர். உறவினர் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். குடும்பத்தில் சுபவிடயம் குறித்த பேச்சு நடக்கும். வீடு, வாகனத்தில் மராமத்துச் செலவு செய்வீர்கள். பிள்ளைகள் உங்களின் சொல்லுக்கு கட்டுப்படுவர். ஆரோக்கியம் மேம்படும். குடும்பத்துடன் விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். மனைவியின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சியும், இலாபமும் அதிகரிக்கும். பணியாளர்கள், எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள், படிப்பில் சிறந்து விளங்குவர். சிவன் வழிபாட்டால் நன்மை உண்டாகும்.



### இடபம்

செவ்வாய், சுக்கிரன் ஆகிய இரு கிரகங்களால் சுக்கிர மங்களயோகம் உண்டாகும். கேது, சனி பகவானின் அமர்வும் நன்மை தரும் விதத்தில் உள்ளது. சிந்தனையில் புதுமை பிறக்கும். புதிய முயற்சிகளில் துணிவுடன் ஈடுபடுவீர்கள். சகோதரர்களின் பாசம் கண்டு நெகிழ்வீர்கள். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும். பிள்ளைகளின் செயல்பாட்டைக் கண்டிப்பதில் பொறுமை தேவைப்படும். ஆரோக்கியம் மேம்படும். மனைவியின் நற்செயல் குடும்பத்துக்கு பெருமை தேடித் தரும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகி நல்ல முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள், எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கப் பெறுவர். பெண்கள், மனம் போல விரும்பிய பொருள் வாங்குவர். மாணவர்களுக்கு, நண்பர் விடயத்தில் கவனம் தேவை.



### கடகம்

சுக்கிரன், ராகு, குரு மூவராலும் நன்மை உண்டாகும். அவமதித்து பேசுபவரிடம் விலகுவது நல்லது. குடும்பச் செலவுக்கு தேவையான பணம் கிடைக்கும். வாகனத்தில் பராமரிப்புப் பணி மேற்கொள்வீர்கள். பிள்ளைகளின் எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். சொத்து பிரச்சி;னைக்கு பேச்சின் மூலம் சுமுகத் தீர்வு கிடைக்கும். மனைவி வழி உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ற வருமானம் கிடைக்கும். பணியாளர், புதிய நுட்பங்களை ஆர்வமுடன் அறிந்து கொள்வர். பெண்கள், குடும்பச் செலவைத் தாராள அளவில் நிறைவேற்றுவர். மாணவர்கள், பயனுள்ள பொழுதுபோக்கில் ஈடுபடுவர். துர்க்கையம்மன் வழிபாடு சகல வளமும் தரும்.



### மிதுனம்

சுக்கிரன், சூரியன், புதன் மூவராலும் அளப்பரிய நன்மை உண்டாகும். பேச்சில் வசீகரம் நிறைந்திருக்கும். புதியவர்களின் அறிமுகத்தால் உதவி கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமையும், மகிழ்ச்சியும் வளரும். பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வீர்கள். எதிரியின் கெடு செயல் பலமிழந்து போகும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சியில் ஈடுபட்டு இலாபம் காண்பீர்கள். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்க வாய்ப்புண்டு. பெண்கள், மகிழ்ச்சிகரமான வாழ்வு நடத்துவர். மாணவர்கள், படிப்பில் சிறந்து விளங்குவர். சூரியனை வழிபடுவதால் ஆரோக்கியம் பெருகும்.



### சிங்கம்

சுக்கிரன், சனி ஆகியோர் நற்பலன் தருவர். மனதில் துணிச்சல் பிறக்கும். கடந்த கால உழைப்புக்கான பலனைத் தற்போது அனுபவிப்பீர்கள். வீடு வாகன வகையில் வீண் செலவு அதிகரிக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். குடும்பத்துடன் அடிக்கடி விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள். தொழில், வியாபாரத்தில் முதலீட்டை அதிகப்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்களுக்கு, நிர்வாகத்தினரின் பாராட்டும், சன்மானமும் கிடைக்கும். பெண்கள், பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள், திட்டமிட்டுப் படித்து படிப்பில் முன்னேற்றம் காண்பர். வைரவர் வழிபாடு தொழிலில் வளர்ச்சி தரும்.



### கன்னி

சுக்கிரன், செவ்வாய் இருவரும் சுக்கிர மங்களயோகம் தரும் விதத்தில் ஆதாய ஸ்தானத்தில் உள்ளனர். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த நல்ல யோகம் கை கூடி வரும். புதியவர்களிடம் நெருக்கமாகப் பழக வேண்டாம். சகோதரர்களின் பாசம் கண்டு நெகிழ்வீர்கள். அலைச்சலால் உடல் அசதிக்கு ஆளாக நேரிடும். பிள்ளைகள் திறமையுடன் செயல்பட்டு பெருமை தேடித் தருவர். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் மந்தநிலை மாறி வளர்ச்சி கூடும். லாபம் உயரும். பணியாளர்கள், பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள், உறவினர்களுடன் சுற்றுலா செல்வர். மாணவர்கள், ஆசிரியரின் வழிகாட்டுதலை ஏற்று நடப்பர். தட்சிணாமூர்த்தி வழிபாடு மனத் தெளிவைத் தரும்.



### துலாம்

கேது, குரு, சூரியன் வியத்தகு நற்பலன் தருவர். எதிரி தொல்லை மறையும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். பூர்வீக சொத்து மூலம் வருமானம் அதிகரிக்கும். உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வீர்கள். வெளியூர் பயணத்தின் மூலம் இனிய அனுபவம் காண்பீர்கள். பிள்ளைகளின் தேவையை ஓரளவு நிறைவேற்றுவீர்கள். உடல் நலனில் அக்கறை கொள்வது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் போட்டி குறையும். வருமானம் உயரும். பணியாளர்களுக்கு, எதிர்பார்த்த பணிமாற்றம் கிடைக்கும். பெண்கள், தாய்வீட்டு உதவியைக் கேட்டுப் பெறுவர். மாணவர்கள், படிப்பிற்காக கூடுதல் நேரம் ஒதுக்குவர். லட்சுமி வழிபாடு செல்வ வளம் தரும்.



### தனுசு

சுக்கிரன், குரு, புதன், சனி கிரகங்களால் நன்மை அதிகரிக்கும். குடும்ப கருத்துவேறுபாடு நீங்கி ஒற்றுமை சிறக்கும். உறவினர் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். சாதுர்யமாகப் பேசி தேவைகளை நிறைவேற்றுவீர்கள். புத்திரரின் செயல்பாட்டை சரிசெய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவியின் ஆலோசனையால் முன்னேற்றம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களின் ஆதரவு கிடைக்கும். ஆதாயம் உயரும். பணியாளர்கள், எதிர்பார்த்த சம்பள உயர்வு கிடைக்கப் பெறுவர். பெண்கள், மனம் போல ஆடை, அணிகலன் வாங்குவர். மாணவர்கள், படிப்பில் முன்னேற்றம் காண்பர். நரசிம்மர் வழிபாடு நன்மையளிக்கும்.



### விருச்சிகம்

சுக்கிரன், சூரியன், புதன், ராகு அளப்பரிய நன்மை தருவர். சமூக மதிப்பு உயரும். புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். பொதுப்பணியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். வீடு, வாகனத்தில் பாதுகாப்பு நடைமுறையைப் பின்பற்றவும். பிள்ளைகளின் எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கில் சுமுகத்தீர்வு கிடைக்கும். மனைவியிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள், குறித்த காலத்தில் பணியிலக்கை நிறைவேற்றுவர். பெண்கள், உறவினர் வீட்டு சுபநிகழ்ச்சியில் பங்கேற்று மகிழ்வர். மாணவர்கள், ஆர்வமுடன் படித்து முதல்நிலை வகிப்பர். ஆஞ்சநேயர் வழிபாட்டால் நன்மை மேலோங்கும்.



### மகரம்

கேது, சந்திரன் இருவராலும் நன்மை உண்டாகும். எதிர்காலம் குறித்த சிந்தனை மேலோங்கும். நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவருக்கு இடம் தர வேண்டாம். புத்திரரின் நற்செயல் கண்டு பெருமை கொள்வீர்கள். எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் பறந்தோடுவர். மனைவியின் உடல் நலனுக்காக மருத்துவச் செலவு செய்ய நேரிடும். தொழில், வியாபாரத்தில் மந்தநிலை மாறி முன்னேற்றம் உண்டாகும். பணியாளர், சகபணியாளர்களுடன் நட்புணர்வுடன் பழகுவர். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காக பாடுபடுவர். மாணவர்கள், திட்டமிட்டுப் படித்து சிறப்பர். ஐயப்பன் வழிபாட்டால் தன்னம்பிக்கை வளரும்.



### மீனம்

சுக்கிரன், சூரியனால் நன்மை உண்டாகும். நண்பர் உதவிகரமாக செயல்படுவர். திட்டமிட்டு செயல்பட்டு இலக்கை எளிதில் அடைவீர்கள். பூர்வீகச் சொத்தில் வருமானம் கிடைக்கும். திருமணப் பேச்சில் முன்னேற்றம் ஏற்படும். தாயின் கருத்துக்கு மதிப்பளித்து நடப்பீர்கள். பிள்ளைகளுடன் கருத்துவேறுபாடு ஏற்படலாம். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் செயல்பாடு குடும்ப ஒற்றுமைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், சுறுசுறுப்புடன் செயலாற்றி நற்பெயர் காண்பர். பெண்கள், பணம், நகை இரவல் கொடுப்பது கூடாது. மாணவர்கள், படிப்பு தவிர பிற விடயத்தில் ஈடுபட வேண்டாம். சரஸ்வதி வழிபாடு வளர்ச்சி அளிக்கும்.



### கும்பம்

செவ்வாய், குரு, புதன் மூவரும் நன்மை வழங்குவர். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். புதிய முயற்சி வெற்றி பெறும். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாறுதல் உண்டாகும். புத்திரர், படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். எதிரிகளின் கெடு செயலை சமயோசிதத்தால் சரி செய்வீர்கள். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணிவிடயமாக வெளியூர் செல்வர். பெண்கள், குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள், நண்பர்களுடன் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எது சுத்தமான நீர்?

ஊரில் ஒரு வாரமாகக் கடுமையான மழை. ஊரெல்லாம் வெள்ளம் தேங்கிக் கிடந்தது. உடல்நலம் பாதிக்கப்படலாம் என்பதால் கொதிக்கவைத்து, ஆறவைத்த நீரையே குடிக் குமாறு சுகாதாரத்துறை பரப்புரை செய்தது. நிலா ரீச்சர் வீட்டிலும் கொதிக்க வைத்த குடி தண்ணீர் தான். ஆனால், கவினுக்கு அதைக் குடிக்கவே பிடிக்கவில்லை. அம்மா! கொதிக்க வைத்த நீர் சப் என்று இருக்கு. நீர் குடிச்ச மாதிரியே இல்ல. நான் கொதிக்க வைக்காத நீரையே குடிக்கிறேன், கொதிக்க வைச்ச நீர் வேணாம் என்று அடம்பிடித்தான். டேய்! வீதியெல்லாம் மழை வெள்ளம் தேங்கிக் கிடக்கு. இந்த நேரத்தில நீர் மூலமாகத்தான் நோய்கள் பரவும். அதனால கொதிக்க வைச்ச நீர் குடிக்கிறது தான் உடம்புக்கு நல்லது. இல்லை என்றால் உனக்குத்தான் உடம்பு கெட்டுப் போகும், என எச்சரித்தாள் நிலா. சுவையே இல்லாத இந்த நீரை எப்படித்தான் குடிக்கிறீங்களோ! என்னால முடியாதம்மா என்று மீண்டும் அடம் பிடித்த கவின், சாதாரண நீரை எடுத்துக் குடிக்க முயன்றான்.



சரி சரி! உனக்குப் பிடிச்ச நீரையே நீ குடி. அதுக்கு முன்னாடி சுத்தமான நீர் வேணுமா, இல்லை என்றால் சுவையான நீர் வேணுமா என்று முடிவு பண்ணு என்றார். எனக்கு சுத்தமான நீரும் வேணும், அது சுவை யாவும் இருக்கணும் என்றான் கவின். சுத்தமாக இருந் தால், சுவை இருக்காது. சுவை இருந்தால் சுத்த மாக இருக்காது. இப்போது உனக்கு என்ன வேணும் என்று சொல்லு எனக் கூறி கவினைக் குழப்பினார் நிலா ரீச் சர். அம்மா நீங்கள் சொலவது எதுவுமே எனக்குப் புரிய வில்லை என்றான் கவின். சுத்தமான நீருக்கு சுவையோ, நிறமோ, மணமோ இருக் காது என்றார் நிலா ரீச்சர். குடி தண்ணீர்க் குழாயில் வரும் நீர் சுவையாகத் தானே இருக்கு? அப்போ அது சுத்தமானது இல்லையா? சுவையா இருக்கும் நீர் கொதிக்க வைச்சதுமே எப்படி சுவை குறையுது? என்று கேள்விகளை அடுக்கினான் கவின்.

பொதுவா சாதாரண நீரில் பலவகையான தாதுப் பொருள்கள் கரைந்திருக்கும். அந்த நீர் குடிக்கும்போது, அதில் கரைந்திருக்கும் தாதுப் பொருள்களால் நீருக்குச் சுவை கிடைக்கும். அதே நீரை நன்றாகக் கொதிக்க வைத்தால், தாதுப் பொருள்கள் நீரிலிருந்து பிரிந்து அடியில் படிந்து விடும். அந்த நீர் ஆற வைத்து வடிகட்டி குடிக்கும் போது, தாதுப் பொருள்கள் இல்லாத நீரின் சுவையும் குறைந்து விடும். அத்துடன் நீரைக் கொதிக்க வைக்கும்போது, அதில் கரைந்திருக்கும் பக்ரீரியா போன்ற நுண்ணுயிர் கள் அழிக்கப் படுவதால், அந்த நீர் முன்னதை விட கூடுதல் சுத்தமாக மாறும் என்றார் நிலா ரீச்சர். அம்மா சொன்ன விளக்கத்தால் திருப்தியடைந்த கவின், எனக்கு சுவையில்லாத, சுத்தமான தண் ணியையே கொடுங்கள் என்றான்.



கே.அச்சுதன்
தரம் 9ஈ
யாழ்.இந்துக் கல்லூரி.



செ.நியந்தரி,
தரம் 3சி
வ/சைவப்பிரகாச ஆரம்பப் பாடசாலை



சி.பிருத்வி,
வளர்மதி முன்பள்ளி, கொக்குவில்.



செ.தீர்க்கஜன்
தரம் 8 சி,
கனகரத்தினம் மத்தி மகா.வித்தி.

# மிருகக் காட்சிச் சாலை

அம்மா அப்பா என்னை அழைத்துச் சென்றார்
அங்கே ஓரிடம்
அங்கிருந்த குயிலும் மயிலும்
பாட, ஆடத் தொடங்கின
பொல்லா நரியும் புனுகுப் பூனையும்
எல்லாம் இருந்தன
குட்டி மான்கள் ஒட்டைச்சிவிங்கி
கூட நின்றன
குரங்கு என்னைப் பார்த்துப் பார்த்து
குர் குர் என்றது
யானை ஒன்று காதைக் காதை
ஆட்டி நின்றது
முதலை தலையைத் தூக்கிப் பார்த்து
மூச்சு விட்டது
கரடி கூட உறுமிக் கொண்டே
காலைத் தூக்கிற்று
சிங்கம் புலி எல்லாம் கண்டேன்
கண்டும் பயமில்லை
சூரனைப் போல் நின்றிருந்தேன்
சிறிதும் அஞ்சவில்லை



சென்று வந்த இடம் உனக்குத் தெரியவில்லையா?
மிருகக் காட்சி சாலைதானே வேறு ஒன்றுமில்லை!
-வளர்மதி



# பூனையும் பாலும்

ஒரு ஊரில் இரண்டு பூனைகள் இருந்தன. அவை இரண்டும் நட்புக்கு இலக்கணமாகத் திகழும் பூனைகள். அந்த ஊர் மக்களும் அந்தப் பூனைகளுக்கு அன்றாடம் பாலும் சோறும் வைத்து அன்போடு வளர்த்து வந்தார்கள். மேலும் பழைய வீடுகள் என்பதால், அங்கு எலிகளும் அதிகம் இருக்கும். அதனால், அந்த எலிகளை வேட்டையாடி அவற்றையும் உண்டு வந்தன. திடீரென அந்த ஊரில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக ஊர் மக்கள், பிழைப்புக்காக அந்த ஊரைவிட்டு வேறொரு ஊருக்குச் சென்று விட்டனர். அதுவரை எந்தவிதமான தடங்களும் இல்லாமல் உணவு கிடைத்து உண்டு மகிழ்ந்து வந்த பூனைகளுக்கு, உணவளிக்க அந்த ஊரில் யாரும் இல்லை. பசியால் வாடின. இதனால், அவைகளும் ஊரை விட்டுச் செல்லத் தீர்மானித்து, அந்த ஊரில் இருந்து சில மைல்கள் தள்ளி இருக்கும் நகருக்கு அவை குடியேறின. அங்கு அந்தப் பூனைகளைப் பார்த்த ஒரு சிறுவன் அவற்றின் மேல் இரக்கம் கொண்டு, அவற்றுக்குப் பாலும், சிறிது ரொட்டியும் கொடுத்தான். அந்த உணவைப் பார்த்ததும், அந்த இரண்டு பூனைகளுக்கும் கொண்டாட்டம், மனமகிழ்ச்சியும் அந்த உணவை இரு பூனைகளும் உண்டு மகிழ்ந்தன. சிறுவன் வெளியே செல்லும்போது, அந்தப் பூனைகளும் அவன் பின் னாலேயே சென்றன. இதனைக் கவனித்த அந்தச் சிறுவன், அந்தப்பூனைகளை அன்போடு தூக்கிக் கொண்டு, தனது வீட்டுக்குச் சென்றான். அந்தச் சிறுவன் அந்தப் பூனைகளை அன்போடு வளர்க்கத் தொடங்கினான். அவனது வீட்டில் இருந்து சில வீடுகள் தள்ளி, ஒரு பால் விற்பனை செய்யும் கடை இருந்தது. வீட்டில் பால் இல்லாத சமயங்களில் அங்கிருந்து பால் வாங்கி வந்து அந்தப்பூனைகளுக்குக் கொடுப்பான்.

ஒருசமயம், அந்தக் கடைக்கு அந்தப் பூனைகளைத் தூக்கிக் கொண்டு சென்றான். அங்கே, ஒருபெரிய அகண்ட தாச்சியில் பால் கொதித்துக் கொண்டிருந்தது. அங்கே வரும் வாடிக்கையாளர்களுக்கு, ஒரு கண்ணாடி டம்ளரில் பாலை ஊற்றி விற்பனை செய்து கொண்டிருந்தார் அந்தக் கடையின் உரிமையாளர்.

அந்தக் கடைக்குப் பூனைகளைத் தூக்கிச் சென்ற சிறுவன், அந்தச் தாச்சியில் இருந்து சற் றுத் தொலைவில் இருந்தே, பால் வாங்கினான். வாங்கிய பாலை, அந்தக் கடையில் இருந்து சில அடி தூரம் சென்று, அப்பூனைகளுக்கு ஊற்றினான். அவைகளும் உண்டு மகிழ்ந்தன. அன்றிரவு, இருபூனைகளும் பேசிக்கொண்டன. முதல்பூனை இரண்டாவது பூனை யைப் பார்த் து, அந்தச் சிறுவன் நம்மை இன்று ஒரு கடைக்கு தூக்கிச் சென்றானே! அந்தக் கடையில் பார்த்தாயா, ஒரு அகண்ட பெரிய தாச்சியில் எவ்வளவு பால் இருக்கிறது. இதுநாள் வரை, ஒன்றிரண்டு டம்ளரில் தான் பால் கிடைத்து வந்தது. ஆனால் அங்கே பார்த் தால், எவ்வளவு பால், அந்தப் பால் முழு வதையும் குடித்தால், எப்படி இருக்கும் என்றது. அதற்கு இரண்டாவது பூனை, உனக்கெதற்கு இந்த வீண் ஆசை, நமக்குப் போதுமான அளவு உணவை அந்தச் சிறுவன் நமக்குக் கொடுக்கிறானே! அது போதாதா? ஏதற்கு இப்படி பேராசை, இந்தப் பேராசையெல்லாம் வேண்டாம். என்றது.

இதைக்கேட்ட அந்த முதல் பூனையோ, போடா, நீ ஒரு சரியான முட்டாள். இன்னொரு முறை அந்தக் கடைக்குச் செல்லும்போது அந்தச் தாச்சியில் இருக்கும் அவ்வளவு பாலையும் நானே குடித்துவிடுகிறேன் பார் என்றது. முதல் பூனையின் பதிலைக்கேட்ட இரண்டாவது பூனை அமைதியானது.

மறுநாள், அந்தச் சிறுவன் தங்களை அழைத்துப்போவான் என்று நினைத்திருந்த அந்த முதல் பூனைக்கு ஏமாற்றமே மிஞ்சியது. காரணம், அந்தச் சிறுவன், பாடசாலைக்குச் செல்லும் முன் அந்தப் பூனைகளுக்கு, அவனே சென்று அந்தக் கடையில் இருந்து பாலை வாங்கி வந்து பூனைகளுக்கு ஒரு தட்டில் ஊற்றி வைத்திருந்தான். இரண்டாவது பூனையோ, சந்தோஷமாக அந்தப் பாலைக் குடித்தது. ஆனால் முதல் பூனையோ, தன்னை அந்தக் கடைக்கு அந்தச் சிறுவன் அழைத்துச்செல்லாததால், கோபத்துடனும், ஏமாற்றத்துடனும் அந்தப் பாலை உண்ணாமல் பட்டினி கிடந்தது. இரண்டாவது பூனை, தனது பங்குப் பாலை குடித்து விட்டு, அந்த முதல் பூனையைப் பால் குடிக் க அழைத்தது. ஆனால் அந்த முதல் பூனை வர மறுத்தது. பொறுத்திருந்து பார்த்த அந்த இரண்டாவது பூனை, மீதமிருந்த பாலையும் குடித்து முடித்துவிட்டது.

அடுத்த நாள் அரச விடுமுறை என்பதால், அந்தச் சிறுவனுக்கும் பாடசாலை விடுமுறை விடப்பட்டிருந்தது. அந்தச் சிறுவனைப் பார்க்க வந்த நண்பன், அந்தப் பூனைகளைப் பார்த்தான், எவ்வளவு அழகாக இருக்கிறதே! என்று பூனைகளை தூக்கி வைத் துக்கொண்டு அதனோடு விளையாட ஆரம்பித்த போது அந்தச் சிறுவனும் வந்தான். வா வெளியில் போய் வருவோம் என்று கூறி, இருவரும் ஆளுக்கொரு பூனையைத் தூக்கிக் கொண்டு அருகில் உள்ள கடைக்குச் சென்றனர். வழக்கம் போல் அந்தப் பூனைகளுக்கு அந்தச் சிறுவன் பாலை வாங்கிக் கொண்டிருந்தான். தனது நண்பனுக்கும் தனக்கும் வாங்கினான். அவ்விருவரும் கொதிக்கும் பால் என்பதால் தாங்கள் வைத்திருந்த அந்தப் பூனையை கீழே விட்டுவிட்டு, பாலை வாங்கிக் கொண்டு அருந்திக் கொண்டிருந்தனர்.

கீழே விட்டுவிட்ட பூனைகளில் முதலாவது பூனைக்கோ ஆசை விடவில்லை, அந்த தாச்சியில் இருக்கும் அத்தனை பாலையும் குடித்து விட வேண்டும் என்ற வெறியோடு, அனைவரும் ஏமாறும் சமயத்தில் அந்தக் கடைக்குள் புகுந்து அங்கிருந்த அலுமாரியில் ஏறி, அந்த தாச்சியில் குதித்தது. தாச்சியில் கொதித்துக் கொண்டிருந்த அந்தப் பாலில் குதித்ததால், அதன் உடல் வெந்துபோனது அதனால் ஏற்பட்ட வலியினால் பூனை அலறித் துடித்தது. உடனே கடை உரிமையாளர், ஒரு நீண்ட கரண்டியில் அந்த பூனையைத் தூக்கி தரையில் போட்டு விட்டு, அந்த சிறுவர்களை, பார்த்து ஏன் இப்படி பூனைகளை இந்தக் கடைக்கு கொண்டு வந்தீர்கள்? என்று திட்டிக் கொண்டிருந்தார். அவ்வழியே வந்த அந்தச் சிறுவனின் தந்தைக்கு விவரம் தெரியவர, சிறுவனை அடித்து விட்டு, அந்த பாலுக்குரிய நஷ்டத்துக்கு ஈடு செய்யும் பணத்தையும் கொடுத்து விட்டார். பூனை விழுந்த அந்தப் பாலைக் கடைக்காரர் கீழே கழிவு நீர்த் தொட்டியில் ஊற்றிவிட்டார். வாண லில் இருக்கும் கொதிக்கும் பாலில் குதித்த பூனையோ தனது உடலில் ஏற்பட்ட காயங் களாலும் வலியினாலும் துடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பூனையைப் பார்த்த இரண்டாவது பூனை மெதுவாக வந்து, நான் அப்போதே சொன்னேன் நீ கேட்டா யா! நமக்குப் போதுமான உணவை அந்தச் சிறுவன் மூலமாக நமக்குக் கிடைத்து வந்ததே! இப்போது பார் நீ பேராசை பட்டு, அந்த தாச்சியில் விழுந்து இப்படி, உனது உடலை காயப்படுத்திக்கொண்டாயே! என்றது. அப்போது, முதல் பூனை, நீ சொனனது சரி தான் நணபா! நமக்கு கிடைத்ததை வைத்துக் கொண்டு மன நிறைவோடு இல்லாமல் இப்படி பேராசைப்பட் டேனே! என்று கூறிய போதே! அதன் உயிர் பிரிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் உதிராத அந்த ஒரேயொரு சொல்!



மு. இராமனாதன்,
ஹொங்கொங்

இந்த மாதத்தின் மூன்றாம் நாளில் பீஜிங் விழாக்கோலம் பூண்டிருந்தது. தியானன்மென் சதுக்கத்தில் 12,000 துருப்புகளின் அணிவகுப்பு நடத்தப்பட்டது. தற்காப்புப் போரின் வெற்றியை அவர்கள் கொண்டாடிக்கொண்டிருந்தார்கள்.

70 ஆண்டுகளுக்கு முன்னால், 1945 செப்ரெம்பர் இரண்டாம் நாள் டோக்கியோவில் நங்கூரமிடப்பட்டிருந்த அமெரிக்கப் போர்க் கப்பலில், ஜப்பானியர்கள் சரணாசு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.

அத்துடன், 1937 முதல் 1945 வரை, எட்டு ஆண்டுகள் ஜப்பானியர்கள் சீனாவின் மீது தொடுத்த போரும் முடிவுக்குவந்தது. அது முதல் செப்ரெம்பர் மூன்றாம் நாளை போரின் நினைவு நாளாக சீனா கொண்டாடி வருகிறது. இந்தப் போரில் ஒன்றரைக் கோடி சீனர்கள் மாண்டுபோயினர். 8 கோடிப் பேர் அகதிகளாயினர். எனினும், சீனர்கள் விடாமுயற்சியுடன் ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்கொண்டனர்.

இன்று சீனா அவர்களை நினைவு கூர்கிறது. அதே வேளையில், ஜப்பான் தனது ஆக்கிரமிப்புக்காக மன்னிப்புக் கோரவில்லை என்கிற கோபமும் பீஜிங்கில் கனன்று கொண்டிருக்கிறது.

**ஏகாதிபத்திய ஜப்பான்**

ஜப்பான் என்றதும் பலருக்கும் ஹிரோஷிமாவின் மீது குண்டு வீசப்பட்டதுதான் நினைவு வரும். அது போரின் கடைசி அத்தியாயம். அதன் முந்தைய அத்தியாயங்கள் அனைத்திலும் ஜப்பான் பாதிக்கப்பட்ட நாடாக அல்ல, ஆக்கிரமிப்பாளராகவே இடம்பெறுகிறது. 1895இல் கொரியாவிலும் தாய்வானிலும் கால்பரப்பியது ஜப்பான். 1905 இல் சீனாவின் கிழக்குப் பகுதியான மஞ்சூரியாவில் செல்வாக்கு செலுத்திய ரஷ்யாவைத் தோற்கடித்தது. 1931 முதல் சீனாவைத் தாக்கத் தொடங்கியது. 1937இல் போர் தீவிரமடைந்தது. பெய்ஜிங், ஷாங்காய் நகரங்கள் வீழ்ந்தன. அதே ஆண்டின் இறுதியில், அப்போது சீனாவின் தலைநகராக இருந்த நான்ஜிங்கைக் கைப்பற்றியது. அடுத்த ஆறு வாரங்களில் நிகழ்ந்தவை,



வரலாற்றில் நான்ஜிங் படுகொலை என்று குறிக்கப்படுகிறது.

ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகக் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 3 லட்சம் வரை இருக்கும் என்கின்றனர் வரலாற்றாளர்கள். வெ. சாமிநாத சர்மா தனது சீனாவின் வரலாறு எனும் நூலில் இப்படி எழுதுகிறார்: "இருவர் இருவராக மணிக்கட்டுகளை இரும்புக் கம்பிகளால் இறுக்கிக் கட்டிச் சுட்டுக் கொன்றார்கள். துப்பாக்கி முனையால் குறிபார்த்துக் குத்தும் பயிற்சி பெறுவதற்காக, சிறைபட்ட சீனச் சிப்பாயகளின் கண்களைக் கட்டிவிட்டு அவர்களை உபயோகப்படுத்தினார்கள். பச்சைக் குழந்தைகளை ஆகாயத்திலே தூக்கிப்போட்டுக் கீழே துப்பாக்கிக் கத்தியை நீட்டினார்கள். ஆயிரக் கணக்கான சீனப் பெண்கள் பாலியல் அடிமைகளாக்கப்பட்டனர். இவர்களைச் சுகப் பெண்டிர் என்றழைத்தது ஜப்பானிய ராணுவம். ஆனால் இழப்புகளைப் பொருட்படுத்தாமல் சீனா விடாப்பிடியாகப் போராடியது."

1941இல் அமெரிக்காவின் முத்துத் துறைமுகத்தை தாக்கியது ஜப்பான். அடுத்த மூன்று மாதங்களில் வியட்நாம், லாவோஸ், கம்போடியா, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், மியன்மார், எல்லாம் ஜப்பான் வசமானது. இந்தத் தென்கிழக்காசிய நாடுகள் பிரான்ஸ், பிரிட்டன், டச்சு, அமெரிக்க நாடுகளின் காலனிகளாக இருந்தன. அதுவரை சீனாவின் எதிரியாக மட்டுமே கருதப்பட்டுவந்த ஜப்பான், நேச நாடுகளின் எதிரியானது. 1943 முதல் அமெரிக்காவிடமும் பிரிட்டனிடமும் ஜப்பான் தோல்விமுகம் காணத் தொடங்கியது. 1945 ஓகஸ்ட் 6இல் அமெரிக்கா, ஹிரோஷிமா நகரின் மீது அணுகுண்டு வீசியது.


ஓகஸ்ட் 15இல் சரணடைவதாக அறிவித்தார் ஜப்பானியப் பேரரசர். சீனா நிகழ்த்திய போரின் முக்கியத்துவம் வரலாற்றில் முறையாகப் பதிவாகவில்லை என்கிறார் ஒக்ஸ்போர்டு பேராசிரியர் ரானா மிட்டர். சமீபத்தில் வெளியான மறக்கப்பட்ட சகா (Forgotten Ally) என்கிற நூலில் மிட்டர் சொல்கிறார், போர் நடந்த எட்டு ஆண்டுகளில் சாதரண சீனக் குடிமகன் தினசரி சாவைச் சந்திக்க வேண்டியிருந்தது. சீனாவின் கடுமையான எதிர்ப்பு இல்லாமல் இருந்திருந்தால் ஜப்பான் 1938இலேயே சீனாவைக். கைப்பற்றியிருக்கும். அதன் கவனம் தென்கிழக்காசியாவின் மீது அப்போதே திரும்பியிருக்கும். சீனா பலவீனமாக இருந்திருந்தால் பிரிட்டிஷ் இந்தியாவைக் கைப்பற்றுவதும் ஜப்பானுக்குச் சாத்தியமாகியிருக்கும்.

**ஜெர்மனியும் ஜப்பானும்**

இரண்டாம் உலகப் போருக்குப் பிற்பாடு, ஜெர்மனி தனது நாஜித் துருப்புகளின் சகல அராஜகங்களுக்கும் பாதிக்கப்பட்ட நாடுகளிடம் மன்னிப்புக் கோரியது; இழப்பீடுகளும் வழங்கியது. நேட்டோ, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அமைப்புகள் எதிரிகளை இணைத்தன. மாறாக, ஆசியாவில் அப்படியான இணக்கம் ஏற்படவில்லை.

(18 ஆம் பக்கம் பார்க்க)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கண. மகேஸ்வரன்

# நெருப்பை விழுங்கியவள்!

1

**"இதென்ன காரியம் செய்துபோட்டியள்...? நீங்களும் ஒரு குமர்ப்பிள்ளையை வைச் சுக்கொண்டு..... கொஞ்சமெண்டாலும் நாகரிகமாய் நடந்திருக்கலாம்..."**

**ட்றிங்.....**ங்... ட்றிங்...ங்...
செவிப்பறை அதிர ஹோலிங்பெல் அலறி யது.
அதைவிட வேகமாக அனித்தாவின் கேள்வி நரம்புகள் அதிர்ந்து மூளைக்குச் செய்தி பரப்பின.
மனது படபடவென்று அடித்துக்கொண்டது. தமிழ்ச் சினிமாவின் ஒவ்வொரு பிரேமும் அங்குலம் அங்குலமாக விரிந்து மண்டைக் குள் அழுத்தியது.
அப்பாவும் அம்மாவும் அக்ஸிடன்ரில மாட்டி கொஸ்பிட்டலில அட்மிட் பண்ணி யிருக்கு... சீக்கிரம் வெளிக்கிடு...!
....ச்சீ.... அழைப்பே பொய்யானது... அப்பா அம்மா சுகத்தோடிருக்க நீதான் மாட்டுப் படவேணும்....
அவள் உள்மனம் எச்சரித்தது..
என்னதான் தலைகால் போகிற அவசரமாக இருந்தாலும் கதவைத் திறக்காதே. கட்ட ளையை மீறாதே!
தன் நிலைப்பாட்டில் பிடிவாதமாக நின்றாள் அனித்தா.
ட்றிங்...ங்...ங்... ட்றிங்...ங்...ங்...
தொடர்ந்து ஹோலிங்பெல்லின் அழுத்தம், கர்ண கடூரமாய் ஒலித்துக் கொண்டே யிருந்தது.
என் வாழ்விலும் வில்லன் புகுந்து விட் டானோ..?
இனி நான் பிழைக்கவே மாட்டேனா..?
கட்டிக்காத்த இளமையும் கற்பும் இன்றோடு கனவாக காற்றோடு காற்றாக கலந்து சிதைந்து....
மனம் சீலம் சீலமாகச் சிதறியது.
அப்பா படித்துப் படித்துச் சொன்னார்.
"பிள்ளை, காலம் கெட்டுப்போய் கிடக்கு. எமன் எந்த ரூபத்திலும் வருவானோ, அதே மாதிரி மனித மிருகங்களும் என்ன வேயித் திலும் வரும். நாங்கள்தான் கவனமாயி ருக்கவேணும். கற்பெனப்படுவது, ஒரு வனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற புனித உறவுதான். பெண்ணுக்கு மட்டு மல்ல, ஆணுக்கும் அதுதான்... நீயும் வளர்ந்த பிள்ளை. இதுக்குமேல சொல்லத் தேவை யில்லை எண்டு நினைக்கிறன்!"
ஒரு வளரிளம் பருவ மகளுக்கு புத்திமதி யாக, அப்பா என்றோ ஒருநாள் சொன் னார்.
பிறிதொரு சமயம் தன் நண்பரொருவருக் குப் பகிடிபோல சொன்னார்.
"என்ன காணும்.... நான் மானஸ்தன். ஒரு மான ஈனம் எண்டு வந்திட்டால், பெத்த மகள் எண்டும் பார்க்கமாட்டன். வெட்டிப் புதைச்சு போட்டு நானும் தூக்குப் போட்டுக் கொண்டு செத்துப்போயிடுவன்... ஓய்...!"
யாருடன் என்ன கதைப்பது, எப்படிக் கதைப்ப தென்றெல்லாம் அப்பா யோசிக்கமாட்டார். எதோ வாய்க்கு வந்தவாறெல்லாம் கொட் டித் தீர்த்து விடுவார்.
அவைகூட அவளுக்கான எச்சரிக்கை அஸ் திரங்கள் என்று, அவள் தனக்குள் எண்ணி அச்சமடைந் தாள். அந்தச் சந்தர்ப்பங் களில் அம்மா அவரைக் கடிந்து கொண்டு ஏச்சு வாங்கிக் கட்டிக்கொண்டதும் உண்மை.
அதே நண்பர், சோரம் போன தன் மகளை மன்னித்து, குடும்ப அங்கத்தினராயச் சேர்த் துக்கொண்டு வெளியே மூச்சுவிடாமல் இருந்துவிட்டு, நீண்ட நாள்களின் பின் ஒருநாள் அப்பாவிடம் வந்தார்.
அன்று அப்பா ஆடிய ஆட்டமும், பூண்ட ஆவேச கோலமும் இருக்கிறதே... அப்பப்பா, இன்று நினைத்தாலும் நெஞ்சு வெடித்துவிடும்.

வேட்டியை மடித்துச சண்டிக்கட்டாய்க் கட் டிக்கொண்டு, சால்வையை உதறிக் கையில் எடுத்துக்கொண்டு போட்டாரே ஒரு அட்ட காசம்....
"நீயெல்லாம் ஒரு மனுசன்... உனக்கொரு பெண்டாட்டி... பிள்ளையள் ஹே... சீ... தூ! போடா வெளியில... இனி என்ர முகத்திலும் முழியாதை... ஓடடா, நாயே...!"
மனிதர் வெட்கித் தலை குனிந்தவராய் மறு பேச்சின்றி திரும்பி நடந்தபோது, பின்னாலே போய், அவர் முகத்திலறைந்தாற் போல் செவிப்பறை அதிர தெருப்படலையை அடித்துச் சாத்திவிட்டு வந்துதான் சால் வையை உதறி மீண்டும் தோளில் போட்டுக்கொண்டார்.
"மானங்கெட்ட பிறப்புக்கள்... இதுகளெல்லாம் சிநேகிதங்களெண்டு..."
"இதென்ன காரியம் செய்துபோட்டியள்...? நீங்களும் ஒரு குமர்ப்பிள்ளையை வைச் சுக்கொண்டு..... கொஞ்சமெண்டாலும் நாகரிகமாய் நடந்திருக்கலாம்..."
அம்மா அப்படி ஒரு வார்த்தை பேசியது தான் தாமதம், சாமியுருவேறினாற்போல் சன்னதங்கொண்டு ஆர்ப்பரித்தார்.
"ஒரு பயல் என்ரை விரல மடக்கட்டும் பார்ப்பம்? மயிரிழந்தால் உயிர்தரியாக் கவரிமானடி எங்கட பரம்பரை. குலத்துக்கு இழுக்காக ஒரு கோடரிக் காம்பைத் தானும் நான் விட்டு வைக்கமாட்டேன்!"
முன்னொருபோது பகிடியாகச் சொன்ன அதே வார்த்தையை வேறு விதமாக அதே வாயால் அன்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னபோது அனித்தாவே ஒரு கணம் வெலவெலத்துப் போனாள்.
தானே பிழைவிட்டது போலவும், அதைத் தகப்பனுக்கு மறைத்து வைத்து மறுகுவது போலவும் விதிர்விதிர்த்துப்போனாள்.
இந்தத் தலையடி எல்லாம் தனக்கில்லாமல் வேறெவர்க்காக?
தன் மகள் மீதே இவருக்கு நம்பிக்கையில் லையா?
அல்லது இதுகூட அவளைப் பொறுக்கவொ ஒரு வகைத் தாழ்வுச் சிக்கல் தானா?
தன்னை நம்பாதவனதானே இலகுவில் வேறொருவரையும் நம்பமாட்டான்.

அவர் நல்லதுக்காகதான் சொல்லுகிறா ரெண்டு எனக்கு நன்றாகவே விளங்குகிறது.
ஆனால், என்மீது ஏன் அப்பாவுக்கு இவ் வளவு அவநம்பிக்கை? ஊஹூம்... இது என்ன பைத்தியக்காரத்தனம்? குற்றம் இழைத்தால் அல்லவா குன்றிப்போக வேண்டும்.
இதற்காகவெல்லாம் நான் கோபிக்க வேண் டிய தேவைதான் என்ன? அவ ரது சுபாவம் அவரை அவரது குணாம் சங்களோடை ஏற் றுக்கொள்ள வேண்டியதுதான்.
அன்றைக்கு அனித்தா, தனக்குத்தானே கேட் டுக்கொண்ட கேள்விகள் விசாரங்கள் அவை.
இன்று இந்த விடிகாலையில் முறட்டுத்தன மாக ஹோலிங் பெல்லை இடைவிடாது அழுத்தும் அந்த நிகழ்கால வில்லன் யாரா யிருக்கும்?
மனது பட படவென்று அடித்துக்கெண்டது.
எண்ணச் சுழலில் நீண்ட ஒரு வாழ்க்கைப் பேராட்டத்தையே இந்தச் சில நொடிகளுக் குள் கணக்கிட்டு அனுபவித்தாள்.
ட்றிங்.. ட்றிங்.. ட்றிங்.. ட்றிங்.. ங்...
என்ன இது? மனச்சாட்சியே இல்லாத பிறப் புக்கள்.
அலுத்துக்கொண்டாள் அனித்தா.
ஹோலிங்பெல் இருக்கிறது என்பதற் காக, அதை இவ்வளவு நேரம் அழுத்தித்தான் ஆக வேண்டுமா? ஒரு சொல் பெயர் சொல்லிக் கூப் பிட்டாலாவது, யாருடைய குர லென்று அனுமானித்துவிடலாம்.
இப்படி ஒரு எண்ணம் உதயமான போதே, சட்டென்று அவள் மூளை வேறு விதமாகச் சிந்திக்கத் தொடங் கியது.
யாராவது குழந்தைகள், பூட்டியிருக் கிற வீடுதானேயென்று தெரிந்து கொண்டு விளை யாட்டாக அடித்துக் கொண்டிருப்பார்களோ, என்னவோ?
அப்படியொரு எண் ணம் புதிதாக நெஞ் சில் முகிழ்த்ததும், மனத்தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, மிக ஜாக்கிரதையாக ஒவ்வோரடியாக எடுத்து வைத்து, மெல்ல நகர்ந்து அறையை விட்டு ஹோலுக்குள் வந்தாள்.
அதே விதமாக பதுமை யாய் நடந்து, ஜன்னல் விளிம் பில் மெல்லக் காலூன்றி தலையை உயர்த்தி எட்டிப்பார்த்த வள், தீயை மிதித்த வள் போல் துவண்டு துடிதுடித் தாள்.
ஸன்ஸெட்டுக்கும் கீழே கட்டியிருந்த அரைச் சுவரில் [illegible] [illegible]ன்!
[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் உதிராத அந்த ஒரேயொரு சொல்!

(17 ஆம் பக்க தொடர்ச்சி)

ஜெர்மனி தனது போர்க் குற்றங்களை மறைக்க முயலவில்லை. அவுஷ் விட்ஸ் கொலை முகாம்களுக்கு யூதர்கள் சரக்கு ரயிலில் மிருகங் களைப் போல் அடைத்து அனுப்பி வைக்கப்பட்டதைச் சித்திரிக்கும் வெண்படிகப் பிரதிமை ஜெர்மனியில் நிறுவப்பட்டிருக்கின்றது.
சில இடங்களில் குடியிருக்கும் வீட்டின் வாசலில்கூட "இங்கே வாழ்ந்த யூதர்கள் தியா குண்ட்மான், லினா குண்ட்மான் 1943இல் முன்பனிக் காலத்தில் அவுஷ்விட்ஸ் அனுப்பப் பட்டு, அங்கே மறைந்தார்கள்" என்ற வாசகம் பொறித்த பித்தளைத் தகடு தரையில் பதிக்கப்பட்டுள்ளது. இப்படிப் பல்லாயிரம் நினைவுத் தகடுகளைப் பல வீட்டு வாசல்களிலும் பெர்லினில் இன்றும் காணலாம்.
ஜெர்மனியைப் போல் ஜப்பானால் வரலாற்றுக்கு நேர்மையாக முகம் கொடுக்க முடியவில்லை. கடந்த ஓகஸ்ட் 15 அன்று ஜப்பானிய அரசு தாங்கள் சரணடைந்ததை நினைவு கூர்ந்தது.
ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபே யின் உரையில் நிறைய வார்த்தை கள் இருந்தன. சுற்றிவளைத்துப் பேசும் சாமர்த்தியம் இருந்தது. ஆ[illegible]ல், சீனர்கள் எதிர்பார்த்த மன்னிப்பு என் கிற சொல் மட்டும் இடம்பெறவில்லை. வருங்காலச் சந்ததியினர் தொடர்ந்து மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாது என்றும் அபே தெரிவித்தார். இந்த உரையைத் தொடர்ந்து அவருக்கு, உள்நாட்டுத் தேசியவாதிகளின் ஆதரவு பெருகி வருவதாக ஜப்பானிய ஊடகங்கள் தெரிவித்தன.
இரண்டாம் உலகப் போருக்குப் பின் னர், ஜப்பானில் நிகழ்ந்த மாற்றங் களையும் குறிப்பிடவேண்டும். கடந்த 70 ஆண்டுகளில் ஜப்பான் எந்தப் போரிலும் ஈடுபடவில்லை. அணு ஆயுதம் தயாரிக்கவில்லை. அதே வேளையில், ஜப்பானின் அர[illegible]ல் தலைவர்கள் ஜப்பானின் போர்க் குற்றங்களை நினைவுகூரவோ அதற் காக மன்னிப்புக் கேட்கவோ விரும்ப வுமில்லை.

### மன்னிப்பு எனும் சொல்

இந்த இடத்தில் இந்தியாவின் முன் னாள் அமைச்சர் சசி தரூர் ஒக்ஸ் போர்டு யூனியன் சொசைட்டியில் பிரிட்டன் தனது காலனி நாடுகளுக்கு இழப்பீடு தர வேண்டுமா என்ற விவாதத்தில் நிகழ்த்திய உரையைக் குறிப்பிடலாம். இந்தியாவின் வளங் களைப் பிரிட்டன் எப்படியெல்லாம் கொள்ளையடித்தது என்று பட்டிய லிட்ட தரூர், பிராயச்சித்தமாக பிரிட் டன் இழப்பீடு எதுவும் கொடுக்க வேண்டாம்; மாறாக, இந்தியாவிடம் மனதார மன்னிப்புக் கேட்க வேண் டும் என்று பேச்சை முடித்திருந்தார். அவருடைய ஆதங்கம் பல இந்தி யர்களுக்கும் இருக்கிறது. அதனால் தான் குறுகிய காலத்தில் அவரது உரையை யூடியூபில் 30 லட்சம் பேர் பார்த்திருக்கின்றனர்.
சீனாவைப் பொறுத்தமட்டில் அது ஆதங்கமாக அல்ல, ஆறாத ரணமாக இருக்கிறது. இப்போது சீனாவிடம் செல்வம் இருக்கிறது, ராணுவ பலமும் இருக்கிறது. கூடவே, அதன் போர்க் காயங்களும் ஆறாமல் இருக்கின் றன.
அறத்துக்கு மட்டுமல்ல, வீரத்துக்கும் அன்பே துணையாகும் என்கிறார் வள்ளுவர். அது போலப் போரிடு வதற்கு மட்டுமில்லை, மன்னிப்புக் கேட்பதற்கும் துணிவு வேண்டும். அப் படியான துணிவு ஜப்பானியத் தலைவர் களுக்கு வர வேண்டும். அப்போது சீனா வின் காயங்களும் ஆறும்.



# தலையை அகற்றி வேறு உடம்பில் பொருத்தும் சிகிச்சை

ரம்யன்

மருத்துவத்துறை விஞ்ஞானிகள், கினிபிக் (guineapig) என்றழைக்கப்படும் சீனப் பெருச்சாளியையே பெரும்பாலும் தமது சோதனைகளுக்குப் பயன்படுத்துவது வழக்கம். சில சமயங்களில் சாதாரண சுண்டெலிகள், சீன முயல்கள் மற்றும் குரங்குகளும் பயன்படுத்தப்படுவதுண்டு. அவைகளில் பரிசோதனைகள் வெற்றி பெறுவதைப் பொறுத்தே அவை மனிதர்களில் பயன்படுத்தப்படும்.

இப்போது இவ்வாறான ஒரு பரிசோதனைக்குத் தன்னையே அர்ப்பணிப்பதற்கு ஒரு மனிதர் முன்வந்திருக்கிறார். அது சாதாரண பரிசோதனையன்று. மனித உடலில் தலைமாற்று அறுவை சிகிச்சைக்கான ஒரு பரிசோதனையாகும் அது. உலகின் முதன்முதல் நடக்கும் சரித்திர நிகழ்வாக இருக்கும் அல்லவா அது.

வெலரி ஸ்பிரிடொனொவ் (valery spiridonov) என்பவர் தமது தலையைக் கொய்து வேறு ஓர் உடம்பில் பொருத்துவதற்கு தாம் உடன்பட்டு இருக்கிறார் எனவும் அதற்கான ஏற்பாடுகளை அறுவைச் சிகிச்சை நிபுணர் சேர்கியோ கனவரோ என்பவர் செய்துவருகிறார் எனவும் தெரிவித்திருந்தார். இந்தப் பணியை முடிப்பதற்குத் தேவைப்படும் பெரும் தொகைப் பணம் நன்கொடையாக வந்து சேரத்தொடங்கியிருப்பதாகவும் கூட அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்பிரிடொனொவ் தற்பொழுது தசைகளை இழக்கும் ஒரு விசித்திரமான நோய்க்கு உள்ளாகியிருக்கிறார். பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் இந்தச் சோதனைக்கென 100 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க முன்வந்திருக்கிறார் என்ற தகவலை அவர் உறுதிப்படுத்த மறுத்துவிட்டார்.

இந்த விதமான ஆராய்ச்சி வெறும் அசட்டுத்தனமானது என்று பல ஆய்வாளர்கள் புறக்கணித்துள்ளார்கள். 30 வயதான ஸ்பிரிடொனொவ் கூறுகையில், அறுவைச் சிகிச்சை நிபுணர் கனவரொவுக்கு பல பேர் இந்தப் பரிசோதனைக்காக நிதி வழங்க முன்வந்திருக்கிறார்கள். அவர்களில் பலரும் என் மூலமே அவருடன் தொடர்பு கொண்டார்கள். என் உருவம் இணையத் தளத்தில் பிரபலமாகியிருப்பதால் அவர்கள் என்னை அறிவார்கள். அதனால் என்னுடன் தொடர்பு கொண்டதன் பின் அவரிடம் தமது விருப்பத்தை அறிவித்துள்ளார்கள் என்றார்.

ஸ்பிரிடொனொவின் தலையை அகற்றி வேறு உடலில் பொருத்துவது என்ற விசித்திரமான திட்டம் பற்றிய தகவல் இந்த வருடத்தின் ஆரம்பத்தில் வெளியில் வந்தது. இந்தச் சோதனையில் இறங்க விருக்கும் இத்தாலிய மருத்துவரும் ரஷ்ய விஞ்ஞானியும் இதுபற்றிய தகவலைப் பகிரங்கப்படுத்தத் தீர்மானித்ததையடுத்தே இந்த விடயம் பலருக்கும் தெரியவந்துள்ளது.

அதன் பிறகு இந்த இரண்டு பேரும் அமெரிக்காவில் நடந்த ஒரு மாநாட்டில் கலந்து கொண்டு, இது ஒரு பைத்தியக்காரத்தனமான விளம்பர விளையாட்டு அல்ல என மருத்துவ உலகத்தை நம்பும்படி செய்ய முயற்சி எடுத்தார்கள். இது முற்றிலும் ஒரு தொலைக்காட்சி விளையாட்டுப் போன்ற விளம்பர ஸ்டான்ட் என்றும் பேசப்பட்டது. ஆனால் இதனை அறுவைச் சிகிச்சை நிபுணர் கனவரோ கடுமையாக மறுத் துள்ளார்.

முதுகுத் தண்டில் ஓர் உபாதையைக் கொடுக்கும் வேர்டிங் ஹொப்மன் (werding Hoffman) என்ற நோயினால் ஸ்பிரிடொனொவ் பாதிக்கப்பட்டுள்ளார். "எனது உடம்மை மாற்றிக்கொள்ள முடியுமானால், அறுவைச் சிகிச்சை சரியாக நடந்தேறுமானால் இப்போது நான் அனுபவித்துவரும் இடர்பாடுகளிலிருந்து எனக்கு விடுதலை கிடைக்கும். அறுவைச் சிகிச்சைக்காக நான் அவசரப்படவில்லை. வாருங்கள் என்னை இப்போதே இங்கேயே காப்பாற்றி விடுங்கள் என்று நான் கூக்குரலிடவில்லை. எனக்குள்ள நோய் என்னை அடிக்கடி சாவில் கொண்டுபோய் விடுகின்றது. ஆனால் இந்தத் திட்டத்தில் என்னை முதலில் ஒரு நோயாளியாக நான் பார்க்கவில்லை. முதலில் நான் ஒரு விஞ்ஞானி. நான் ஒரு பொறியியலாளன். இந்த மாதிரி சிகிச்சை எனது லட்சியம் என்பதை பொதுமக்களையும் மருத்துவ விஞ்ஞானி




களையும் ஏற்றுக் கொள் ளும்படி செய்ய விரும்புகிறேன். என்னை நம்புங்கள். பைத்தியக்காரத்தனமாக என் தலையைத் துண்டித்துக்கொள்ள நான் அவசரப்படவில்லை. அறுவை சிகிச்சை யானது 99 வீதம் வெற்றியளிக்கும் என்று எல்லோரும் நம்பும் நிலை ஏற்பட்டால் தான் அது மேற்கொள்ளப்படும். வேறு வகையில் கூறுவதானால் கனவரோ தனது செயன்முறைக்கு மருத்துவ சமூகத்தின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு, எதிர் வரும் இரண்டு ஆண்டுகளில் அதனை மேம்படுத்திக்கொள்வது பிரதான பணியாகும். சம்பந்தப்பட்டவர்கள் 2017 ஆம் ஆண்டு இந்த அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ள விரும்புகிறார்கள். அதற்கு எல்லாம் திட்டமிட்டபடி நடைபெற வேண்டும்"– என்றார்.

என்றாலும் மொஸ்கோவிலுள்ள மருத்துவமனை ஒன்றைச் சேர்ந்த ரஷ்ய அறுவைச் சிகிச்சை நிபுணர் அன்சோர் குபுஷியா என்பவர் இது ஒரு அசட்டுத்தனமான திட்டம் என்று வர்ணித்துள்ளார். எதிர்காலத்தில் இது சாத்தியமாக இருக்கலாம். ஆனால் முதுகு தண்டுவடத்தை மீள் பிறப்பாக்கம் செய்யும் முயற்சிகள் வெற்றியளிப்பதற்கு முன்னர், தலையை மாற்றிப் பொருத்துவதென்பது கடினமான விடயம் என்றார் அவர்.

இவ்வாறான சந்தேகங்கள் கிளப்பப்பட்டுள்ள போதிலும், இந்த அறுவைச் சிகிச்சை சாத்தியமானதே என்கிறார் மருத்துவர் கனவரோ. ஸ்பிரிடொனொவின் தலை அவர் உடம்பிலிருந்து அகற்றப்பட்ட சில வினாடிகளில் இன்னொரு உடம்பில் பொருத்தப்பட்டுவிடும். 15 நிமிடங்களுக்குள் மூளைக்கு குருதி பாயத் தொடங்கி விடும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



**சிறுநீரக மாற்று சிகிச்சையில் ரோபோவின் உதவி**

இயந்திர மனித உதவியுடன் சிறுநீரக அறுவைச் சிகிச்சையை நடத்தி வெற்றி கண்டுள்ளனர். வழக்கத்துக்கு மாறாகப் பெண்களின் பிறப்புறுப்பின் வழியாக சிறுநீரகம் அகற்றப்பட்டு பொருத்தப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்கிறார்கள் மருத்துவர்கள்.

ரவுலஸ் என்ற இடத்தில் உள்ள பல்கலைக்கழகத்தில் இந்த அறுவைச் சிகிச்சை நடந்தது. வெலரி பெரெஸ் என்ற 44 வயதான பெண் தனது சகோதரி 43 வயதான பீட்ரிஸ் பெரெஸ் என்பவருக்குத் தனது சிறுநீரகங்களில் ஒன்றை வழங்கியுள்ளார்.

இயந்திர மனிதர்களைக் கொண்டு அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது மட்டுமல்ல, சிறுநீரகம் அகற்றப்பட்டதும் பொருத்தப்பட்டதும் பெண்களின் பிறப்புறுப்புக்களின் வழியாக என்பதும் புதிய சாதனை என்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிச்சயமாய் அது உயிரின் சத்தம்தான்

செ.உமாசுதன்



*நட்சத்திரங்கள் அற்ற வானம்....*
*பரந்த பரப்பில் இருட்டுக் கூரைகள்......*
*எண்ணில் அடங்காத் தீபங்கள் அடுக்கடுக்காய் ஒளிருது...*
*மஞ்சளாய், சிவப்பாய் மாறி மாறி வர்ணம் காட்டுது....*
*கண்களில் கண்ணீர் துளிகள் பெருகுது...*
*அந்த வர்ணங்கள், கண்ணீர் துளிகளில் வந்து ஒட்டிக்கொள்ளுது.....*
*சிற்றருவியாய் தொடங்கியது ஆறாய் பாய்ந்தோடுது.....*
*மடிதொட்டு இறுதியாய் மண்ணையடையுது...*
*கண்ணீர் நனைத்த மண்ணுள் ஏதோ ஓர் உயிர் மெல்லியதாய் சிலிர்க்குது....*
*ஐயோ! தாய் மனம் ஏங்குது....*
*கண்களில் நிஜமாய் உறங்கிக் கொண்டிருக்கும் மகனி(ளி)ன்*
*பாதங்கள் தட்டிப் பார்க்குது....*
*மனம் ஓர் கணம் உறைந்து போகிறது...*
*நிச்சயமாய் அது உயிரின் சத்தம்தான்...*
*நிச்சயமாய் அது தொலை(இற)ந்து போன உயிர்களின் சத்தம்தான்....*

காலம் கரைகிறது, நிழல்களின் வருகை தெரியவில்லை. இன்றும் நீண்ட வெளிகளுக்கப்பால் பசுமை தெரிவதுபோல் தோன்றுகிறது. ஆனால் எந்தவித அதிர்வுகளுமின்றி நாம் அவதியுறுகிறோம். கண்களில் பீதியோடு அங்கலாய்த்தபடி இரவின் மௌனிப்பிலும் பகலின் அரவணைப்பிலும் உதிர்ந்துபோன உறவுகளைப் பற்றிய நினைவுச் சுமைகளோடு கடந்து போகிறது வாழ்க்கை. தொலைந்து போகின்றன நாள்கள்.

பெரிய இழப்புக்களும் மனித அவலங்களும், இரத்த ஆறும் ஓடிய கடந்த காலங்களின் அரசி மீண்டும் அரியணை ஏறுகிறாள் யமதர்மனாய். உயர்ந்த பீடத்தின் உச்சியில் ஏறி நின்று மயான பூமியில் உயிர்களின் வெம்புதலையும், அங்கலாய்ப்பையும், ஊசலாட்டத்தையும் ரசித்து வெறித்துப் பார்த்தபடி நிற்கிறாள். நான்தான் எமதர்மராஜா; மண்டையோடுகளின் மன்னவன் நான் என உரத்த குரலில் பயமுறுத்தி அங்கும் இங்கும் வெறித்தபடி படமெடுக்கிறான். தன் கணவனையும், மகன், மகளையும் இழந்த தாயும், தன் அன்புக் காதலனையும், அன்புக் கணவனையும் இழந்த இளமையின் தாய்மைகளும் யமதர்மனின் கால்களைப் பற்றிக் கதறியழுகின்றன.

தலைகோதி அன்பு முத்தம் தந்த தந்தை எங்கே...? அன்பிற்கினிய காதலனை என்னிடமிருந்து கொய்து முட்கம்பி எல்லைகளுள் தள்ளினாயே; என் காதலன் எங்கே? அன்பினை ஊட்டி வளர்த்த என் அண்ணன் எங்கே? எருமை வாகனனே அவர்களை மீண்டும் எங்களிடம் தந்துவிடு! என அழுது புலம்புகின்றனர்.

புலம்பல்களின் ஓலங்கள் அவனை இரங்க வைக்கவில்லை. தொலைந்த உறவுகளைத் தேடி அங்கும் இங்கும் அலைய விடுகின்றான். இறுதியில் ஓர் நிபந்தனையை விதிக்கிறான். தன் ஏவல்களைத் தயக்கமின்றி செய்யும் இரக்கமற்ற எருமை வாகனத்தை அரியணையில் அமரச் செய்தால் உறவுகள் மீண்டும் வரும் என நம்பிக்கையூட்டுகிறான். உறவுகள் வேண்டி, விடிவு வேண்டி தவிக்கின்ற அந்த மக்கள் கூட்டம் அரியணையில் அவன் எருமையை முடிசூட்டி அமரவைக்கின்றனர். ஆனால் சொன்னவை நடக்கவில்லை. மிஞ்சியது விடியலற்ற இருள் சூழ்ந்த வாழ்க்கையே.

சர்வதேசத்தின் கழிவிரக்கம் காலம் தாழ்த்தி துன்பம் துடைக்க தலையை ஆட்டி, தன்னவன் சார்ந்தும், தருமத்தின் வேரறுத்த எமதர்மனின் குலம் சார்ந்தும் அறிக்கை விடுகிறது. அவன் பின்னே நாசத்தின் சதிகாரன் ஒழிந்து கொள்கிறான்.

வந்த சர்வதேசம் உறவுதேடும் உள்ளங்களை பார்த்துச் சொல்கிறது. "நாங்கள் ஒரு திட்டம் வைச்சிருக்கிறம் அதை விரைவாய் உங்கட விடிவுக்காக நடைமுறைப்படுத்துவம். அதுவரைக்கும் இந்த மயான பூமியில் வாழ பல கொட்டில்களை கட்டி தருவம். சரிதானே!" என்கிறது. "உங்கள் உறவுகள் மீண்டும் உங்களிடம் வர புதைந்து கிடக்கும் எலும்புகளையும், சதைத் துண்டங்களையும் மீண்டும் கிண்டியெடுத்து மீண்டும் புதையுங்கள்" என்கிறது.

உறவுதேடும் உள்ளங்கள் மயான பூமியைத் தோண்டுகையில் வெளிப்படும் ஆத்மாக்கள் எழுந்து நின்று மூன்றாம் நிலையிருக்கும் சர்வதேசத்தை நோக்கி தம் உறவுகளுடன் சேர்ந்து எமக்கு விடுதலை தாருங்கள், எம்மை விடுவியுங்கள் என உரத்த குரலில் ஓங்கி ஒலிக்கின்றன. விடுதலை என்பது கேள்விக்குறியோடுதான் இப்போதும் நிற்கிறது. புதைகுழியில் இருந்து எழுந்த ஆத்மாக்கள் மீண்டும் துயில் கொள்கின்றன. உறவு தேடியலையும் உள்ளங்கள் உங்களை இனிமேலும் தாங்கள் நம்பத் தயாரில்லை என்ற ஏக்கத்தின் வினாக்குறியோடு விடிவு தேடி அங்கலாய்க்கின்றன.

இந்தக் கல்லறைகள், பலவற்றை மனக்கண்ணின் ஆழத்திலிருந்து வெளிக்கொணர்ந்தது. குளத்து நீரை மறைக்கும் தாமரை இலைகள் போல, மண் மறைக்கும் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. கலைக்க கலைக்க கலையாமல் அணிவகுத்து ஊர்ந்துவரும் எறும்புக் கூட்டங்களுக்குப் போட்டியாக இந்த மக்கள் அணி. தொடர்ந்து உள்நுழைகிறது அந்த இசை..... கருவிக் கத்தல் குறைந்து, குரல் பாவம் ஏறிய அந்தப் பாடல் பாறையில் விழுந்த மெல்லிய முதல் மழைத்துளியாய் என்னைத் தொட்டுப் பார்க்கிறது.

தனது இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் மண்ணில் வீழ்கையில் மீண்டும் உயிர்ப்பானாம் மகிடாசூரன். இந்தக் கண்ணீர்த்துளி வீழ்ந்து மகனை, மகளை, கணவனை உயிர்ப்பிக்காதா...? என்று ஏங்குகின்றன தாய்மையின் உள்ளங்கள்.

பரந்த வெளியிலே அடுக்கடுக்காய் பரவி உடலங்கள் கிடக்க அவற்றின் உயிர்களெல்லாம், அவற்றின் முன்னே தெரியும் எரியும் தீபங்களாய் தெரிகின்றன. மகிழ்ச்சியில் பங்குபோட ஆயிரம் பேர்... ஆனால் துக்கத் துக்கு...? ஏன் அந்தக் கவலை....! அவளின் விசும்பலுக்கு சடப்பொருள்கள்கூட சேர்ந்து அழுகின்றன. ஏதோ ஒரு உயிரின் சிலிர்ப்பு மெல்லியதாய் கேட்கிறது. நிச்சயமாய் அது உயிரின் சத்தம்தான். நிச்சயமாகத் தொலைந்து போன உறவுகளின் கவிதைதான் இது. இல்லை இல்லை கல்லறைக் கவிதைகள் தான் இவை. மனதை உலுக்கும் இந்தக் கதை வெறும் கற்பனையல்ல, சிந்தனைகளை நாலாபுறமும் சிதற வைத்த இந்தக் கதை நல்லூரின் சூழலிலே செயல்திறன் அரங்க இயக்கம் போட்டு வரும் நாடகத் திருவிழவிலே அரங்கேறிய ஒரு நாடகத்தின் கதை. பேசாப் பொருளைப் பேசும் துணிவு எப்போதும் அவர்களுக்கு இருந்தது போலவே மீண்டும் தொடங்கும் மிடுக்காக அவர்கள் இந்தத் திருவிழாவிலும் ஆற்றுகைகளை நிகழ்த்துகிறார்கள். பார்க்கும்போது மெய் சிலிக்கிறது.

# விதியை மதியால் வெல்வது சாத்தியமே!

கார்த்திகேயன்

மன வளம்தான் மண் வளத்தைத் தீர்மானிக்கிறது. இயற்கையை வணங்கும் மனம் இயற்கையோடு இசைந்த வாழ்க்கையைத் தேர்ந்தெடுக்கும். இயற்கையைப் பயன்படுத்த நினைக்கும் மனம் இயற்கையை விலக்கி செயற்கையான வாழ்க்கையை நாடிச்செல்லும். காடுகள் அழிந்ததும் கட்டடங்கள் பெருகியதும் மனிதரின் மன மாற்றங்களினால்தானே!

**மன விகாரம்**

புற உலகில் நீங்கள் காணும் மாற்றங்கள் யாவும் அக உலகில் நிகழ்ந்த மாற்றங்களினால் தான். நீங்கள் பார்க்கும் அனைத்தும் நீங்கள் உருவாக்கியவை. அல்லது பிறர் உருவாக்கும்போது நீங்கள் சம்மதம் தெரிவித்தவை. நேரடியாகவோ மறைமுகமாகவோ உங்கள் பங்கு உள்ளதை உணருங்கள். அதனால் எதையும் குறை சொல்வதில் பயன் இல்லை.

எல்லாம் மோசம் எதுவும் சரியில்லை என்று சொல்வதும் ஒரு மன விகாரம்தான். உலகில் அனைத்தும் உள்ளது. எதைப் பார்ப்பது, என்ன செய்வது என்பதெல்லாம் நம்மிடம்தானே உள்ளது?

**மாற்றி யோசி**

என் நண்பர் ஒருவர் இளையராஜாவின் தீவிர ரசிகர், என்னைப் போலவே. இளையராஜாவின் அதிகம் பிரபலமாகாத அற்புத பாடல்கள் நிறைய உள்ளன என்று ஒருநாள் பேசினோம். பின் ஒரு 20, 25 பாடல்களை பட்டியல் போட ஆரம்பித்தோம். ஒரு பத்து நிமிடத்தில் இளையராஜாவின் இசை சாம்ராஜ்யத்தில் முழுவதுமாக நனைந்தோம். எல்லாம் கற்பனையில்தான். எல்லா பாடல்களையும் கேட்டது போன்ற திருப்தி.

அவர் ஒரு பிரச்சினை பற்றி விவாதிக்க வந்தவர். அவர் எழுந்து போகும்போதும் அந்தப் பிரச்சினை எள்ளளவும் குறைவில்லை. ஆனாலும் உற்சாகமாகப் புறப்பட்டுப் போனார். இதுதான் மனதின் செயல்பாடு.

மிக மோசமான மன நிலையிலும் எண்ணத்தை திசை திருப்பி ஆசுவாசப்படுத்திக் கொள்ள முடியும். உற்சாகப்படுத்திக்கொள்ள முடியும். மாற்றி யோசிக்க முடியும். முயற்சிதான் முக்கியம். பிரச்சினை முடிந்த பின்தான் ஆறுதல் கிடைக்க வேண்டும் என்றால் இந்த உலகில் யார் நிம்மதியாக நடமாட முடியும்? அப்படியே ஒரு பிரச்சினை முடிந்தாலும் அடுத்தது வராமல் போய்விடுமா என்ன?

இசையும் கவிதையும் ஓவியமும் விளையாட்டும் மனிதனை எந்த நேரத்திலும் இளக வைக்க உதவுகின்றன. மனம் ஒன்றிச் செய்யும் எந்தச் செயலும் மனக் கவலையிலிருந்து விடுதலை அளிக்கக் கூடியவை. இதை இப்படிக்கூடப் புரிந்துகொள்ளலாம்: மனக் கவலையிலிருந்து விடுதலை பெற ஏதாவது ஒரு செயலை மனம் ஒன்றிச் செய்தாலே போதும்! இதைத்தான் மைன்ட்புல்னஸ் (mindfulness) என்று புத்த மதம் சொல்கிறது. மனம் லயித்துச் செய்யும் காரியம் மனதின் சிக்கலுக்கு சிகிச்சை!

**உழைப்பின் பயன்**

ஒரு பிரச்சினை மனதை எதிர்மறையாகக் குவிக்கிறது. அதைச் சிதறடிக்க ஒரு சிறு நேர்மறை விடயம்போதும். ஒரு குழந்தையின் சிரிப்போ, நகைச்சுவை துணுக்கோ, அந்நியரின் அர்த்தமற்ற செய்கையோ கூடப்போதும். அது பிரச்சினையிலிருந்து உங்கள் மனதை நொடிப்பொழுதில் வெளியே கொண்டு வந்து விடும்.

ஒரு கணவனும் மனைவியும் பெரிதாகச் சண்டை போட்டுக் கொண்டிருக்க, அழைப்பு மணி கேட்கிறது. கணவன் முகத்தைச் சரி செய்து கொண்டுபோய் பார்க்கிறான். அடுத்த வீட்டுத் தம்பதி பொழுது போகாமல், அரட்டை அடிக்க இங்கு உரிமையாகக் கதவைத் தட்டுகிறார்கள். முகம் கழுவி வந்த மனைவி பிரமாதமாக உபசரிக்கிறாள். கணவனும் எதுவும் நடக்காதது போல மிக உற்சாகமாக நடந்துகொள்கிறான். சில நிமிடங்களில் சமூக உறவுகளுக்காக சொந்த சோகம் கிடப்பில் போடப்படுகிறது. இதுதான் உண்மை.

இதில் இன்னொரு உண்மையும் பொதிந்துள்ளது. சமூக உறவுகள் நிறைய உள்ளவர்களுக்குச் சொந்த சோகங்களை கையாள்வது எளிமையாகிறது. அதேபோல உடல் உழைப்பு அதிகம் இருந்தாலும் மன உளைச்சல் அதிகம் தங்காது.

**சந்தோஷமாக நடி**

வேற்றுமொழித் திரைப் படத்தில் வந்த உரையாடல் இது.

"நான் என் கணவனைப் பிரிய முடிவு செய்து பெட்டியைக் கட்டி வைத்து விட்டு அவனிடம் சொல்லிவிட்டுப் போகத் தயாராக இருந்தேன்."

"பிறகு... என்ன நடந்தது?"

"அவன் வருவதற்குள் தூங்கிப்போய்விட்டேன். மறு நாள் எழுகையில் மனம் மாறி விட்டது!"

இப்படித்தான் பல தீவிர முடிவுகள்கூட அற்பக் காரணங்களால் கலையக்கூடியவை. கோபத்தில், பயத்தில், அவசரத்தில் நாம் எடுக்க நினைக்கும் முடிவுகளைச் சற்றுத் தள்ளிப் போட்டால் பக்குவமான முடிவுகளை எடுக்க முடியும்.

சரியான மன நிலையில் இல்லாதபோது முடிவுகள் எடுக்காமல் இருப்பது புத்திசாலித்தனம். அந்த மன நிலையிலிருந்து தற்காலிகமாக வெளியே வர எடுக்கும் முயற்சிகள்கூட நல்ல பலன் தரும்.

சந்தோஷமாக இருக்க வழி சந்தோஷமாக இருப்பது போல நடிப்பது கூடத்தான்.

பெரும் பிரச்சினையா? அதே எண்ணமாக இருக்கிறதா? ஏதாவது செய்ய முடியுமா என்று பாருங்கள். முடிந்தால் செய்யுங்கள். செய்வதற்கு எதுவுமில்லை; என்ன நடக்கப் போகிறது என்று பார்ப்பது மட்டும்தான் வேலை என்றால் முதலில் மனதை திசை திருப்புங்கள்.

**மனமும் நிலா போலதான்**

பெரிதாக எதுவும் செய்ய முடியாவிட்டாலும் பிடித்ததைச் செய்யுங்கள். பழைய அலமாரியை சுத்தம் செய்யுங்கள். முடி வெட்டிக் கொள்ளுங்கள். நிறைய நேரம் நிதானமாகக் குளியுங்கள். வாகனம் ஓட்டும்போது பாட்டு பாடிக்கொண்டே செல்லுங்கள். நகைச் சுவைப் படங்கள் பாருங்கள். நீண்ட நாள்கள் பேசாத நண்பரிடம் பேசுங்கள். தனி வாகனத்தில் செல்வோர் பொது வாகனத்தில் சென்று வாருங்கள். சுடோகு போடுங்கள். இதுவரை செய்யாத ஏதாவது செய்யப் பாருங்கள். மனம் மாறும். மதி என்றால் நிலா என்றும் பொருள். மனம் என்றும் பொருள். மனமும் நிலா போலத்தான். வளரும். தேயும். முழுதாக இருக்கும். ஒன்றுமில்லாமல் போகும். ஒரு நாள் இருப்பது போல மறுநாள் இருப்பதில்லை. இந்த நிலையில்லாத தன்மையை புரிந்து கொண்டால் விதியை மதியால் வெல்வது சாத்தியமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமிப்பூட்டும் நல்லூரான்!



■ தட்சா. ஜோ

"சரியான சனம் இந்த முறை. வேளிநாட்டுச் சனங்களும் கூடிப்போச்சு. முந்தி முதல் 10 திருவிழா முடியத்தான் கொஞ்சம் சனம் கூடும். ஏனென்னடா பிறகுதான் நல்ல திரு விழா. இப்ப கொடியேற்றத்தில இருந்து சனம் தான்."

சலிப்பு ஒருபுறமும் சந்தோஷம் ஒருபுறமு மாக முணுமுணுக்கிறார்கள் பெரியவர்கள். ந[illegible]லூர் தமிழ்க் கலாசாரத் திருவிழாவின் அண்மைய பரிமாணங்கள் மிகப் பெரியன. ஆண்டுக்காண்டு கோயிலில் கோபுரங்கள் மட்டுமல்ல, பக்தியின் கட்டுப்பாடுகளும் அதி கரித்துக்கொண்டே வருகின்றன. இந்த ஆண்டு, வெளித் தலையீடுகளோ இடைஞ் சல்களோ இருக்கக்கூடாது என்பதற்காகப்




புதிதாக நல்லூரைச் சுற்றி ஒரு துணி மறைப்பு எழுப்பப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தின் முதன்மையான சுற்றுலாத் தலமாகவும் நல்லூர் முன்தள்ளப்பட்டு வரு வதால், தனது பக்திச் சூழலைத் தக்க வைக்க அது படாதபாடு படவேண்டி இருக்கிறது. ஒவ் வொரு முறையும் பக்தியையும் சைவ பக்திக் கலாசாரத்தையும் கட்டிக்காக்க ஒவ்வொரு தடுப்பாக எழுப்ப வேண்டியிருக்கின்றது. எதைச் செய்தாலும் சாதி, மத, இன அடை யாளங்களைக் கடந்து பக்தர்களையும் சுற்று லாப் பயணிகளையும் ஈர்க்கும் மகிமையை நல்லூர்க் கந்தன் இன்னும் அதிகமாக்கிக் கொண்டே இருக்கின்றான்.

செல்பி மோகமும் ஸ்மார்ட் போன் மோக மும் நல்லூரைச் சுற்றிலும் எப்போதும் சுழன்றுகொண்டே இருக்கின்றன. சுற்றுலாப் பயணிகள் என்று மட்டுமல்லாது உள்ளூர் காரர்களே தம்மையும் நல்லூரானையும் கமராக்குள் விதம்விதமாக சிறைப்பிடிக்கும் வசீகரத்தை என்னவென்பது! மாலைவேளை யில் கோபுரம், சுவாமி வெளிவீதி, தேர், சப்பரம் எனப் பலவற்றின் ஒளிப்படப் பதிவு களால் வலைத்தளங்கள் நிரம்பி வழிகின் றன.

"பிரான்ஸ்ல இருந்து வந்திருக்கிறன். நான் பிறந்தது யாழ்ப்பாணத்திலதான். ஆனா இரண்டு வயசிலயே குடும்பதோட பிரான்ஸ் போய்ட்டம். அம்மா அப்பா சொல்லுவினம் நல்லூர்த் திருவிழா நேரம் நாங்கள் செய்த குழப்படிகள் எல்லாத்தையும். அப்ப ஆசையா இருக்கும் நான் ஒருக்கா வந்து பாக்க வேணும் திருவிழாவை என்டு. இந்த முறைதான் சந் தர்ப்பம் வந்துச்சு. நாங்கள் இணையத்தில பாக்கேக்க இருந்த பிரமிப்ப விட சில மடங்கு அதிக பிரமிப்போட இருக்குது நல்லூர். திரு விழா சீசன்ல யாழ்ப்பாணம் வந்தால நிறை யச் சந்தோசம்"என்கிற ஆதிக்கு வயது 24.

ஆதியைப் போலவே ஒன்றல்ல இரண்டல்ல ஓராயிரம் புலத்[illegible] மாடுகிறார்கள். [illegible] தங்களை மீட்டபடியே ஏகாந்தத்தில் திரிகி றார்கள். தமிழ் தெரியாதவர்கள்கூட தமக் குரிய மொழியில் அலங்காரக் கந்தனிடம் தங்கள் விண்ணப்பத்தை முன்வைக்கின் றனர்.



ஆலயத்தில் ஒரு சீனப் பெண் ஒருவர் கையில் கமராவுடன் சுற்றிக் கொண்டிருந்தார். பத்தி ரிகையாளர் புத்தி எங்கே விட்டது. அவரை நெருங்கி அப்படி என்னதானம்மா பார்க்கிறீர்கள் என்றோம். "இவ்ளோ..... பொது மக் கள் கலந்துகொள்கிறார் கள் என்பதை நம்பக்கூட முடியவில்லை" என்று ஆச்சரியப்பட்டார். ஓர் இஸ்லாமிய சுற்றுலா விகூட அங்கே சுற்றித் திரிந்துகொண்டிருந்தார். மாலை மயங்கும் நேரத் தில்தான் கந்தன் மீது பக் தர்களுக்கு அதிக கருணை. அதிகமாக மக்கள் வரு கிறார்கள். "நானும் எனது நண்பரும் இதற்கு முன்னரும் ஒரு தடவை நல்லூருக்கு வந்திருக்கிறோம். ஆனால் அப்போது திருவிழாக்-காலம் இல்லை. அப் போது பார்த்த ஆலயத்திற்கும் இப்போது பார்க்கும் ஆலயத்திற்கும் நிறைய வித்தியா சம்" என்றார் ஆங்கிலத்தில், வாயில் புகாத பெயரை வைத்திருக்கும் வெளிநாட்டுச் சுற்றுலாவி ஒருத்தர்.

மாலையில்தான் சனம் அதிகம் வருகிறது என்பதை ஏற்பதில் உண்மையான பக்தர் களுக்கு அவ்வளவாக உடன்பாடில்லை. கந்தனைக் கும்பிட வருபவர்கள் காலையி லேயே வந்து விடுவார்கள் என்கிறார்கள். "நான் பிரதட்டை அடிக்க காலமை 4.30 மணிக் கெல்லாம் வந்திடுவன். அப்பவே கோவில்ல சனம் வந்திடும்" என்கிற பிரதீஸ், 25 நாள் களும் பிரதட்டை அடித்து நேர்த்தி நிறை வேற்றுகிறார். அதிகாலையிலேயே அடி அழிக்கும் பெண்களுக்கும் ஆலயத்தில் குறைவில்லை.

(22ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரமிப்பூட்டும்.....

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாலையில் பக்தியுடன் வேறு சிலவும் கவர்வதால் இளசுகளின் நடமாட்டத்தை அதிகம் காணமுடிகிறது. கடைத்தெருவும் பரபரப்பாகிவிடுகின்றது. "பத்தடிக் கடைக்கு ஒரு லட்சம் ரூபாய் வாடகை கொடுத்துவிட்டு, அறா விலைக்கு எப்படியம்மா பொருள் விக்கிறது" என்று புலம்பும் புத்தளத்தைச் சேர்ந்த வியாபாரிக்கு கந்தன் எப்படியும் லாபம் தருவான் என்கிற நம்பிக்கை இருக்கிறது. பாத்திரக்கடை, பான்சிக் கடைகள், பூச்செண்டுக் கடைகள், கச்சான் கடைகள், பொம்மைக் கடைகள், புடைவைக் கடைகள், புத்தகக் கடை என நிரம்பி வழிகின்றது பின் வீதி. ஐஸ்கிறீம் கடைகளை விட்டுவிட முடியுமா? அலை மோதுகின்றது கூட்டம்.

"ஐஸ்கிறீம் வழமையாக் குடிக்கிறதுதான். ஆனால் திருவிழா நேரம் வந்து குடிக்கிற ஐஸ்கிறீமுக்கு தனி.... ருசி...." என்று இழுக்கிறார் பவித்திரா. ஐஸ்கிரீம் கடைக்குள் நுழைவதற்காகக் காத்திருந்த சில மணித் துளிகளில் எம்மிடம் பேச்சுக் கொடுத்த பதின்மக் கொழுந்து அவர்.

"நான் சின்னவயசில திருவிழாக்கு வந்தால் ஏதாவது வாங்கித்தரச்சொல்லி கேப்பனாம் அப்பாட்ட. அப்பா வாங்கித் தராட்டி அந்தக் கடைக்கு முன்னால இருந்திடுவனாம். இதை அம்மா அடிக்கடி சொல்லுவா. இப்ப எனக்கு கல்யாணம் ஆகி பிள்ளைக்கு 4 வயசு. அவன் என்னையும் மிஞ்சினவன். தனக்கு பிடிச்சத வாங்கிக் குடுக்காட்டி அதிலயே நிலத்தில உருண்டு பிரண்டு ஆர்ப்பாட்டம் பண்ணி நினைச்சத வாங்கிப் போடுவான்."

பரம்பரை பரம்பரையாக நல்லூரில் அடம் பிடிக்கும் தங்கள் பெருமையைப் பகிர்ந்து கொள்வதில் தயானந்தனுக்கு மகிழ்ச்சிதான். நல்லூரான் திருவிழா என்றால் இதெல்லாம் சேர்ந்த கொண்டாட்டம்தான் என்பதில் அவர் அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறார். என்ன, நல்லூருக்குப் புறப்படும்போது பேர்ஸ் கொழுத்திருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டால் சரி என்று ஒரே போடாகப் போடுகிறார்.

இவரைப் போன்றவர்களை நம்பியே ஆலயச் சூழலில் 86 கச்சான் கடைகள், 28 இனிப்புக் கடைகள், 22 மணிக் கடைகள், 211 இதர கடைகளைத் திறந்திருக்கிறார்கள். மணிக் கடைகள் என்பது சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் போன்றவை விற்கும் கடைகள்.

கோயிலுக்கு உள்ளே நடப்பவற்றை அஃதன் நிர்வாகம் பார்த்துக்கொள்ள, வெளியே எல்லா ஒழுங்கையும் செய்வதில் யாழ். மாநகர சபையினர் பம்பரமாகச் சுழல்கின்றனர். புதிய ஆணையாளர் பொ.வாகீசன் அதில் கடும் வேலையாக இருக்கிறார்.

மாலைத் திருவிழா 8.00 மணிக்குள் நிறைவுற்று ஆலயம் மூடப்பட்டாலும் கடைத்தெருக்களில் சன நடமாட்டம் குறைய 11-12 ஆகின்றது இரவில். எனவே பணிச் சுமை அதிகம்தான் அவருக்கு. ஆலயச் சூழலில் கலை நிகழ்வுகளுக்கும் குறைவில்லை. பாரம்பரிய கர்நாடக இசைக் கச்சேரிகள் நடக்கின்றன. கணிசமான மக்கள் கூட்டம் அங்கும் எட்டிப்பார்க்கின்றது. இரண்டாவது ஆண்டாக செயல் திறன் அரங்க இயக்கம் நடத்திவரும் ஒகஸ்ட் நாடகத் திருவிழவுக்கும் நல்ல சனக்கூட்டம் வருகிறது. சிறுவர் நாடகங்களைப் பார்ப்பதற்காக ஆலயத்து மணலில் இருந்து தங்கள் பெற்றோரையும் இழுத்துக் கொண்டு ஓடிவரும் சிறுவர்களைப் பார்க்கும்போது மகிழ்ச்சி பூரிக்கிறது.

"சினிமா, சீரியல் என்று பார்த்து பழக்கப்பட்டவர்களுக்கு செயற்திறன் அரங்கத்தின் நாடகங்கள் ஒரு வரப் பிரசாதம். சிறுவர்கள் நாடங்களை தமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகளுடன் பெரியவர்களும் நன்றாக ரசிக்கின்றனர். நாடகம் பார்த்துவிட்டுப் போகும்போது மனசு லேசாக இருக்கிறது. சில சமயங்களில் கனக்கவும் செய்கிறது" என்கிறார் முத்துலிங்கம். தனது பேரப்பிள்ளையுடன் தொடர்ந்து நாடகம் பார்க்க வருகிறாராம்.

"இளைய சமுதாயத்திற்கு நாம் கண்டிப்பாக எமது கலையைக் கையளிக்க வேண்டும். அதன்ஒரு படியாகத் தான் நான் இந்த செயற் திறன் அரங்கத்தினரின் நாடங்களை பார்க்கின்றேன். அவர்களின் ஆற்றுகைகள் பிரமிக்க வைக்கின்றன. கடந்த வருடமும் நான் இவர்களின் நாடகங்கங்களைப் பார்த்தேன். இம்முறை இன்னும் மெருகேறி இருக்கின்றன" என்கிறார் கிருஸ்ணகுமார். அவரும் தனது இரு பேரன்களுடன் வந்திருந்தார்.

கிட்டத்தட்ட 335 பொலிஸார் சீருடையிலும் சிவில் உடையிலும் காவலுக்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். கோயிலின் வெளி ஒழுங்குகளைக் கட்டுப்படுத்துவதில் அவர்களின் பணியும் முக்கியமானது சிறப்பானது. தண்[illegible]ர்ப் பந்தல்கள்? அவை இல்லாமலா? ஆலயததை அடையும் எல்லா வீதிகளிலும் பந்தல்களுக்குக் குறைவில்லை. தாகசாந்தி செய்துகொண்டே வீட்டை நோக்கி நடையைக் கட்டமுடியும், இரவிலல்ல பகலில்.



## சொற்சிலம்பம் - போட்டி இல: 385

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | | 5 |
| 6 | | | 7 | | | 8 | |
| 9 | | 10 | | | 11 | | |
| | | | | 12 | | | |
| | 13 | | 14 | | | 15 | |
| 16 | | | | | 17 | | |
| 18 | | | | 19 | | | 20 |
| 21 | | | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:.......................................

பூரணமான தபால் விலாசம்: ..........................................

..................................................................

கையொப்பம்:............................................

**இடமிருந்து வலம்**

1. வித்தியாசமானது.
6. கையால் அளவிடும் அளவு
7. வேகம்
8. குளிர்மை
9. கடும் வேகம்
11. ஒரு போர்ப் பிரபந்தம்
12. நோ/வருந்தம்
13. ஒரு மரக்கறி வகை
15. பற்களினால் பற்றுவதால் ஏற்படுவது
16. யானைக்கு உள்ள விசேட உறுப்பு
17. ஒரு பறவை
18. அன்பின் வகை
19. ஒரு வாசனைத் திரவியம்
21. நீண்ட தூரம் அளவிடை அலகு
22. இதற்கு மதிப்பு அதிகம் (ஒரு சங்கு வகை)

**மேலிருந்து கீழ்**

1. ஒரு நட்சத்திரம்
2. தலைக்குடுமி
3. தினசரி மாறுவது
4. மன்மதன் மனைவி
5. மறைந்திருந்து உயிர் பறிப்பது
8. பெருக்கல் குறியீடு
10. கணக்குப் பார்த்தல்
11. உயிரை ஒன்றுக்காகப் பறித்தல்
12. திறை
13. பழைய, கிழிந்த துணி
14. தமது
15. பூச்சு மருந்தின் வடிவம்
16. பொருந்தாத தன்மை
17. ஒரு கிலோவில் இது ஆயிரம்
19. ஒன்றுடன் மற்றொன்றைச் சேர்
20. செய்

உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 383 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)நடுநிசி (4)பசுமை (6)தாரகம் (7)பாசனம் (9)பகு (11)சைவம் (12)பிரம்பு (14)குணம் (15)சம்பளம் (17)துர் (18)தம் (19)கருத (20)குழம்புதல்

**மேலிருந்து கீழ்**

(1)நப்பாசை (2) நிதானம் (3)சிரம் (4)பரம்பரம் (5)மைல் (8)சவரம் (10)கும் (12) பிணம் (13) புலர்தல் (14)குளம்பு (15)சருகு (16)பதம் (17)துரு (19) கல்

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 383 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
சு.சோபாஷினி,
மே/பா B.சுதர்ஷன்,
இந்துக் கல்லூரி ஒழுங்கை, மானிப்பாய்.

**2 ஆம் பரிசு**
திருமதி சி.புவனேஸ்வரி,
செட்டியார் வளவு, நவிண்டில்,
கரணவாய் மத்தி, கரவெட்டி.

**3 ஆம் பரிசு**
றோ.மே.அ.சந்திரபாஸ்,
மதீனா நகர், மகாறம்பைக்குளம்,
வவுனியா.

**4 ஆம் பரிசு**
மா.வைஷயா,
இல.97/1, திருவையாறு,
கிளிநொச்சி

**5 ஆம் பரிசு**
கோ.இராஜேஸ்வரி,
இல.31/2 அத்தியடி வீதி,
யாழ்ப்பாணம்.

**பாராட்டுப் பெறுவோர்**

இ.பஞ்சகௌரி
முதலாம் வட்டாரம்,
முள்ளியவளை.

J.A.M.L.உத்பலா,
மொகொத்கம, நாராங்கொட,
குருநாகல்

ரா.சேந்தன்,
இல.90, சீனிவாசகம் வீதி, கொட்டடி,
யாழ்ப்பாணம்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி
இல.385
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிகேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(16.09.2015 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.385 இல் வெற்றி பெறுவோர்களது விவ்ரம் 20.09.2015 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி 383 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நண்டுக்கு நீதி நரியை வைத்தா?



> இலங்கையின் இனப்பிரச் சினை யைத் தீர்ப்பதற்கு இரா ணுவ பயங்கரவாதத்தைக் கட்ட விழ்த்து விடுவது ஒன்றே வழி எனக் கருதுபவர்கள் சிங் களத் தலைவர்கள். ஆனால், இந்தியா, அமெ ரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் இந்த உண் மையை உணர்ந்தோ, உணரா மலோ சிங்கள இனவாத அர சிற்குத் தேவை யான இரா ணுவ மற்றும் நிதியுதவிகளை தொடர்ந்து செய்து வந்திருக் கின்றன. இதன் மூலம் தமிழி னப் படு கொலைக்குத் துணையாக இருந்துள்ளன.

**பழ.நெடுமாறன்**

செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில், இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவை குறித்து அமெரிக்கா ஒரு தீர்மானத்தை முன்மொழிய இருக்கிறது என அமெரிக்க வெளியுறவுத் துறையின் தெற்கு – மத்திய ஆசியாவுக்கான துணை அமைச்சர் நிஷா பிஸ்வால் கூறியுள்ளார்.

மேலும், இலங்கை அரசுடன் கலந்தாலோசித்து இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலத்தில் 2009ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டு வரை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை குறித்து மூன்று தீர்மானங்களைக் கொண்டு வந்த மேற்கு நாடுகளில், அமெரிக்கா முதன்மை வகித்தது. ஆனால், அமெரிக்காவின் போக்கு இப்போது தலைகீழாக மாறியுள்ளது.

இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் மேற்கண்ட கருத்தை உறுதிசெய்யும் வகையில், சர்வதேச விசாரணையை இலங்கை அரசு ஒருபோதும் அனுமதிக்காது எனக் கூறியுள்ளார்.

தேர்தல் காலத்தில் அவர் பேசியபோது, சர்வதேச விசாரணைக்கு சிங்கள இராணுவத்தை ஒருபோதும் உட்படுத்த அனுமதிக்க மாட்டோம் என்றும் கூறினார்.

இலங்கையின் அதிபராக ராஜபக்ஷே இருந்தபோது சீனாவுடன் மிக நெருக்கமான உறவு பூண்டிருந்ததையும், இலங்கையிலும் இந்துமாக் கடல் பகுதியிலும் சீனா காலூன்ற அனுமதித்ததையும் அமெரிக்கா விரும்பவில்லை. எனவேதான், கடந்த காலத்தில் ஐ.நா. மனித உரிமை ஆணையத்தில் போர்க்குற்றங்கள், இனப்படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றைக் கண்டிக்கும் வகையில் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் தீர்மானங்களைக் கொண்டுவந்தன. மேலும் ஐ.நா. விசாரணைக் குழு ஒன்றை அமைத்து விசாரணையும் நடத்தின.

விசாரணைக் குழு தனது அறிக்கையை அளித்தபோது, இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. எனவே, விசாரணைக் குழுவின் அறிக்கையை வெளியிடுவதை ஆறு மாத காலத்திற்கு தள்ளிவைக்க அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றின. அத்தோடு இலங்கை அரசே விசாரணை நடத்தலாம் என அமெரிக்கா இப்போது கூறுகிறது.

ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், கொடுமைகள் குறித்து அமெரிக்கா முன்பு வடித்தது முதலைக் கண்ணீர். சிங்கள அரசை சீனாவின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகவே இத்தகைய அழுத்தங்களை அமெரிக்கா கொடுத்தது. தனது நோக்கம் நிறைவேறியவுடன் அமெரிக்கா தனது நிலையை மாற்றிக்கொண்டது.

போர்க்குற்றங்கள் குறித்து கடந்த காலத்தில் அமெரிக்கா கடைப்பிடித்த நிலைப்பாடு என்ன?

இரண்டாம் உலகப் போரின்போது ஜேர்மனியிலும், அந்நாடு கைப்பற்றிய நாடுகளிலும் வாழ்ந்த 50 லட்சத்திற்கும் மேற்பட்ட யூதர்கள் திட்டமிட்ட இனப்படுகொலைக்கு ஆளானார்கள். அவர்களுக்கு எதிராகப் போர்க் குற்றங்களும், மனித உரிமை மீறல்களும் இழைக்கப்பட்டன.

ஹிட்லரின் இறப்பிற்குப் பிறகு ஜேர்மனியின் கடற்படைத் தளபதியான அட்மிரல் டோயன்டிஜ் தலைமையில் ஓர் அரசு அமைக்கப்பட்டது. இந்த அரசு சரணாகதி அடைய சம்மதம் தெரிவித்தது. எனவே, இந்த அரசைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என நேச நாடுகள் சார்பில் சிலர் ஆலோசனை வழங்கினர். டோயன்டிஜ் அரசின் மீது நடவடிக்கை எடுத்தால், ஜேர்மனியில் குழப்பம் மேலிடும் என்றும் அவர்கள் கூறினார்கள். ஆனாலும், அமெரிக்கா இதற்குச் சம்மதிக்கவில்லை.

போர்க் குற்றவாளிகளை விசாரிக்கும் பொறுப்பை இந்த அரசிடமே ஒப்படைக்கலாம் என அப்போது அமெரிக்கா கூறவில்லை. போர்க் குற்றவாளிகளை விசாரித்தே தீர வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் நிலைப்பாடாக அன்று இருந்தது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சோவியத் நாடு ஆகிய நான்கும் 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 8ஆம் திகதிகூடி ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த முக்கிய போர்க்குற்றவாளிகள் மீது விசாரணை நடத்தித் தண்டிக்க வேண்டும் என்பதற்கான உடன்பாட்டில் கையெழுத்திட்டன.

இந்த உடன்பாட்டின்படி கீழ்க்கண்ட குற்றங்களைச் சர்வதேச இராணுவ நீதிமன்றம் விசாரிக்கும் எனக் கூறப்பட்டது.

போர்க் காலச் சட்டங்களையும், மரபுகளையும் மீறுதல் போர்க்குற்றமாகும். படுகொலைகள், மோசமாக நடத்துதல், அடிமைகளாக வேலை வாங்குதல் போன்றவையும் பொது மக்களையும், போர்க் கைதிகளையும் சித்திரவதை செய்தல், கொடுமை செய்தல், பாலியல் வன்முறைக்கு உட்படுத்துதல், பொது மற்றும் தனியார் சொத்துகளைச் சூறையாடுதல், நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றைத் திட்டமிட்டு அழித்தல் போன்றவை போர்க் குற்றங்களாகும்.

இந்த உடன்பாட்டிற்கிணங்க ஜேர்மனியில் உள்ள நூரம்பர்க், ஜப்பானில் உள்ள டோக்கியோ ஆகிய இரு இடங்களில் சர்வதேச இராணுவ நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. ஹிட்லரின் நாஜிக் கட்சித் தலைவர்கள், இராணுவத் தளபதிகள், ஆகியோர் மீது விசாரணை நடத்தப்பட்டு 12 பேருக்குத் தூக்குத் தண்டனையும் ஏராளமானவர்களுக்குச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டன.

அதைப்போல, டோக்கியோ சர்வதேச இராணுவ நீதிமன்றம் ஜப்பானியப் போர்க் குற்றவாளிகள் மீது விசாரணை நடத்தி உரிய தண்டனைகளையும் விதித்தது.

யூத இனத்தையே அடியோடு அழிக்கும் வகையில் சித்திரவதைகள், படுகொலைகள், உயிருடன் எரித்தல், நச்சுவாயு முகாம்களில் அடைத்துக் கொல்லுதல் போன்றவற்றை ஈவுஇரக்கமில்லாமல் செய்ததன் மூலம் மனித குலத்தையே தலைகுனிய வைத்தனர் நாஜிக்கள்.

சீன மக்களையும், தென்கிழக்கு ஆசிய மக்களையும் திட்டமிட்ட இனப் படுகொலைக்கு ஆளாக்கிய ஜப்பானியரையும் மனித நேயத்தை மதியாத கொடுங்கோலர்கள் என உலகம் கருதியது. ஆனால் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

2008ஆம் ஆண்டு சூடான் அதிபர் ஓமர் அல் பஷீர் தனது நாட்டில் வாழ்ந்த 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆபிரிக்க மலைச் சாதி மக்களை இனப் படுகொலை செய்து அழித்தார் என்பதற்காக அவரையும், கம்போடியாவின் சர்வாதிகாரியான போல்பாட் 20 இலட்சம் மக்களைப் படுகொலை செய்தார் என்பதற்காக அவரையும் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டித்தன.

செர்பியாவின் சர்வாதிகாரியான சுலோபோடான் மிலோசேவிக் என்பவர் பல்லாயிரக் கணக்கான பொஸ்னிய முஸ்லிம்களைப் படுகொலை செய்தார் என்பதற்காக ஐ.நா. படையின் மூலம் அவரைக் கைது செய்து சர்வதேச நீதிமன்றத்தின் முன் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் நிறுத்தின. ஆனால், விசாரணை முடிவதற்கு முன்னாலேயே அவர் சிறையில் இறந்து போனார்.

மேற்கண்ட நாடுகள் எதிலும் அந்தந்த நாடுகளின் அரசுகளே போர்க் குற்றவாளிகளை விசாரிக்கலாம் என அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் ஒருபோதும் கூறியதில்லை. சர்வதேச நீதிமன்றங்களின் மூலம்தான் அவர்களைத் தண்டிக்க வைத்தார்கள்.

ஆனால், இலங்கையில் சிங்கள இனவாத அரசே போர்க் குற்றவாளிகள் குறித்த விசாரணைகள் நடத்தலாம் என அமெரிக்கா கூறுகிறது. சிங்களத் தலைவர்கள் எத்தகைய இனவெறியர்கள் என்பதைக் கீழ்க்கண்ட ஆதாரங்கள் நிரூபிக்கின்றன.

1985ஆம் ஆண்டு டிசெம்பர் 15ஆம் திகதி இலங்கையின் அதிபராக இருந்த ஜெயவர்த்தனே பின்வருமாறு கூறினார்.

இந்திய அரசு எங்கள் மீது படையெடுக்க விரும்பினால் முழு இலங்கையையும் அவர்களால் 24 மணி நேரத்தில் கைப்பற்ற முடியும். என்னையும் கைதுசெய்ய முடியும். ஆனால், அவ்வாறு நடைபெறுமானால், இலங்கையில் வாழும் தமிழர்கள் அனைவரையும் சிங்கள மக்களே அழித்து விடுவார்கள். சேனநாயக்கவில் தொடங்கி சிறிசேன வரை அனைத்து சிங்களத் தலைவர்களும் தமிழர்களுக்கு எதிரான இனவெறிப் போக்கையே கடந்த காலங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இராணுவ பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவது ஒன்றே வழி எனக் கருதுபவர்கள் சிங்களத் தலைவர்கள். ஆனால், இந்தியா, அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் இந்த உண்மையை உணர்ந்தோ, உணராமலோ சிங்கள இனவாத அரசிற்குத் தேவையான இராணுவ மற்றும் நிதியுதவிகளை தொடர்ந்து செய்து வந்திருக்கின்றன. இதன் மூலம் தமிழினப் படுகொலைக்குத் துணையாக இருந்துள்ளன.

இலங்கையில் தமிழர் பகுதியில் ஆறு பேருக்கு ஓர் இராணுவ வீரர் நிறுத்தப்பட்டிருக்கிறார். சின்னஞ்சிறிய நாடான இலங்கையில் இராணுவம், கடற்படை, விமானப்படை, காவல் படை ஆகியவற்றில் உள்ள மொத்த வீரர்களின் எண்ணிக்கை 4 இலட்சம் ஆகும்.

2009ஆம் ஆண்டு போரில் வெற்றி பெற்ற பிறகு இராணுவ வீரர்களிடையே பேசிய ராஜபக்ச, போர்க் களத்தில் உங்களுடன் நாங்கள் இருந்தோம். இனியும் அவ்வாறே இருப்போம். உலகத்தின் முன்னால் உங்களை ஒருபோதும் அம்பலப்படுத்தித் துரோகம் செய்ய மாட்டோம் என்று கூறினார்.

போரில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் மீது கொத்துக் குண்டுகளையும், இரசாயனக் குண்டுகளையும் வீசிப் படுகொலை செய்தவர் பொன்சேகா. ஆனால், சிறிசேன பதவிக்கு வந்ததும் அவருக்கு மீண்டும் இராணுவத்தில் பதவி கொடுத்து பீல்டு மார்ஷல் பட்டமும் அளித்துப் பெருமைப்படுத்தினார்.

சிறிசேன ஆட்சியில் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணை நடைபெற்றால் அதன் விளைவு எப்படி இருக்கும்? நண்டுக்கு நீதி வழங்க நரியை வைத்ததுபோல் இருக்கும்.

ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள், கொடுமைகள் குறித்து அமெரிக்கா முன்பு வடித்தது முதலைக் கண்ணீர். தனது நோக்கம் நிறைவேறியவுடன் அமெரிக்கா தனது நிலையை மாற்றிக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் இணையும் டோனி சேவாக்



இந்திய அணித்தலைவர் டோனியும் அதிரடித் துடுப்பாட்ட வீரர் சேவாக்கும் மீண்டும் இணைந்து ஒரு அணியில் விளையாடவுள்ளனர் என்று மிக அண்மையில் வெளியான செய்தி இந்திய ரசிகர்களுக்கு உற்சாகமூட்டும் விடயமாக மாறியுள்ளது.
இந்திய அணி கடந்த 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் கிண்ணம் வென்றது. இந்த வெற்றிக்கு சேவாக்கின் பங்கு மிக முக்கியமானது. ஆனால் பிற்பட்ட காலங்களில் யுவராஜைபோன்ற தொடர்ச்சியான சொதப்பலால் அணியில் இருந்து நீக்கப்பட்டார். சேவாக்கின் புறக்கணிப்புக்கு டோனிதான் காரணம் என்றும் டோனி முழுதும் இளம் வீரர்களையே விரும்புகின்றார் என்றும் சேவாக்கின் ஆதரவாளர்களும் அனு பவத்தை அல்லாமல் திறமையையே விரும்பி அனுமதிக்கும் நடுநிலைமையான தலைவர் டோனி என்று டோனியின் ஆதரவாளர்களும் சமூக வலைத்தளங்களில் அடித்துக் கொண்டனர். சில ஊடகங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இவ்வாறான தொடர்ச்சியான வாக்குவாதங்களுக்கு இங்கிலாந்தில் நடைபெறவுள்ள காட்சி ஆட்டமொன்றின் மூலம் முற்றுப்புள்ளி வைத்துள்ளனர் டோனியும் சேவாக்கும்.
குறித்த காட்சி ஆட்டத்தில் இவர்கள் இருவரும் ஒரே அணியில் விளையாடவுள்ளனர். மக்கலம், லாரா, கிப்ஸ் போன்ற வீரர்கள் உள்ள உலக லெவன் அணியை எதிர்த்து டோனி, சேவாக், அப்ரிடி போன்ற வீரர்கள் இடம்பிடித்திருக்கும் அணி மோதவுள்ளது. ஆட்டத்தில் சுவாரசியம் இருக்கிறதோ இல்லையோ சேவாக்கையும் டோனியையும் அப்ரிடியையும் ஒரே அணியில் பார்ப்பது நிச்சயம் சுவாரசியமானதாகவே இருக்கும்.



## செரனாவுக்கு சவாலாக சிமோனா கெலப்

### அமெரிக்கன் ரென்னிஸில் எதிர்பாராத் திருப்பம்

நடப்பு வருடத்தின் கடைசி சர்வதேச ரென்னிஸ் தொடரான அமெரிக்கன் ரென்னிஸ் தொடர் நியுயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இந்தத்தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் திடீர் காயம் காரணமாக விலகினார் செரபோவா இதனால் தற்போது செரனாவுக்கு சவாலாக கருதப்படுகிறார் சிமோனா கெலப்.

பொதுவாக ஒரு தொடர் ஆரம்பிப்பதுக்கு முன்னரே இவருக்கு சவாலாக இவர் இருப்பார் என்ற ஊகத்தில் சிலரைப் பெயரிடுவதுண்டு. அந்த வகையில் அமெரிக்கன் தொடரில் ஆண்கள் பிரிவில் பெடருக்கு சவாலாக யோகோவிக்கும் இரண்டாவது தெரிவாக நடால் மற்றும் முரரேயைக் குறிப்பிட்டனர். பெண்கள் பிரிவில் செரனாவுக்கு சவாலாக செரபோவாவைக் குறிப்பிட்டனர் இரண்டாவது தெரிவாக வோனியாக்கியையும் கெலப்பையும் குறிப்பிட்டனர். ஆனால் உபாதை காரணமாக திடீரென்று விலகினார் செரபோவா. தரப்படுத்தலில் 149ஆம் இடத்திலுள்ள வீராங்கனையிடம் அதிர்சித் தோல்வியடைந்தார் வோனியாக்கி. இதனால் தற்போது செரனாவுக்கு சவாலாக சிமோனா கெலப் கருதப்படுகிறார்.
நடப்பு அமெரிக்கத் தொடரில் சிமோனா கெலபின் செயற்பாடுகள் செரனாவுக்கு சவாலளிக்கும் விதமாகவே உள்ளன. நேர்செற் வெற்றிகள் வேகமான ஏஸ் சேர்விஸ்கள் மாற்றுவேக ஆட்டங்கள் உட்திரும்பல் வெளித்திரும்பல் ஆட்டங்கள் என்று அத்தனையிலும் மிகச் சிறந்த போர்மில் உள்ளார் சிமோனா கெலப். மேற்குறிப்பிட்ட அத்தனை நுணுக்கங்களை செரனாவும் கரைத்துக் குடித்தவர்தான். ஆனால் செரினாவுக்கு முற்றிலும் சவாலாக சிமோனா கெலப் இருப்பார் என்பதை நம்பிக்கையுடன் எதிர்பாரக்கலாம்.

## அதே ரத்தம்! அப்படித்தான் இருக்கும்

இந்திய அணியின் தடுப்புச் சுவர் என்று வர்ணிக்கப்பட்டவர் ராகுல்ராவிட். இந்திய அணிக்காக விளையாடிய காலத்தில் மட்டுமல்லாது தற்பொழுதும் ராவிட்டின் பெயர் அடிக்கடி உச்சரிக்கப்படும் விடயமாக மாறியுள்ளது. இந்திய ஏ அணியின் பயிற்சியாளராக இருப்பதே தற்பொழுது ராவிட் மிகவும் பிரபல்யமாக இருப்பதுக்கான காரணம். ஆனால் எதிர்வரும் காலங்களில் ராவிட்டின் பெயர் மறக்கப்பட முடியாதவாறு மாற்றம்பெறப் போகிறது என்பதே உண்மை. தனது மகனால் பெருமைப்பட தயாராக உள்ளார ராகுல் ராவிட்.
ராவிட்டின் இருமகன்களில் மூத்த மகனின் பெயர் சமித். தற்பொழுது இவருக்கு ஒன்பது வயதாகிறது. ஆனால் தனது பாடசாலையின் 15வயதுக்கு உட்பட்டவரகளுக்கான அணியில் இவர இடம்பிடித்துவிட்டார். மட்டுமல்லாது அந்த அணியின் நம்பிக்கை வீரராகவும் திகழ்கிறார். ராவிட்டைப்போன்று களத்தடுப்பிலும் அசத்துகிறார். இதற்கெல்லாம் ஒரே காரணம் சமித்தின் தந்தையான ராவிட்தான். இந்திய ஏ அணியின் பயிற்சியாளராக இருக்கும் ராவிட் தனது மகனுக்கு எப்படிப்பட்ட பயிற்சியை வழங்குவார் என்பதை சொல்லித்தான் தெரியவேண்டுமா? சச்சின் தனது மகனுக்கு தீவிர பயிற்சிகளை வழங்குவதைப்போன்று ராவிட்டும் தனது மகனுக்கான பயிற்சிகளை தீவிரமாக முன்னெடுக்கத் தொடங்கிவிட்டாராம். சில வேளைகளில் கோக்லியின் தலைமையில் சச்சின் மகன் அர்ஜின் ராவிட் மகன் சமித் இருவரும் இந்திய அணிக்காக விளையாடினாலும் ஆச்சரியப்படுவதுக்கில்லை. அதிலும் சச்சினின் மகனை மிக விரைவில் அணியில் பாரக்கலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org